



# அம்மா வழியில் நல்லாட்சி - அதற்கு ஓராண்டு சாதனையே சாட்சி


## தமிழரசு

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

பிப்ரவரி 2018



அம்மா வழியில் நல்லாட்சி - அதற்கு
ஓராண்டு சாதனையே சாட்சி

புரட்சித்தலைவர்

# எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா

## 30 மாவட்டங்களில் சிறப்பாக நடைபெற்றது



### மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால்

- ரூ. 5127.11 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 2329 திட்டப் பணிகள் திறந்துவைக்கப்பட்டது
- ரூ.5712.90 கோடி மதிப்பீட்டில் 3200 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது
- விழாவில் 521 புதிய அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டது
- ரூ.5,397.52 கோடி மதிப்பீட்டில் 8,11,481 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது

## அரசின் பல்வேறு துறைகள் பெற்ற விருதுகள்

### காவல்துறை

- இந்தியாவிலேயே, சிறந்த காவல் நிலையமாக கோவை ஆர்.எஸ். புரம் காவல் நிலையமும், சிறந்த ஐந்தாவது காவல் நிலையமாக சென்னை, அண்ணா நகர் காவல் நிலையமும் தேர்வு

### வேளாண்மைத் துறை

- தெற்காசிய தானிய அமைப்புகளின் முறைப்பு வழுங்கிய தனிச் சிறப்பு பாராட்டு முத்திரை
- கோவை உழவியல் துறைக்கு தேசிய அளவிலான விருது
- எண்ணெய் வித்து பயிர் செயல் விளக்கங்களுக்கான இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக விருது
- சிறு தானியங்கள் பதனிடும் தொழில் நுட்பத்திற்காக தேசிய அளவிலான மகேந்திரா சம்ருதி விருது
- அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டத்தின் சிறந்த களை மேலாண்மை விருது
- வனவியல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக சர்.ஜே.சி. போஸ் நினைவு விருது

### சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள்

- மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு தூய்மை இந்தியா விருது
- பழமை மாறாமல் திருப்பணி மேற்கொண்ட ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு யுனெஸ்கோ விருது

### தொழில்துறை

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

- அகில இந்திய அளவில் 2016ஆம் ஆண்டிற்கான “ஆண்டின் சிறந்த காகித ஆலை” என்ற உயரிய விருது
- இந்திய தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பின் தேசிய விருது மற்றும் சிறந்த சக்தி மேலாண்மை 2017 விருது

### ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை

- பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் சாலைப்பணிகளை குறித்த காலத்திற்குள் முடித்தமைக்காக, மத்திய அரசின் பாராட்டு ஊக்கத் தொகை

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

- தேசிய அளவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் சிறந்த செயல்பாட்டிற்கான விருது

### வருவாய்த்துறை

- நில ஆவணங்களை இணையவழிப்படுத்தும் பணியினை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தியமைக்காக Skoch order of Merit விருது

### தகவல் தொழில்நுட்பம்

- தமிழ்நாடு மின் ஆளுமை முகமைக்கு தேசிய அளவில் சிறந்த மின் ஆளுமை விருது

### மக்கள் நல்வாழ்வுத்துறை

- மனித உறுப்பு தானத்திற்கு விருது

# தமிழரசு

**தமிழ்நாடு அரசு**
**செய்தி-மக்கள் தொடர்புத் துறையின்**
**வெளியீடு**

மாண்புமிகு புரட்சித்தலைவி
**அம்மா** அவர்களின் வழியில் செயல்படும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
அரசின் ஓராண்டுச் சாதனைகள்
சிறப்பு வெளியீடு எண். 16 – பிப்ரவரி 2018


ஆசிரியர் - வெளியிடுபவர் :
முனைவர் **பொ. சங்கர் இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர் :
**சி. செல்வராஜ்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர் :
**ஆ. ராஜா**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் :
**அ. மகேஸ்வரி**
**சு. கமலா**
**த. ஷேக் முகமது**

உதவி ஆசிரியர்கள் :
**ச. மஞ்சுளா**
**மு. மோகனவல்லி**
**ப. பேச்சிமுத்து**
**மு. மணிமேகலை**
**அ. மதன்**

கணினி வடிவமைப்பு :
**தி. ஜெய்சங்கர்**
**க.இரா. உமாமகேஸ்வரி**

இதழ் உதவியாளர் :
**நி. ஷீலா**

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர் :
**கோ. சந்திரசேகர்**

வடிவமைப்பாளர் :
**கோ. முரளி கிருஷ்ணன்**

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
**தொலைபேசி : 22542221 / 22542224**
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in


"மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியால் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஒரு வருடத்திற்குள்ளேயே பல வருடங்களுக்கானத் திட்டங்களைத் தீட்டி பல சாதனைகளை நூறாண்டு பேசும்படி செய்திருக்கிறோம்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

## இந்த இதழில்....


- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ..... 5
- வேளாண்மைத்துறை ..... 6
- கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை ..... 17
- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ..... 25
- வணிக வரி மற்றும் பதிவுத்துறை ..... 27
- கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ..... 29
- எரிசக்தித்துறை ..... 34
- சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை ..... 38
- நிதித்துறை ..... 42
- கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை ..... 47
- மக்கள்நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை ..... 52
- உயர்கல்வித்துறை ..... 56
- நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை ..... 59
- உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ..... 61
- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை ..... 63
- தொழில்துறை ..... 66
- தகவல் தொழில்நுட்பவியல்துறை ..... 69
- தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை ..... 75
- சட்டத்துறை ..... 85
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறை ..... 88
- நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ..... 90
- பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை ..... 100
- திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள்துறை ..... 102
- பொதுத்துறை ..... 106
- பொதுப்பணித்துறை ..... 111
- வருவாய்த்துறை ..... 117
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ..... 125
- பள்ளிக்கல்வித்துறை ..... 128
- சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை ..... 130
- சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை ..... 132
- தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை ..... 133
- சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை ..... 140
- போக்குவரத்துத்துறை ..... 149
- மாற்றுத் திறனாளிகள் நலத்துறை ..... 150
- இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை ..... 151

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை



- திருச்சி மாவட்டம் துறையூரில் 100 மாணவியர் தங்கி படிப்பதற்காக ரூ.2.30 கோடி மதிப்பில் ஒரு விடுதியும், செங்காட்டுப்பட்டியில் 200 மாணவர் தங்கி படிப்பதற்காக ரூ.3.60 கோடி மதிப்பில் ஒரு விடுதியும் கட்டுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- முழுநேர முனைவர் பட்ட ஆராய்ச்சிப் படிப்பை பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களின் எண்ணிக்கையினை 700லிருந்து 1,200ஆக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- பழங்குடியின விவசாயிகளுக்கு துரிதமாக மின் இணைப்பு பெறுவதற்கு ரூ.75,000/– வீதம் 100 பேர் பயன்பெறுவதற்காக ரூ.75 இலட்சம் வழங்குவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- திருச்சி மாவட்டம், பச்சமலை மற்றும் தென்புற நாட்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் தலா ரூ.50 இலட்சம் மதிப்பில் இரு சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன
- பழங்குடியின மக்கள் அனைவரும் இணையதளம் வாயிலாக பயனடையும் வகையில், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.85,000/– மதிப்பில் ஓர் இணையதளம் உருவாக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- ஆதிதிராவிடர் / பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 5 ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 5 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் மற்றும் 4 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- கல்லூரி விடுதி மாணவர்களுக்கான உணவுக் கட்டணத்தை மாதம் ஒன்றிற்கு 875 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகவும், பள்ளி விடுதி மாணவர்களுக்கான உணவுக் கட்டணத்தை மாதம் ஒன்றிற்கு 755 ரூபாயிலிருந்து 900 ரூபாயாகவும் உயர்த்தி வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- ஜவ்வாது மலையில் இரண்டு உண்டு உறைவிட மாதிரிப் பள்ளிகள் (Model Residential School) ஆசிரியர் குடியிருப்புகளுடன் ரூ.24 கோடி செலவில் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- பழங்குடியினர் மற்றும் பிறமரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம் 2006இன்படி 2,921 தனி நபர் உரிமைகளும் 116 சமூக உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.
- 1,915 ஆதிதிராவிட விவசாயிகளுக்கு துரித மின் இணைப்புத் திட்டத்தின்கீழ் இணைப்புகள் தருவதற்காக ரூ.1.91 கோடி துவக்க மானிய வைப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- 18,315 ஆதிதிராவிட பயனாளிகளுக்கு ரூ. 44.42 கோடி மானியத் தொகையில் தாட்கோ மூலம் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

❖ ❖ ❖

# வேளாண்மைத் துறை



- மேட்டூர் அணையின் குறைந்த அளவு நீர் இருப்பினை கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 12.06.2017 அன்று ரூ.56.92 கோடி நிதி ஒதுக்கீட்டில் டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும், நிலத்தடி நீரைப் பயன்படுத்தி பயறு வகை சாகுபடியினை மேற்கொண்டு உயர் மகசூல் பெறவும் “குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டம் 2017” அறிவித்தார்கள். இத்திட்டத்தினை செயல்படுத்தியதன் மூலம் டெல்டா பகுதிகளில் 2.73 இலட்சம் ஏக்கரில் நெல் மற்றும் 0.683 இலட்சம் ஏக்கரில் பயறு வகை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

- மேட்டூர் அணையினை 02.10.2017 அன்று திறப்பதற்கு அறிவிப்பு வெளியிட்ட நிலையில், டெல்டா மாவட்டங்களில் பரவலாகப் பெய்த மழையினைக் கொண்டு நேரடி நெல் விதைப்பினை ஊக்குவித்து, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 28.09.2017 அன்று “சம்பா தொகுப்பு திட்டம் 2017” ரூ.41.15 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தினால் நடப்பாண்டில் 10.685 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, 2,51,534 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள்.

- பயறு வகை உற்பத்திக்கு மாநில அரசு அதிக முக்கியத்துவம் அளித்து, பயறு வகை உற்பத்தி திட்டத்தின் கீழ் தொகுப்பு செயல் விளக்கம் மற்றும் பயறு சாகுபடி விழிப்புணர்வு முகாம்கள் செயல்படுத்தியதன் மூலமாக 2016–2017 ஆம் ஆண்டில் 19.40 இலட்சம் ஏக்கரில் பயறு வகை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சுமார் ரூ.74.73 கோடி செலவில் விதை உற்பத்தி மற்றும் விதை விநியோகம், விவசாய இயந்திரங்கள் விநியோகம், முக்கிய இடுபொருட்களான நுண்ணூட்டச்சத்து, ஜிப்சம் மற்றும் பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் போன்றன பயறுவகை சாகுபடியினை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன.

- பயறு வகை பயிர்களின் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் நோக்கத்துடன், 2017–2018ஆம் ஆண்டில் ரூ.78.83 கோடி நிதியில் 23.22 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயறு வகைகள் பயிர்கள் சாதனை அடைய திட்டமிடப்பட்டு இதுவரை 19.36 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயறு வகை பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளது.

- 2016ஆம் ஆண்டில் தமிழ்நாடு முன் எப்போதும் இல்லாத அளவில் வறட்சியை கண்டதால், மகசூல் இழப்பினை ஈடுசெய்யும் பொருட்டு அதிக அளவிலான விவசாயிகளை பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர்க்க அரசு ஊக்குவித்தது.

- மாநில அரசு மேற்கொண்ட முயற்சியினால் சுமார் 31.85 இலட்சம் ஏக்கரில் பயிர்களை சாகுபடி செய்த 15.37 இலட்சம் விவசாயிகள் பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்துள்ளனர். காப்பீட்டு மானியத்தில் மாநில அரசின் பங்காக ரூ.565 கோடி காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு, இதுவரை 9 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.3,020 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டதில் 7.49 இலட்சம் விவசாயிகளின் வங்கி கணக்குகளில் மொத்தம் ரூ.2,512 கோடி வரவு வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இழப்பீட்டுத் தொகைகளையும் விவசாயிகளின் வங்கி கணக்குகளில் வரவு வைப்பதற்காக மாநில அரசு காப்பீட்டு நிறுவனங்களுடனும் வங்கிகளுடனும் தொடர்பு கொண்டு முயற்சித்து வருகிறது.

- 2017–2018ஆம் ஆண்டில், மொத்த சாகுபடி பரப்பில் 40 சதவீதம் காப்பீடு செய்ய திட்டமிடப்பட்டு, காரீப், சம்பா மற்றும் இராபி பருவங்களில், இதுவரை 23 இலட்சம் ஏக்கர் பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டு, 11.57 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்துள்ளனர்.

- "மண் வள அட்டை இயக்கம்" திட்டத்தின் கீழ் 2017–2018 ஆம் ஆண்டில் இதுவரை 6.51 இலட்சம் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு 5.53 இலட்சம் மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, மண் பரிசோதனை அடிப்படையில் உரங்கள் இடுவதற்காக சுமார் 5.23 இலட்சம் மண் வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- வேளாண்மைப் பயிர் திட்டம் சார்ந்த ஒருங்கிணைந்த பண்ணையத்தின் கீழ் 13,550 எக்டர் இரு போக பயிர்களுக்கு இடுபொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு மானிய விலையில் கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கப்பட்டு வருகிறது. ரூ.15.88 கோடி செலவினத்தில் 453 நிரந்தர மண்புழு கட்டமைப்புகள், 500 தற்காலிக அடர் திற பாலித்தீன் மண்புழு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மூன்றாண்டு தொடர் திட்டமாக பத்து மாவட்டங்களில் 4,646 ஏக்கரில் குழு அணுகுமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2017–2018ஆம் ஆண்டில், இரண்டாம் ஆண்டு செயல்பாடுகளாக நிலத்தினை அங்கக நிலமாக மாற்றுதல், அங்கக விதை கொள்முதல், அங்கக இடுபொருட்கள் கொள்முதல், ஒருங்கிணைந்த உர மேலாண்மை, உற்பத்தி பொருட்களை சந்தைப் படுத்துதல் ஆகியன செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- பருத்தி சாகுபடி பரப்பினை அதிகரிக்கும் பொருட்டு தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கத்தின் கீழ் 2017–2018ஆம் ஆண்டில் இதுவரை 4.35 இலட்சம் ஏக்கரில் (1.755 இலட்சம் எக்டரில்) பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பருத்தியில் சொட்டு நீர்ப் பாசனம் அமைத்தல், முக்கிய இடுபொருட்களான சான்றளிக்கப்பட்ட விதைகள், நுண்ணூட்ட கலவைகள், திரவ உயிர் உரங்கள், நீரில் கரையும் உரங்கள், களைக்கொல்லிகள், உயிர் பூச்சிக்கொல்லி மருந்துகள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் மற்றும் பருத்தி பஞ்சு அறுவடை செய்யும் கருவிகள், சுழல்கலப்பை போன்ற கருவிகளை மானியத்தில் விநியோகிக்கும் பொருட்டு சுமார் ரூ.11.20 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- கரும்பு உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு 2017–2018ஆம் ஆண்டில் ரூ.30 கோடி செலவில் 16,000 எக்டர் பரப்பளவில் நீடித்த நவீன கரும்பு உற்பத்தி மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, இதுநாள் வரை ஆண்டு இலக்கான 1,600 உற்பத்தி செய்யும் நிழல் வலைக் கூடங்களில் 1,411 அமைக்கப்பட்டு, கரும்பு வளர்ப்பு விவசாயிகளுக்கு வழங்குவதற்காக ஒரு பருகரணை நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

- மாநில அரசு வேளாண்மை விரிவாக்க மையங்களை நவீனப்படுத்த அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. 100 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் ரூ.150 கோடி செலவில் நவீனப்படுத்த திட்டமிடப்பட்டு, அவற்றுள் 77 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கான கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- திருச்சி மற்றும் கோயம்புத்தூரில், அங்கக உர ஆய்வகங்கள் ரூ.150 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு, தமிழக முதலமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.



- ஈரோடு மற்றும் திருநெல்வேலியில் தலா ரூ.60 இலட்சம் செலவில் புதிய மண் பரிசோதனை நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

- தென்னை விவசாயிகளின் வருமானத்தினை உயர்த்துவதற்கு மாநில அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தென்னை மரத்தில் இருந்து "நீரா"வினை இறக்குவதற்கு அனுமதி வழங்குவதற்காக 2017–18 ஆம் ஆண்டில் அரசால் கொள்கை முடிவு எடுக்கப்பட்டு 21.12.2017 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டது. தற்போது, தென்னை உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

- மானாவாரி விவசாயிகளின் வருமானத்தினை உயர்த்துவதற்காக, "நீடித்த மானாவாரி விவசாயித்திற்கான இயக்கம்" என்ற சிறப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2016–2017 ஆம் ஆண்டு முதல் தொடங்கி 2019–2020 முடிய நான்கு ஆண்டுகளில், ஒரு குழுவிற்கு 1,000 ஏக்கர் என 1,000 மானாவாரி விவசாய குழுக்கள் மூலம் ரூ.802.9 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- ஆரம்ப முயற்சியாக 2016–2017இல் 200 தொகுப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. 2017–2018 ஆம் ஆண்டில் 200 தொகுப்புகளுக்கு உழவுப் பணிகளுக்காக ஒரு ஏக்கருக்கு ரூ.500 மானியத்தில் 5 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலப்பகுதி உழவு செய்யப்பட்டது.

- ஆரம்பக்கட்ட முயற்சியாக, தடுப்பணைகள், கிராமக் குளங்கள், சமூகக் குளங்கள், ஊருணிகள் மற்றும் அமிழ்வு நீர் குட்டைகள் போன்ற 311 மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கென ஒவ்வொரு தொகுப்பிற்கும் ரூ.5 இலட்சம் வீதம் ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- மானாவாரி நிலங்களில் நீடித்த விளைச்சலுக்காக 50 சதவிகித மானிய விலையில் விவசாயிகளுக்கு விதைகள் மற்றும் இதர இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. இதற்கென முதல் ஆண்டில் 5 இலட்சம் ஏக்கருக்கு ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வாண்டில் இதுவரை மொத்தம் 4,53,926 ஏக்கரில் சிறு தானியங்கள் பயறு வகை பயிர்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி விதைப்பு பணி நிறைவு பெற்றுள்ளது. விவசாயிகளுக்கு இடுபொருள் மானியமாக இதுவரை ரூ.24.68 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தியதன் மூலம் 05.02.2018 முடிய சிறு தானியங்கள் உற்பத்தி பரப்பளவு 21.915 இலட்சம் ஏக்கரில் உயர்ந்துள்ளது. பயறுவகை உற்பத்தி பரப்பு 19.36 இலட்சம் ஏக்கருக்கு உயர்ந்துள்ளது.

- மானாவாரி நில விவசாயிகள் குறைந்தளவு வாடகையில் பண்ணை இயந்திரங்களை பயன்படுத்தும் பொருட்டு பண்ணைக் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையம் அமைக்க திட்டமிடப்பட்டு ஒவ்வொரு தொகுப்பிற்கும்

ரூ.8 இலட்சம் மானியம் வீதம் 200 மையங்கள் அமைப்பதற்கு ரூ.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை ரூ.9.6 கோடி மானியத்தில் 124 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- மாண்புமிகு நிதியமைச்சரால் 2017–2018ஆம் ஆண்டில் முன்னோடி திட்டமாக கூட்டுப் பண்ணையத் திட்டம் அறிவிக்கப்பட்டு இத்திட்டத்தில் ஒவ்வொரு குழுவிலும் 100 விவசாயிகளை உள்ளடக்கிய 2,000 உழவர் உற்பத்தியாளர்கள் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால், 2,00,000 சிறு/குறு விவசாயிகள் இந்த வருடம் பயனடைகின்றார்கள். கூட்டுப் பண்ணையத் திட்டத்தில் துடிப்புடன் செயல்படும் ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் குழுவிற்கும் ரூ.5 இலட்சம் நிதியுதவி வழங்கப்படவுள்ளது. 2017–2018ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.100 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

- பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டினை குறைக்கும் விதத்தில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை செயல்பாடுகளை மேற்கொள்ள முக்கியத்துவம் அளித்து வருகிறது. இம்முயற்சியின் ஒரு பகுதியாக சூரிய சக்தி மூலம் இயங்கும் 20,000 விளக்குப் பொறிகள் 2017–2018ஆம் ஆண்டில் ரூ.4 கோடி செலவில் 50 சதவிகித மானிய விலையில் விநியோகம் செய்யப்படவுள்ளன.

- விவசாயிகளை பண்ணைச் சார்ந்த புதிய தொழில்நுட்பங்களில் மேம்படுத்தும் பொருட்டு 56 தேசிய அளவிலான பயிற்சிகள், 37 மாநில அளவிலான பயிற்சிகள் மற்றும் 8,646 மாவட்ட அளவிலான பயிற்சிகள் நடத்தப்பட்டன. ரூ.997 இலட்சம் நிதி செலவினத்தில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகளால் 3,48,440 விவசாயிகள் பயனடைந்து உள்ளனர்.

- இதுதவிர, 413 தேசிய அளவிலான கற்றறிவு பயணங்கள், 341 மாநில அளவிலான கற்றறிவு பயணங்கள் மற்றும் 657 மாவட்ட அளவிலான கற்றறிவு பயணங்கள் ரூ.634.67 இலட்சம் நிதி செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டு, 58,160 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், 932 பண்ணைப்பள்ளிகள் ரூ.263.63 இலட்சம் நிதி செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டு 23,300 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

- 7,229 செயல்விளக்கங்கள் ரூ.298.3 இலட்சம் நிதி செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டு 7,229 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். அயல்நாடுகளிலுள்ள உயரிய அறிவியல் தொழில் நுட்பங்களை வெளிப்படுத்தும் நோக்கில் 81 விவசாயிகள் மற்றும் 31 துறை அலுவலர்கள் கல்விச் சுற்றுலாவாக தாய்லாந்து, இஸ்ரேல், பிலிப்பைன்ஸ் மற்றும் சீனாவிற்கு பயணம் மேற்கொண்டனர்.

- உயர் தொழில் நுட்பங்கள், புதிய பரப்பு விரிவாக்கம், பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் சாகுபடி, தேனீ வளர்ப்பு ஊக்குவித்தல் உள்ளிட்ட பல இனங்கள் மூலம் தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், உற்பத்தியை பெருக்கவும் ரூ.117.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- அங்கக வேளாண்மை மூலம் மண்வளத்தை பெருக்கவும் சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் பாரம்பரிய வேளாண்மையை ஊக்கப்படுத்த ரூ.1.87 கோடி நிதி ஒதுக்கீட்டில் 27 மாவட்டங்களில் 51 குழுக்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்த சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் வழங்கி நுண்ணீர் பாசனத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2017–2018ஆம் ஆண்டில் சுமார் 3 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் ரூ.804 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தில் 2.23 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு, நுண்ணீர் பாசனம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. 01.07.2017 அன்று சரக்கு மற்றும் சேவை வரியின் அறிமுகத்தின் பின்னர், நுண்ணீர் பாசனக் கருவிகளுக்காக விவசாயிகளின் பங்களிப்புத் தொகை அதிகமானது. இதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பொருளாதார சுமையை குறைக்க, சரக்கு மற்றும் சேவை வரிக்கான தொகையை தமிழக அரசின் மானியத்தில் ஏற்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் 658.23 இலட்சம் தரமான நடவுப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

- அரசு தோட்டக்கலை பண்ணைகளை நவீனப்படுத்துவதற்காக, பூங்காக்களை அழகுப்படுத்துதல், கொய்மலர் மற்றும் காய்கறி மகத்துவமையம் அமைத்தல் முதலான பணிகள்



நடைபெற்று வருகின்றன. 19 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் விதை உற்பத்தி தேவைக்கான உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.2,076.57 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படுகிறது.

- கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஒக்கி புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் மற்றும் மறுநடவு பணிகளுக்கான உதவித் தொகையாக ஒரு சிறப்பு வாழ்வாதாரத் தொகுப்பு நிதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11.12.2017 அன்று அறிவிக்கப்பட்டது. அதன்படி வாழை பயிரிட்ட விவசாயிகளுக்கு எக்டர் ஒன்றுக்கு ரூ.48,500 முதல் ரூ.63,500 வரையும், இரப்பர் பயிரிட்ட விவசாயிகளுக்கு எக்டர் ஒன்றுக்கு ரூ.1 இலட்சமும் மற்றும் கிராம்பு பயிரிட்ட விவசாயிகளுக்கு எக்டர் ஒன்றுக்கு ரூ.28,000–மும் உதவித் தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 19.86 இலட்சம் மெட்ரிக் டன் விளைபொருட்கள் விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டு, அதன் மூலம் ரூ.100.54 கோடி சந்தைக் கட்டணம் வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது.

- பொருளீட்டுக் கடனாக 2,363 விவசாயிகளுக்கு ரூ.37.23 கோடியும், 567 வியாபாரிகளுக்கு ரூ. 6.10 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

- திருப்பூர் மாவட்டத்தில், திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கும், திருவாரூர் மாவட்டத்தில் குடவாசல் மற்றும் பூந்தோட்டம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கும், சேலம் மாவட்டத்தில் எடப்பாடி மற்றும் கொங்கணாபுரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கும், கடலூர் மாவட்டத்தில் சேத்தியாத்தோப்பு மற்றும் ஸ்ரீமுஷ்ணம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கும் மொத்தம் ரூ.14.84 கோடி மதிப்பில் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

- விவசாயிகளின் நலன் கருதி, விழுப்புரம் மாவட்டம், திருநாவலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டம் புள்ளம்பாடி ஆகிய இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் புதிதாக தோற்றுவித்திடும் பொருட்டு அதன் சந்தைப் பகுதிகளை அறிவிக்கை செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- விவசாயிகள் விளைபொருளை விரைவாக விற்பனை செய்திட அதிக வாய்ப்பு வழங்கிடவும், தேசிய அளவில் உள்ள வியாபாரிகள் பரிவர்த்தனையில் பங்கு பெறவும், மொத்த வணிகர், பதப்படுத்துவோர், ஏற்றுமதி மற்றும் கொள்முதல் செய்வோர் உள்ளூர் சந்தைகளில் நேரிடையாக பங்கேற்கவும் அதன் மூலம் விவசாயிகளின் விளை பொருளுக்கு நல்ல விலை கிடைக்க செய்ய ஏதுவாக முதற்கட்டமாக, ரூ.102.84 கோடி மதிப்பில் 30 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் 8 வேளாண் விளைபொருள் விற்பனை சங்கங்களில் மின்னணு வசதி ஏற்படுத்தப்பட்டு "மின்னணு தேசிய வேளாண் சந்தை" திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

- உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மூலம் விவசாயிகளின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வகையில் 13 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் ஏற்படுத்துவதற்கு மொத்தம் ரூ.5.54 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- வேளாண் விளைபொருட்களை பதப்படுத்தி மதிப்புக்கூட்ட, தக்காளி பதப்படுத்தி வழங்கும் நடமாடும் இயந்திரம், மஞ்சள் மற்றும் தேங்காய்

ஆகியவற்றிற்கான சூரிய உலர்விப்பான் ரூ.2.24 கோடி மதிப்பில் வாங்கப்படும்.

- விவசாயிகளுக்கு அறுவடை பின்செய் மேலாண்மை மற்றும் சந்தை தகவல்களை வழங்கிடவும், விவசாயிகள் மற்றும் வேளாண் தொழில்முனைவோர் தொழில்நுட்ப நிறுவனங்களின் தகவல்களை நேரிடையாக பெற்றிடவும் 10 மாவட்டங்களில் மின்னணு கற்றல் மையங்கள் (e-learning centers) ரூ.7.34 கோடி மதிப்பில் அமைத்திட பணிகள் நடைபெற்று வருகின்றன.

- அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினை தவிர்க்க மற்றும் மதிப்பு கூட்ட, பழங்கள், காய்கறிகள் மற்றும் இதர விளைபொருட்களுக்கான விநியோக தொடர் மேலாண்மைத் திட்டம் என்ற சிறப்பு திட்டம் 10 மாவட்டங்களில் ரூ.398.75 கோடி திட்ட மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதல் நிலை பதப்படுத்தும் மையம் மற்றும் முதன்மைச் சந்தைகளுக்கான கட்டுமானப்பணிகள் ரூ.253.66 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

- நுகர்வோருக்கு கலப்படமற்ற, தரமான உணவு பொருட்கள் கிடைத்திடும் பொருட்டு அக்மார்க் ஆய்வகங்கள் மூலம் 13.12 இலட்சம் குவிண்டால் உணவு பொருட்கள் தரம் பிரிப்பு செய்யப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய பயிற்சி மையத்தின் மூலமாக கடந்த ஆண்டில் 8,299 விவசாயிகளுக்கு 415 அறுவடை பின்செய் மேலாண்மை பயிற்சிகளும், 1,180 துறை அலுவலர்களுக்கு 66 திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் நடத்தப்பட்டன.

- நவீன வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே கொண்டு சேர்த்திடவும், துறை அலுவலர்களின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்திடவும் வாழை, மிளகாய், காய்கறி, பழப்பயிர்கள் மற்றும் தென்னை நீரா தொடர்பான தொழில்நுட்ப கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

- உபவடி நிலப் பகுதி விவசாயிகளின் நலனுக்காக ரூ.14.13 கோடி திட்ட மதிப்பீட்டில் 18 உபவடி நிலப்பகுதிகளில் சந்தை அணுகு வசதியினை மேம்படுத்தவும், வேளாண் தொழில் முனைப்பினை ஊக்குவித்திடவும், தொழில்நுட்ப நிறுவனங்களை வலுப்படுத்திடவும், திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கிடவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- கள்ளிக்குடியில் பழங்கள், காய்கறி, மற்றும் மலர்களுக்கான மத்திய சந்தை, மிளகாய்களுக்கான ஒருங்கிணைந்த வணிக வளாகம், சேமிப்புக் கிடங்குகள், குளிர்பதன வசதியுடன் கூடிய பரிவர்த்தனைக் கூடங்கள் உட்பட ரூ.125.62 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 50 சந்தை உட்கட்டமைப்புகள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறப்பு விழா செய்யப்பட்டு விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

- வேளாண் தொழிலாளர்களின் பற்றாக்குறையை ஈடுசெய்யும் பொருட்டும், விவசாயிகள் குறித்த காலத்தில் வேளாண் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும், அரசு, வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டத்தினை மேம்படுத்தும் நோக்கில் விவசாயிகளுக்கு ரூ.32 கோடி மானியத்தில் 4,375 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- வேளாண்மை பணிகளை குறித்த காலத்தில் மேற்கொள்ளும் பொருட்டு உரிய வேளாண் இயந்திரங்களை விவசாய குழுக்கள், தொழில்முனைவோர், பெண்கள் சுயஉதவிக் குழுக்கள், விவசாயிகள் ஆகியோர் மூலம் தேவைப்படும் விவசாயப் பெருமக்களுக்கு குறைந்த வாடகைக்கு வழங்கும் வகையில் 490 வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் ரூ.43 கோடியே 86 இலட்சம் மானியத்தில் அமைக்கப்பட்டுள்ளன. நில மேம்பாட்டுதிட்டம் மற்றும் சிறுபாசனத் திட்டம் மூலம் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை குறைந்த வாடகையில் வழங்கும் நோக்கத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் ரூ.20 கோடியே 67 இலட்சம் செலவில், அதிக குதிரைதிறன் கொண்ட 50 டிராக்டர்கள், 150 சுழல் கலப்பை, 150 ஐந்து கொக்கி கலப்பை, 50 சட்டிக் கலப்பை, 10 வரப்பு அமைக்கும் கருவி மற்றும் 10 சுழல் விசைத் துளைக்கருவிகள் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- வேளாண் துறையில் சூரிய சக்தியின் உபயோகத்தினைபிரபலப்படுத்திடும்தொலைநோக்கு பார்வையில், 2017–2018ஆம் நிதியாண்டில் விவசாயிகளுக்கு 90 சதவீத அரசு மானியத்தில் 10 குதிரைத் திறன் வரை சக்தி கொண்ட சூரியசக்தியால் இயங்கும் 1,000 மோட்டார் பம்புசெட்டுகள் ரூ.49 கோடியே 9 இலட்சம் மானியத்தில் நிறுவ ஒப்பளிப்பு செய்யப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வருகிறார்கள்.

- பாசனப்பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மை திட்டத்தின்கீழ், எட்டு பாசனத்திட்ட பகுதிகளில், நீர் மேலாண்மையை மேம்படுத்தி பாசனப்பரப்பினை அதிகரிக்கும் நோக்குடன் காரை வாய்க்கால்கள் அமைத்தல், சுழற்சிமுறை பாசனம் மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பணிகள் ரூ.14 கோடியே 6 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் 2,912 எக்டர் நிலப்பரப்பு பயன்பெற்றுள்ளது.

- அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி மற்றும் குந்தா அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ரூ.3 கோடியே 85 இலட்சம் செலவில் ஓடை பாதுகாப்புப் பணிகள் மற்றும் மண்வளப் பாதுகாப்பு கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- நதிப்பள்ளத்தாக்குத் திட்டத்தின் கீழ் தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள தென்பெண்ணையாறு மற்றும் மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ரூ.1 கோடி 23 இலட்சம் செலவில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- மானாவாரி பகுதிகளில் நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின் கீழ் ரூ.4 கோடியே 61 இலட்சம் செலவில் 91 மழைநீர் சேகரிப்பு கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும், ரூ.5 கோடியே 48 இலட்சம் செலவில் 106 மழைநீர் சேகரிப்பு கட்டுமானங்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

- நீர் ஆதாரங்களை பெருக்கும் நோக்கத்துடன் அரசு மாநிலம் முழுவதும் பண்ணைக் குட்டைகளை அதிக அளவில் உருவாக்கி வருகிறது. இதன் மூலம் மழைநீர் சேகரிக்கப்பட்டு மானாவாரி பயிர்களின் முக்கிய பயிர் வளர்ச்சிக் காலங்களில் உயிர்ப்பாசனம் அளிக்கும் முக்கிய நோக்கத்துடன், இராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் ரூ.5 கோடியே 38 இலட்சம் செலவில் 1,082 பண்ணைக் குட்டைகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.

- பிரதம மந்திரி வேளாண் நீர்பாசன திட்டம் – துளிநீர்– அதிக பயிர் திட்டத்தின் கீழ் ரூ.11 கோடியே 16 இலட்சம் செலவில் 377 நீர்சேகரிப்பு கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- வளம்குன்றியகளர்மற்றும்உவர்நிலங்களைவேளாண் உற்பத்திக்கு பயன்படும் வகையில் சீரமைத்து மாற்றி அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ரூ.2 கோடியே 6 இலட்சம் செலவில் 440 எக்டர் பரப்பு நிலம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

- சிற்றாறு உபவடிநிலப் பகுதிகளில் நீர்ப்பாசன கட்டமைப்புகளை புனரமைக்கும் பொருட்டு 2017–2018ஆம் ஆண்டில் ரூ.2 கோடியே 62 இலட்சம் செலவில் 541 எக்டர் பரப்பில் உரிய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- அதிக பட்சமான மானாவாரி நிலங்களை சாகுபடிக்கு ஏற்றவாறு மேம்படுத்துவதற்கு நீடித்த நிலையான மானாவாரி விவசாயத்திற்கான இயக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2017–2018ஆம் ஆண்டில் 200 தொகுப்புகளில் 2 இலட்சம் எக்டர் மானாவாரி நிலப்பரப்பில் ரூ.25 கோடி மானியத்தில் கோடை உழவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் ஆரம்ப கட்டப்பணிகளாக 311 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ரூ.10 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. கிராம அளவிலான 200 வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் ரூ.16 கோடி மானியத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. வேளாண் விளை பொருட்களை மதிப்பு கூட்டி சந்தைப்படுத்துதல் மூலம் விவசாயிகள் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்தில் அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மதிப்புக் கூட்டு கருவிகள் கொண்டு கிராம தொகுப்புகளில் மையங்கள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.10 கோடியே 60 இலட்சம் செலவில் ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி, தேனி, திண்டுக்கல், கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் பல்வேறு மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- விதைப்பண்ணைகள் 34,155 ஹெக்டேர் பரப்பளவில், பல்வேறு பயிர்களில் பதிவு செய்யப்பட்டு, 58,569 மெட்ரிக் டன் அளவு விதைகளுக்கு சான்றளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தரமான விதைகள் விவசாயிகளுக்கு கிடைப்பதை உறுதி செய்வதற்காக விதைத் தரங்களைப் பரிசோதித்திட 71,002 விதை மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

- அரசு மற்றும் தனியார் மூலம் உற்பத்தி செய்யப்படும் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து அவற்றை உறுதி செய்ய தமிழ்நாடு முழுவதும் உள்ள 33 அறிவிக்கை செய்யப்பட்ட விதை பரிசோதனை

நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. விதைப் பரிசோதனை முடிவுகளை துல்லியமாகவும், விரைவாகவும் வழங்கிடும் பொருட்டு, நவீன ஆய்வு கருவிகளும், உபகரணங்களும் கொள்முதல் செய்ய விதை பரிசோதனை நிலையங்களுக்கு ரூ.1 கோடி மதிப்பில் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.03.2017 அன்று கோயம்புத்தூரில் கீழ் குறிப்பிட்டுள்ள கட்டிடங்கள் திறந்து வக்கப்பட்டன:–**

- ரூ.4.53 கோடி மதிப்பீட்டிலான, பரிசோதனை மற்றும் அளவீடுகளுக்கான தேசிய தர மதிப்பீடு வாரிய ஆய்வகம் மற்றும் விரிவுரை அரங்கம்.
- ரூ.1.30 கோடி மதிப்பீட்டிலான கூடுதல் விரிவுரை அரங்கம்.
- ரூ.1.15 கோடி மதிப்பீட்டிலான முதுநிலை கல்விக்கான விரிவுரை அரங்கம்.
- ரூ.1 கோடி மதிப்பீட்டிலான வளம் குன்றா அங்கக வேளாண்மை துறைக்கான ஆய்வுக்கூடம்.
- ரூ.0.53 கோடி மதிப்பீட்டிலான பல்நோக்கு ஊடக ஆய்வகம்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.03.2017 அன்று கீழ் குறிப்பிட்டுள்ள கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன:–**

- ரூ.13.23 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மாணாக்கர் உறைவிட விடுதி.
- ரூ.3.95 கோடி மதிப்பீட்டில் நவீன சமையல்அறையுடன் கூடிய உணவுக்கூடம்.
- ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் ரைசோக்ட்ரான் ஆய்வகக்கூடம்.
- ரூ.0.20 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் திசு வளர்ப்பு உற்பத்தி கூடம்.
- ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் மூலக்கூறு இனப்பெருக்க மகத்துவ மைய ஆய்வுக்கூடம்.
- ரூ.0.70 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் மூலக்கூறு இனப்பெருக்க மகத்துவ மைய நவீன மரபியல் ஆய்வுக்கூடம்.

**வேளாண் மாணாக்கர்களுக்கான உட்கட்டமைப்பு மற்றும் ஆராய்ச்சி வசதிகள்:**

- 7 வேளாண்மைக் கல்லூரிகள் மற்றும் 3 வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.108.04 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உயிர் நுட்பவியல் மகத்துவ மையத்தை உருவாக்கிட பத்து ஆண்டுகளுக்கு ரூ.430 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.10 கோடியில் ரூ.1.70 கோடி முதல் கட்டமாக வழங்கப்பட்டுள்ளது.
- புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை, தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் வாழவச்சனூர் ஆகிய இடங்களில் புதிதாக தொடங்கப்பட்ட மூன்று வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கு நிருவாகக் கட்டடம், மாணவ மாணவியர் விடுதி, பண்ணை அலுவலகம், பிற உபயோகக் கட்டடங்கள் மற்றும் வளாக வசதிகளை ஏற்படுத்த ரூ.96 கோடி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. இம்மூன்று வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கு மேசை, நாற்காலி, ஆய்வக உபகரணங்கள் போன்ற வசதிகள் செய்து தர ரூ.14.4 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் வேளாண் மாணவியருக்கான நான்கு தங்கும் விடுதிகள் கட்டும் பணிக்கு ரூ.25 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- மூன்று புதிய வேளாண் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகளைக் கட்டுவதற்கும், மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் விரிவுரை அரங்கு, தேர்வு கூடம் கட்டுவதற்காகவும் ரூ.49.37 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் தாலுகா வன்னிக்கோனேந்தல் கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள எலுமிச்சை ஆராய்ச்சி நிலையத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.1.5 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- திருச்சிராப்பள்ளி மாவட்டம் குமுளூரில் செயல்பட்டு வரும் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பட்டயப்படிப்பு மாணவ மாணவியர் பயிலகம் கட்டுவதற்கு ரூ.14.8 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- மதுரை மாவட்டம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு மாணவர்கள் பயன்பாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகள் செய்திட ரூ.2.5 கோடி மாநில நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- கிருஷ்ணகிரி மாவட்டம் பையூரில் மா ஆராய்ச்சி மையம் அமைக்க ரூ.2 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், மூன்றாம் தலைமுறை இளைஞர்களுக்கு தொன்மை வாய்ந்த வேளாண் தொழில் நுட்பங்கள் பல் நோக்கு பண்ணையத்தின் மூலம் காட்சிப் படுத்துதலுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ரூ.7 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- திருச்சிராப்பள்ளியில் அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உழவர் விடுதி அமைக்க ரூ.2.57 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்துக்கு அளிக்கப்பட்ட விருதுகள்:**

- காவிரி டெல்டா பகுதியில் சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த அர்ப்பணிப்புடன் செயல்பட்டதற்காக, தஞ்சாவூர் மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்கு தெற்காசிய தானிய அமைப்புகளின் முனைப்பு வழங்கிய தனிச்சிறப்பு பாராட்டு வில்லை வழங்கப்பட்டது.

- வட்டார அளவில் சிறந்த வானிலை முன்னறிவிப்பிற்காக, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கோயம்புத்தூர் வானிலை ஆராய்ச்சி மையத்திற்கு இந்தியாவின் சிறந்த 100 திட்டங்கள் வரிசையில், ஸ்கோச் தரவரிசைப்பட்டியல் தகுதிச் சான்று மற்றும் சிறந்த வேளாண் காடுகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான மதிப்புச் சங்கிலித் திட்டத்திற்காக மேட்டுப்பாளையம் வனவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு ஸ்கோச் தரவரிசைப்பட்டியல் தகுதிச் சான்று வழங்கப்பட்டது.

- சிறுதானியங்கள் பதனிடும் தொழில் நுட்பத்திற்காக தேசிய அளவிலான 2016ஆம் ஆண்டின், மகேந்திரா சம்ருதி விருது, அறுவடை பின்சார் தொழில் நுட்ப மையத்திற்கு வழங்கப்பட்டது.

- அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டத்தின் சிறந்த களைமேலாண்மை மையத்திற்கான 2016–2017ஆம் ஆண்டிற்கான விருதினை களை மேலாண்மை மைய, உழவியல் துறைக்கு ஜபல்பூரில் உள்ள களை ஆராய்ச்சி இயக்குனரகத்தால் வழங்கப்பட்டது.

- 18.02.2017 அன்று சிறந்த அறிவியல் ஆராய்ச்சி நிலையத்திற்கான விருது கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு எண்ணெய்வித்து பயிர்களில் சிறப்பு தொகுப்பு செய்முறை விளக்கத்திற்காக அளிக்கப்பட்டது.

- அகில இந்திய அளவில் 2015–2016ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட சிறந்த எண்ணெய் வித்துப் பயிர்கள் முன்னிலை செயல் விளக்கங்களுக்கான இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக விருது, மற்றும் சிறந்த அறிவியல் ஆரய்ச்சிக்கான விருது ஆகியன கடலூர் மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு 18.02.2017 வழங்கப்பட்டது.

- வனசூழலியல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக இந்திய அறிவியல் அளவீட்டு கழகத்தின் சர்.ஜே.சி. போஸ் நினைவு விருது 18.02.2017 அன்று அளிக்கப்பட்டது.

- பண்டிட் தீன் தயாள் உபாத்தியாய தேசிய வேளாண் விஞ்ஞான புரஷ்கார் விருது 15.03.2017 அன்று வேலூர் மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு அளிக்கப்பட்டது.

- பயிர்களில் துத்தநாக ஊட்டம் பற்றிய ஆய்விற்காக 07.12.2017 அன்று இந்திய உர சங்கம் மற்றும் சர்வதேச துத்தநாக சங்கம் விருது வழங்கியது.

- 21.12.2017 அன்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் விலை முன்னறிவிப்பு மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான இந்தியாவின் சிறந்த 30 திட்டங்கள் வரிசையில், ஸ்கோச் தரவரிசைப் பட்டியல் தகுதிச் சான்று வழங்கப்பட்டது.

- 2018ஆம் ஆண்டில் குடியரசு தின விழாவில் வேளாண் துறைக்கான தெப்பத்திற்கு மாநில ஆளுநர் அவர்களால் முதல் பரிசு வழங்கப்பட்டது.

**தரமதிப்பீடு**

- தேசிய தர மதிப்பீடு கட்டமைப்பு நிறுவன தரவரிசையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்களில் 2016ஆம் ஆண்டில் 40ஆவது இடத்தையும், 2017ஆம் ஆண்டில் 7ஆவது இடத்தையும், மேலும், கற்றுதருதல் – கற்றல் வளவாய்ப்புகள் நிலையில் 2016ஆம் ஆண்டில் 20ஆவது இடத்தையும் 2017ஆம் ஆண்டில் 5ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.
- க்யு.எஸ். பிரிக்ஸ் தரவரிசை (பிரேசில், ரஷ்யா, இந்திய, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா) நாடுகளின் பல்கலைக்கழக கல்வி நிறுவனங்களின் தரவரிசையில் 2016ஆம் ஆண்டு 130–140ஆவது இடத்தையும், 2017ஆம் ஆண்டு 105ஆவது இடத்தையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் பெற்றுள்ளது.

**இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத் (ICAR) தரவரிசை 2017**

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், மாநில வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கழக நிறுவனங்கள், நிகர்நிலை வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் தரவரிசையில் 2017ஆம் ஆண்டுக்கான தரவரிசையில் 7ஆவது இடத்தை பெற்றுள்ளது.

**Career 360 தரவரிசை**

- Career 360 என்ற நிறுவனத்தின் தரவரிசையில் 2016ஆம் ஆண்டு மாநில வேளாண்மைப் பல்கலைக் கழகங்களின் பட்டியலில் முதலாம் இடத்தை பிடித்துள்ளது.

**உலக வங்கி திட்டங்கள்**

- தமிழ்நாடு நீர்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP - Tamil Nadu) உலகவங்கி தமிழக அரசுக்கு 2017–2023ஆம் ஆண்டு மொத்த ஒதுக்கீடாக ரூ.8,538.63 இலட்சம் வழங்க திட்டமிட்டுள்ளது. இந்த திட்டத்தில் அனைத்து நோக்கங்களையும் நிறைவேற்றும் வகையில் தமிழ்நாட்டின் 18 ஆற்று வடி நிலப்பகுதிகளும் காலநிலைக்கேற்ற பயிர் சாகுபடி மற்றும் வணிக வாய்ப்பு வேளாண்மையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- தமிழகத்தின் பயிறு வகை பயிர்களின் உற்பத்தியை பெருக்கவும், நிலைத்த பயிறு வகை நுண்ணுயிர் உற்பத்தியை முன்னெடுக்கவும் பயிறுகளை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்பு நிலையங்களை உருவாக்க ரூ.300 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூர், மதுரை, தூத்துக்குடி மாவட்டங்களில் உழவர்களுக்கான பயிர் ஊட்டம் வழங்குவதற்காக நீரில் கரையும் உரங்கள் தயாரிப்பு அலகுகள் உருவாக்க முதலாம் ஆண்டிற்கு ரூ.363 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- வறட்சி நிலையைக் கண்காணித்தல், விளைச்சல் கணிப்பு, பயிர்செய் பரப்பு ஆகியவற்றை கண்காணிக்க புவியுணர்வு தகவல்கள் இனங்களுக்காக ரூ.184 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- கொல்லி மலைப் பகுதியில் அங்கக முறைப்படி தரமான கருமிளகு உற்பத்தி செய்வதற்காக ரூ.21.39 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் பயறு வகைப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கும் திட்டத்தை வேளாண்மை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இணைந்து செயல்படுத்த ரூ.53.5 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**தமிழக அரசின் புதுமை திட்டங்கள்:**

- இயற்கை சாயம் தரவல்ல அனட்டோ மரத்தினை பிரபலப்படுத்துதல், அறுவடைக்குப் பின் பதனிடுதல் மற்றும் தொழிற்சாலை உபயோகம் குறித்த திட்டத்தினை கோயம்புத்தூர் மாவட்டத்தில் செயல்படுத்த ரூ.2.24 கோடி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.
- சிறுதானியங்கள் உற்பத்திப் பெருக்கம் மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்புக்கு புத்துயிர்அளிக்கும் திட்டத்தினை கோயம்புத்தூர் மாவட்டத்தில் செயல்படுத்த ரூ.1.87 கோடி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.
- பணிச்சூழலை மேம்படுத்துவதன் வாயிலாக பண்ணையில் பணிபுரியும் மகளிரின் வேலைப்பளுவை மட்டுப்படுத்துதல் குறித்த திட்டத்தினை மதுரை மனையியல் கல்லூரியில் செயல்படுத்த ரூ.1.77 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டின் செம்மண் பாங்கான பகுதிகளுக்கு ஏற்ற ஒருங்கிணைந்த அங்கக மாதிரி மேய்ச்சல் நிலக் காடுகளை, செட்டிநாட்டில் உள்ள மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவுவதற்கு ரூ.1.97 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டுக்கு ஏற்ற ஊட்ட சத்துமிக்க, வறட்சி தாங்கும் முதல் தரமான நெல் வகைகளை கோயம்புத்தூர் மாவட்டத்தில் உற்பத்தி செய்வதற்கு ரூ.256 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- முக்கிய காய்கறி வகைகளுக்கான தரமான விதைகளை உற்பத்தி செய்தல் மற்றும் வழங்குதலில் புத்தாக்க அணுகுமுறை திட்டத்தினை செயல்படுத்த ரூ.277.75 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- நிலையான அங்கக வேளாண்மைக்கான உயிர் இடுபொருட்கள் மற்றும் அங்கக இடுபொருட்கள் ரூ.132 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**வெளியிடப்பட்ட புதிய பயிர் இரகங்கள்:**

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 2016–2017ஆம் ஆண்டு பின்வரும் 12 புதிய பயிர் இரகங்களான; (1) நெல் கோ 52, (2) குதிரைவாலி எம்டியு 1, (3) துவரை கோ 8, (4) உளுந்து ஆடுதுரை 6, (5) துவரை கிள்ளிகுளம் 1, (6) எள் விஆர்ஐ 3, (7) ஆமணக்கு ஒய்ஆர்சிஎச் 2, (8) பருத்தி கே 12, (9) கரும்பு கோக (க) 25, (10) புடலை கோ எச் 1, (11) சுரைக்காய் பாலூர் 1 மற்றும் (12) பிரஞ்சு பீன்ஸ் ஊட்டி 3 ஆகியவற்றை வெளியிட்டுள்ளது.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தின் இணையதளம்**

- வேளாண்மை மற்றும் தோட்டக்கலை சார்ந்த அனைத்து தகவல்களை உள்ளடக்கிய சுமார் எட்டரை இலட்சம் புதுப்பிக்கப்பட்ட பக்கங்களைக் கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தின் இணையதளம் (http://agritech.tnau.ac.in) உழவர்களுக்கும் மற்றும் பிற தரப்பினருக்கும் பயன் தரும் வண்ணம் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் செயல்படுகிறது.

**தரமான விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம்**

- 2016–2017ஆம் ஆண்டில், 175 முக்கியமான பயிர் இரகங்களில், 1,674 குவிண்டால் வல்லுநர் விதைகள், 1,352 குவிண்டால் ஆதார விதைகள், 3,241 குவிண்டால் சான்றிதழ் மற்றும் உண்மை நிலை விதைகள் 28 இலட்சத்து 93 ஆயிரம் நாற்றுகள் மற்றும் நடவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

**வணிகப் படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள்**

- வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தில், நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பதிவு செய்துள்ளன. இதுவரை, 25 தொழில்நுட்பங்கள் வணிகப்படுத்தப்பட்டுள்ளன.

- மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் அமைந்துள்ள, தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், தென்னை டானிக், பஞ்சகாவ்யா, சூடோமோனாஸ் மற்றும் ட்ரைகோடெர்மா நுண்ணுயிரிகள் உற்பத்தி, பூச்சி விரட்டி மற்றும் கம்பு மாவில் உடனடியாக உணவு தயாரிக்கும் கலவை ஆகியவை வணிகப்படுத்தப்பட்டுள்ளன.

- 2016–2017இல் மக்காச்சோள வீரிய ஒட்டு கோ எச் (ம) 8 விதை உற்பத்தி தொழில்நுட்பம் மற்றும் கரும்புச் சாற்றினை பாட்டிலில் அடைக்கும் தொழில்நுட்பம் ஆகியன வணிகப் படுத்தப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் பிரதம மந்திரியின் விவசாய நீர்பாசனத் திட்டம் – நீர்வடிப்பகுதி மேம்பாட்டின் (முன்னாள் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்) கீழ் ரூ.136.63 கோடிக்கு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைகளுக்கு விடுவிக்கப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

- 1,158 பண்ணைக்குட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

- 3,846 தடுப்பணைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

- 9,283 இதர பணிகள் (கசிவுக் குட்டை, புதிய ஊருணி, மேம்படுத்தப்பட்ட ஊருணி தூர்ந்து போன கிணறுகள் மேம்படுத்தல்) செய்யப்பட்டுள்ளன.

- நிலமற்ற தொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு உதவுவதற்காக தெளிப்பான்கள், விவசாய உபகரணங்கள், ஆடு, மாடுகள் வழங்குதல், தையல் இயந்திரங்கள், தார்ப்பாலின்கள், சிறுகடைகள், மண்புழு உரக்கூடம் உள்ளிட்ட 5,795 பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

# கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை



**விலையில்லா கறவை பசுக்கள் / வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டம்**

- விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் ரூ.49.832 கோடி நிதி ஒதுக்கீட்டில் இதுவரை 8,417 பயனாளிகளுக்கு தலா ஒரு கறவைப்பசு வீதம் மொத்தம் 8,417 கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.198.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 97,473 பயனாளிகளுக்கு தலா 4 வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வீதம் மொத்தம் 3,89,892 வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

**கோழியின அபிவிருத்தி திட்டம்**

- தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளில் தனி நபர் வருமானத்தை பெருக்கி ஊரக வளர்ச்சிக்கு வித்திடும் வகையில், இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.18.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 12 மாவட்டங்களில் 199 கறிக்கோழிப்பண்ணைகளும் 18 மாவட்டங்களில் 2,861 நாட்டுக் கோழிப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன மேலும், 25,880 பயனாளிகள் பயன்பெறும் வகையில் புறக்கடை கோழி வளர்ப்பு திட்டம் ரூ.6.47 கோடி நிதி ஒதுக்கீட்டில் 31 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மாநில தீவன அபிவிருத்தி திட்டம்**

- மாநில தீவன அபிவிருத்தி திட்டம் 2017–2018க்காக ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூ.18.75 கோடி தற்பொழுது பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 7,170 ஏக்கர் விவசாயிகளின் நிலங்கள் பயிரிடப்பட்டு 20.038 மெட்ரிக் டன் தீவன உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. குறைந்த நீரில் நிலமற்ற முறையில் (ஹைட்ரோபோனிக்) சிறு குறு மற்றும் சாகுபடி நிலமற்ற விவசாயிகளும் தீவன உற்பத்தி செய்ய ஏதுவாக ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,100 ஹைட்ரோபோனிக் அலகுகள் விவசாயிகளின் இடங்களில் தமிழகம் முழுவதும் நிறுவப்பட்டு வருகின்றது. மாவட்ட கால்நடை பண்ணை ஒசூரில் வறட்சி காலங்களில் தீவன பற்றாக்குறையை போக்க நீடித்த நிலையான தீவன உற்பத்தியை ஏற்படுத்தும் நோக்கில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் 2017–2018இன் கீழ் ரூ.3.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றை தவிர, தமிழ்நாடு அரசின் இலவச கறவை பசுக்கள் பயனாளிகளுக்கு 10,000 அலகுகள் அசோலா பாசி வளர்ப்பதற்கு ரூ.1.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 10,000 அசோலா அலகுகள் நிறுவப்பட்டுள்ளது.

**உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம்**

- நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி உதவியுடன் RIDF XXIII திட்டத்தின் ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தில்

2017–2018ஆம் ஆண்டில் 150 கால்நடை மருந்தக கட்டிட பணிகளுக்கு ரூ.49.09 கோடி நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் RIDF XXII திட்டத்தின் கீழ் 127 கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.34.63 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தவிரவும் தமிழ்நாடு அரசு, நபார்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலக கட்டடம் கட்ட ரூ.160 இலட்சத்திற்கு நிதி ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

**கால்நடைகள் உடல் நலம் பேணுதல்**

- 2017–2018 நிதியாண்டில் நாளது வரை ரூ.11.54 கோடி நிதி ஒதுக்கீட்டில் கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 12ஆவது கால் மற்றும் வாய் நோய் (கோமாரி) தடுப்பூசி சுற்றில் மொத்தம் 93.86 இலட்சம் மாட்டினங்களுக்கு மார்ச் 2017 மாதத்தில் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மேலும், 13ஆவது கால் மற்றும் வாய் நோய் (கோமாரி) தடுப்பூசி சுற்றில் மொத்தம் 93.89 இலட்சம் மாட்டினங்களுக்கு செப்டம்பர் 2017 மாதத்தில் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மேலும், அஸ்காட் திட்டத்தின் கீழ் 2017–2018 நிதியாண்டில் ரூ.2.17 கோடி நிதி ஒதுக்கீட்டில், தமிழகத்தில் நாளது வரை ஆந்த்ராக்ஸ் நோயினை தடுப்பதற்காக சுமார் 28.46 இலட்சம் கால்நடைகளுக்கு ஆந்த்ராக்ஸ் தடுப்பூசியும், சப்பை நோயினை தடுப்பதற்காக சுமார் 4.23 இலட்சம் மாட்டினங்களுக்கும், தொண்டை அடைப்பான் நோயினை தடுப்பதற்காக சுமார் 30,700 மாட்டினங்களுக்கும், ஆட்டம்மை நோயினை தடுப்பதற்காக சுமார் 32,200 செம்மறி ஆடுகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

**உள்நாட்டு இனங்களை பேணுதல்**

- வகை சாரா நாட்டின பசுக்களின் மரபு தன்மையை உயர்த்தும் பொருட்டு செட்டிநாடு மாவட்ட கால்நடை பண்ணையில் தார்பார்க்கர் இன மாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்த கால்நடை பண்ணையில் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் கொட்டகைகள் பலப்படுத்தப்பட்டு சிறந்த மரபணுத்தன்மை உடைய தார்பார்க்கர் இன பசுக்கள் 50 எண்ணிக்கை வாங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**

- தமிழகத்தின் உள்நாட்டின மாடுகளை பாதுகாப்பதற்கென, “ஈரோடு மாவட்டத்தில் காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல்” மற்றும் “தமிழ்நாட்டில் உள்நாட்டு மாட்டின பாதுகாப்பிற்கென புலிக்குளம் மரபணு வள மையம் நிறுவுதல்” எனும் இரண்டு திட்டங்களை ரூ.450 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்கு தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் (NADP) கீழ் மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- “கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு அவசர சிகிச்சை அளிப்பதற்கென நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள்” எனும் திட்டத்தினை தமிழ்நாட்டின் ஐந்து மாவட்டங்களில் (காஞ்சிபுரம், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் நாமக்கல்) தொடர்ந்து நடத்துவதற்கு, தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் (NADP) கீழ் ரூ.50 இலட்சம் கூடுதல் நிதியினை மத்திய அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 8,058 கால்நடைகள் பயன்பெற்றுள்ளன.
- தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 110 விதியின் கீழ், கோடுவெளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியில் கல்விக்கூட கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள ரூ.1,400 இலட்சத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.
- தேசிய கால்நடைத் திட்டத்தின் கீழ் ரூ.200 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் இறந்த கால்நடைகளின் உடல்களை அகற்றுவதற்கும் சுற்றுச்சூழல் மாசடைவதை தவிர்ப்பதற்கும் “இறைச்சி உடலங்கம் பயன்பாட்டு நிலையம்” நிறுவுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- “கோழிப் பண்ணைகளில் உற்பத்தியை அதிகரிக்க வெள்ளைக் கழிச்சல் நோய்க்கான திவா (DIVA) தடுப்பு மருந்தின் தரத்தினை மேம்படுத்துதல்”, “உணவு பாதுகாப்பு மற்றும் உற்பத்தியைப் பெருக்குவதற்காக விலங்கின மற்றும் பொது சுகாதாரம்” மற்றும் “இறைச்சிக் கூடங்களில் உள்ள முதல் இரைப்பை திரவக் கழிவுகளில் இருந்து உயிரி மின்சாரம் மற்றும் உயிரி ஜல வாயு தயாரித்தல்” ஆகிய மூன்று திட்டங்களை ரூ.730.80 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு புதுமைத் திட்டத்தின் (TANII) கீழ் செயல்படுத்த தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய நிறுவன தரவரிசை ஆய்வு மதிப்பீட்டில் (NIRF) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 38ஆவது இடத்தினைப் பெற்றுள்ளது.




- 2017ஆம் ஆண்டில் கால்நடை மருத்துவ பாடப் பிரிவில் அதிக அளவில் இள நிலை ஆராய்ச்சியாளர் இடங்களைப் பெற்று, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் விருதினை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

- தமிழ்நாட்டின் உள்ளூர் வேளாண் பருவ நிலைக்கு ஏற்றதும் அதிக நோய் எதிர்ப்பு சக்தியும் கொண்ட “தானுவாஸ் KPM தங்கம்” எனும் புதிய கலப்பினப் பன்றியை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் “நிறுவன நாள்–2017 மற்றும் கால்நடை மற்றும் கோழிப் பண்ணையாளர் தின விழா”, 10.11.2017 அன்று திண்டுக்கலில் நடைபெற்றது. இவ்விழாவில் பல்கலைக்கழகத்தின் புதிய தொழில்நுட்பங்கள் கால்நடைப் பண்ணையாளர்களிடையே பிரபலப்படுத்தப்பட்டு, 5,000க்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் பயனடைந்தனர். இப்பல்கலைக் கழகத்தால் உருவாக்கப்பட்ட நந்தனம் இறைச்சிக் கோழி–3 மற்றும் தானுவாஸ் நாட்டுக்கோழி (அசீல்) ஆகிய புதிய ரகக் கோழிகள் இவ்விழாவில் வெளியிடப்பட்டன.

## பால்வளத்துறை

**பால் கொள்முதல் சாதனை:**

- பால் கொள்முதல் பிப்ரவரி 2017இல் நாளொன்றுக்கு 25.40 இலட்சம் லிட்டராக இருந்த நிலையிலிருந்து 22 சதவீதம் அதிகரித்து நவம்பர் 2017இல் நாளொன்றுக்கு 31.04 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. மேலும், 21.09.2017 அன்று அதிகபட்சமாக 33.01 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து ஆவின் புதிய சரித்திர சாதனை படைத்துள்ளது.

**பால் விற்பனை சாதனை:**

- பால் விற்பனை பிப்ரவரி 2017இல் நாளொன்றுக்கு 21.02 இலட்சம் லிட்டராக இருந்த நிலையிலிருந்து 4.76 சதவீதம் அதிகரித்து நவம்பர் 2017இல் நாளொன்றுக்கு 22.02 இலட்சம் லிட்டராக அதிகரித்துள்ளது.

- 29.09.2017 அன்று அதிகபட்சமாக சென்னை மாநகரில் 12.30 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யது புதிய இலக்கு அடைந்துள்ளது. அதே போல் மாவட்ட ஒன்றியங்களில் 03.09.2017அன்று அதிகபட்ச அளவான 10.32 இலட்சம் லிட்டர் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2017– 2018இன் அறிவிப்பினை தொடர்ந்து 08.09.2017 அன்று 225 மிலி. பால் பாக்கெட் ரூ.10/–க்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

**பால் பொருட்கள் விற்பனை:**

- பால் பொருட்கள் பிப்ரவரி 2017இல் ரூ.20.43 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது நவம்பர் 2017இல் 20 சதவீதம் அதிகரித்து ரூ.24.44 கோடியாக விற்பனை அதிகரித்து புதிய சாதனை படைத்துள்ளது. வருவாய் மற்றும் இலாபம் ஈட்டும் பொருட்டுகள் தயிர் 500 மி.லி பால் பையிலும், 1 கிலோ பக்கெட் தயிரும், ரசகுல்லா மற்றும்

4 வகை ஐஸ்கிரீம் ஆகிய புதிய பால் பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.

- கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் கிராமபுறங்களில் டிசம்பர் 2017 தேதியில் 431 விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் கல்லூரிகளில் 84 விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

**வெளி மாநிலங்களில் பால்பொருட்கள் விற்பனை:**

- தற்போது பால் கொள்முதல் உயர்ந்து பால் பொருட்கள் உற்பத்தியும் அதிகரித்துள்ள நிலையில் வெளி மாநிலங்களிலும் ஆவின் பால் பொருட்கள் விற்பனை துவங்கும் அடிப்படையில் இராஜஸ்தான், டில்லி, தெலுங்கானா, ஆந்திர பிரதேசம், மத்திய பிரதேசம், மேற்கு வங்காளம், குஜராத் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களில் மொத்த விற்பனையாளர்கள் (WSD) நியமிக்கப்பட்டுள்ளனர். கொல்கத்தா, டெல்லி, தெலுங்கானா மாநில மொத்த விற்பனையாளர்களுக்கு பால் பொருட்கள் விற்பனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**வெளி நாடுகளில் பால்பொருட்கள் விற்பனை:**

- வெளிநாடுகளிலும் ஆவின் பால் பொருட்கள் விற்பனை மேற்கொள்ளும் நடவடிக்கையாக சிங்கப்பூரில் 25.11.2017 அன்று ஆவின் டெட்ரா பால் விற்பனை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- பால் பொருட்கள் ஏற்றுமதி ஆவின் வரலாற்றிலே முதன் முறையாக கடந்த நவம்பர் 2017இல் சிங்கப்பூருக்கு மூடியுடன் கூடிய ஆவின் டெட்ரா பால்பாக்கெட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இதுவரை 2 கண்டெய்னர்களில் டெட்ரா பால் பாக்கெட்டுகள் சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**உட்கட்டமைப்பு வசதிகள்**

- காஞ்சிபுரம், திருச்சி, தருமபுரி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஒன்றியங்களில் ரூ.982 இலட்சம் செலவில் பால்பண்ணைகளில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு வசதி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒன்றியங்களின் கொள்திறன் மற்றும் விற்பனை விரிவாக்க செயல்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**புதிய பால்பண்ணை**

- பெரம்பலூர் மாவட்டம் பாடலூரில் ரூ.36 கோடியே 28 இலட்சம் செலவில் நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட புதிய பால்பண்ணை அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 07.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இந்த பால்பண்ணையின் மூலம் அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து பால் உற்பத்தியாளர்களும் பயன்பெற்று வருகிறார்கள்.

**புதிய ஐஸ்கிரீம் மற்றும் உயர் வெப்பநிலை நறுமணப்பால் ஆலை:**

- மதுரை ஒன்றியத்தில் உள்ள ஆவின் பால்பண்ணை வளாகத்தில் ரூ.55 கோடி செலவில் ஐஸ்கிரீம் தொழிற்சாலை மற்றும் ரூ.45 கோடி செலவில்பாலை உயர் வெப்ப நிலையில் பதப்படுத்தி சிப்பம் கட்டும் (UHT), நறுமணப்பால் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்க 28.04.2017 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் தென்மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு தேவையான ஐஸ்கீரிம் மற்றும் நறுமன பால் இலகுவாக விரைவாக கிடைக்க வகை செய்யும்.

**புதிய அதி நவீன பாலகங்கள்**

- மாவட்ட ஒன்றியங்களில் 7 நவீன பாலகங்களும் சென்னையில் 6 நவீன பாலகங்களும் ரூ.778 இலட்சத்தில் அமைக்கப்பட்டு நுகர்வோர்களுக்கு ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

- சென்னை அம்பத்தூரில், பால் பொருட்களின் விற்பனையினை அதிகரிக்கும் நோக்கில் ரூ.88 இலட்சம் மதிப்பிலான 3 புதிய குளிர் சாதன வசதியுள்ள வாகனங்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளன. இதனால் பால் மற்றும் பால்பொருட்கள் விநியோக வசதி.

**கால்நடைத் தீவன உற்பத்தி:**

- ஈரோட்டில் ரூ.20 கோடியே 36 இலட்சம் செலவில் அதி நவீன தானியங்கி தொழில்நுட்ப வசதியுடன் நாளொன்றுக்கு 150 மெட்ரிக் டன் கால்நடை தீவன தொழிற்சாலை அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

- கால்நடைத் தீவன தொழிற்சாலையில் கடந்த 2016–2017ஆம் ஆண்டில் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 1,891 மெட்ரிக்டன் ஆக இருந்த கால்நடைத் தீவன உற்பத்தி 67 சதவீதம் அதிகரித்து 2017–2018ஆம் ஆண்டில் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 3,157 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. இதனால் பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு தேவையான கால்நடை தீவனம் நியாயமான விலையில் வழங்கப்பட்டு பயன்பெறுகின்றனர்.



**கால்நடைத் தீவன விற்பனை:**

- கடந்த 2016–2017ஆம் ஆண்டில் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 5,064 மெட்ரிக்டன் ஆக இருந்த கால்நடைத் தீவன விற்பனை 33.73 சதவீதம் அதிகரித்து 2017–2018ஆம் ஆண்டில் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 6,772 மெட்ரிக்டன்னாக அதிகரித்துள்ளது.

**பணியாளர் நலன்:**

- தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் சீருடைச் செலவு மற்றும் தையற்கூலி ஆகியவை கூடுதலாக ரூ.500 உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- பணியிலிருந்து ஒய்வு பெற்ற ஆவின் பணியாளர்களுக்கு ஆவின் வரலாற்றில் முதன் முறையாக நாளொன்றுக்கு 1/2 (அரை) லிட்டர் இலவசமாக 4,272 பணியாளர்களுக்கு பால் அட்டைகள் செப்டம்பர் 2017 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

- ஆவின் நுகர்வோர் சேவையில், மேலும் ஒரு மணிமகுடமாக, தொலைபேசி தகவலின் அடிப்படையில், பால்பொருட்களை இலவசமாக நுகர்வோர்களுக்கு வீட்டிற்கே விநியோகம் (Door Delivery) செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக, தெற்காசிய விளையாட்டு குடியிருப்பு வளாகத்தில் இந்த "இல்லம் தேடி வரும் ஆவின்" சேவை 04.05.2017 அன்று துவக்கப்பட்டுள்ளது.

## மீன்வளத்துறை

**மீனவர் நலன்**

- மீன்பிடித் தடைக்காலத்தில் வழங்கப்பட்டுவரும் ரூ.2,000/– நிவாரணத் தொகையினை, ரூ.5,000/– ஆக உயர்த்தி 13 கடலோர மாவட்டங்களை சேர்ந்த 1,59,506 மீனவ குடும்பங்களுக்கு ரூ.79.75 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- 2017–2018ஆம் ஆண்டிற்கான மீன்பிடிப்பு குறைந்த காலத்திற்கான சிறப்பு நிவாரணத் தொகை திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 11 கடலோர மாவட்டங்களை சேர்ந்த 1,38,898 மீனவ குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.69.45 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- கடல் மீனவர் / மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் முடியவுள்ள 10 கடலோர மாவட்டங்களை சேர்ந்த 2,89,689 மீனவர் / மீனவ மகளிருக்கு மொத்தம் ரூ.86.90 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- மத்திய மாநில அரசு நிதிபங்களிப்புடன் செயல்படுத்தப்படும் மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ், 145 மீனவ குடும்பங்களுக்கு ரூ.2.655 கோடி காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து நிவாரணமாக பெற்று வழங்கப்பட்டுள்ளது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இடையறாத நடவடிக்கைகளின் மூலமாக தமிழகத்தைச் சேர்ந்த 263 மீனவர்கள் இலங்கை

சிறையிலிருந்தும் மற்றும் 15 மீனவர்கள் ஈரான் சிறையிலிருந்தும் விடுவிக்கப்பட்டு, தமிழகம் கொண்டு வரப்பட்டனர்.

- "வர்தா" புயல் காரணமாக திருவள்ளூர், சென்னை காஞ்சிபுரம் மாவட்ட கடலோர பகுதிகளில் இருந்த மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்கள் இழந்த மீனவர்களுக்கு ரூ.19.13 கோடியும் காணாமல் போன/ இறந்த 10 மீனவர்களின் குடும்பங்களுக்கு ரூ.10 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது,

- காமாராஜர் துறைமுக கடற்பகுதியில் இரண்டு சரக்கு கப்பல்கள் 28.01.2017 அன்று எதிர்பாராதவிதமாக மோதி ஏற்பட்ட எண்ணெய் கசிவால் பாதிப்புக்குள்ளான திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட மீனவர்களுக்கு இடைக்கால நிவாரணமாக ஒரு மீனவ குடும்பத்திற்கு ரூ.5,000/– வீதம் 28,276 மீனவ குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.14.13 கோடி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

- மோசமான வானிலை காரணமாகவும், எஞ்சின் பழுதடைந்தமை காரணமாகவும் இலங்கை கடற்பகுதியில் மூழ்கிய மற்றும் பழுதடைந்த இராமநாதபுரத்தைச் சேர்ந்த 18 மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.90 இலட்சம் மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 19.04.2017 அன்று வழங்கப்பட்டுள்ளது.

- இலங்கை அரசால் விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்களின் 36 மீன்பிடிப் படகுகளில் 26 படகுகள் தமிழகம் கொண்டு வரப்பட்டது.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து கடலில் மீன்பிடிக்கும் போது பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 61 மீனவர்களின் குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.89 இலட்சம் நிவாரண நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

- 2017–2018ஆம் ஆண்டு முதல் இயந்திர மீன்பிடிப் படகு ஒன்றிற்கு வழங்கப்படும் டீசலின் அளவு, ஆண்டு ஒன்றிற்கு 15,000 லிட்டரிலிருந்து 18,000 லிட்டராகவும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு ஒன்றிற்கு வழங்கப்படும் டீசலின் அளவு, ஆண்டு ஒன்றிற்கு 3,600 லிட்டரிலிருந்து 4,000 லிட்டராகவும் அரசால் உயர்த்தி வழங்கல்.

- இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு ஒன்றிற்கு லிட்டருக்கு ரூ.25/– என்ற மானிய விலையில் வழங்கப்படும் மண்ணெண்ணெயின் அளவையும், ஆண்டு ஒன்றிற்கு 3,000 லிட்டரிலிருந்து 3,400 லிட்டடாக அரசு உயர்த்தி வழங்கல்.

**மீனவ இளைஞர்களுக்கான பயிற்சிகள்**

- மீனவ இளைஞர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் அளித்து அவர்கள் இந்திய கடலோர காவல்படை மற்றும் கப்பற்படை ஆகியவற்றில் பணியில்சேர உதவிடும் வகையில் பயிற்சி திட்டத்தினை செயல்படுத்திட அரசால் ரூ.1.04 கோடி ஒப்பளிக்கப்பட்டு பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

- ஆண்டுதோறும் 20 மீனவ இளைஞர்களுக்கு இந்திய குடிமைப் பணி போட்டித் தேர்வுக்கான 6 மாத கால சிறப்பு பயிற்சி அண்ணா மேலாண்மை நிலையத்தில் (அகில இந்திய குடிமை பணிகளுக்கான பயிற்சி நிலையம்) வழங்க ஆணையிடப்பட்டு 18.12.2017 அன்று முதல் நடைபெற்று வருகிறது.

**ஒகி புயல் நிவாரண நடவடிக்கைகள்**

- கடந்த 30.11.2017 அன்று ஒகி புயலினால் ஏற்பட்ட தாக்கத்தினால் அண்டை மாநிலங்களில் கரை சேர்ந்த தமிழ்நாடு மீனவர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்ப ஏதுவாக படகுகளுக்கு தேவைப்படும் டீசல் எரியெண்ணெய் மற்றும் மீனவர்களுக்கு உணவுப்படி வழங்கிடும் பொருட்டு ரூ.2.20 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு அண்டை மாநிலங்களில் இருந்த 217 மீன்பிடி படகுகள் மற்றும் 1,754 தமிழ்நாடு மீனவர்களை பத்திரமாக சொந்த ஊர்களுக்கு கொண்டு வரப்பட்டனர்.

- ஒகி புயலால் பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த மீனவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக தலா ரூ.5,000/– வீதம் 30,756 மீனவ குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.15.378 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

- ஒகி புயல் காரணமாக காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களுக்கு சிறப்பினமாக, கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த 253 மீனவ குடும்பங்களுக்கு தலா ரூ.5,000/– வீதம் உடனடி வாழ்வாதார நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- காணாமல் போன மீனவர்கள் குறித்த விரிவான ஆய்வு மேற்கொண்டு இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க வருவாய் நிருவாக ஆணையர் தலைமையில் அலுவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டு அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அரசால் அமைக்கப்பட்டுள்ள குழு விரிவான விசாரணை மேற்கொண்டு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் காணாமல் போன மீனவர்களை இறந்தவர்களாகக் கருதி உரிய நிவாரணம் வழங்கப்படும்.

- "ஒகி"புயலால் சிக்கி மரணமடைந்த மீனவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.20 இலட்சம் வழங்கிட ஆணையிடப்பட்டு இறந்துபோன 10 மீனவர்களின் குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.2 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- "ஒகி" புயலில் சிக்கி ஊனமடைந்து, தொடர்ந்து மீன்பிடி தொழில் மேற்கொள்ள முடியாத நிலையில் இருக்கும் மீனவர்களுக்கு, மாற்று வாழ்வாதாரம் வழங்கிட ஏதுவாக மறுவாழ்வு நிதியுதவியாக 5 இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மீனவர்களுக்கு நிவாரணமாக தலா 50,000 ரூபாயும் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி 20 மீனவர்களுக்கு தலா ரூ.50,000/– நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**உள்நாட்டு மீன்வளம்**

- அரசு மீன் விதைப் பண்ணைகளில் 4,396 இலட்சம் நுண்மீன் குஞ்சுகளும், 506.907 இலட்சம் மீன் விரலிகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்**

- கிருஷ்ணகிரி மற்றும் மேட்டூர் அரசு மீன் பண்ணைகளை மேம்படுத்திட ரூ.368.50 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு மீன் பண்ணை மேம்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.
- தூத்துக்குடி மாவட்டத்தில், 10 கடலில் மிதவைக் கூண்டுகளில் கடல் விரால் மற்றும் சிங்கி இறால்கள் வளர்த்தல் திட்டத்தினை செயல்படுத்திட அரசால் ரூ.53.63 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மிதவைக் கூடுகள் நிறுவப்பட்டு மீன்குஞ்சுகள் மற்றும் சிங்கி இறால்கள் இருப்பு செய்யப்பட்டு மீனவர்களால் வளர்க்கப்படுகிறது.

**'நீலப்புரட்சி' திட்டம்**

- மத்திய அரசின் 'நீலப்புரட்சி' திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த மொத்தம் ரூ.9.925 கோடி விடுவிக்கப்பட்டு நன்னீர் மற்றும் உவர்நீரில் புதிய குளம் / குளம் சீரமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- பாரம்பரிய கட்டுமரங்களுக்கு மாற்றாக கண்ணாடி நாரிழை படகுகளை 50 விழுக்காடு மானியத்தில் மொத்தம் ரூ.2.125 கோடி செலவில் 100 பயனாளிகளுக்கு வழங்கிடும் திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது.
- நீலப்புரட்சி திட்டத்தின் கீழ் உவர்நீர் இறால் வளர்ப்பு குளங்களை புனரமைப்பதற்கு மானியமாக 18 பயனாளிகளுக்கு 29.05 ஹெக்டேர் பரப்பளவிற்கு ரூ.47.69 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

**உட்கட்டமைப்பு வசதிகள்**

- 6 அரசு மீன் பண்ணைகள் மற்றும் 7 மீன்பிடி இறங்கு தளங்கள் நபார்டு வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்த ரூ.33.42 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூரில் ரூ.113.90 கோடி திட்ட மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு 06.03.2017 அன்று அடிக்கல் நாட்டியதை தொடர்ந்து அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டம் – II (FIMSUL-II)**

- 8 குதிரைத் திறனுக்கு குறைவான 528 வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் மானிய விலையில் ரூ.119 இலட்சத்தில் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- கம்பியில்லா தகவல் தொடர்பு திட்டத்தின் கீழ், 17,539 எண்ணம் VHF கருவிகளில் 15,004 எண்ணம் 5 வாட் VHF கைபேசி கருவிகள் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளுக்கு 100 விழுக்காடு மானியத்திலும் மற்றும் 2,535 எண்ணம் 25 வாட் VHF கருவிகள் இயந்திர படகுகளுக்கு 75 விழுக்காடு மானியத்தில் வழங்கிட கருவிகள் பெறப்பட்டு மீனவர் பயன்பாட்டு உரிமம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம்**

- புதிய மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைஞாயிறு பேரூராட்சியில், ரூ.68.1678 கோடியில் தொடங்கப்பட்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக முதன்மை வளாகத்தில் 12.10.2017 முதல் வகுப்புகள் நடைபெற்றுவருகின்றது.
- முதுகலை பட்ட மேற்படிப்பு நிலையம், சென்னையில் ரூ.1.06 கோடியில் தொடங்கப்பட்டு "மீன் மரபியல் மற்றும் இனப்பெருக்கம்," "மீன் மருந்தியல் மற்றும் நச்சியல்" என்ற இரண்டு புதிய முதுநிலை மீன்வளப் பட்டப்படிப்பு பாடப்பிரிவுகள் 2017–2018ஆம்

கல்வியாண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டும், இக்கல்லூரியில் இளங்கலை தொழில்நுட்பம் (உயிர் தொழில்நுட்பம்) பட்டப்படிப்பும் இக்கல்வியாண்டிலிருந்து நடைபெற்று வருகிறது.

- "மீன்வளப் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம்" மற்றும் "மீன் உயிர்தொழில்நுட்பம்" என்ற இரண்டு புதிய முனைவர் பட்டப்படிப்புகள் முறையே தூத்துக்குடி வளாகத்திலும், வாணியஞ்சாவடி வளாகத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- வண்ணமீன் வானவில் தொழில்நுட்ப பூங்கா ரூ.10.30 கோடியில் மாதவரம் பால்பண்ணையில் அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 08.11.2017 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
- "கயலகம்" என்ற பெயரில் மதிப்புக்கூட்டப்பட்ட மீன்வளப் பொருட்களை விற்பதற்கு அங்காடி தொடங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் இளநிலை மீன்வளப் பட்டப்படிப்பிற்கான இடங்கள் 110 இல் இருந்து 120ஆக இக்கல்வியாண்டிலிருந்து உயர்வு.
- இளநிலைப் பட்டப்படிப்பில் 5% இருக்கைகள் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த மாணாக்கர்களுக்கு இந்தக்கல்வியாண்டு முதல் சிறப்பு பிரிவின் கீழ் ஒதுக்கப்பட்டன.
- உயிரினக் குழும திரடைக்கொண்டு இறால் வளர்ப்பில் வளங்குன்றா உற்பத்தியை உறுதி செய்யும் தொழில்நுட்பம் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரியில் 22.09.2017லிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- பட்டமளிப்பு விழாவின் பொழுது கல்விச் சார்ந்த சாதனைகளை கவுரவிக்க இளநிலை / முதுநிலை/ முனைவர் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு 13 பதக்கங்களை வழங்குவதற்காக அரசின் ஆணைப்படி தனிநிதியம் இக்கல்வியாண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் வெளியிட்ட இந்தியாவிலுள்ள மீன்வள பல்கலைக்கழகங்களின் தர வரிசை அடிப்படையில், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் இந்தியாவிலேயே முதலிடத்தை பிடித்துள்ளது.
- ஆறு தொழில் நிறுவனங்களுடன் கூட்டு ஆராய்ச்சி திட்டங்கள் பல்வேறு கல்லூரி வளாகங்களில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.
- மீன் பண்ணையாளர்கள் பயன்பெறும் வகையில் அவர்களின் பண்ணைகளுக்கே சென்று மீன் நோய் கண்டறியும் ஆய்வகமானது மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் மீன் மற்றும் இறால் வளர்ப்போர் பயன்பெறும் வகையில் நோய்கண்டறியும் ஆய்வகம் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.
- தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகமானது ஒருங்கிணைந்த ஆராய்ச்சி மற்றும் ஆசிரியர் மற்றும் மாணவர்களை பரிமாற்றம் செய்ய ஏதுவாக, அரிசோனா பல்கலைக்கழகம், அமெரிக்கா, தேசிய வேளான் விரிவாக்க மேலாண்மை நிலையம், ஹைதராபாத், மத்திய மீன்வளக் கல்வி நிலையம், மும்பை மற்றும் மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு நிலையம், சென்னை ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- திறன் மேம்பாட்டு கழகநிதி உதவியுடன் மீன்வளம் சார்ந்த (1) பதனக்கூடங்களில் பதன உதவியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி, (2) அலங்கார மீன்வளர்ப்பில் அடிப்படை நுணுக்கங்கள் மற்றும் (3) இறால் பண்ணைகளில் இறால் பண்ணை உதவியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.11.2017 அன்று ரூ.5 கோடியில் தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் நிதி உதவியில் கட்டப்பட்ட கல்வி வளாகம் மற்றும் நிருவாக அலுவலகம் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடியில் தொடங்கப்பட்டது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.11.2017 அன்று மாணவ, மாணவிகளுக்கான தங்கும் விடுதி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடியில் தொடங்கப்பட்டது.
- பொன்னேரியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தால், வனாமி இறால் மற்றும் மரபுவழி மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா (கிப்ட்) மீன்களின் இளங்குஞ்சுகள் உயிர் குழுமத்தின் மூலம் வளர்க்கும் தொழில்நுட்பத்தின் காப்புரிமையை பதிவு செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை



- பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் வகுப்பினருக்கு நேரடி நியமன முறையில் நிரம்பாத பணியிடங்களுக்கு முன்கொணர்வு முறை நீட்டிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- முத்தலாக்கை தடை செய்யும் சட்டத்தினை மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிப்பது நீங்கலாக ஆதரிப்பது என்பது அரசின் நிலைப்பாடு.
- நகர்ப்புறங்களில் 5 கல்லூரி விடுதிகள் ரூ.1.67 கோடி செலவில் புதிதாக துவங்கிட ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.
- 65 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் ரூ.73.75 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டுள்ளன.
- விடுதிகளில் பணிபுரியும் பகுதி நேர துப்புரவு பணியாளர்களுக்கான மாதாந்திர தொகுப்பூதியம் ரூ.2,000/–லிருந்து ரூ.3,000/–ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- துப்புரவு பணியாளர் பணியிடங்கள் இல்லாத 28 விடுதிகளில் புதிதாக 28 பகுதி நேர துப்புரவு பணியிடங்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.3,000/– தொகுப்பூதியத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு விலையில்லா வீட்டுமனைகள், தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப் பெட்டிகள் வழங்குவதற்கான ஆண்டு வருமான வரம்பு கிராமப்புறங்களில் ரூ.40,000/–மும், நகர்ப்புறங்களில் ரூ.60,000/–மும் என்று இருந்ததை இத்திட்டத்தின் கீழ் அதிக பயனாளிகள் பயனடையும் வகையில் ஆண்டு வருமான உச்சவரம்பு கிராமப்புற மற்றும் நகர்ப்புற பயனாளிகளுக்கு ரூ.72,000/– ஆக உயர்வு.
- கிராமப்புற பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் பயன் பெறும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.25,000/–லிருந்து ரூ.72,000/– ஆக உயர்வு.

- நபார்டு வங்கி நிதியுதவியுடன் 92 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை ரூ.13.07 கோடி செலவில் மேம்படுத்திட ஆணை இடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- 2017–2018ஆம் ஆண்டில் இதுவரை தமிழ்நாடு பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 10,559பிற்படுத்தப்பட்டோர்,மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல பயனாளிகளுக்கு ரூ.47.15 கோடியும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 3,654 சிறுபான்மையினத்தைச் சார்ந்த பயனாளிகளுக்கு ரூ.18.56 கோடியும் கடன் வழங்கல்.
- தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு வழங்கப்பட்டு வந்த ஆண்டு நிருவாக மானியம் ரூ.1 கோடியிலிருந்து ரூ.2 கோடியாக 2017–2018ஆம் ஆண்டு முதல் உயர்வு.
- பள்ளி வாசல்கள் மற்றும் தர்க்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள தொகுப்பு நிதி (Corpus Fund) ரூ.3 கோடியில் உருவாக்கப்பட ஆணை.
- வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் 69% இடஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்தி சமூக நீதி நிலைநிறுத்தப்பட்டுள்ளது.
- பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கான உணவுக் கட்டணம் மாதம் ரூ.755/–லிருந்து ரூ.900/–ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.875/–லிருந்து ரூ.1,000/– ஆகவும் உயர்வு.
- உலமாக்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1,500/– ஆக உயர்வு. 2,600 நபர்கள் பயன்.
- 500 கிறித்துவர்கள் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்ள ரூ.1 கோடி நிதியுதவி.

❖ ❖ ❖

**“மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியால், நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஒரு வருடத்திற்குள்ளேயே, பல வருடங்களுக்கான திட்டங்களைத் தீட்டி, பல சாதனைகளை நூறாண்டு பேசும்படி செய்திருக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களைச் செம்மையாகத் தொடர்வதிலும், புதிய திட்டங்களை விரைவாகத் தொடங்குவதிலும், இந்த அரசு எந்தவித விளம்பரமோ, ஆர்ப்பாட்டமோ இல்லாமல், முனைப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் கடைக்கோடி மக்களுக்கும் சிந்தாமல் சிதறாமல் எங்கள் திட்டங்கள் முழுமையாகச் சேர வேண்டும் என்பதில், நாங்கள் விழிப்பாக இருக்கின்றோம். பயனாளிகளின் மன நிறைவும், நிம்மதியும் தான் எங்கள் ஆட்சிக்கு கிடைக்கும் வெற்றியாக நாங்கள் கருதுகிறோம்.”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

**திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்**



- சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை நமது மாநிலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு வணிகவரித் துறை மேற்கொண்ட உரிய நடவடிக்கைகள், வணிகர்கள் சிரமமின்றி மதிப்புக்கூட்டு வரி முறையிலிருந்து சரக்குகள் மற்றும் சேவைகள் வரி முறைக்கு மாறுவதற்கு உறுதுணையாக இருந்தது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் உள்ள வணிகர்கள் மாதாந்திர நமூனாக்களை தாக்கல் செய்வதில் நமது மாநிலம் இந்திய அளவில் மூன்றாவது இடத்தை அடைந்துள்ளது.

- வணிக வரி வருவாயானது நடப்பு ஆண்டில் ரூ.46,666.40 கோடி வசூலிக்கப்பட்டது (சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் இழப்பீடு மற்றும் ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் தீர்வுத்தொகை உள்ளடக்கியது). இது கடந்த ஆண்டு இதே காலத்தில் வசூலிக்கப்பட்ட தொகையான ரூ.42,293.69 கோடியைவிட ரூ.4,372.71 கோடி கூடுதலாக வசூல் செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை காட்டிலும் 10.34 விழுக்காடு வளர்ச்சி விகிதத்தை அடைந்துள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வசூலில் நமது மாநிலம் நாட்டிலேயே இரண்டாவது இடத்தை அடைந்துள்ளது.

- சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மாமன்றத்தில் நமது கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டதன் விளைவாக வறுகடலை, மாவரைக்கும் இயந்திரங்கள், பட்டாசுகள், கருவாடு, மீன்வலை, மீன்கொக்கி, வீட்டு உபயோகத்திற்கான மின்சாதனப்பொருட்கள், மூக்குக்கண்ணாடி சட்டங்கள், டிராக்டர் பாகங்கள், எடை இயந்திரங்கள், காற்றழுப்பான்கள், மரச்சாமன்கள், எரிச்சாம்பல், எரிச்சாம்பல் கற்கள், குளிர்சாதனம் உள்ள மற்றும் அல்லாத உணவகங்கள் மற்றும் உணவு விடுதிகள், பனங்கற்கண்டு, காய்ந்த புளி, துணி வகைகள், பின்னலாடைகள், நூல் தொடர்பான பணிகள், அரசாங்க ஒப்பந்தப்பணிகள், தோல் தொடர்பான கூலி வேலை, பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், மோட்டார் வாகன குத்தகைகள் போன்ற நமது மாநிலம் தொடர்பான பல பொருட்கள் மீதான வரிவிகிதங்கள் குறைக்கப்பட்டுள்ளது.

- சிதம்பரம், வேலூர், சிவகங்கை மற்றும் தேவகோட்டை ஆகிய 4 இடங்களில் புதியதாகக் கட்டப்பட்ட வணிகவரித் துறை அலுவலகக் கட்டடங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு ரூ.72,95,568/–

செலவில் புதிதாக வாங்கப்பட்ட 12 புதிய ஈப்பு வாகனங்கள் வணிகவரித்துறையின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது.

- ரூ.79.20 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பூர் மாவட்டம், அவிநாசியில் உதவி ஆணையர் (வணிகவரி) அலுவலக கட்டடம் கட்டுதல், ரூ.89.76 இலட்சம் மதிப்பீட்டில் விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூரில் வணிகவரி அலுவலர் அலுவலக கட்டடம் கட்டுதல் மற்றும் ரூ.29.94 இலட்சம் மதிப்பீட்டில் வேலூர் மாவட்டம், வாணியம்பாடி உதவி ஆணையர் (வணிகவரி) அலுவலகத்திற்கு சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## பதிவுத்துறை

- **மின்னணு பதிப்பு முறை:** பதிவுத்துறையில், முத்திரைத் தீர்வையை செலுத்த ஒரு மாற்று வழியான மின்னணு முத்திரையிடும் முறை (e-stamping) மாநிலத்திலுள்ள அனைத்து மாநகராட்சி பகுதிகளுக்கும் விரிவுபடுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

- **ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான மென்பொருள்:** பதிவுத்துறையில் ஆவணப் பதிவு நடைமுறையினை முற்றிலும் கணினிமயமாக்கும் நோக்குடன் ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான மென்பொருள் தயாரிக்கும் பணி நிறைவு பெற்று தற்போது அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் சோதனை அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. விரைவில் இது மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும்.

- **கட்டிடங்கள்:** புதியதாக கட்டப்பட்ட 3 ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகங்களும், தனித்தனியான 38 சார்பதிவாளர் அலுவலக கட்டடங்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

- **வழிகாட்டி மதிப்பு:** பதிவுத்துறையில் வழிகாட்டி மதிப்பு சீரமைக்கப்பட வேண்டும் என்ற பொது மக்களின் ஒருமித்த கருத்தினை பிரதிபலிக்கும் வண்ணமாக 2016ஆம் ஆண்டுக்கான தேர்தல் அறிக்கையில் வழிகாட்டி மதிப்பு சீரமைக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டதை செயல்படுத்தும் விதமாக 09.06.2017 முதல் மாநிலம் முழுவதற்குமான வழிகாட்டி மதிப்பு 33% குறைக்கப்பட்டது.

❖ ❖ ❖

- **சமுதாயத்தின் விளிம்பில் உள்ள ஏழை, எளிய மக்கள் பொருளாதார வளர்ச்சிபெற்று ஏனையோருக்கு இணையாக உயர்வடையவேண்டும் என்றால் அவர்கள் கல்வி வளர்ச்சி பெறவேண்டும். மாநிலம் முழுவதும் சிறந்த கல்வி அளிக்கப்பட்டால்தான் பொருளாதார வளர்ச்சி, அடித்தட்டு மக்களுக்கும் சென்றடையும். எனவேதான் கல்விக்கும் அதன் வளர்ச்சிக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வந்தார்கள்.**

- **“அம்மா வழியில் ஆட்சி! அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி!” இதுவே எங்களின் தாரகமந்திரம். தடைகளைத் தகர்த்தெறிந்து தமிழக மக்களுக்குச் சேவை ஆற்றுவது மட்டுமே எங்கள் இலக்கு.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்**

# கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை



## கூட்டுறவு

- வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு வேளாண் சார்ந்த பணிகள் மேற்கொள்ள 9,62,061 விவசாயிகளுக்கு ரூ.5,575.27 கோடி பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது.

- மத்தியக் கூட்டுறவு வங்கிகளில், 50 தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள் நிறுவப்பட்டு, செயல்பாட்டில் இருந்து வருகின்றன.

- 2,75,981 ருபே விவசாய கடன் அட்டைகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் விவசாய உறுப்பினர்களுக்கும், 1,77,442 பற்று அட்டைகள் (Debit Card) மத்திய கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கும் வழங்கல்.

- தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலமாக வழங்கப்பட்டு நீண்ட காலமாக வசூலாகாமல் நிலுவையில் உள்ள பண்ணை சாராக் கடன் தொகையை வசூல் செய்ய அரசினால் அறிவிக்கப்பட்ட ஒருமுறை கடன் தீர்வு திட்டத்தின் கீழ் 2,950 விவசாயிகள் ரூ.63.80 கோடி கடன் தொகையினை முழுவதுமாக திரும்பச் செலுத்தி ரூ.61.81 கோடிக்கு வட்டி சலுகை பெற்று பயனடைந்துள்ளனர்.

- 2016–2017ஆம் ஆண்டில் மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மிகச் சிறந்த சேவை புரிந்தமைக்காக சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு சிறந்த மாவட்ட கூட்டுறவு வங்கிக்கான தமிழ்நாடு அரசின் விருது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2017ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவில் வழங்கப்பட்டது.

- வேளாண் பெருமக்கள் அவர்களின் விளை பொருட்களை உலர வைத்து தரம் பிரித்து ஆதாய விலையில் விற்க ஏதுவாக தென்காசி, அவிநாசி, உடுமலைப்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருச்செங்கோடு (கொங்கணாபுரம் கிளை) ஆகிய 5 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் ரூ.77.90 இலட்சம் மதிப்பீட்டில் உலர்களங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- வேளாண் பெருமக்கள் மற்றும் வியாபாரிகள் விளைபொருட்களை துல்லியமாக எடைபோட ஏதுவாக கிருஷ்ணகிரி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் கணினி எடைமேடை நிறுவப்பட்டுள்ளது.

- சங்க உறுப்பினர்களுக்கான சேவையை மேம்படுத்தும் பொருட்டு போளூர், மேட்டுப்பாளையம், திருமங்கலம், பேரையூர், வாடிப்பட்டி, தேனி (தலைமை அலுவலகம் மற்றும் பெரியகுளம் கிளை), காவேரிப்பட்டினம், திருச்செங்கோடு மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 9 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.259.61 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தலைமை அலுவலகம் ரூ.10.65 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு.

- திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் ரூ.13.90 இலட்சம் மதிப்பில் வணிக வளாகமும், ரூ.3.85 இலட்சம் மதிப்பில் விவசாயிகள் தங்கும் விடுதியும் புணரமைக்கப்பட்டுள்ளன. மேலும், மேற்படிக் கிளையில் ரூ.25 இலட்சம் மதிப்பில் சாலை வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது.

- கட்டுப்பாட்டுப் பொருட்கள் மற்றும் கட்டுப்பாடற்றப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு திருச்செங்கோடு மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இரு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.24.62 இலட்சம் மதிப்பீட்டில் இரு வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

- மின்கட்டணத்தை குறைத்திடவும், இயற்கை சூழல் பாதுகாப்போடு போதிய மின்சாரம் பெறவும் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தலைமை அலுவலகம் மற்றும் சுயசேவைப் பிரிவு கட்டடம் ஆகியவற்றில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன.

- வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் வேளாண் விளைபொருட்களை பதப்படுத்தி மதிப்பினைக் கூட்டி விற்பனை செய்து விவசாய பெருமக்கள் இலாபம் பெற, பரமக்குடி, ஊத்தங்கரை, திருமங்கலம், இலால்குடி சிவஞானம் மற்றும் திருச்செங்கோடு ஆகிய 5 வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், மிளகாய் அரவை ஆலை, மஞ்சள் தூள் அரவை ஆலை, உறையிடும் இயந்திரம், விதை சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் வேங்கூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விதை சுத்திகரிப்பு இயந்திரம் ஆகியவை ரூ.94 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளன.

- சிதம்பரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் 2016–2017இன் கீழ், ரூ.39.10 இலட்சம் மதிப்பில் நவீன பருப்பு பதனிடும் அலகு நிறுவப்பட்டுள்ளது.

- மாநில அளவில் ரூ.463.57 கோடி மதிப்பிலான 3,61,455 மெட்ரிக் டன் இரசாயன உரங்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டன.

- மாநில அளவில் ரூ.507.48 இலட்சத்திற்கு விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### பண்ணை பசுமை நுகர்வோர் கூட்டுறவு

- 16.02.2017 தேதியில் கூட்டுறவுகளால் 71+2 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் (2 நகரும் கடைகள் உட்பட) நடத்தப்பட்டு வந்த நிலையில், தற்போது 73+3 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் (3 நகரும் கடைகள் உட்பட) செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் 32 வகையான தரமான காய்கறிகள், நியாயமான விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

- 8,873 மெட்ரிக் டன் காய்கறிகள் ரூ.29 கோடியே 10 இலட்சம் அளவிற்கு விற்பனை.

### அம்மா மருந்தகம்

- 16.02.2017 தேதியில் கூட்டுறவுகளால் 106 அம்மா மருந்தகங்கள் நடத்தப்பட்டு வந்தன. அவற்றுடன் 04.03.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நான்கு புதிய மருந்தகங்களும் மேலும், 28.04.2017 அன்று ஒரு அம்மா மருந்தகமும் திறக்கப்பட்டு, தற்சமயம் 111 அம்மா மருந்தகங்கள் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன.

- இம்மருந்தகங்கள் மூலம் 15% தள்ளுபடி விலையில் ரூ.65.29 கோடி மதிப்பிற்கு மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை**

- 2015–2016ஆம் ஆண்டில் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்றப் பொருட்களை ரூ.1,631.42 கோடி மதிப்பிற்கும், 2016–2017ஆம் ஆண்டில் ரூ.1,495.38 கோடி மதிப்பிற்கும் விற்பனை செய்துள்ளன.

- ரூ.1,260.63 கோடி மதிப்பிற்கு கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்றப் பொருட்களை விற்பனை.

- 2014–2015ஆம் ஆண்டில் அனைத்து கூட்டுறவு நிறுவனங்களும் ரூ.3,409.44 கோடி மதிப்பிற்கும், 2015–2016ஆம் ஆண்டில் ரூ.3,404.38 கோடி மதிப்பிற்கும் கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்களின் சில்லரை விற்பனை.

- அனைத்து கூட்டுறவு நிறுவனங்களும் ரூ.2,460.61 கோடி மதிப்பிற்கு கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்றப் பொருட்களை விற்பனை.

**நியாயவிலைக் கடைகள்**

- 32,791 நியாயவிலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. இவற்றுடன் மண்ணெண்ணெய் விநியோகத்திற்காக 258 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் 1,78,30,237 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்து வருகின்றன.

**புதிய நியாயவிலைக் கடைகள் அமைத்தல்**

- குடும்ப அட்டைதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 25 புதிய முழு நேர மற்றும் 61 பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

**அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம்**

- பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி பெற தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களின் வழங்கல் அளவில் 32,50,532 மெ.டன் விலையில்லா அரிசி, கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகள் மூலமாக 3,14,827 மெ.டன் சர்க்கரை, 1,31,937 மெ.டன் கோதுமை மற்றும் 1,87,641 கி.லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

- சிறப்பு பொது விநியோகத் திட்ட பொருட்களான பாமாயில் 1,22,006 கி.லிட்டர் மற்றும் துவரம் பருப்பு 1,19,292 மெ.டன் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**ஊட்டி தேயிலை விற்பனையில் கூட்டுறவின் பங்கு**

- 2001ஆம் ஆண்டில் உலக சந்தையில் தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டதால், இதனால் பாதிக்கப்பட்ட நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் சிறு தேயிலை விவசாயிகளின் துயர் துடைக்கவும், அவர்கள் விளைவிக்கும் பசுந்தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது விநியோகத் திட்ட நியாயவிலைக் கடைகளில் "ஊட்டி டீ" தேயிலைத் தூளை விற்பனை செய்யும் திட்டத்தினை 28.08.2001 அன்று துவக்கி வைத்தார்கள். தமிழ்நாட்டில் நியாயவிலைக் கடைகளை நடத்தும் அனைத்து மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், கூட்டுறவு சிறப்பங்காடிகள் மற்றும் 32,791 நியாய விலைக் கடைகளில் "ஊட்டி டீ" நடப்பாண்டில் 2,314 மெ. டன். விற்பனை செய்யப்பட்டு வருகிறது

**அயோடின் கலந்த உப்பு விற்பனை**

- அயோடின் குறைவு காரணமாக ஏற்படும் முன்கழுத்துக்கழலை நோயை தடுக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் அயோடின் கலந்த உப்பு கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு 25,520 மெ. டன். விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**நியாயவிலைக்கடை கட்டடங்கள்**

- நியாயவிலைக் கடைகளுக்கு புதியதாக 48 முழு நேரம் மற்றும் 30 பகுதி நேர கடைகளுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**அரசு மானியம்**

- பொது விநியோகத் திட்டம் இலாப நோக்குடன் செயல்படுத்தப்படுவது இல்லையென்பதால் பொது விநியோகத்தை மேற்கொள்ளும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஏற்படும் நட்டத்தை அரசு ஈடு செய்து வருகிறது. இவ்வகையில் நட்டத்தில் இயங்கும் நியாயவிலைக் கடைகளுக்கு



2016–2017ஆம் ஆண்டுக்கு ரூ.120/– கோடி மானிய முன்பணமாகவும், 2010–2011 முதல் 2013–2014 வரை உள்ள மானிய நிலுவைத் தொகையில் மூன்றாம் தவணையாக ரூ.102.9325 கோடி அரசு மானியமாக தொடர்புடைய சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**நியாயவிலைக் கடைகளின் செயல்பாட்டினை முழு கணினி மயமாக்குதல்**

- பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்கள் உரிய நேரத்தில், உரிய பயனாளிகளுக்கு, முழுமையாக சென்றடைவதனை கண்காணிக்கும் வகையில் நியாயவிலைக்கடைகளின் செயல்பாடுகள் அனைத்தும் முழுமையாக கணினி மயமாக்கப்பட்டுள்ளன. கிடங்கிலிருந்து நியாயவிலைக்கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தொய்வின்றி நகர்வு செய்ய அனைத்து விவரங்களும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அனைத்து நியாயவிலைக்கடைகளிலும் விற்பனை முனைய கருவிகள் (POS Devices) இணைக்கப்பட்டு அதன் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விற்பனை கண்காணிக்கப்படுகிறது. அனைத்து குடும்ப அட்டைதாரர்களின் விவரங்கள், கைபேசி எண்கள் மற்றும் ஆதார் எண்கள் விற்பனை முனைய கருவிகளில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. அனைத்து பொது விநியோகத் திட்ட களப் பணியாளர்கள் மற்றும் நியாயவிலைக்கடை பணியாளர்களுக்கு விற்பனை முனைய கருவிகளின் பயன்பாடு தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- நியாயவிலைக் கடைகளில் சேகரிக்கப்படும் காலிக் கோணிகளை மத்திய அரசின் பொது நிறுவனம் எம்.எஸ்.டி.சி (MSTC) மூலம் மின்னணு ஏலம் (e-auction) முறையில் விற்பனை செய்ய அறிவுறுத்தப்பட்டு செப்டம்பர் 2017 முதல் 2,11,41,399 காலிக்கோணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல்

**மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டம்**

- பொது விநியோகத் திட்டத்தினை ரூ.330 கோடி செலவில் முழுமையாக கணினிமயமாக்கும் பணி தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக தற்போது புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளுக்கு பதிலாக ஆதார் எண் விரங்களின் அடிப்படையில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சா் அவா்களால் 01.04.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டு, மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- தற்போது 1.94 கோடி குடும்ப அட்டைகள் நடைமுறையில் உள்ளன. இவற்றில் 1.88 கோடி குடும்ப அட்டைகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் விடுபட்ட விவரங்கள் சேகரிக்கப்பட்டு, விரைவில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- இத்திட்டத்தின் மூலமாக போலி குடும்ப அட்டைகள் களையப்படுவதுடன், பல்வேறு

முறைகேடுகளையும் தடுக்க இந்தமுறை மிகுந்த உதவிகரமாக உள்ளதுடன், இந்த மின்னணு குடும்ப அட்டைகளில் தேவைப்படும் மாற்றங்கள் குறித்த கோரிக்கைகளை குடும்ப அட்டைதாரர்கள் இணைய வழி சமர்ப்பிக்கவும், அதனை துறை அலுவலர்கள் இணைய வழி பரிசீலித்து ஒப்புதல் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கான ஊக்கத் தொகை**

- நெல் கொள்முதலை ஊக்குவிக்க, அரசு சாதாரண ரக நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை குவிண்டாலுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ளதைவிட கூடுதலாக ரூ.50 அளித்து ரூ.1,600/– எனவும், சன்னரக நெல்லுக்கு ரூ.70/– கூடுதலாக வழங்கி ரூ.1,660/– எனவும் நிர்ணயம் செய்துள்ளது.

**விலைக்கண்காணிப்பு குழு**

- அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் அரசு விலைக் கண்காணிப்பு குழு (Price Monitoring Committee) ஒன்றை அமைத்து அதன் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுவருகிறது. முக்கியமாக அரிசி, பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் வகைகளின் விலைகளை கண்காணித்து, அதன் விலையேற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**பொங்கல் பரிசு**

- 2018ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை தமிழ்நாட்டு மக்கள் சிறப்பாகவும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடும் வகையில், அரிசி குடும்ப அட்டை உடைய குடும்பங்கள், காவலர் குடும்ப அட்டை பெற்றுள்ள காவலர் குடும்பங்கள் மற்றும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கை தமிழர் குடும்பங்கள் ஆகியோருக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, இரண்டு அடி நீள கரும்பு துண்டு, 20 கிராம் முந்திரி, 20 கிராம் உலர்ந்த திராட்சை மற்றும் 5 கிராம் ஏலக்காய் ஆகியவை அடங்கிய சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது. இந்த பொங்கல் பரிசுத் தொகுப்பினால் 1 கோடியே 84 இலட்சம் குடும்பத்தினர் பயனடைந்துள்ளனர்.

**ரம்சான் நோன்பு பச்சரிசி – 2017**

- ஜூன் 2017ஆம் மாதத்தில் ரம்சான் நோன்பு கடைபிடிக்கும் இஸ்லாமிய மக்களுக்கு கஞ்சி தயாரிக்க பச்சரிசி ஒரு கிலோ ரூ.1/– என்ற விலையில் 5,122.916 மெ.டன், இஸ்லாமிய அமைப்புகளுக்கு வழங்கப்பட்டது.

**சிறப்பு பொது விநியோகத்திட்டம்**

- கனடா துவரம் பருப்பு / மசூர் பருப்பு மற்றும் பாமாயில் சிறப்பு பொது விநியோகத்திட்டத்தில் வழங்க மத்திய அரசால் மானியம் வழங்குவது நிறுத்தப்பட்டபோதிலும், விலைவாசியினை கட்டுப்படுத்தும் நோக்கிலும் மற்றும் ஏழை எளிய மக்கள் பயனடையும் நோக்கிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க துவரம்பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு / மசூர் பருப்பு ஆகியவற்றில் ஏதாவது ஒரு பருப்பினையும் மற்றும் பாமாலின் சமையல் எண்ணெய் ஆகியவற்றை மேலும் ஆறு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு வழங்கி மார்ச் 2017 முதல் ஆகஸ்ட் 2017 வரை சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டை தாரர்களுக்கு வழங்க ஆணை வழங்கப்பட்டது.

- இதனை தொடர்ந்து துவரம்பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு / மசூர் பருப்பு ஆகியவற்றில் ஏதாவது ஒரு பருப்பினையும் மற்றும் பாமாலின் சமையல் எண்ணெய் ஆகியவற்றை மேலும் ஆறு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு வழங்கி செப்டம்பர் 2017 முதல் பிப்ரவரி 2018 வரை சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- சராசரியாக மாதம் தோறும் துவரம் பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு / மசூர் பருப்பு 18,000 மெ.டன்னும், செறிவூட்டப்பட்ட பாமாலின் சமையல் எண்ணெய் 1,53,00,000 – 1 லிட்டர் பாக்கெட்டுகள் கொள்முதல் செய்யப்பட்டு, ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா ஒரு கிலோ துவரம் பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு / மசூர் பருப்பு ரூ.30/– என்ற விலையிலும் மற்றும் ஒரு லிட்டர் செறிவூட்டப்பட்ட ஆர்பிடி பாமாலின் எண்ணெய் பாக்கெட் ரூ.25/– என்ற விலையிலும் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் ஒருமாதத்திற்கு ரூ.118 கோடி வீதம் வருடத்திற்கு ரூ.1,416 கோடி அரசிற்கு கூடுதலாக செலவினம் ஏற்படுகிறது. இவ்வாறு கூடுதல் செலவினம் ஏற்பட்டபோதிலும் தமிழக அரசே இச்செலவினத்தை ஏற்று சிறப்பு பொது விநியோகத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

❖ ❖ ❖



**தமிழக மின் நிலைமை**

**கூடுதல் மின்நிறுவுதிறன்**

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மின் திட்டங்கள், மத்திய அரசின் மின் உற்பத்தி திட்டங்களின் பங்கு, மற்றும் சூரிய மின் சக்தி மூலமாக 707 மெகாவாட் கூடுதல் மின் நிறுவு திறன் தமிழக மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டது.

- 31.03.2017 அன்று 1,000 மெகாவாட் திறன் கொண்ட கூடங்குளம் அணுமின் நிலையத்தின் இரண்டாம் அலகு மற்றும் 31.07.2017 அன்று குட்கி அனல் மின் நிலையத்தின் முதல் அலகு வணிகரீதியான மின் உற்பத்தியை துவக்கின. குட்கி அனல் மின் நிலையத்தின் இரண்டு மற்றும் மூன்றாம் அலகுகள் முறையே 23.03.2017 மற்றும் 22.08.2017 அன்று மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டன.

- 2011 ஆம் ஆண்டில் , மின்பற்றாக்குறை மாநிலமாக இருந்த தமிழகம் தற்போது மின்மிகை மாநிலமாக திகழ்கின்றது என்பது மத்திய மின்சார ஆணையம் வெளியிட்டுள்ள 2016–2017ஆம் ஆண்டிற்கான மின்தேவை–மின்உற்பத்தி சமன்பாட்டு அறிக்கையில் (LGBR) பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஆண்டை போலவே 2017–2018ஆம் ஆண்டிலும் மின்மிகை மாநிலமாக தொடர்ந்து திகழும் என்று திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

- மத்திய அரசின் மின் அமைச்சகம் வெளியிட்டுள்ள மாநில மின்பகிர்மான நிறுவனங்களின் வருடாந்திர ஒருங்கிணைந்த தரவரிசை பட்டியலில் முந்தைய ஆண்டில் ‘**C+**’ தரவரிசையில் இருந்த தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகமானது 2015–2016 ஆம் ஆண்டில் ‘**B**’ தரவரிசைக்கு முன்னேறியுள்ளது.

**புதுப்பிக்கத்தக்க எரிசக்தி**

**காற்றாலை மின் சக்தி**

- 222 மெகாவாட் அளவிற்கு புதிய காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. காற்றாலை மின் உற்பத்தி திறன் 7,900 மெகாவாட் ஆகும். இதுவரை இல்லாத அதிகபட்ச அளவாக காற்றாலை மின்சாரம் 5,096 மெகாவாட் அளவிற்கும் மற்றும் 102.579 மில்லியன் யூனிட் அளவிற்கும் பெறப்பட்டுள்ளது.

**சூரிய மின் சக்தி**

- 237 மெகாவாட் சூரிய மின் சக்தி தமிழ்நாடு மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டது. சூரிய மின் சக்தி மின் உற்பத்தி திறன் 1,818 மெகாவாட் ஆகும். சூரிய ஒளி மின்சாரம் பகல் பொழுதில் 800 மெகாவாட் அளவிற்கு குறிப்பிடத்தக்க அளவில் கிடைக்கப் பெறுகிறது. இதுவரை இல்லாத அதிகபட்ச அளவாக சூரிய ஒளி மின்சாரம் 1,621 மெகாவாட் அளவிற்கும் மற்றும் 10.5 மில்லியன் யூனிட் அளவிற்கும் பெறப்பட்டுள்ளது.

**மின் உற்பத்தி**

**கடலாடி மிக உய்ய சூரிய மின்னழுத்த பூங்கா (Photovoltaic) மின் திட்டம்: (500 மெகாவாட்)**



- தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தொழில் நுட்பப் பிரிவு மூலம் இத்திட்டத்தை நரிப்பையூர் மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் உள்ள தோராயாமாக 900 ஹெக்டேர் நிலத்தில் பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமான அடிப்படையில் மாநில தொகுப்பின் கீழ் அமைக்க அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான கொள்கை ரீதியிலான ஒப்புதலுக்காக உரிய நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பகுதி, கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தின் வரைமுறைக்கு உட்பட்டதா என்று கண்டறிய அன்று அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலை உணர்வு பிரிவிற்கு (Remote Sensing) பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- விரிவான திட்ட ஆய்வு அறிக்கை தயாரித்தல், ஒப்பந்தத்திற்கு முன் மற்றும் ஒப்பந்தத்திற்கு பின் திட்டம் செயலாக்கத்திற்கு வரும் வரைக்கான ஆலோசகர் சேவைக்கான ஆலோசகரை நியமிப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு 2019ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு கொண்டுவரப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**மின் தொடரமைப்பு**

- அனல் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படவிருக்கும் மின்சாரத்தை வெளியேற்றுவதற்காகவும் மின்பயனீட்டாளர்களுக்கு சீரான மின்சாரத்தை வழங்குவதற்காகவும் 42 துணை மின் நிலையங்கள், 6,206 எம்.வி.ஏ திறனுடன் நிறுவப்பட்டுள்ளன மற்றும் 1,966.314 சுற்று கி.மீ. மிக உயர் மின் அழுத்த பாதைகள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன.

**மின் பகிர்மானம்**

- மின் பயனீட்டாளர்களுக்கு சீரான மின்சாரத்தை வழங்குவதற்கு 2,842 கி.மீ உயரழுத்த மின் பாதைகளும் (HT), 8,842 கி.மீ தாழ்வழுத்த மின் பாதைகளும் (LT), மற்றும் 12,231 மின்மாற்றிகளும் இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இது தவிர 7.41 இலட்சம் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்தில் செயல்படுத்தப்படும் புதிய திட்டங்கள்:**

- தாழ்வழுத்த வீடு மற்றும் வணிக (சிறப்பு மற்றும் அடுக்குமாடி கட்டிடங்கள் அல்லாமல்) உபயோகத்திற்கான மின் இணைப்பை ஒரேநாளில் வழங்கும் ஒருநாள் மின் இணைப்பு திட்டம் 01.07.2017 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. 1,94,194 மின்னிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

- விவசாயிகள் நலன்கருதி, மின்கட்டமைப்பை மேம்படுத்த தேவையான தொகையை மட்டும் ஒருமுறை கட்டணமாக பெற்று ஆறு மாத காலத்திற்குள் இலவச மின் இணைப்பு வழங்க தட்கல் விரைவுத் திட்டம் 24.06.2017 முதல் அமல்படுத்தப்பட்டு 9,946 விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

- தொழிற்துறையை ஊக்குவிக்கும் பொருட்டு, தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு சிறிய நீட்டிப்பு மற்றும் பகிர்மான மின்மாற்றியின் திறனை மேம்படுத்துதல் உள்ளடக்கிய 112 கிலோவாட் வரையிலான புதிய மின்னிணைப்பு மற்றும் கூடுதல் மின்பளுவை 7 நாட்களுக்குள் வழங்கும் திட்டமானது 15.07.2017 முதல் அமல்படுத்தப்பட்டு 6,850 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

- தற்பொழுது 10 மெகாவோல்ட் ஆம்பியர் (MVA) அல்லது ரூ. 100 கோடியும் அதற்கு மேலும் முதலீடு செய்யும் தொழிற்சாலை மற்றும் தொழில் முனைவோருக்கு 24x7 மின்சாரம் பெறுவதற்கு புதிய கொள்கை 05.09.2017 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. தரமான மின்சாரம் கிடைக்கும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளும் தொழிற்சாலை மற்றும் தொழில்

முனைவோருக்கு பிரத்யேக மின்பாதை இலவசமாக அமைத்துத் தரப்படும். தொழில் முனைவோர் நிலம் அளிக்கும் பட்சத்தில், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் தகுந்த மின் அழுத்தம் கொண்ட துணை மின் நிலையம் நிறுவப்படும்.

- வலைய தள வங்கி, பண அட்டை மற்றும் கடன் அட்டை மூலம் செலுத்துதல், வங்கி கைபேசி செயலிகள், ஆண்ட்ராய்டு மற்றும் IOS பயனீட்டாளர்களுக்கான கைபேசி செயலி முறை, தபால் நிலையங்கள், வங்கி கவுண்டர்கள், வங்கி ஏ.டி.எம்கள், அரசு இ–சேவை மையங்கள் என பல்வேறு முறைகளில் மின் கட்டணம் செலுத்தும் வசதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- தற்போது 24 சதவீத நுகர்வோர்கள் மின்கட்டணத்தை மாதம் சுமார் ரூ. 500 கோடி அளவில் மேற்கண்ட சேவைகள் வழியாக செலுத்தி வருகிறார்கள். வசூலிக்கப்படும் மின்கட்டணத்தில் 50 சதவீத மின் கட்டணத்தை ஆன்லைன் வாயிலாக வசூலிப்பதற்கு மார்ச் 2018 என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- பண அட்டை மற்றும் கடன் அட்டை மூலம் மின்கட்டணம் செலுத்துவதற்கான விற்பனை நிலைய கருவிகள் (Point of Sales (PoS)), 30.10.2017 அன்று முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இந்த வசதியினை சென்னையில் உள்ள 325 கட்டண வசூல் மையங்களுக்கு ஜனவரி 2018–ற்குள்ளும் மற்றும் படிப்படியாக மாநில முழுவதும் மார்ச் 2018–ற்குள்ளும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது,

**உஜாலா திட்டம்**

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமானது 9 வாட் எல்.இ.டி பல்புகள், 20 வாட் எல்.இ.டி டியூப்லைட்டுகள் மற்றும் 50 வாட் ஐந்து நட்சத்திரக் குறியீட்டுடன் கூடிய ஆற்றல் மிக்க மின் விசிறிகள் ஆகியவற்றை மலிவு விலையில் விரும்பும் வீட்டு மின் நுகர்வோருக்கு மின் கட்டண வசூல் மையங்களில் அமைக்கப்பபட்ட தனிப்பட்ட கியோஸ்க்குகள்(Kiosk) மூலம் விற்பதற்கு எரிசக்தி திறன் சேவைகள் நிறுவனத்திற்கு (EESL) அனுமதி வழங்கியுள்ளது.
- மேற்கூறிய விற்பனை முதற்கட்டமாக 22.03.2017 அன்று சென்னை மண்டலத்தில் விநியோக முகவர்கள் மூலம் எரிசக்தி திறன் சேவைகள் நிறுவனத்தால் தொடங்கப்பட்டது.
- இந்த விற்பனை, இது வரை சுமார் 20 மின் பகிர்மான வட்டங்களில் (மின் வாரியத் தலைமையகம் உட்பட) உள்ள மின் கட்டண வசூல் மையங்களில் நடைபெற்று வருகிறது. இது வரை 7.75 இலட்சம் எல்.இ.டி பல்புகள், 2.02 இலட்சம் எல்.இ.டி டியூப்லைட்டுகள் மற்றும் 38,952 ஐந்து நட்சத்திரக் குறியீட்டுடன் கூடிய ஆற்றல் மிக்க மின் விசிறிகள் விற்கப்பட்டுள்ளன.

**நிதி**

- தமிழக அரசு ரூ. 22,815 கோடிக்கான நிதி பத்திரங்களை வெளியிட்டு, தமிழக மின் வாரியத்தின் கடன்களை அடைப்பதற்காக அளித்துள்ளது. மேலும், உதய் திட்டத்தின்கீழ் ரூ.7,605 கோடி கடனை மின்வாரியம் கடன் பத்திரங்கள் மூலம் நிதி திரட்டி திருப்பி செலுத்துவதற்கு ஏதுவாக, தமிழக அரசு ரூ.7,605 கோடிக்கானக் காப்புறுதியை அரசு, 01.03.2017 வாயிலாக வழங்கியுள்ளது. இதன் மூலம் மின்வாரியத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ.200/– கோடி வட்டி சேமிப்பு ஏற்படும். உதய் திட்டம் தவிர தமிழக அரசு ரூ.4,523.19 கோடிக்கான பங்கு மூலதனத்தை வழங்கியுள்ளது. இது தமிழக அரசுக்கு திருப்பி கொடுக்கப்பட வேண்டிய கடன், மின்சார வரி மற்றும் அதற்குண்டான வட்டித்தொகைகளை மாற்றி தரப்பட்டதன் மூலம் அளித்துள்ளது.
- தமிழக அரசு உதய் திட்டத்தின் மூலம் ரூ. 4,563 கோடி மின் கட்டண மானியத்தை தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு அளித்ததன் மூலம் நடப்பாண்டான 2017–2018இல் அதன் நிதி நிலை சீரடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- தமிழக அரசு 2017–2018ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு மொத்தம் ரூ.16,998 கோடி நிதி உதவிகளை ஒதுக்கி உள்ளது.
- மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து தமிழக அரசு ரூ. 6,649.09 கோடிக்கான மின்கட்டண மானியத்தை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு இதுவரை வழங்கியுள்ளது.
- தமிழக அரசு 2017–2018ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு நிதி நிறுவனங்கள்/வங்கிகளிடமிருந்து கடன் பெற ஏதுவாக அரசு உத்திரவாதம் ரூ. 11,668 கோடி அளவுக்கு அளித்துள்ளது.
- மேற்கண்ட நிதி உதவிகள் தவிர, ஒஹி புயல் நிவாரண நிதியாக ரூ.20 கோடியை வழிவகை கடன்கள் மூலம் புயல் சேதம் தொடர்பான செலவீனங்களை செய்து கொள்ள தமிழக அரசு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வழங்கியுள்ளது.

**முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டம்**

- தமிழக அரசு, நாட்டிலேயே மிகப்பெரிய சூரிய மேற்கூரைத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் துவக்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வருடத்திற்கு 60,000 வீடுகள் வீதம் மாநிலம் முழுவதும் 2011–2012 முதல் 2015–2016 வரையான ஐந்து ஆண்டுகளில் 3,00,000 சூரியசக்தி வீட்டு விளக்குகளுடனான பசுமை வீடுகள் கட்டும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 5 ஆண்டுகளில் 20–30 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின் பலகைகள் ரூ.900 கோடி மதிப்பீட்டில் மேற்கூரையில் பொருத்தப்படும். இது தவிர ரூ.30 கோடி செலவில் 10,000 நெசவாளர்களுக்கான குடியிருப்பில் சூரிய சக்தி வீட்டு விளக்குகள் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- 38,904 பசுமை வீடுகளிலும், 4,612 நெசவாளர்களுக்கான குடியிருப்புகளிலும் ஆக மொத்தம் 43,516 (நாற்பத்து மூன்றாயிரத்து ஐநூற்று பதினாறு) எண்ணிக்கை கொண்ட சூரியசக்தி வீட்டு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 2,71,935 எண்ணிக்கை கொண்ட வீடுகளில் சூரியசக்தி வீட்டு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

**தெரு விளக்குகளை சூரிய சக்தி மூலம் ஒளிர்விக்கும் திட்டம்**

- 2011–2012 முதல் 2015–2016 வரையிலான ஐந்து ஆண்டுகளில் கிராமப்புறங்களிலுள்ள 1 இலட்சம் தெரு விளக்குகளை சூரிய சக்தி மூலம் ஒளிர்விக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- இது நாட்டில் முதன்முறையாக செயல்படுத்தப்படும் திட்டம் ஆகும். நிறுவப்பட்டுள்ள 10–15 தெருவிளக்குகளில் உள்ள குழல் விளக்குகள் 20W (LED) மின் விளக்குகளாக மாற்றப்பட்டு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மின் கட்டமைப்புடன் கூடிய மையப்படுத்தப்பட்ட சூரிய ஒளி மின் நிலையம் மூலம் ஒளிர்விக்கப்படுகிறது. 2013–2014, 2014–2015 மற்றும் 2015–2016க்கான ஒப்புதல் எதுவும் பெறப்படவில்லை.

- இத்திட்டத்தின் கீழ் 45 தெரு விளக்குகள், சூரியசக்தி மூலம் மின்னூட்டும் பணி முடிவுற்றுள்ளது. மொத்தம் 39,235 தெருவிளக்குகள் சூரிய சக்தியால் ஒளிர்விக்கப்பட்டுள்ளன.

**முதலமைச்சரின் சூரிய மேற்கூரை ஊக்கத்தொகை திட்டம்**

- இத்திட்டத்தின் கீழ் 1 கி.வாட். திறன் கொண்ட மின் கட்டமைப்புடன் கூடிய சூரிய மேற்கூரை மின் அமைப்புகளை நிறுவும் 10,000 வீட்டு உபயோகிப்பாளர்களுக்கு ஒரு கி.வாட்டிற்கு ரூ.20,000/– முதலீட்டு ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று ஆணை வெளியிடப்பட்டது.

- நிகர அளவியுடன் கூடிய மின் கட்டமைப்புடன் கூடிய சூரிய மேற்கூரை திட்டம் தமிழ்நாட்டில் இடம் பெற்றுள்ளது. மேலும் வீட்டு உபயோகிப்பாளர்கள், நிகர அளவு திட்டத்தின் கீழ் பயன்பாட்டிற்கு பின் மின் கட்டமைப்பில் செலுத்தும் மின்சாரத்திற்குரிய மின் வரவை பெற்றுக் கொள்ளலாம். இது தவிர வீட்டு உபயோகிப்பாளர்கள் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் நிர்ணயித்த விலையில் அதிகபட்சமாக 30 விழுக்காடு மைய அரசின் நிதி உதவியை பெறலாம்.

- இதற்கான விண்ணப்பங்கள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் இணையதளத்தின் (www.teda.in) மூலம் ஆன் லைனில் பெறப்பட்டு முதலில் விண்ணப்பிப்பவர்களுக்கு முதல் என்ற அடிப்படையில் (first come first serve basis) ஒப்பளிப்பு அளிக்கப்படும்.

- இந்த திட்டத்தின் கீழ் தமிழ் நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் 36 அமைப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பட்டியலிடப்பட்டுள்ளார்கள். தமிழக அரசின் மானியம் 420 வீட்டு உபயோகிப்பாளர்களுக்கு ரூ.84 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. வீட்டு கூரை அமைப்புக்கான நிகர அளவீட்டை அறிமுகப்படுத்துவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக உள்ளது.

**அரசு அலுவலகங்களில் சூரிய மேற்கூரை மின் அமைப்புகள்**

**தமிழ் நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்**

- தமிழ் நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பாக தமிழ் நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மூலம் தமிழகத்தில் உள்ள 18 மாவட்ட மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகங்களில் 178 கி.வாட் திறன் கொண்ட அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

**ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை**

- தமிழ் நாட்டில் உள்ள 359 அரசு கட்டடங்களில் 7 கிலோ வாட்/10 கிலோ வாட் திறனுள்ள மேற்கூரை சூரிய சக்தி அமைப்புகள் நிறுவ திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், மொத்தம் 126 கிலோவாட் திறன் கொண்ட 18 அமைப்புகள் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**மண்டல போக்குவரத்து அலுவலகங்கள்**

- தமிழ்நாட்டில் உள்ள மண்டல போக்குவரத்து அலுவலக கட்டிடங்களில் 69 கி.வாட் திறன்கொண்ட 9 அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை



**திட்டப் பணிகள்**

- 2017–2018ஆம் ஆண்டில் மாபெரும் மரம் நடவுத் திட்டத்தின் கீழ் ரூ.65.85 கோடி செலவில் மாநிலம் முழுவதும் உள்ள 31 மாவட்டங்களில் 69 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்ட நிதியின்கீழ் செயல்படுத்திட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- சென்னை மாநகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களில் வார்தா புயலினால் ஏற்பட்ட சேதங்களை ஈடுகட்டவும் பசுமைபோர்வையினை அதிகப்படுத்தவும் ரூ.1,342 இலட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தில், தனியார் நிலங்களில் ரூ.21.36 கோடியில் 88.11 இலட்சம் மரக்கன்றுகள் விவசாய நிலங்களில் நடவு செய்யப்பட்டுள்ளது.

- நகரம் மற்றும் ஊரக பகுதிகளில் பொதுமக்களுக்கு நான்கு இலட்சம் மரக்கன்றுகள் மானிய விலையில் வழங்குவதற்கு ரூ.36 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- தமிழ்நாட்டில் மரம் சாரா காடுபடுபொருட்கள் செறிவூட்டும் திட்டம் ஏழு வருடத்திற்கு ரூ. 314.71 இலட்சம் செலவில் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டின் படுகை நிலங்களில் தேக்குமரத் தோட்டங்கள் எழுப்பும் திட்டத்தினை 8 ஆண்டுகளுக்கு 6,000 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.5,263.13 இலட்சம் செலவில் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

- தேசிய காடுவளர்ப்பு திட்டத்தினை ரூ.410.44 இலட்சம் அளவில் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

- வைகை மற்றும் நொய்யல் ஆறுகளுக்கு புத்துயிர் அளித்தல் திட்டத்திற்கு ரூ.2,457.80 இலட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு

வருகிறது.

- சேலம், நாமக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மூலிகைச் செடிகள் வளர்ப்பதன் மூலம் மகளிரை வலிமைப்படுத்தும் திட்டத்திற்கு 2017–2018ஆம் ஆண்டிலும் ரூ.21.13 இலட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வனநிருவாகம்**

- எதிர்பாராத நிகழ்வுகளினால் கடமை உணர்வுடனும், தீரத்துடனும் பணியாற்றும்போது உயிரிழக்க நேரிடும் வனப்பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- மாநிலப்பணி மூப்புப் பட்டியலில் இடம் பெற்று, உயரம் குறைவாக இருந்த தோட்டக் காவலர்/ சமூகவனப்பணியாளர்களை, வன ஓய்வு விடுதிகளில் விடுதிக் காவலர்கள் / மாலிகள் மற்றும் சமையல்காரர்களாக 206 பணியாளர்கள் பணியமர்த்த அரசாணை வெளியிடப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.
- பழங்குடியின சமுதாயத்தினரின் பாரம்பரிய அறிவையும் யானைகளை மேலாண்மை செய்யும் திறமையையும் அங்கீகரிக்கும் விதமாக 29 காவடி தினக்கூலி பணியாளர்களை காலமுறை ஊதியத்தில் துறையில் பணியமர்த்த அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- வேட்டைத் தடுப்புக் காவலர்களின் மாதாந்திர தொகுப்பூதியத்தினை ரூ.6,750/–லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**வன உயிரின மேலாண்மை**

- வன உயிரினங்களை மேம்படுத்தவும், வனஉயிரின மற்றும் மனித மோதல்களை தடுக்கவும் வனங்களில் தீவனம் உற்பத்தி செய்வதற்காக ரூ.274.43 இலட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூர் மற்றும் கூடலூரில் ரூ.178 இலட்சம் செலவில் அதிவிரைவு நடவடிக்கை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- வன விலங்குகளுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தித் தரும் வகையில் காப்புக் காடுகள் மற்றும் புலிகள் காப்பகங்களினுள் ரூ. 300 இலட்சம் மதிப்பில் 60 வனக்குட்டைகள் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- மாவட்ட அளவிலான ஈரநில மேலாண்மைக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு பல்லுயிர்ப்பரவல் சட்டம் 2007, உட்பிரிவு 22ன்படியும் (மத்திய வட்டம் 2003 உட்பிரிவு 18ன்படியும்) தமிழ்நாடு பல்லுயிர் பரவல் விதிகள் 2017 உருவாக்கப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.
- கௌரவ வன உயிரினக் காப்பாளர்கள் நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது
- விளை நிலங்களுக்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்யும் காட்டுப் பன்றிகளை சோதனை அடிப்படையில் களைதல் – 11 வனக்கோட்டங்களில் ஓராண்டுக்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியம்

- தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியம் 616 புதிய தொழிற்சாலைகளுக்கு தொழில் தொடங்குவதற்கான இசைவாணை வழங்கியுள்ளது.
- மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய தொழிற்சாலை வகைப்பாட்டு அட்டவணையில் ஆரஞ்சு வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்ட அரிசி ஆலைகள் அவை வெளியேற்றும் மாசு அளவினை கணக்கிட்டு ஒற்றை வேக்காடு அரிசி ஆலைகள் தற்போது மறுவகைப்பாடு செய்யப்பட்டு பச்சை வகை அட்டவணைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாற்றியுள்ளது.
- அதிக மாசு ஏற்படுத்தும் 17 வகையான தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரின் தரம் மற்றும் புகைபோக்கி வழியே வெளியேற்றப்படும் புகையின் தரத்தினை உடனுக்குடன் தெரிவிக்கும் வகையில் அதன் அளவீடுகள் வாரிய இணைய தளத்தில் ஆகஸ்டு 2017 முதல் வெளியிடப்பட்டு வருகின்றது.
- தொழிற்சாலைகளை சீரிய முறையில் கண்காணிக்கவும் மற்றும் தொழில்முனைவோரும், பொது மக்களும் பயன்பெறும் வகையிலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தற்போது நாமக்கல் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் இயங்கி வரும் கண்காணிப்பு பகுதிகளை இரண்டாக பிரித்து முறையே குமாரபாளையம் மற்றும் கும்மிடிபூண்டி ஆகிய இரண்டு இடங்களில் புதிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களை ஏற்படுத்தி உள்ளது.
- தொழிற்சாலைகளை சீரிய முறையில் கண்காணிக்கவும் மற்றும் தொழில்முனைவோரும்,



பொது மக்களும் பயன்பெறும் வகையிலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தற்போது மதுரை மற்றும் கோவை மண்டலமாக இயங்கி வரும் அலுவலகங்களின் இரண்டாக பிரித்து முறையே திருநெல்வேலி, மற்றும் சேலம் ஆகிய இரண்டு இடங்களில் இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் இரண்டு மண்டல அலுவலகங்களை ஏற்படுத்தி உள்ளது.

- தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மண்டல அலுவலகங்களுக்கு இடையே காணொலி மூலம் கூட்டம் (Video conferencing) நடத்தும் வசதியை ரூ.70 இலட்சம் செலவில் ஏற்படுத்தி உள்ளது.
- பெருந்துறை சிப்காட் வளாகத்தில் உள்ள தொழிற்சாலைகளை சீரிய முறையில் கண்காணிக்க வசதியாக பெருந்துறை சிப்காட் வளாகத்தில் ரூ.215 இலட்சம் செலவில் ஒரு புதிய மாவட்ட சுற்றுசூழல் ஆய்வகத்தை வாரியம் ஏற்படுத்தி உள்ளது.
- வாரியத்தின் வேலூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள மூன்று மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு நீர் மற்றும் காற்று பரிசோதனை செய்வதற்கான நவீன கருவிகள் ரூ.150 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கோயம்புத்தூர் (வடக்கு) கோயம்புத்தூர் (தெற்கு), வாணியம்பாடி, பெருந்துறை, ஈரோடு மற்றும் ஒரகடம் ஆகிய ஆறு இடங்களில் உள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டிடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. மேலும் வேலூர் மண்டல இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலக கட்டிடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டிடங்கள் ரூ.14.41 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. மேலும் திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இரண்டு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களுக்கு ரூ.4 கோடி செலவில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.
- சுற்றுசூழலை பாதுகாக்கும் வகையில் சிறப்பாக செயலாற்றிய ஒன்பது மாவட்ட ஆட்சியர்களுக்கு 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுக்கான (ஆண்டு ஒன்றுக்கு மூன்று விருதுகள்) பசுமை விருதுகள் மற்றும் ஏழு தொழிற்சாலைகளுக்கு 2015 (நான்கு விருதுகள்) மற்றும் 2016 (மூன்று விருதுகள்) ஆண்டுக்கானபசுமை விருதுகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11.10.2017 அன்று வழங்கப்பட்டது.

## சுற்றுச்சூழல் துறை

- 12 கல்வி மாவட்டங்களில் சுற்றுச்சூழல் மையங்கள், மையம் ஒன்றுக்கு ரூ. 2 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.
- தேசிய பசுமைப்படை மன்ற மாணாக்கர்களுக்கு சூழல் போட்டிகள் மற்றும் சூழல் சுற்றுலா, மாவட்டத்திற்கு ரூ. 1 இலட்சம் செலவில், 32 மாவட்டங்களில் நடத்தப்பட்டது.
- இணையவழி கற்றல் – இணையவழி சுற்றுச்சூழல் விழிப்புணர்வு எனற இத்திட்டத்தின்படி சுற்றுச்சூழல் வல்லுநர்களோடு அனைத்து சுற்றுச்சூழல் தகவல் மையங்களிலிருந்து மாணாக்கர்கள் இணையதள வழியாக தொடர்பு கொள்ள ஏற்கெனவே பள்ளிகளில் செயல்பட்டு வரும் 57 சுற்றுச்சூழல் தகவல் மையங்கள் ரூ.14.44 இலட்சம் செலவில், இத்துறையின் வலைதளத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
- சிறந்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, 69 சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்களுக்கு சிறு ஒளிபரப்பு உபகரணங்கள் (எல்.சி.டி. புரொஜெக்டர்கள்), ரூ.27.60 இலட்சம் செலவில், வழங்கப்பட்டுள்ளது.

**நீர்நிலைகளை புனரமைப்பு செய்யும் பணிகள்**

- திருவள்ளுர் மாவட்டம் ஆவடியில் அமைந்துள்ள பருத்திப்பட்டு ஏரியினை ரூ.28.16 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு செய்ய திட்டமிடப்பட்டு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- மேலும், ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வடமுகம் வெள்ளோடு கிராமத்தில் அமைந்துள்ள பெரிய ஏரியினை ரூ.4.90 கோடி மதிப்பீட்டிலும், ஈரோடு மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள முத்தம்பாளையம் ஏரியினை ரூ.2.75 கோடி மதிப்பீட்டிலும், புனரமைப்பு செய்ய அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.
- மாணவ, மாணவியருக்கு மரத்தின் பெருமையை உணர்ந்து கொள்ளவும், பள்ளிகளை பசுமையாவும் தூய்மையாவும் வைப்பதோடு சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், மாணவர்கள் மூலமாகவே பள்ளிகளில் மரக்கன்றுகள் நட ஏதுவாக, தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு 30 பள்ளிகளில் மொத்தம் 48,000 மரக்கன்றுகள் நடுவதற்கு ரூ. 144 இலட்சம் 2017–2018ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு மரச்செடிகள் நடும் பணி நடைபெற்று வருகிறது,
- சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள ஏதுவாக பள்ளி மாணவ, மாணவியருக்கு பேச்சுப்போட்டி வினாடி வினா மற்றும் ஓவியப்போட்டி ஆகிய மூன்று இனங்களில் சுற்றுச்சூழல் போட்டிகள் நடத்திட மாவட்டத்திற்கு ரூ. 2 இலட்சம் வீதம் ரூ.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது,

### தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்

- தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் 1,10,975 மெட்ரிக் டன்கள் கூழ்மரம் தமிழ்நாடு காகித ஆலை மற்றும் சேஷசாயி காகித ஆலை நிறுவனம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டு இதன் மூலம் ரூ.4,217 இலட்சம் வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளது.
- 3,090 ஹெக்டேரில் தைல கூழ்மரத் தோட்டங்கள், குளோனல் கன்றுகள் மற்றும் விதைகள் இவற்றினை கொண்டு நடப்பட்டும் மேலும் 270 ஹெக்டேர் பரப்பில் உயர்ரக ஒட்டு முந்திரி கன்றுகளை கொண்டு முந்திரி தோட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் முந்திரித் தோட்டங்கள் பொது ஏலம் மற்றும் டெண்டர் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு வருவாயாக ரூ.399.16 இலட்சம் கடந்த ஓராண்டில் வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளது.

**அரசு ரப்பர் கழகம் லிமிடெட், நாகர்கோவில்**

- அரசு ரப்பர் கழகம் தொழிலாளர்களுக்கு அதிகபட்ச கூலியை வழங்கி வருகிறது. தினக்கூலியாக பால்வெட்டு தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு சராசரியாக ரூ.437.68 வழங்கி வருகிறது.
- அரசு ரப்பர் கழகம் புதிய ஐ.எஸ்.ஓ. 9001:2015 – தரச்சான்றினை பெற்றுள்ளது.
- 79.753 ஹெக்டேரில் வீரிய ரக ரப்பர் மரக்கன்றுகள் கொண்டு மறு நடவு செய்யப்பட்டு புதிய தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன.
- 48,524 ரப்பர் மரங்களை கொண்ட 26 பழைய தோட்டங்கள் / பிட்டுகள் விற்ற வகையில் ரூ.15.69 கோடி அரசு ரப்பர் கழகம் வருவாய் ஈட்டியுள்ளது. ரப்பர் மரங்களை மறுநடவு தற்போது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

❖ ❖ ❖



**முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி**

- 10 ஏழை மாணவர்கள் உயர்கல்வி பயில்வதற்கு ரூ.13,50,000/– நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- கிணறு, குளம், ஏரி மற்றும் கடல் ஆகியவைகளில் விழுந்து காயமடைந்த / உயிரிழந்த மற்றும் குண்டு வெடிப்பு, மின்சாரம் தாக்கியும், பாம்பு கடித்தும் உயிரிழந்தவர்கள் வகையில் 454 நபர்களுக்கு ரூ.7,65,15,000/– நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- சாலை மற்றும் தீ விபத்துகளில் காயமடைந்த / உயிரிழந்த 196 நபர்களுக்கு ரூ.1,53,50,000/– நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- காவல் துறை / மின்துறை / போக்குவரத்துத்துறை போன்றவற்றில் பணிபுரியும் பணியாளர்களில் பணியின்போது காயமடைந்த / உயிரிழந்த 293 பணியாளர்களுக்கு ரூ.9,72,65,000/– நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- மீன்பிடிக்க செல்லும்போது காணாமல் போன மீனவர்கள் / படகு கவிழ்ந்து நீரில் மூழ்கி காயமைடைந்தவர்கள் / உயிரிழந்தவர்கள் 23 நபர்களுக்கு என ரூ.81,00,000/– நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- ஒகி புயலால் உயிரிழந்த மீனவர்கள் அல்லாத 14 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.84,00,000/– நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- பல்வேறு காரணங்களால் தற்கொலை செய்து கொண்ட 89 விவசாய குடும்பங்களுக்கு ரூ.2,67,00,000/– நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- உடல்நலக்குறைவால் உயிரிழந்த 10 பத்திரிக்கையாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.17,40,000/– நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- கட்டடம் இடிந்து விழுந்த விபத்து மற்றும் பிற காரணங்களால் காயமடைந்த, உயிரிழந்த 70 நபர்களுக்கு ரூ.1,22,80,000/– நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2016**

- அரசுப் பணியாளர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2016 ஆனது 01.07.2016 முதல் 30.06.2020 வரையிலான அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு 2012ஆம் ஆண்டு புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்ட பயன்களுடன் சில கூடுதல் பயன்களும் சேர்த்து பொதுத் துறை நிறுவனமான




யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மூலம் செயல்படுத்திட ஆணை.

- அரசுப் பணியாளர்களுக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்படும் இந்த புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2016இன் கீழ் நான்கு ஆண்டுகளுக்கு அரசுப் பணியாளர் குடும்பத்திற்கு அனுமதிக்கப்படும் மருத்துவக் காப்பீட்டுத் தொகை ரூ.4 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், புற்றுநோய், உறுப்புமாற்று அறுவை சிகிச்சை, இதயம் சார்ந்த நோய்கள் மற்றும் தீக்காயங்கள் உள்ளிட்ட சில குறிப்பிட்ட சிகிச்சைகளுக்கு அனுமதிக்கப்படும் நிதியுதவியானது ரூ.7.50 இலட்சமாக உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- அரசு ஊழியரை முழுவதும் சார்ந்துள்ள, குறைந்தபட்சம் 40 சதவீத குறைபாடு கொண்ட மாற்றுத்திறனாளி குழந்தைகள், எவ்வித வயது வரம்புமின்றி இத்திட்டத்தில் பயன் பெற வகை செய்யப்பட்டுள்ளதுடன், விபத்து காரணமாக இத்திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட சிகிச்சைகளை, அவசர சிகிச்சைக்கென அங்கீகரிக்கப்படாத மருத்துவமனையில் மேற்கொண்டிருப்பினும், இத்திட்டத்தின் கீழ் பணியாளர் பயன் பெறும் வகையில் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் 113 வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவைச் சிகிச்சை நடைமுறைகள் கட்டணமில்லாமல் மேற்கொள்வதற்கு 807 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மருத்துவச் சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- 01.07.2016 முதல் 09.12.2017 வரையில், 68,819 பயனாளிகள் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2016இன் கீழ் மருத்துவ சிகிச்சைக்கான பயன் பெற்றுள்ளனர். இக்காலகட்டத்தில் இத்திட்டத்தை செயல்படுத்தி வரும் காப்பீட்டு நிறுவனம் ரூ.267.66 கோடி அளவிற்கு காப்புறுதித் தொகை அனுமதித்துள்ளது.

**ஊதியக்குழு**

- மத்திய அரசின் ஏழாவது ஊதியக்குழு பரிந்துரைத்துள்ள திருத்திய ஊதிய விகிதங்கள், படிகள், ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால பலன்கள் குறித்து மத்திய அரசு எடுத்துள்ள முடிவுகளை ஆராய்ந்து அவற்றை தமிழ்நாடு அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்களுக்கு செயல்படுத்ததக்க பரிந்துரைகளை அரசுக்கு அளித்திட 'அலுவலர் குழு 2017' அரசால் அமைக்கப்பட்டது.

- இவ்வலுவலர் குழுவானது அரசுக்கு அளித்த அறிக்கையினை முழுமையாக ஏற்றுக்கொண்டு, அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோருக்கான திருத்திய ஊதியம், ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால பலன்களை 01.01.2016 முதல் கருத்தியலாகவும் 01.10.2017 முதல் பணப்பயனுடன் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- இவ்வாறு சம்பளம், ஓய்வூதியம் மற்றும் இதர படிகள் மாற்றியமைக்கப்பட்டதன் மூலம் ஆண்டொன்றுக்கு ஏற்படும் கூடுதல் தொடர் செலவினம் ரூ.14,719 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மொத்த செலவினத் தொகையில் ரூ.8,015.99 கோடி ரூபாய் அரசு அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் படிகளுக்கானதாகும். ரூ.6,702.91 கோடி செலவின தொகையானது 01.01.2016 முதல் 30.09.2017 வரையிலான காலகட்டத்தில் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான ஓய்வுக்கால பலன்களின் நிலுவைத் தொகை வழங்குவது தொடர்பானதாகும்.

**ஓய்வூதியம்**

- தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978இன்கீழ் அனைத்து ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் பயன்பெறும் வகையில் ஓய்வூதியர் அடையாள அட்டை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

- ஓய்வூதியதாரர்களின் மாதாந்திர ஓய்வூதியம் அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட விவரம், வருடாந்திர ஓய்வூதியம் விவரம், ஓய்வூதியர்களின் நேர்காணல் விவரம், ஓய்வூதியர்களின் தனிப்பட்ட விவரங்கள், படிவங்கள் போன்றவை ஓய்வூதியதாரர்களுக்கு எளிதில் கிடைக்கும் வகையில் ஓய்வூதியதாரர்கள் தரவு தளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**படிகள்**

- பார்வைத்திறன் குறைபாடுடையோர் மற்றும் கை, கால் ஊனமுற்ற அரசு பணியாளர்களுக்கு வழங்கப்படும் 2,500 ரூபாய் மாதாந்திரப் பயணப் படியானது செவித்திறன் குறைபாடுடைய உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள் பணியாளர்கள் உள்ளிட்ட அரசுப் பணியாளர்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

**கருவூலக் கணக்குத் துறை**

- ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2014, பொதுத்துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மூலமாக 01.07.2014 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஓய்வூதியம் பெறுபவர்களும் (வாழ்க்கைத் துணை உள்பட) குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை வசதியினை பெறும்பொருட்டு இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நான்காண்டுகளுக்கு (2014–2018) ரூபாய் இரண்டு இலட்சம் வரை மருத்துவ காப்பீட்டு உதவியினைப் பெறலாம். இதற்காக ரூ.150/– சந்தா தொகையாக ஓய்வூதியர்கள்/குடும்ப ஓய்வூதியர்களிடமிருந்து அவர்களின் மாதாந்திர ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

- இத்திட்டத்தில் ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள் பயன்பெறும் பொருட்டு 114 சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

- தற்போது தமிழ்நாடு, புதுச்சேரி, பெங்களூரு, திருவனந்தபுரம் மற்றும் புதுடெல்லி ஆகிய இடங்களில் 805 மருத்துவமனைகள் இத்திட்டத்தின் கீழ் மருத்துவ உதவியினை வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் (01.07.2014 முதல் 09.12.2017) இதுவரை 1,70,412 பயனாளிகள் ரூ.490.85 கோடி அளவிற்கு கட்டணமில்லா மருத்துவ சிகிச்சையினைப் பெற்றுள்ளனர்.

**நிருவாகம்**

- இளநிலை உதவியாளர் நிலையில் 81 பணியிடங்கள், தட்டச்சர் நிலையில் 24 பணியிடங்கள் மற்றும் சுருக்கெழுத்து – தட்டச்சர் நிலையில் 2 பணியிடங்கள் 2015–2016ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம்**

- அரசு பணிகள் திறம்பட மற்றும் செவ்வனே நடைபெற நிதி மற்றும் மனித வள மேலாண்மையை ஒருமைப்படுத்தி ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டம் ஒன்றினை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக திருவாளர்கள் அக்சென்சர் சர்வீஸஸ் (பி) லிமிடெட் என்ற ஒரு முகமை, கலந்தாலோசகராக நியமிக்கப்பட்டு, ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளரை தேர்வு செய்தல் ஆகிய பொறுப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

- இத்திட்டத்தினை செயல்படுத்த திட்ட ஒருங்கிணைப்பாளராக விப்ரோ நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.



- இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள 23,000க்கும் மேற்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் நேரடி இணையத்தின் மூலம் பட்டியலை கருவூலத்தில் சமர்ப்பிக்க இயலும். இத்திட்டத்தினால் அரசுக்கு கிடைக்கப் பெறும் வருவாய் இனங்கள் நிகழ் நேரத்தில் (Real Time) பெற்றிடவும், பொது மக்களுக்கு இடையூறின்றி உடனடியாக சேவையினைப் பெறவும் இயலும்.

- இத்திட்டத்தின் மூலம் 9 இலட்சம் அரசுப் பணியாளர்களின் பணிப்பதிவேடு பராமரிப்பு எளிமையான முறையில் கணினிமயமாக்கப்பட்டு சம்பளப்பட்டியல், பதவி உயர்வு, மாறுதல்கள், விடுப்பு மற்ற விபரங்கள் அவ்வப்போது உடனுக்குடன் பதியப்படும். இத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

- இத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக, ரூ.288.91 கோடிக்கு அரசு நிதி ஒப்பளிப்பு அளித்துள்ளது.

**கருவூலங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்டுதல்**

- நிதித்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் கருவூல கணக்கு இயக்ககம், சென்னை மண்டல இணை இயக்குநர் அலுவலகம், சம்பள கணக்கு அலுவலகம் (தெற்கு), மாவட்ட கருவூலம், சென்னை, ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், உதவி முத்திரைத்தாள் அலுவலகம், ஓய்வூதிய இயக்ககம், உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்ககம், தலைமை அரசுத்துறை நிறுவனத் தணிக்கை இயக்குநர் அலுவலகம், கூட்டுறவு தணிக்கை இயக்குநரகம் மற்றும் கூட்டுறவு தணிக்கை இணை இயக்குநர், சென்னை மண்டல அலுவலகம் ஆகிய 10 அலுவலகங்களுக்கு ரூ.36.33 கோடி செலவில் புதிய ஒருங்கிணைந்த அலுவலக வளாகத்தில் கட்டடம் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.03.2017அன்று திறந்து வைக்கப்பட்டு மேற்கூறிய 10 அலுவலகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

- 16 சார்கருவூலங்கள் ரூ.9,88,70,000/- செலவில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டன.

- ஒரு சார்கருவூலத்திற்கு ரூ.80.52 இலட்சம் வீதம் 11 சார்கருவூலங்களுக்கு சொந்த கட்டிடங்கள் கட்ட ரூ.8,85,72,000/-க்கான ஒப்புதல் வழங்கப்பட்டு கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை**

- உள்ளாட்சி நிதித் தணிக்கை மற்றும் அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறைகளுக்கு பெறப்பட்டு 20 எண்ணிக்கையிலான புதிய கணினிகள் அச்சு பொறிகளுடன் ரூ.12.87 இலட்சம் செலவில் எல்காட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

- 2014-2015 மற்றும் 2015-2016ஆம் ஆண்டிற்கான காலியிட மதிப்பீட்டின் கீழ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 9 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 17 தட்டச்சர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியில் சேர்ந்துள்ளனர்.

- நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகள், கிராம ஊராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள் முதலான உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் இதர நிறுவனங்களின் 2015–2016 ஆம் ஆண்டிற்கான தணிக்கை 31.07.2017 அன்று முடிக்கப்பட்டுள்ளன.

- 1,37,311 தணிக்கைத் தடைகள் தொடர்பாக பிடித்தம் ரூ.5,897.94 இலட்சம் மதிப்பிலான தொகை பிடித்தம் தணிக்கைத் தடைக் கூட்டமர்வின் போது மேற்கொள்ளப்பட்டது.

- உள்ளாட்சி நிறுவனங்களான நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் தணிக்கை மேற்கொள்ளப்பட்டதற்காக ரூ.1,149/– இலட்சம் தணிக்கைக் கட்டணம் அரசு தலைப்பில் அந்த அமைப்புகளால் செலுத்தப்பட்டுள்ளது.

- 26,727 எண்ணிக்கையிலான உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.41,293.33 இலட்சம் மதிப்பிலான ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட்டுள்ளன.

- உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் மேற்கண்ட காலத்தில் 447 எண்ணிக்கையிலான உள்ளாட்சி நிறுவன ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.103.91 இலட்சம் மருத்துவ நலநிதி பயன்களும், 183 எண்ணிக்கையிலான உள்ளாட்சி நிறுவன ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.190.90 இலட்சம் குடும்ப பாதுகாப்பு நிதி பயன்களும் வழங்கப்பட்டுள்ளன.

**அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை**

- சட்டசபையில் (2017–2018)ஆம் ஆண்டிற்கான நிதித்துறை மானியக்கோரிக்கையின்போது மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி அரசுத்துறை மற்றும் நிறுவனத் தணிக்கைத் துறையின் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில் இத்துறைக்கென தனியே புதிய வலைதளம் ஒன்று உருவாக்க ரூ.6,00,000/– நிதி ஒப்பளிப்பு.

- ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகத்தில் புதிதாக ஒதுக்கப்பட்டுள்ள இத்துறைக்கு சொந்தமான அலுவலகத்தின் கணினி மற்றும் இதர மின்னணு சாதனங்கள் தங்குதடையின்றி இயங்குவதற்க 20 KVA கொண்ட ஓர் UPS ELCOT மூலம் வாங்குவதற்கு ரூ.6,58,580/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**கூட்டுறவு தணிக்கைத் துறை**

- கூட்டுறவு தணிக்கைத் துறையில் அ.வி.127இன் கீழ் உள்ள 20 கூட்டுறவு தணிக்கை அலுவலர் பணியிடங்கள் கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் பணியிடங்களாக நிலை உயர்வு செய்து, புதிய கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் பணி இடங்களாக தோற்றுவிக்கப்பட்டு, இத்துறைக்கு கூடுதலாக 20 கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் பணியிடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

- 8 புதிய வாகனங்கள் வாங்குவதற்கு ரூ.49,63,858/–, 2 புதிய ஓட்டுநர் பணியிடங்களை தோற்றுவிக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுறவு தணிக்கைத் துறையில் கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 2 புதிய கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் அலுவலகங்கள் உருவாக்க அனுமதி வழங்கி கூட்டுறவு தணிக்கைத் துறைக்கு கூடுதலாக 2 கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 2 தட்டச்சர், 2 பதிவறை எழுத்தர், 2 அலுவலக உதவியாளர் பணியிடங்களும் ஆக மொத்தம் 6 புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

- 300 கூட்டுறவு தணிக்கையாளர்களுக்கு அவர்களது தணிக்கைத்திறனை மேம்படுத்துவதற்காக 'கணினி வழி தணிக்கை' (System Audit) என்ற கணினி பயிற்சி அளிக்க ஆயத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- 305 இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். இதில் 62 இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர்கள் செயல்முறை மற்றும் வகுப்பறை பயிற்சிகளில் இருந்து விலக்களிக்கப்பெற்று பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர், 209 இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

❖ ❖ ❖

# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை



**கைத்தறி மற்றும் துணிநூல் துறை**

- மாநிலத்தில் உள்ள 13,200 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் 51,000 விசைத்தறி நெசவாளர்கள் ஆகியோருக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கி, கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழைகளுக்கு பொங்கல் பண்டிகைக்கு விலையில்லா சேலைகள் மற்றும் வேட்டிகள் அளித்தல் ஆகிய இரு நோக்கங்களுடன் தமிழக அரசு விலையில்லா சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்தை 2017–2018ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

- 2018ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ரூ.484.25 கோடி மதிப்பில் 154.52 இலட்சம் சேலைகள் மற்றும் 154.64 இலட்சம் வேட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

- டாக்டர் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் 1 முதல் 8ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு விலையில்லா சீருடை துணிகள் 1985–1986ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. 2012–2013ஆம் கல்வியாண்டு முதல் 4 இணை சீருடைகள் புதிய நிறங்களில் வழங்கப்பட்டு வருகிறது. 2017–2018ஆம் கல்வி ஆண்டில் ரூ.282.50 கோடி மதிப்பில் சீருடை துணிகள் வழங்கப்பட்டுள்ளன.

- கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 100 அலகுகள் வரையிலும், விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 500 அலகுகள் வரையிலும் விலையில்லா மின்சாரம் 01.08.2006 முதல் அரசால் வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2016 சட்டமன்ற தேர்தல் அறிக்கையில் கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வரும் விலையில்லா மின்சாரத்தினை 200 அலகுகள் உயர்த்தியும், விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு ஒரு முறை

வழங்கப்பட்டு வரும் விலையில்லா மின்சாரத்தினை 750 அலகுகள் உயர்த்தியும் வழங்கப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து, 23.05.2016 முதல் உயர்த்தப்பட்ட விலையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1,20,968 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் 1,06,432 விசைத்தறி நெசவாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

- கைத்தறி துணிகளின் விற்பனையினை மேம்படுத்தும் விதமாக, தள்ளுபடி மானியத் திட்டத்தின் கீழ், விற்பனை மேம்பாட்டுக்கான உதவித் தொகை 2017–2018ஆம் ஆண்டில் ரூ.80 கோடியிலிருந்து ரூ.100 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

- மாநிலத்தில் உள்ள தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் கணினிமயமாக்கப்பட்ட இணையதள பொது கணக்கு மென்பொருள் (Web-based Common Accounting Software) நிறுவும் பொருட்டு, 1,048 தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் கணினி மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்து நிறுவப்பட்டுள்ளன. மேலும், இணையதள பொது கணக்கு மென்பொருள் உருவாக்கும் பணிகள், மென்பொருள் உருவாக்கும் நிறுவனத்தால் முடிக்கப்பெற்று, மூன்றாம் தரப்பு மென்பொருள் பாதுகாப்பு தணிக்கையினை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை நிறுவனத்தின் மூலம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இம்மென்பொருளானது "எல்காட்" நிறுவனத்தின் மேகக் கணினியில் (Cloud Environment) பதிவேற்றம் செய்யப்பட்டு அனைத்து தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

- கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு புதிய மருத்துவ காப்பீடு திட்டம் 2016 விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,356 பணியாளர் குடும்பங்கள் பயன்பெறுகின்றன.

- தமிழ்நாட்டில் உள்ள அண்ணா, பாரதி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 5 இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளில் 819 நிரந்தரத் தொழிலாளர்கள் பணியில் உள்ளனர். இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் நிரந்தரத் தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,500/– ஊதிய உயர்வு வழங்க அரசு ஆணையிட்டதைத் தொடர்ந்து, 01.01.2016 முதல் 5 ஆண்டு காலத்திற்கு, இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் நிரந்தரத் தொழிலாளர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.1,500/– ஊதிய உயர்வு வழங்க ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, இயங்கும் 5 கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் 819 நிரந்தரத் தொழிலாளர்களுக்கு மொத்தம் ரூ.1.40 கோடி ஊதிய உயர்வு நிலுவைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- ஜவுளி சந்தையில் மாறிவரும் சூழலுக்கு ஏற்ப வடிவமைப்புகளை மேம்படுத்த, 2017–2018ஆம் ஆண்டில் 2,000 மோட்டார் இணைக்கப்பட்ட சித்திர நெசவு இயந்திரங்கள் வழங்குவதற்கு புதுமை முயற்சிகள் ஊக்குவிப்பு நிதியிலிருந்து ரூ.2.25 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- பாரதி கூட்டுறவு நூற்பாலையின் செலவினத்தை குறைத்து, நிதி ஆதாரத்தை மேம்படுத்தும் விதமாக, ஆலையில் உள்ள அனைத்து மின் விளக்குகளுக்குத் தேவையான மின்சாரத்தினை சூரிய மின் தகடு மூலம் பெற ஏதுவாக ரூ.0.87 கோடியினை மாநில புதுமை முயற்சி ஊக்குவிப்பு நிதியிலிருந்து அரசு அனுமதித்து விடுவித்துள்ளது.

- வாடிக்கையாளர்களுக்கு சரிகையின் தரத்தினை அறிதல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், இரண்டு "ஊடு கதிர் பகுப்பாய்வு (XRF) இயந்திரங்களை" கொள்முதல் செய்து காஞ்சிபுரம் மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் நிறுவும் பொருட்டு மாநில புதுமை முயற்சி ஊக்குவிப்பு நிதியிலிருந்து ரூ.0.38 கோடியினை அரசு அனுமதித்து விடுவித்துள்ளது.

- கைத்தறி நெசவாளர்களின் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பெறப்படும் பகுதி–பெறுகை கடன் தொகையானது, உறுப்பினர் திட்டத்தில் சேர்ந்த நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்குப் பின்னர் பெற இயலும் என்ற விதிமுறையை தளர்த்தி, உறுப்பினர் திட்டத்தில் சேர்ந்த நாளிலிருந்து 5 ஆண்டுகளில் பெறும் வகையில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இத்திட்டத்தில் சேர்ந்துள்ள 65,619 நெசவாளர்கள் பயன் பெறுவார்கள்.

- மின்வணிகதளத்தின் மூலம் கைத்தறி இரகங்கள் விற்பனையை மேலும் அதிகரிக்க கோகூப் மற்றும் அமேசான் ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.




**கோ–ஆப்டெக்ஸ்**

- கோ–ஆப்டெக்ஸ் இணையதளம் மின் வணிகம் மூலமாக ரூ.170 இலட்சம் விற்பனை செய்துள்ளது.
- கோ–ஆப்டெக்ஸ், தனியார் விற்பனை நிலையங்களின் தரத்திற்கு இணையாக நாமக்கல், தென்காசி, தூத்துக்குடி, மைசூர், புனே, திருவண்ணாமலை, வேலூர், கோயம்புத்தூர் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தியுள்ளது.
- வாடிக்கையாளர்களை கவரும் விதத்தில் புதிய ரகங்களான அகிம்சா பட்டு சேலைகள், இயற்கை சாயமிடப்பட்ட பருத்திசேலைகள், லினன் காட்டன் சேலைகள் போன்றவற்றை கோ–ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தி. ரூ.140.15 கோடிக்கு தீபாவளி 2017இல் விற்பனை செய்துள்ளது.

**பட்டு வளர்ச்சி துறை**

- பட்டு வளர்ச்சி விவசாயிகள் 3,500 ஏக்கரில் உயர்விளைச்சல் மல்பெரி ரகங்களை நடவு செய்து வருகின்றனர். புதிதாக நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 1,516 விவசாயிகளுக்கு 2,402.35 ஏக்கரில் மல்பெரி புதுநடவு செய்வதற்காக ரூ.252.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- மல்பெரித் தோட்டங்களில் 1,000 ஏக்கர் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்திட ரூ.250 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- தனி புழுவளர்ப்பு குடில் கட்ட 800 விவசாயிகளுக்கு உதவியளித்தல் திட்டத்தின் கீழ் (நிலை –1, நிலை –2, நிலை –3) ரூ. 648.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, 294 தனி புழு வளர்ப்பு குடில்கள் நிறுவப்பட்ட வகையில் ரூ.245.17 இலட்சம் தொகை விடுவிக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- 1,000 பட்டு விவசாயிகளுக்கு பட்டுப் புழுவளர்ப்புத்தளவாடங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்கிட ரூ.525 இலட்சம் நிதி பெறப்பட்டு, 1,000 பயனாளிகளுக்கு பட்டுப் புழுவளர்ப்புத்தளவாடங்கள் கொள்முதல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பபட்டுள்ளது.
- 30 இலட்சம் வெண்பட்டு முட்டை தொகுதிகளுக்கு போக்குவரத்து செலவினமாக பட்டு விவசாயிகளுக்கு வழங்குவதற்காக பெறப்பட்ட ரூ.30 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது.
- வெண்பட்டு நூலின் தரம், உற்பத்தி அதிகரித்திட கிலோ ஒன்றிற்கு ரூ.100/– வீதம் 20,000 கிலோ கிராம் வெண்பட்டு நூலுக்கு ஊக்குதவித் தொகையாக ரூ.20 இலட்சம் நிதி பெறப்பட்டு 6,730 கிலோ கிராம் வெண்பட்டு நூலுக்கு ரூ.6.73 இலட்சம் ஊக்குதவித் தொகை பட்டு நூற்பாளர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.
- நவீன தொழில் நுட்பங்களை கடைபிடித்து, 100 பட்டு முட்டைத் தொகுதிகளுக்கு 80 கிலோ கிராம் மற்றும் அதற்கு மேல் உற்பத்தி செய்யும் விவசாயிகளில் மாவட்ட அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே 25,000 ரூபாய், 20,000 ரூபாய், 15,000 ரூபாய் பரிசு வழங்கவும், மாநில

அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே 1,00,000 ரூபாய், 75,000 ரூபாய், 50,000 ரூபாய் பரிசு வழங்கவும், ரூ.20.85 இலட்சம் நிதி பெறப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்**

- மண்பாண்ட தொழிலாளர்கள் நலன் கருதி மழைக்கால பராமரிப்பு உதவித் தொகை ரூ.5,000/–ஆக உயர்த்தி வழங்கிட அரசு ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து 2017–2018ஆம் ஆண்டிற்கு 12,236 பயனாளி குடும்பத்திற்கு ரூ.5,000/–வீதம் ரூ.6,11,80,000/–வழங்கப்பட்டுள்ளது.

- மண்பாண்டங்கள் செய்வதற்கான ஐந்து புதிய தொழிற் கூடங்கள் கட்டுவதற்கு ரூ.100 இலட்சம் மற்றும் ஐந்து மண்பாண்ட கூட்டுறவு சங்க கட்டடங்களை பழுது பார்த்திட ரூ.100 இலட்சம் மானியமாக வழங்கிட அரசு ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- மண்பாண்டத் தொழிலாளர்கள் தொடர்பான அறிவிப்புகளில் ஒன்றான மண்பாண்டங்கள் செய்வதற்கான 8,175 சைலா வீல்கள் 4 வருடங்களுக்கு வழங்கிட அரசு ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து முதல் கட்டமாக 2016–2017ஆம் ஆண்டிற்கு 500 சைலாவீல்கள் வழங்கப்பட்டு வருகிறது.

- சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–2018ஆம் ஆண்டிற்கு கீழ் கடல் மட்டத்திலிருந்து 600 மீட்டர் உயரத்தில் உள்ள திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் வசிக்கும் 587 நூற்பாளர்களுக்கு இராட்டையும், 50 நெசவாளர்களுக்கு பெடல் தறியும் வழங்கி பயிற்சி அளித்திட ரூ.245 இலட்சம் அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–2018ஆம் ஆண்டிற்கு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தேன்பொத்தை மண்பாண்ட கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.66 இலட்சம் மதிப்பீட்டிலும், இலஞ்சி மண்பாண்ட கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் தொழிற் கூடம் கட்டுவதற்கு அரசினால் மொத்தம் ரூ.116 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–2018ஆம் ஆண்டிற்கு உதகமண்டலம் கதரங்காடியினை நவீனப்படுத்திட ரூ.41.15 இலட்சம் அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- புதுமை முயற்சி திட்டத்தின் கீழ் மதுரை மேலமாசி வீதியிலுள்ள கதரங்காடியினை நவீனப்படுத்திட ரூ.80 இலட்சம் அமரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்**

- தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் வருடத்திற்கு ரூ.40.60 கோடிக்கு கைவினைப் பொருட்கள் விற்பனை செய்து சாதனை படைத்து வருகிறது. நடப்பு ஆண்டில் விற்பனை ரூ.45 கோடியினை அடைய தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் வருடத்திற்கு ரூ.5.20 கோடிக்கு கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்து சாதனை படைத்து வருகிறது. நடப்பு ஆண்டில் உற்பத்தி ரூ 6.65 கோடியினை அடைய தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

- கைவினைஞர்கள் தங்களுடைய பொருட்களை நேரடியாக சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாகவும், அதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இந்நிறுவனம் 2017–2018ஆம் ஆண்டில் இதுவரை 119 கண்காட்சிகள் நடத்தி உள்ளது.

- **கன்னியாகுமரி நகர்ப்புற குடில்:** இந்நிறுவனம் கன்னியாகுமரியில் ரூ.2.40 கோடி செலவு மதிப்பீட்டில் ஒரு நிரந்தர கண்காட்சி திடல் அமைக்கும் பணியை மேற்கொண்டது. இதில் மத்திய அரசு பங்கு ரூ.140 இலட்சம், மாநில அரசு பங்கு ரூ.60 இலட்சம் மற்றும் இதர அரசு நிறுவனங்களின் பங்கு ரூ.40 இலட்சம் ஆகும். இந்த கண்காட்சித்திடல் 36 கடைகள், உணவுக் கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா மற்றும் வாகனம் நிறுத்தும் இடம் ஆகிய வசதிகளைக் கொண்டிருக்கிறது. இக்கண்காட்சித்திடல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 08.03.2017 அன்று துவக்கப்பட்டது.

- **மாமல்லபுரம் நகர்ப்புற குடில்:** தமிழ்நாடு கைத்திறத்தொழில்கள் வளர்ச்சிக் கழகம், சென்னையை அடுத்து மாமல்லபுரத்தில் ரூ.5 கோடி மதிப்பில் ஒரு நகர்ப்புற குடில் சுமார் 4.45 ஏக்கர் நிலப்பரப்பில் அமைத்து வருகிறது. இதைப்போலவே உதகமண்டலத்தில் நிதி நிலை அறிக்கையில் கூறியுள்ளவாறு ரூ.5 கோடி மதிப்பீட்டில் உதகமண்டலம் நகர்ப்புற குடில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- மாமல்லபுரம் பூம்புகார் விற்பனை நிலைய வளாகத்தில் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் பூம்புகார் கிராப்ட் கபே என்ற கைத்திறனுடன் கூடிய சிற்றுண்டி உணவகம் அமைக்கப்படுகிறது. இதன் முழு கட்டுமானப்பணி மற்றும் உள் அலங்கார வேலைகள் அனைத்தும் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. விரைவில் விற்பனை துவக்கப்பட உள்ளது.

- கைவினைஞர்களுக்கான மின் தொகுப்பு ஏற்படுத்த தமிழக அரசு ரூ.1 கோடி நிதி வழங்கியுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு கைவினைஞர்களுக்கும் தனித்தனியாக இணையதள பக்கங்கள் (webpage) உருவாக்கப்பட்டு, அவற்றில் கைவினைஞர்கள் மற்றும் அவர்களது படைப்புகளின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இந்த மின் தொகுப்பு களஞ்சியம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 12.05.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

- சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்தில் மாதந்தோறும் பொருட்காட்சிகளை நடத்தவும், அதிக தேவைப்பாடு உள்ள பயன்பாட்டு பொருட்களை காட்சிப்படுத்தவும், குளிர்சாதன வசதியுடன் இரண்டாவது தளம் அமைக்கும் பணி தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படுகிறது.

- **கைவினைஞர்கள் தினம்:** அழகிய கைத்திறப் பொருட்களின் மேல் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி பெருமளவு சந்தை வாய்ப்பினை அதிகரிக்கவும், வருடந்தோறும் கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் விருதுகளை ஒரே நாளில் தமிழகம் முழுவதும் வழங்கவும், கைவினைஞர்களை போற்றும் விதமாக தமிழ்நாடு அரசின் நிதியுதவி ரூ.35 இலட்சம் செலவில் ''கைவினைஞர்கள் தினம்'' ஒவ்வொரு ஆண்டும் ''மார்ச் 5ஆம்'' நாள் தமிழகம் முழுவதும் கொண்டாடப்படும். இவ்வாண்டு கலைவாணர் அரங்கத்தில் ''மார்ச் 5ஆம்'' நாள் கொண்டாடப்பட உள்ளது.

- **திருநங்கைகளுக்கு கைத்திறத் தொழில்களில் பயிற்சி வழங்குதல் :** 2015ஆம் ஆண்டு வெள்ளப்பெருக்கால் பெரும் சேதம் அடைந்த கடலூர் மாவட்டத்தில் திருநங்கைகளின் வாழ்வாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பிற்காக, தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் ரூ.7 இலட்சம் செலவில் 50 திருநங்கைகளுக்கு வாழை நார் கைத்திறத் தொழிலில் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் 3 மாத காலம் பயிற்சியளிக்கப்படுகிறது.

- **நலிந்த கைத்திறத்தொழில்களுக்கு பொது பயன்பாட்டு மையம் அமைத்தல்:** தமிழ்நாட்டில் நலிந்த கைவினைத்தொழில்களான களிமண், சுடுமண், கோரைப்புல் மற்றும் பனைஓலைப் பொருட்கள் தமிழக அரசின் நிதியுதவியுடன் ஒவ்வொரு கைத்திறத் தொழிலுக்கும் ரூ.50 இலட்சம் செலவில் பொது பயன்பாட்டு மையம் அமைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது.

- தமிழ் நாட்டிலுள்ள அனைத்து கைவினைஞர்களுக்கும் ரூ. 5,000/– மதிப்பிலான இலவச உபகரணபொருட்களை வழங்கும் விழாவினை 09.03.2017 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து சிறப்பித்தார்கள். இதுவரை ஆயிரத்துக்கும் மேற்ப்பட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**பூம்புகார் விருதுகள்:**

- அரசு அறிவித்தப்படி தமது வாழ்நாளில் கலையை வாழ்விக்கவும், அதன் மேம்பாட்டிற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட கைவினைஞர்களை கௌரவிக்கும் வகையில் இந்தியாவிலேயே முதன் முதலாக ''வாழும் கைவினைப் பொக்கிஷம்'' எனும் புதிய விருதினை அறிமுகப்படுத்தி 2013–2014ஆம் ஆண்டிற்காக 10 கைவினைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு தலா ரூ.1 இலட்சம் ரொக்கப் பரிசும், 8 கிராம் தங்கப் பதக்கமும், தாமிரப் பத்திரமும், சான்றிதழும் 28.08.2014 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். இந்த விருது ஆண்டுதோறும் 10 கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிடப்பட்டுள்ளதால் 2014–2015ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது ஆண்டுதோறும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டும் 10 கைவினைஞர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 12.05.2017 அன்று விருதுகள் வழங்கப்பட்டது.

❖ ❖ ❖

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை



- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சிறப்பு சிகிச்சைகளுக்கு தற்போது வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 1.50 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 1,027 நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதில் 38 முக்கியமான நோய்களுக்கு பரிசோதனை உள்ளிட்ட சிகிச்சைகளும், 154 நோய்களுக்கு தொடர் சிகிச்சைகளும், 8 சிறப்பு உயர் சிகிச்சைகளும் அளிக்கப்படுகிறது. ஆறு மாதங்களுக்கு மேலாக கட்டுமானத் தொழிலாளர்கள் உட்பட புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கும், மாநில அரசால் அனாதைகள் என வரையறுக்கப்பட்டவர்களுக்கும் காப்பீடு அட்டை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 6.51 இலட்சம் நபர்களுக்கு (நோய் கண்டறியும் பரிசோதனைகள் மேற்கொண்ட பயனாளிகள் உட்பட) 930 கோடியே 76 இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தொகுப்பு நிதியிலிருந்து 1,311 நோயாளிகளுக்கு சிறப்பு அறுவை சிகிச்சைகள் 102 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அரசு மருத்துவமனைகள் 261 கோடியே 56 இலட்சம் ரூபாய் தொகையை காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெற்றுள்ளன.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தில் 5.64 இலட்சம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு 513 கோடியே 64 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தற்போது வழங்கப்படும் நிதியுதவி ரூ.12,000லிருந்து ரூ.18,000 ஆக உயர்வு.
- சென்னை அரசு பொதுமருத்துவமனையில் அம்மா முழு உடல் பரிசோதனை மற்றும் அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டத்தில், 10,460 நபர்கள் பரிசோதனை செய்து கொண்டுள்ளனர்.
- இந்தியாவிலேயே முதன் முதலாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், 4,468 மருத்துவர்கள் உட்பட 6,438 பணியாளர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- நடமாடும் மருத்துவமனை திட்டத்தில் 1,91,843 முகாம்கள் நடத்தப்பட்டு இதில் 1.43 கோடி நபர்கள் பயன்.
- 108 அவசரகால ஆம்புலன்ஸ் திட்டத்தில் 2,90,147 கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட 11.51 இலட்சம்

நபர்கள் பயனடைந்துள்ளனர். 108 அவசரகால ஆம்புலன்ஸ் திட்டத்திற்காக 3 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 25 புதிய 108 ஆம்புலன்ஸ் வாகனங்களை 18.05.2017 அன்றும், 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 22 புதிய 108 ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையை 02.11.2017 அன்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். பொதுமக்கள் தொடர்பு கொள்வதற்காக, அவசரம் 108 என்ற ஆண்ட்ராய்டு கைப்பேசிக்கான செயலியையும், 108 ஆம்புலன்ஸ் ஓட்டுநருக்கான செயலியையும் துவக்கி வைத்தார்கள்.

- "104" மருத்துவ தகவல் சேவை மையம் மூலம் 1.92 இலட்சம் நபர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
- அம்மா குழந்தைகள் நல பரிசு பெட்டகம் 4.14 இலட்சம் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- அம்மா ஆரோக்கிய திட்டம், 400 மேம்படுத்தப்பட்ட / வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது. 16.49 இலட்சம் நபர்கள் பயன்.
- எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியில், உலகத் தரம் வாய்ந்த வசதிகளுடன் 91 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புற நோயாளிகள் பிரிவு மற்றும் 16 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள குழந்தைகள் கேத் லேப் கருவி ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 04.03.2017 அன்று திறந்து வைத்தார்கள்.
- சென்னை மண்டலத்தைச் சார்ந்த சென்னை அரசு ஸ்டேன்லி மருத்துவமனையில் முதல்வர் குடியிருப்பு, விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் பிரிவு, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 4 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், 5 புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், 3 துணை சுகாதார நிலைய கட்டடங்கள் மற்றும் ஆறு செவிலியர் குடியிருப்புகள் என 9 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் திறப்பு.
- சேலம் மாவட்டத்தில், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 18 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் முதுநிலை / இளநிலை இருப்பு / கட்டாய உள்தங்கு பயிற்சி மாணவர் தங்கும் விடுதிகள், குடியிருப்பு கட்டடம், வாழப்பாடி அரசு மருத்துவமனையில் பல்வேறு பிரிவுகளுக்கான கட்டடம், சேலம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இரண்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், 10 புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், மருத்துவர் மற்றும் செவிலியர் தங்கும் விடுதிகள், காத்திருப்போர் அறை மற்றும் வெளி நோயாளிகள் அறை என 29 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 20 புதிய கட்டடங்கள் திறப்பு.
- திருச்சிராப்பள்ளி மண்டலத்தில், திருச்சிராப்பள்ளி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள பேறுசார் மற்றும் குழந்தைகள் நல ஒப்புயர்வு மைய கட்டடம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் நான்கு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், 5 புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், 10 துணை சுகாதார நிலைய கட்டடங்கள் என 28 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 20 புதிய கட்டடங்கள் திறப்பு.
- திருநெல்வேலி மண்டலத்தில், திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 28 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பேறுசார் மற்றும் குழந்தைகள் நல ஒப்புயர்வு மைய கட்டடம் மற்றும் செவிலியர் பள்ளி கட்டடம், தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் 8 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி மாணவி மற்றும் மாணவர்கள் தங்கும் விடுதி, தேர்வுக் கூடம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஏழு புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், இரண்டு செவிலியர் தங்கும் விடுதி, ஒரு துணை சுகாதார நிலைய கட்டடம் என 41 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 19 கட்டடங்கள் திறப்பு.
- மதுரை மண்டலத்தில், சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 7 கோடி ரூபாய் செலவில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி, இராமநாதபுரம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் 8 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள செவிலியர் பள்ளி கட்டடம், திண்டுக்கல் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 6 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 200 படுக்கைகள் கொண்ட புதிய கட்டடம், விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 3 கோடியே 33 இலட்சம்




ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புறநோயாளி, தீக்காய மற்றும் தலைக்காய சிகிச்சை மைய கட்டடம் மற்றும் மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் மூன்று மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், இரண்டு புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், ஆறு செவிலியர் தங்கும் விடுதிகள், ஒரு துணை சுகாதார நிலைய கட்டடம் என 30 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 15 புதிய கட்டடங்கள் மற்றும் ஒரு எம்.ஆர்.ஐ. கருவி திறப்பு.

- கோயம்புத்தூர் மண்டலத்தில், வால்பாறை அரசு மருத்துவமனையில் 2 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மகப்பேறு பிரிவு, அறுவை அரங்கம், மருத்துவம் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டடங்கள், திருப்பூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 3 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 100 படுக்கைகள் கட்டடம் மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவ கட்டடம், கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மூன்று மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், இரண்டு புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், மருத்துவர் தங்கும் விடுதி மற்றும் இரண்டு துணை சுகாதார நிலைய கட்டடங்கள் என 11 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 10 புதிய கட்டடங்கள் திறப்பு.

- சிவகங்கை மாவட்டம், திருபுவனம் அரசு மருத்துவமனையில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய கவனிப்பு பிரிவு, குழந்தைகள் பிரிவு கட்டடங்கள், திண்டுக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகப்பேறு புறநோயாளிகள் பிரிவு, கதிர்வீச்சு பிரிவு போன்ற கட்டடங்கள், தருமபுரி மாவட்டம், பென்னாகரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவு மற்றும் இரத்த வங்கி; வேலூர் மாவட்டம் – வள்ளிப்பட்டு, தாமலேரிமுத்தூர், நாகவேடு, விழுப்புரம் மாவட்டம் – செங்குறிச்சி மற்றும் சீர்ப்பனந்தல், திருவள்ளூர் மாவட்டம் – வெள்ளியகரம், விருதுநகர் மாவட்டம் – விஸ்வநத்தம், கிருஷ்ணகிரி மாவட்டம் – தானம்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் – கரும்பனூர், தஞ்சாவூர் மாவட்டம் – ஒக்கநாடுகீழையூர் ஆகிய இடங்களில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள்; திருவள்ளூர் மாவட்டம் – கொள்ளுமேடு, திருவாரூர் மாவட்டம்– ஆலங்குடி, வேலூர் மாவட்டம் – லாலாபேட்டை ஆகிய இடங்களில் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள் திறப்பு.

- புதுக்கோட்டையில் 150 மாணவர்கள் சேர்க்கையுடன் 229 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை 09.06.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

- சென்னை அரசு மருத்துவக் கல்லூரியில் 28 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இளநிலை மருத்துவ




பட்டப்படிப்பு மாணவர்களுக்காக கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 17.07.2017 அன்று திறந்து வைத்தார்கள்.

- கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இளஞ்சிசு தீவிர பராமரிப்பு மையத்துடன் கூடிய மகப்பேறு பிரிவு கட்டடம், திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட உள்நோயாளிகள் பிரிவு கட்டடம் மற்றும் பொது சுகாதாரத் துறையில் 5 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்பசுகாதாரநிலையகட்டடங்கள் மற்றும் 5 புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.09.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- 11 இலட்சம் குழந்தைகளுக்கு ரூ.3,000 மதிப்புள்ள ரோட்டா வைரஸ் தடுப்பூசி போடும் திட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 17.09.2017 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, பச்சிளம் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
- 33 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் 24 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டு பொதுப்பணித் துறையால் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவு கட்டடம் 27.10.2017 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.
- 2001–2002ஆம் ஆண்டில் 57 விழுக்காடாக இருந்த தன்னார்வ இரத்த தானம், பிப்ரவரி 2017 முதல் நவம்பர் 2017 வரையிலான காலத்தில் 99.95 விழுக்காடாக உயர்ந்துள்ளது.
- மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 50 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள பேறுசார் மற்றும் குழந்தை நல ஒப்புயர்வு மைய கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.
- 102 இலவச தாய்சேய் ஊர்தி சேவை திட்டத்திற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 3 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் 36 புதிய ஊர்திகள் 18.05.2017 அன்று வழங்கப்பட்டது. அரசு மருத்துவமனையில் பிரசவித்த 1,09,925 தாய்மார்கள் மற்றும் சேய்கள் பயனடைந்துள்ளனர்.
- காஞ்சிபுரம், வேலூர், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் ரூ. 6.08 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 11 புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30.08.2017, 09.09.2017 மற்றும் 23.09.2017 ஆகிய தினங்களில் திறக்கப்பட்டது.
- 12 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ. 10.08 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

# உயர்கல்வித்துறை



- 2017–2018ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் உயர்கல்வித் துறைக்கு ரூ.3,680 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2017–2018ஆம் கல்வியாண்டில் தருமபுரி மாவட்டம் பாலக்கோடு, கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில், திருவாரூர் மாவட்டம் குடவாசல், விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் (மகளிர்), நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி, ஈரோடு மாவட்டம் திட்டமலை, வேலூர் மாவட்டம் மாதனூர் மற்றும் திருப்பூர் மாவட்டம் பல்லடம் ஆகிய எட்டு இடங்களில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி மற்றும் தொண்டாமுத்தூர் ஆகிய 3 இடங்களில் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

- 2018–2019ஆம் கல்வியாண்டில் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், வனவாசியில் புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

- 2017–2018ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயின்று வரும் மாணாக்கர்கள் வேலைவாய்ப்பினை பெறுவதற்கு ஏதுவாக 268 புதிய பாடப்பிரிவுகள் (60 இளங்கலை, 75 முதுகலை, 133 ஆராய்ச்சி) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 89 புதிய பாடப்பிரிவுகள் சென்னை பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருவள்ளூர் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளிலும் துவங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- 68 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 862 வகுப்பறை கட்டடங்கள் மற்றும் 172 ஆய்வகங்களுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு ரூ.210 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டை குறிக்கும் வகையில் 2017–2018ஆம் ஆண்டில் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் (மகளிர்), காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர், திருவாரூர் மாவட்டம் குடவாசல், வேலூர் மாவட்டம் மாதனூர், நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி மற்றும் தருமபுரி மாவட்டம் பாலக்கோடு ஆகிய அரசு கலை மற்றும்

அறிவியல் கல்லூரிகளுக்கு டாக்டர் புரட்சிதலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்று பெயர் சூட்ட அரசு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

- அரசு பலவகை தொழில் நுட்ப கல்லூரியில் படிக்கும் மாணாக்கர்களுக்கு 720 மின்கற்றல் ஒளித்தொகுதிகள் (e-Learning Video Modules) தயாரிப்பதற்காக அரசு ரூ.58 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

- சென்னை, பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் கோளத்தில் அறிவியல் கருவியை உருவாக்க அரசு ரூ.2.50 கோடி வழங்கியுள்ளது.

- தேனி மாவட்டம், வீரபாண்டியில் துவங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரியில் பி.எஸ்.ஸி கணினி அறிவியல் மற்றும் பி.சி.ஏ ஆகிய புதிய பாடப்பிரிவுகளை 2016–2017ஆம் கல்வியாண்டு முதல் துவங்குவதற்கு அனுமதியும் மற்றும் இப்பாடப்பிரிவுகளை கையாள்வதற்கு 12 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை தோற்றுவித்தும், இதற்கென தொடரும் செலவினமாக ரூ.69,98,400/– ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- ரூ.100 கோடி செலவில் அரசு / பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளுக்கான உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2017–2018ஆம் ஆண்டில், 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 7 கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக் கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு குப்பைத் தொட்டிகள் வாங்கும் பொருட்டு ரூ.48,79,650/– ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- ரூ.100 கோடி செலவில் அரசு / பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளுக்கான உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2017–2018ஆம் ஆண்டில், 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ஆய்வக உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.5,20,00,000/–யும் மற்றும் ஆய்வகங்களை மேம்படுத்துவதற்கு ரூ.1,50,00,000/– யும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- அரசு உதவி பெறும் கல்லூரிகளில் காலியாக இருந்த 414 ஆசிரியர் பணியிடங்களை நிரப்பிக் கொள்ள சார்ந்த அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

- 2013–2014ஆம் கல்வியாண்டில் துவங்கப்பட்ட 10 அரசினர் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் மற்றும் விடுதிகள் கட்டுவதற்கு இரண்டாம் தவணையாக ரூ.106.90 கோடி (ஒரு கல்லூரிக்கு ரூ.10.69 கோடி வீதம்) 2017–2018இல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- 2013–2014ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டம், செட்டிக்கரை மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் துவங்கப்பட்ட அரசினர் பொறியியற் கல்லூரிக்கென, நான்காம் (2016–2017) கல்வியாண்டிற்கு 40 ஆசிரியர்கள் மற்றும் 8 தொழில்நுட்பப் பணியாளர்கள் என மொத்தம் 48 புதிய பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை, தரமணியில் உள்ள மைய தொழில் நுட்பப் பயிலக வளாகத்தில் (Central Institute of Technology Campus) புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பணிமனைக் கட்டடத்திற்கு (Integrated Workshop Building) ரூ.33,63,332/– கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மதுரையில் உள்ள தமிழ்நாடு பலவகை தொழில் நுட்பக் கல்லூரியில் பொருள் சேதமில்லா தரச்சோதனை பயிற்சி மையம் (NON DESTRUCTIVE TESTING TRAINING CENTRE) நிறுவுவதற்கு தொடராச் செலவினமாக ரூ.1 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் 2013–2014ஆம் ஆண்டு புதியதாகத் துவங்கப்பட்ட அரசினர் பொறியியற் கல்லூரிக்கு நான்காம் (2016–2017) கல்வியாண்டிற்கு 20 ஆசிரியர்கள் மற்றும் 4 தொழில்நுட்பப் பணியாளர்கள் என்று மொத்தம் 24 புதிய பதவியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும், நான்காம் (2016–2017) கல்வியாண்டிற்குத் தேவையான கணினிகள், இயந்திரங்கள், தளவாடங்கள் மற்றும் இ–ஜர்னல்ஸ் கொள்முதல் செய்வதற்கு தொடராச் செலவினத்தின் கீழ் ரூ.55 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் 3,208 மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

- முதல் தலைமுறை பட்டதாரி திட்டத்தின் கீழ் 2017–2018ஆம் கல்வியாண்டில் 1,61,138 முதல் தலைமுறை பட்டதாரி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.307.13 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- முதுநிலை கட்டமைப்பு பொறியியல் (M.E. STRUCTURAL ENGINEERING) மற்றும் முதுநிலை தொடர்பியல் (M.E. COMMUNICATION SYSTEM) ஆகிய இரண்டு புதிய முதுநிலை பட்டவகுப்புகள், திருநெல்வேலி, அரசினர் பொறியியற் கல்லூரியில் 2017–2018ஆம் கல்வியாண்டு முதல் துவங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

- அரசு பொறியியல் கல்லூரிகளுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 187 உதவிப் பேராசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- தொழில்நுட்ப கல்வித்துறையில் 52 உதவியாளர்கள், 1 சுருக்கெழுத்து தட்டச்சர் மற்றும் 1 தட்டச்சர் உட்பட 54 அமைச்சுப் பணியாளர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

- அணுக்கருவைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வது தொடர்பாக, மாணவர்களிடையே விழிப்புணர்வை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், ரஷ்யாவின் தேசிய அணு ஆற்றல் நிறுவனமான "ரொசோட்டம்" உடன் இணைந்து, ரூ.40 இலட்சம் மதிப்புள்ள அணுமின் உலைகள் குறித்த பகுதியை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தால் 26.04.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது. திறன் கூட்டிய நிஜக் காட்சிப் படக்கருவி, எண்ணிலக்க நிஜநிலை தொழில்நுட்பம், வருகை தரும் பார்வையாளர்களின் கதிர் வீச்சு அளவுகளை அளக்கும் கதிர் வீச்சு அளவி உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்கள் இந்தப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- தமிழக அரசின் தன்னிறைவு திட்டத்தின் கீழ் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி நாகலாபுரத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டது.

- மாநிலக் கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் தங்கும் விடுதி கட்டுவதற்காக அரசு, ரூ.10,00,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

- தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக அரசு ரூ.1,69,60,429/–க்கு நிருவாக ஒப்பளிப்பும் மற்றும் ரூ.50,00,000/– நிதி ஒப்பளிப்பும் வழங்கியுள்ளது. மேலும், தஞ்சாவூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக அரசு ரூ.1,86,14,993/– நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பும் வழங்கியுள்ளது.

- 2017–2018ஆம் நிதியாண்டில் அரசு, பெரும்பாக்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு கட்டடம் கட்டுவதற்கு ரூ.2,00,00,000/– நிதி ஒப்பளிப்பும், மேட்டுப்பாளையம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு கட்டடம் கட்டுவதற்கு ரூ.10,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- 85 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை (மகளிர் மற்றும் இருபாலர்) தூய்மையாக பராமரிக்கும் பொருட்டும் மற்றும் மாணவியர்களின் நலன் கருதியும், நாப்கின் வழங்கும் இயந்திரத்தை வாங்குவதற்காக அரசு, ரூ.46,69,600/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- 2017–2018ஆம் நிதியாண்டில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட 14 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு தேவையான இருக்கைகள் மற்றும் மேசைகள் வாங்குவதற்கும், ஆசிரியர்களுக்கு தேவையான நாற்காலிகள் மற்றும் மேசைகள் வாங்குவதற்கும் ரூ.100 கோடி திட்டத்தின் கீழ் அரசு ரூ.1,86,61,855/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை



- ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.1,813.70 கோடி செலவில் 3,143 கி.மீ நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்தல் / மேம்பாடு செய்தல் பணிகள் மற்றும் 120 சிறு பாலங்கள் / பாலங்கள் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- காலமுறை புதுப்பித்தலின் கீழ் ரூ.137.04 கோடிக்கு 1,544 கி.மீ. நீளமுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

- விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சி திட்டத்தின் கீழ், ரூ.13.56 கோடி செலவில் 12 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- சாலை பாதுகாப்பு திட்டத்தின் கீழ், ரூ.35.05 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இரயில்வே மேம்பாலங்கள் சென்னை மாவட்டத்தில் வியாசர்பாடியில் ரூ.80.68 கோடி மதிப்பிலும் மற்றும் திருவெற்றியூர் மாட்டுமந்தையில் ரூ.47 கோடியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் முன்னீர்பள்ளம் அருகே ரூ.32.70 கோடி மதிப்பிலும், விழுப்புரம் மாவட்டம் மைலம் அருகே ரூ.22.43 கோடி மதிப்பிலும், மதுரை மாவட்டம் வடபழஞ்சியில் ரூ.13.82 கோடி மதிப்பிலும் மற்றும் திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் விருதுநகரில் அளவான பயன்பாட்டு சுரங்கப்பாதையும் ரூ.71.58 கோடி செலவில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

- நபார்டு வங்கி நிதி உதவியுடன் 39.87 கி.மீ நீளமுள்ள 15 சாலைகள் ரூ.22 கோடி செலவிலும், 48 பாலங்கள் ரூ.105.87 கோடி செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- சென்னை பெருநகரத்தில் சாலை மேம்பாலம் ரூ.54 கோடி செலவில் போரூரில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் பெரியார் சாலையில் அமைந்தகரை அருகில் ரூ.11.10 கோடி செலவில் 3 வழித்தட பாலம் கூவம் ஆற்றின் குறுக்கே கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**2017–2018ஆம் ஆண்டில் ஒப்புதல் பெறப்பட்ட முக்கிய பணிகள்.**

- பெருகி வரும் வாகனப் போக்குவரத்து மற்றும் வளர்ந்து வரும் பொருளாதார மண்டலங்கள், தொழிற்பூங்காக்கள் ஆகியவற்றின் தேவைகளை கருத்திற்கொண்டு அதனை ஈடு செய்யும் வகையில் நெடுஞ்சாலைகளை பெருமளவிற்கு அகலப்படுத்தவும் மற்றும் மேம்படுத்தவும் ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 2017–2018ஆம் ஆண்டில் 5060.85கி.மீ. நீளச்சாலைகளில் அகலப்படுத்துதல் / உறுதிப்படுத்துதல் / மேம்பாடு செய்தல் பணிகளும்



99 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டுதல் பணிகளும் மற்றும் 638 பாதுகாப்பு பணிகள் மற்றும் நில எடுப்பு பணிகளுடன் மொத்தம் ரூ.2,772.50 கோடிக்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- சேலம் மாநகரில், சேலம் இரும்பாலை சாலை சந்திப்பில் எளிதான போக்குவரத்தினை ஏற்படுத்தி விபத்தினை தவிர்க்கும் வகையில் சேலம் இரும்பாலை சாலை சந்திப்பில் ரூ.21.97 கோடி மதிப்பில் மேம்பாலம் கட்ட ஆணை வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டுள்ளது.

- வேலூர் மாநகரத்திற்கு வட்டச் சாலை அமைப்பதற்கான நில எடுப்பு பணிகள் ரூ.38.82கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- சாலை பாதுகாப்பை மேம்படுத்த குறுகிய பாலங்களை அகலப்படுத்துதல் / வளைவுகளை நேர்படுத்துதல் / உயரமான பகுதிகளில் இரும்பு தடுப்புச் சுவர் அமைத்தல் / சந்திப்புகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளை ரூ.100 கோடியில் மேற்கொள்ள அரசாணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சென்னை மாநகர் மற்றும் அதனை சுற்றியுள்ள முக்கிய இணைப்புச் சாலைகளை ரூ.216 கோடி மதிப்பில் மேம்படுத்தவும், ரூ.51.21 இலட்சம் மதிப்பில் நிலத் திட்ட அட்டவணை தயார் செய்யவும், 2 பல்லடுக்கு மேம்பாலங்கள் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.50 இலட்சத்தில் தயார் செய்யவும் அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- புதுவாயல் – பழவேற்காடு சாலையில் கி.மீ. 0/0–2/0 வரை இருவழித்தடச் சாலையிலிருந்து நான்கு வழித்தடச்சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் பணி நில எடுப்பு பணிகள் நீங்கலாக ரூ.11.50 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- புதுவாயல் – பழவேற்காடு சாலையில் கி.மீ. 2/0–6/2 வரை இருவழித் தடத்திலிருந்து நான்கு வழித்தடச்சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் பணி நில எடுப்பு பணிகள் உட்பட ரூ.45கோடி மதிப்பில் TNIPP2 நிதியின் மூலம் மேற்கொள்ள அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- ஒசூர் நகருக்கு வெளிவட்ட சாலை அமைப்பதற்காக ரூ. 125.96கோடி மதிப்பில் நில எடுப்பு பணிகள் மேற்கொள்ள அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகின் மூலம், மாநில நிதியின் கீழ் ரூ.608 கோடி மதிப்பில் 1,435.96 கி.மீ. நீளமுடைய 460 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்த, அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. விரைவில் பணிகள் துவங்கப்படும்.

❖ ❖ ❖

# உள்துறை, மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வைத்துறை





- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமை மற்றும் வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டில் அமைதி, ஸ்திரத் தன்மை, சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டுள்ளது. காவல் துறையின் அயராத உழைப்பாலும், குறித்த காலத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்த காரணத்தினாலும் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை ஆண்டு முழுவதும் அமைதியாக இருந்தது. மாநிலத்தில் நடைபெற்ற சட்டமன்ற இடைத்தேர்தல் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக சுதந்திரமாக நடைபெற்றது.

- பெண்களுக்கு எதிரான கடும் குற்றங்களை புலனாய்வு செய்ய சென்னை மாநகரம், வேலூர், விழுப்புரம், தருமபுரி, தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய 7 இடங்களில் பெண்களுக்கு எதிரான குற்றத் தடுப்பு புலனாய்வு பிரிவு அமைக்க ஆணை வழங்கப்பட்டது.

- ஒவ்வொரு மாநகரம் மற்றும் மாவட்டத்திலும் குழந்தை கடத்தல் தடுப்பு பிரிவு அமைப்பதற்கும் மற்றும் இரயில்வேயில் குழந்தைகள் கடத்தல் மற்றும் தொலைந்துபோன வழக்குகளை புலனாய்வு செய்வதற்கும் 43 காவல் ஆய்வாளர் பதவிகள் ஒப்பளிக்கப்பட்டது.

- தருமபுரி மாவட்டம் பாலகோட்டில் 4 கூடுதல் பதவிகளுடன் ஒரு காவல் உட்கோட்டம் அமைக்க ஆணை வழங்கப்பட்டது.

- தமிழக அரசு, சென்னை பெருநகரத்தில் வசிக்கும் காவல் ஆளிநர்கள் பயனடையும் வகையில் கூடுதலாக ஒரு காவல் அங்காடியை புதுப்பேட்டையில் (எழும்பூர்) நிறுவ ரூ.7,90,000/– வழங்கி உத்திரவிடப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

- மேலும், வடசென்னையில் வசிக்கும் காவல் ஆளிநர்கள் பயனடையும் வகையில் கூடுதலாக ஒரு காவல் அங்காடியை கொண்டித்தோப்பு காவலர் குடியிருப்பில் நிறுவ ரூ.7,90,000/– வழங்கி உத்திரவிட்டுள்ளது.

- 40 வயது நிரம்பிய காவல் பணியாளர்களுக்கு ஆண்டிற்கு ஒருமுறை அரசு மருத்துவமனைகளில் இலவச முழு உடல் மருத்துவப் பரிசோதனை அளிக்கப்பட்டு வருகிறது. அதற்கான உத்தரவு, ஆணை பிறப்பிக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டில் காவல் பணியாளர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

- நடப்பு நிதியாண்டு 2017–2018க்கு தமிழக அரசு சாலைப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ரூ.65 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

- உச்சநீதிமன்ற சாலைப் பாதுகாப்பு குழுவின் பரிந்துரைகளின்படி 2020ஆம் வருடம் சாலை விபத்தினை 50 சதவீதம் குறைத்திட சாலை பாதுகாப்பு இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- உச்சநீதிமன்ற சாலைப் பாதுகாப்பு குழுவின் பரிந்துரையின்படி அனைத்து மாவட்ட ஆட்சியர் மற்றும் பயன்பாட்டுத் துறைகளுக்கும் ஒவ்வொரு பிரதான சாலையிலும் வேகக்கட்டுப்பாடு நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.




- தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு ஏற்படும் எதிர்பாரா பெரும் தீக்காயங்கள் மற்றும் கொடுங்காயங்கள் ஆகியவற்றிற்கு சிகிச்சை மேற்கொள்ள ஏற்படும் செலவினத்தை ஈடுசெய்யும் வகையில் தனியாக "எதிர்பாரா மருத்துவ நல நிதி" மூலம் ரூ.50 இலட்சத்திற்கு வருடாந்திர தொடர் செலவினம் மேற்கொள்ள ஒப்பளிப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

- தருமபுரியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகம், தருமபுரி மற்றும் சேலம் ஜாகீர் அம்மாபாளையத்தில் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தில் தடய அறிவியல் ஆய்வகம் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- தென்னை மரத்திலிருந்து நீரா சேகரிப்பதற்கும், நீரா பானத்திலிருந்து பொருட்களை தயாரிப்பதற்கும் அனுமதி வழங்க ஏதுவாக தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் 1937இல் சட்டத்திருத்தங்கள் செய்து தமிழ்நாடு அரசு தனது அரசிதழில் அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுகள் குழுமம் இரண்டாம் நிலைக் காவலர்கள், இரண்டாம் நிலை சிறைக்காவலர்கள் மற்றும் தீயணைப்போர்கள் ஆகிய பதவிகளுக்கு பொதுத் தேர்வு நடத்தி தற்காலிகமாக தேர்வு பட்டியல் 31.08.2017 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு புதுமை முயற்சித் திட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் உற்பத்தி பிரிவில் நடைபாதை ஓடுகளின் விரிவாக்க அலகினை நிறுவிட, மணலுக்கு பதிலாக செப்பு கழிவு பொருட்களை உபயோகப்படுத்தி உற்பத்தி செய்யப்படும் திட்டத்திற்கு ரூ.48 இலட்சம் செலவில், ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- பாரதரத்னா புரட்சித் தலைவர் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளினை கொண்டாடும் வகையில் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை முடித்த ஆயுள் தண்டனை சிறைவாசிகளை இந்திய அரசியலமைப்புச் சட்டம் விதி 161இன் கீழ் முன் விடுதலை செய்ய பரிசீலனை செய்வது தொடர்பான நெறிமுறைகளை அரசு உருவாக்கியுள்ளது.

- 16.09.2017 அன்று சென்னை உயர்நீதிமன்ற பாரம்பரியக் கட்டடத்தின் 125ஆவது ஆண்டு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க, வழக்கறிஞர் சேமநல நிதி ரூ.5.25 இலட்சத்திலிருந்து ரூ.7 இலட்சமாக உயர்த்தி வழங்கவும், மேலும் ஒவ்வொரு ஆண்டும் சேமநல நிதிக்காக வழங்கப்படும் வருடாந்திர நிதி ரூ.4 கோடியிலிருந்து ரூ.8 கோடியாக அரசு உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

## வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை



**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்**

- ரூ.1,186.46 கோடி மதிப்பீட்டில் 3,191 புதிய குடியிருப்பு அலகுகள் கட்டிமுடிக்கப்பட்டு / மேம்படுத்தப்பட்டு உள்ளது.
- 2,720 குடியிருப்பு அலகுகள் மற்றும் 14 வணிக அலகுகள் உட்பட மொத்தம் 2,734 ஒதுக்கீடு தாரர்களுக்கு விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 754 விற்பனை பத்திரங்கள் வட்டி சலுகை திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது.
- வாரிய திட்டங்களில் 11 அலகுகள் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 606 குடியிருப்பு அலகுகள் விற்பனை மூலம் ரூ.253.28 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
- 1 வணிக அலகு விற்பனை மூலம் ரூ.1.85 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
- ரூ.20.54 கோடி மதிப்பீட்டிலான 71.55 ஏக்கர் வாரிய நிலங்கள் மீட்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்**

- ரூ.593.88 கோடி மதிப்பில் 14 திட்டப்பகுதிகளில் 9,847 குடியிருப்புகள் / வீடுகள் தொடங்கி வைக்கப்பட்டன.
- ரூ.1.72 கோடி செலவில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்காக புதிதாக கட்டப்பட்ட கோவை சரக மற்றும் கோட்ட அலுவலகங்கள் வளாகம் திறந்து வைக்கப்பட்டது.
- அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின்கீழ் 1,62,571 அடுக்குமாடி குடியிருப்புகள் / வீடுகள் ரூ.6,635.10 கோடி செலவில் கட்ட மாநில அரசின் ஒப்புதல் வழங்கப்பட்டது.
- சென்னையில் ஆட்டோ நகர் அமைக்க ரூ.19.64 கோடி திருத்திய மதிப்பீட்டில் 1,657 வணிக மனைகள் மேம்படுத்த நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- கோவையில் ஜவஹர்லால் நேரு நகர்புற சீரமைப்பு திட்டத்தின்கீழ் 5 திட்டப்பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 7,136 குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோக அமைப்புகள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ரூ.19.51 கோடி செலவில் அமைக்க மாநில கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் நிருவாக மற்றும் நிதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- பெரும்பாக்கம் மறுகுடியமர்வு திட்டப்பகுதியில் குடிநீர் வசதி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், திட்டப்பகுதி உட்புற சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்க ரூ.87.39 கோடி நிதி விடுவிக்கப்பட்டது.



- அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளுக்காக ரூ.20 கோடி நிதி வழங்கப்பட்டது.
- அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின் ஒரு பகுதியாக குடியிருப்புகள் / வீடுகள் அமைக்க ரூ.1,243.09 கோடி நிதி விடுவிக்கப்பட்டது.
- ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற சீரமைப்பு திட்டத்தின்கீழ் கோயம்புத்தூரில் 7,048 குடியிருப்புகள் கட்டும் திட்டப் பணிகளுக்காக ரூ.42.72 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.
- அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் 1,62,571 குடியிருப்புகள் / வீடுகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் அமைக்க ரூ.6,635.10 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது.
- பல்வேறு திட்டப்பணிகளுக்காக மூலதன செலவினமாக ரூ.808.18 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- 362 குடியிருப்புகள் மற்றும் 604 மனைகளுக்கு விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 8,150 குடியிருப்புகளுக்கு ஒதுக்கீட்டாணைகள் வழங்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தில் 64 உதவி பொறியாளர்கள் மற்றும் 17 இளநிலை பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

**கூட்டுறவு வீட்டுவசதித் துறை**

- தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் மூலம் நலிவடைந்த கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களை மேம்படுத்தும் வகையில் சிறப்புக் காசுக்கடனாக 6 சதவிகித வட்டி விழுக்காட்டில் ரூ.180 இலட்சம் கடன் வழங்கப்பட்டது.
- இணையத்தில் முதன்மைச் சங்கங்களின் மூலம் 305 உறுப்பினர்களுக்கு ரூ.14.28 கோடி அடமானக்கடன் வழங்கப்பட்டது.
- சென்னை பெருநகர கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் மூலம் சென்னை பெரம்பூர் ஜம்புலிங்கம் நகரில் ரூ.6 கோடி மதிப்பீட்டளவில் திருமண மகால் 11.05.2017 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- தமிழ்நாடு கூட்டுறவு சங்க இணையத்தில் 3,970 உறுப்பினர்களின் கடன் கணக்குகளை முடிவுகட்டி பத்திரங்கள் திரும்ப வழங்கப்பட்டுள்ளது.

**நகர் ஊரமைப்பு இயக்ககம்**

- புராதன நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பெருங்குளம், சுசீந்திரம், கொடுமுடி, திருப்பரங்குன்றம், திருப்புனவாசல், திருமுருகன்பூண்டி மற்றும் மயிலாடுதுறை ஆகிய 7 புராதன நகரங்களுக்கு மானியமாக ரூ.210 இலட்சத்து 89 ஆயிரம் விடுவிக்கப்பட்டுள்ளது.
- போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்தின்கீழ் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதற்குரிய மதிப்பீட்டு தொகையில் எழுபத்தைந்து விழுக்காடு மானியமாக அதிகபட்சம் ஒரு கோடி ரூபாய் மாநகராட்சிகளுக்கும், ரூ.50 இலட்சம் நகராட்சிகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இக்காலத்தில் 18 நகராட்சிகளுக்கு

ரூ.602 இலட்சத்து 150 ஆயிரம் விடுவிக்கப்பட்டுள்ளது.

- பூங்கா அபிவிருத்தி திட்டத்தின்கீழ் நிலையிலுள்ள பூங்காக்களை அபிவிருத்தி செய்திட திட்ட மதிப்பீட்டில் தொண்ணூறு விழுக்காடு தொகையை அதிகபட்சம் பதினைந்து இலட்சம் ரூபாய் மானியம் வழங்கும் இத்திட்டத்தின்கீழ் 66 பூங்காக்களுக்கு ரூபாய் 218 இலட்சத்து 55 ஆயிரம் விடுவிக்கப்பட்டுள்ளது.

- உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியிலிருந்து 9 திட்டங்களுக்கு ரூ.112.12 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியிலிருந்து ரூபாய் 38 கோடி 29 இலட்சம் திட்டங்களுக்கு பகுதி தொகையாக பழைய மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை நகரில் பிரதான நீரேற்றம் மற்றும் குடிநீர் குழாய் அமைப்பதற்கு சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவு நீரேற்றும் வாரியத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியத்தின் கீழ்கண்ட இரண்டு திட்டங்களுக்கு ரூபாய் 8 கோடி 4 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

- பெரும்பாக்கம் மறுகுடியமர்வு திட்டத்திற்கு ரூபாய் 86 கோடி 52 இலட்சம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு மூன்றாவது தவணையாக விடுவிக்கப்பட்டுள்ளது.

- தரமணி இணைப்பு சாலை திட்டத்திற்கு இரண்டாவது பகுதி தொகையாக ரூபாய் 2 கோடி 95 இலட்சம் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

- திண்டுக்கல், கும்பகோணம், விழுப்புரம், கடலூர், திருநெல்வேலி மற்றும் ஓசூர் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதியினை விரிவாக்கம் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- நகர்ப்புற மற்றும் கிராம பகுதிகளுக்குள் உள்ளடங்கிய அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு / மனைகள் ஆகியவற்றை வரன்முறைப்படுத்துவதற்காக மாநில அளவிலான திட்டம் வெளியிடப்பட்டுள்ளது.

- அங்கீகரிக்கப்பட்ட கட்டடங்களை வரைமுறை படுத்துவதற்கான திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- நகர் ஊரமைப்பு துறையின் அனைத்து பகுதிகளுக்கும் நிலப்பயன்பாடு தகவல் அமைப்பு முறை தொடங்கப்பட்டுள்ளது.

- கட்டட திட்ட விண்ணப்பங்களை இணையம் வாயிலாக விண்ணப்பிக்கவும் அவ்விண்ணப்பத்தின் நிலையினை அறியவும் நிலப்பயன்பாட்டு தகவல்களை அறியவும் மேலும், மென்பொருள் மூலம் கூராய்வு செய்யும் முறை 11.05.2017 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- திருச்சிராப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள மண்டல உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழும அலுவலகக் கட்டடம், திருநெல்வேலியில் கட்டப்பட்டுள்ள மண்டலத் துணை இயக்குநர் அலுவலகம் மற்றும் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழும அலுவலகக் கட்டடம் மற்றும் சிவகங்கை மண்டல அலுவலக கட்டடங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**

- கணினி மூலம் திட்ட அனுமதி விண்ணப்பங்களை பொதுமக்கள் சமர்ப்பிப்பதற்கான வசதியை ஏற்படுத்தவும், மேலும் அதிகாரிகள் பணிமுறை அமைப்பின் வாயிலாக இப்பணியை மேற்கொள்ளவும் தன்னிச்சையாக திட்ட அனுமதி விண்ணப்பங்களின் நிலை குறித்த மாற்றங்கள் செய்யவும் மின் ஆளுமை மென்பொருளில் கூடுதலான அம்சங்கள் தேசிய தகவல் மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 11.10.2017 அன்று திட்ட அனுமதி விண்ணப்பங்களை கணினி மூலம் சமர்ப்பிப்பதற்கான வசதியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

- மக்களின் தேவையை கருத்தில் கொண்டு சிறப்பு மற்றும் தொகுப்பு கட்டடங்களுக்கான உயர்ந்த பட்ச உயரத்தை 15.25 மீட்டரிலிருந்து 17 மீட்டராக உயர்த்திக் கொள்வதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# தொழில் துறை




- தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்படுவதை எளிமையாக்குவதன் ஓர் பகுதியாக ஒருங்கிணைந்த இணையதள வழி ஒற்றைச்சாளர தகவினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 02.11.2017 அன்று துவக்கி வைத்தார்கள். இந்த ஒற்றைச் சாளர தகவு மூலமாக, நகர மற்றும் ஊரமைப்பு திட்டமிடல் துறை, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி, தொழிலாளர் மற்றும் தொழிலகப் பாதுகாப்பு, சுகாதார இயக்ககம் போன்ற 11 அரசுத் துறைகளின் மூலம் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான பல்வேறு அனுமதிகளை வழங்குதல், அனுமதிகளை புதுப்பித்தல் ஆகிய சேவைகளைப் பெற இயலும். இவ்வசதியின் மூலம், மனித நேரடித் தொடர்பு இன்றி பல்வேறு அரசுத் துறைகளின் 37 சேவைகளை முதலீட்டாளர்கள் இணையம் மூலம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- சிப்காட் நிறுவனம், சிப்காட் வல்லம்–வடகால் தொழிற்பூங்காவில் சுமார் 245 ஏக்கர் பரப்பளவில் வானூர்திகளுக்கான உதிரிபாகங்கள் தயாரிப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக 'வானூர்திப் பூங்கா' ஒன்றினை அமைத்து வருகிறது, அதற்காக 25.10.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இப்பூங்காவில், சிப்காட் நிறுவனம் 13 தொழில் நிறுவனங்களுக்கு 36.19 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது. டிட்கோ நிறுவனம், சிறப்பு நோக்க முகமை மூலமாக, வானூர்தி உயர் கணினி மற்றும் வடிவமைப்பு பொறியியல் மையம் ஒன்றினை அமைக்கவுள்ளது. மேலும், இப்பூங்காவில் பொது ஆய்வு மற்றும் தொழில்நுட்ப மையம் ஒன்றும் உருவாக்கப்படும். இப்பூங்கா ஐந்தாண்டுகளில் ரூ.1,000 கோடி முதலீட்டை ஈர்ப்பதோடு சுமார் 10,000 நபர்களுக்கு நேரடியாகவும் மற்றும் 25,000




நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

- தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலை ஆணையமும் இணைந்து ஒரு பல்முனை சரக்கு போக்குவரத்து பூங்காவை மத்திய அரசின் தரைவழி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் சரக்கு போக்குவரத்து மேம்பாட்டு திட்டத்தின் கீழ்அமைக்க 15.05.2017 அன்று புதுடெல்லியில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இத்திட்டம், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் புழுதிவாக்கம் மற்றும் வாயலூர் கிராமங்களில் காமராஜர் துறைமுகத்திற்கு அருகிலும் பொன்னேரி தொழில் முனைய மேம்பாட்டுபகுதியின் நடுவிலும் உள்ள சுமார் 360 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ரூ.1,295 கோடி முதலீட்டில் அமைக்கப்படும். இந்த பல்முனை சரக்கு போக்குவரத்து பூங்காவை அமைப்பதால் போக்குவரத்து செலவுகள், வாகனங்களினால் ஏற்படும் மாசு மற்றும் சாலை நெரிசல் வெகுவாக குறையும்.

- தமிழக அரசின் 3% வட்டி மானியத்துடன் 833 தொழில்களுக்கு ரூ.409.86 கோடி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடன் வழங்கியுள்ளது. இதனால் இந்நிறுவனங்கள், வெளிசந்தையில் நிலவும் கடனுக்கான வட்டி விகிதத்தை விட குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெற்று பயன் அடைந்துள்ளனர்.

- தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து மின் ஆக்கிகள் வாங்குவதற்கு பெறப்படும் கடன்களுக்கு தொழில் முனைவோரின் மூலதனத்தை 10 விழுக்காடாகக் குறைத்த திட்டத்தின் கீழ், 10 பயனீட்டாளர்கள், ரூ.58.94 இலட்சம் கடன் அனுமதிக்கப்பட்டு, பயன் அடைந்துள்ளனர்.

- படித்த இளைஞர்கள் முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவெடுக்க உதவுவதை குறிக்கோளாகக் கொண்ட மாநில அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு (NEEDS) திட்டத்தை இக்கழகம் நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 62 பயனீட்டாளர்கள், ரூ.32.30 கோடி கடன் அனுமதிக்கப்பட்டு, பயன் அடைந்துள்ளனர்.

- வெளிச்சந்தையில் விற்கப்படும் சிமெண்ட் விலையேற்றத்தினால் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள மக்கள் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில், சலுகை விலையில் சிமெண்ட் விற்பனை செய்யும் "அம்மா சிமெண்ட் திட்டம்" தமிழக அரசால் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சிமெண்ட் மூட்டை ஒன்றுக்கு ரூ.190/– என்ற சலுகை விலையில் விற்கப்பட்டு வருகிறது. அம்மா சிமெண்ட் திட்டத்தில் 8,00,022 மெ.டன் (1,60,00,440 மூட்டைகள்) விற்கப்பட்டுள்ளது. மேலும் இந்த காலக்கட்டத்தில் 2,97,760 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

- தமிழ்நாடு உப்பு நிறுவனம், 24,472 டன்கள் அம்மா உப்பினை விற்பனை செய்துள்ளது. அம்மா உப்பு விற்பனை துவங்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை விற்பனை செய்யப்பட்ட அம்மா உப்பின் அளவு 70,064 டன்கள் ஆகும்.

- தமிழ்நாடு உப்பு நிறுவனம், 1,85,610 டன்கள் தொழிலக தரமுடைய உப்பினை உற்பத்தி செய்துள்ளது. 2017ஆம் ஆண்டில் அதிகபட்ச உற்பத்தியாக 2,18,450 டன்கள் எட்டியுள்ளது.

- தமிழ்நாடு உப்பு நிறுவனம், வாலிநோக்கத்தில் ரூ.5.63 கோடி செலவில் உப்பு சுத்திகரிப்பு தொழிற்சாலை நிறுவப்பட்டு 20.04.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இத்தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 30,000 டன் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் உப்பு மற்றும் 10,000 டன் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு தயாரிக்கப்படும்.

- தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் 52,165 மெ.டன் கச்சா மேக்னசைட்டையும், 21,757 மெ.டன் முழு எரியூட்டப்பட்டமேக்னசைட்டையும் 8,659 மெ.டன் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட்டையும் மற்றும் 69,980 மெ.டன் டூனைட்டையும் உற்பத்தி செய்துள்ளது.

- தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் ரூ.103.75 கோடி விற்பனை செய்து வருவாய் ஈட்டியுள்ளது. 23,891 மெ.டன் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் மூலம் ரூ.49.37 கோடியும் 8,782 மெ.டன் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் மூலம் ரூ.20.75 கோடியும், 69,805 மெ.டன் டூனைட் மூலம் ரூ.17.67 கோடியும் மற்றும் இதரவகை மூலம் ரூ.15.96 கோடியும் விற்பனை செய்துள்ளது.

- நீர்நிலைகளைத் தூர்வாருதல் மூலம் நீர்நிலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும் மற்றும் தூர்வாருதல் மூலம் கிடைக்கும் வண்டல் மண் / களிமண் ஆகியவற்றை விவசாயிகள், மண்பாண்டத் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களின் சொந்தப் பயன்பாட்டிற்குத் இலவசமாக வழங்க முடிவு செய்து அதற்கான நடைமுறைகளை எளிதாக்கி, அரசு, 1959ஆம் வருடத்திய தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளில் திருத்தம் மேற்கொண்டு 4,92,091 விவசாயிகள், குயவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு 4,65,22,619 கனமீட்டர் மண் இலவசமாக எடுத்து பயன் அடைந்துள்ளதுடன் 45,035 நீர்நிலைகளின் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

- இந்திய அரசின் சுற்றுப்புறச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகம் மாவட்ட சுற்றுப்புறச் சூழல் தாக்க மதிப்பீட்டு குழுமம் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டு இதுவரை 410 இனங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- தமிழகத்தில் ஆற்று மணலுக்கு மாற்றாக செயற்கை மணல் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு பொதுமக்களுக்குத் தங்கு தடையின்றி குறைந்த விலையில் செயற்கை மணல் கிடைக்க ஏதுவாக எளிதான நடைமுறைகள் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- சுரங்க பணிகளால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பகுதிகளை மேம்படுத்தி, முழுமையாக பயனடைய செய்வதற்காக 2015ஆம் வருடத்திய திருத்திய சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்துதல் மற்றும் முறைப்படுத்தல்) சட்டம் பிரிவு 9B-ன்படி அனைத்து மாவட்டங்களிலும் கனிம கட்டமைப்பு (DMF) உருவாக்கப்பட்டு தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

- இக்கட்டமைப்பின் மூலம் "Pradhan Mantri Khanij Kshetra Kalyan Yojana" திட்டத்தினை செயல்படுத்துவதற்காக பெருங்கனிம மற்றும் சிறுகனிம குத்தகைதாரர்களிடமிருந்து ரூ.117.69 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் பெறப்படும் தொகையில் இருந்து சுரங்கப்பணிகளால் பாதிக்கப்பட்ட பகுதி மற்றும் மக்களின் மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்படும்.

- கரும்புக்கான மாநில அரசு பரிந்துரை விலை டன் ஒன்றுக்குரூ.2,850/– ஆகஉயர்வு. 2016–2017 அரவைப் பருவத்தில் 119.04 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்து மொத்த தொகை ரூ.2,839.43 கோடி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டத்தின் கீழ் கரும்பு உற்பத்தியை உயர்த்தும் நோக்குடன் 1,600 நிழல் வலைக் கூடங்கள் அமைத்து 24 கோடி கரும்பு பருசீவல் நாற்றுகள் உற்பத்தி செய்ய ரூ.30 கோடி மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு அரசு தொழில் துறைக்கு தேவையான ஒவ்வொரு அனுமதியையும் அரசு துறைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்க கால நிர்ணயம் செய்வதன் மூலம் ஒற்றைச் சாளர முறையினை வலுப்படுத்துவதற்கு தமிழ்நாடு வணிக எளிதாக்கும் சட்டம் 2018ஐ இயற்றியுள்ளது. மேலும் உரிய காலத்தில் அனுமதிகள் வழங்கப்படுவதை கண்காணிக்க உயிர் நிலைக்குழுக்கள் அமைக்கப்பட்டு குறைகளை நிவர்த்தி செய்யும் அமைப்பாக செயல்படவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது

❖ ❖ ❖

# தகவல் தொழில் நுட்பவியல் துறை







**I.தமிழ்நாடு மின்னணு நிறுவனம்**

- சேலத்திலுள்ள ஜாகீர்அம்மாபாளையம் கிராமத்தில் அமைந்துள்ள எல்கோசெஸ்சில் 50,000 சதுரடி கொண்ட தகவல் தொழில்நுட்ப பூங்கா கட்டட பணிகள் ரூ.19.72 கோடி செலவில் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.05.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- கோயம்புத்தூரிலுள்ள விளாங்குறிச்சி கிராமத்தில் அமைந்துள்ள எல்கோசெஸ்சில் ரூ.1.22 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட நிருவாக கட்டடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.05.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- ஒசூரிலுள்ள விஸ்வநாதபுரம் கிராமத்தில் அமைந்துள்ள எல்கோசெஸ்சில் 50,000 சதுரடி கொண்ட தகவல் தொழில் நுட்ப பூங்கா கட்டட பணிகள் ரூ. 21 கோடி செலவில் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.10.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- திருச்சியிலுள்ள நவல்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள எல்கோசெஸ்சில் உள்ள தகவல் தொழில்நுட்ப பூங்கா கட்டடத்தில் ரூ.1.73 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்ட கூடுதல் வசதிகளான உணவருந்தும் கூடம் மற்றும் கலந்தாய்வுக் கூடம் ஆகியவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.10.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- மதுரையிலுள்ள இலந்தைக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள எல்கோசெஸ்சில் உள்ள தகவல் தொழில்நுட்ப பூங்கா கட்டடத்தில் ரூ.1.70 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்ட உணவருந்தும் கூடம் மற்றும் கலந்தாய்வுக் கூடம் ஆகியவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.10.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- திருநெல்வேலியிலுள்ள கங்கைகொண்டான் கிராமத்தில் அமைந்துள்ள எல்கோசெஸ்சில் ரூ1.42 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் உட்கட்டமைப்பு வசதிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.10.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- மதுரை மாவட்டம், வடபழஞ்சி கிராமத்தில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் (எல்கோசெஸ்) 14 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து பொது உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் 20 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலம் ஆகியவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.01.2018 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- திருச்சியில் பேரிடர் மீட்பு மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.10.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள முக்கியமான தரவுகளை பாதுகாக்கும் பொருட்டு இம்மையத்திற்கு மாறுபட்ட நில அதிர்வு மண்டலத்தில் தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தரவு மீட்பு மையத்தில் முதற்கட்டமாக 50 அடுக்குகள் நிறுவப்பட்டு, பின்னர் இம்மையம் 100 அடுக்குகள் வரை மேம்படுத்தப்படும்.

- 2016–2017 ஆண்டுக்கான அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.620 கோடி செலவில் 5,00,000 மடிக்கணினிகள் எல்காட் நிறுவனத்தின் மூலம் வழங்கபட்டுள்ளன.

- தமிழக அரசின் நலத் திட்டங்களின் தரவு தொகுப்புகளை பகிர்ந்து கொள்ளவும், இந்த தரவுகளை பயன்படுத்தி மென்பொருள் போட்டிகளை (Hackathons) நடத்தவும் வெளிப்படை அரசுத் தரவு தளம் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் என்று, சட்டப்பேரவையில் 2017–2018ஆம் ஆண்டிற்கான நிதி நிலை கூட்டத் தொடரில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. வெளிப்படை அரசு தரவு தள முனையத்தின் வழியாக, அரசுத்துறைகள் மற்றும் அரசு நிறுவனங்கள் வாயிலாக சேகரிக்கப்பட்ட தரவுத்தொகுப்புகள், ஆவணங்கள், சேவைகள், மென்பொருள் கருவிகள் மற்றும் செயலிகளை பொது மக்களின் பயன்பாட்டிற்காக அளிப்பதே இதன் நோக்கமாகும். இந்த வெளிப்படை அரசு தரவு தளம் உருவாக்கப்பட்டு தற்போது https://tn.data.gov.in/ என்னும் இணைய முகவரியில் இயங்குகிறது. 49 முதன்மை தரவு அலுவலர்களின் பதிவு முடிந்து, 10 அரசு துறைகளின் 58 வெவ்வேறு தரவுத் தொகுப்புகள் தமிழக அரசு வெளிப்படை தரவு தளத்தில் தகவலேற்றப்பட்டுள்ளன.

- தமிழ்நாட்டில் புதிய ஆதார் பதிவு மற்றும் அதன் தொடர்புடைய சேவைகளை வழங்கிட, இந்திய அரசின் தனித்துவ அடையாள ஆணைய அமைப்பானது (UIDAI), தமிழ்நாடு மின் ஆளுமை முகமையை பதிவாளராகவும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தை பதிவு முகவராகவும் நியமித்துள்ளது. 24.01.2018 அன்று வரை – தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் பதிவாகியுள்ள ஆதார் பதிவு எண்ணிக்கை– 10,97,473 (Online & Offline). இந்திய அரசின் தனித்துவ அடையாள ஆணைய சேவையகத்தில் ஏற்றப்பட்ட தரவுகளின் எண்ணிக்கை – 10,94,969. இது நாள் வரை, மாநில மக்கள் தொகைப் பதிவேட்டின் வழியாக பதிவு செய்யப்பட்ட ஆதார் பதிவு எண்ணிக்கை – 10,30,319 ஆகும்.

**0–5 வயதிற்குட்பட்டவர்களுக்கான ஆதார் பதிவுகள்**

- தமிழகத்தில் ஆதார் பதிவுகளை மேற்கொள்ள மின்னாளுமை ஆணையர் (ம) தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு மின்னாளுமை முகமை அவர்களை பதிவாளராகவும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஆகியோரை ஆதார் பதிவு செய்யும் முகவர்களாகவும் அரசு நியமனம் செய்துள்ளது. 0–5 வயதினருக்கான ஆதார் பதிவிடும் பணிகள் 2017 மார்ச் மாதம் முதல் துவங்கப்பட்டு, இதுவரை சுமார் 3.5 இலட்சம் குழந்தைகளுக்கு ஆதார் எண்கள் வழங்கப்பட்டுள்ளன.

**II. மின்ஆளுமை ஆணையரகம் / தமிழ்நாடு மின்னாளுமை முகமை**

**அரசு இ–சேவை மையங்கள்**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற விதி 110இன் கீழ் அறிவிக்கப்பட்ட "இ–சேவை மையங்கள் மூலம் அரசுத் துறைகளால் தற்போது வழங்கப்பட்டு வரும் சேவைகளுடன் கூடுதலாக 300 சேவைகள் வழங்கப்படும்" என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் விதத்தில், திட்ட ஒருங்கிணைப்பாளருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அடையாளம் காணப்பட்ட சேவைகளில், 27 சேவைகளுக்கான செயல்பாட்டு தேவை குறிப்புகள் நிறைவு பெற்றுள்ளன. அவற்றுள் 19 சேவைகளுக்கு சேவை தேவை குறிப்புகள் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள 8 சேவைகளுக்கான சேவை தேவை குறிப்புகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் 69 சேவைகளுக்கான செயல்பாட்டு தேவை குறிப்புகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. தற்போது 190–க்கும் மேற்பட்ட சேவைகள் இம்மையங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

- 04.08.2017 அன்று சட்டமன்ற பேரவை அறிவிப்பின்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்னாளுமை முகமை ஆகியவை சென்னை உட்பட அனைத்து தாலுகாகளிலும் இதுவரை 10,414 அரசு இ–சேவை மையங்களை நிறுவியுள்ளன. 08.01.2018 அன்றைய நிலவரப்படி, மின்மாவட்ட மற்றும் இ–சேவை வலைதளங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட மொத்த பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை 4.53 கோடி ஆகும்.



**உள்ளங்கையில் சான்றிதழ்**

- இன்றைய சூழலில் மக்களிடையே கைப்பேசி (ஸ்மார்ட் போன்) பயன்பாடு மிகவும் இன்றியமையாத ஒன்றாக உள்ளது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அரசு சேவைகளை வெளிப்படையாகவும், திறம்படவும், நம்பகத்தன்மை வாய்ந்ததாகவும், குறைந்த விலையில் வசதியாகவும் இணைய ஊடகம் வழியாக மக்களுக்கு வழங்கி வருகிறது. இதன் மூலம் சமர்ப்பித்த விண்ணப்பங்களின் நிலை / அறிவிப்பு, தற்போது குறுந்தகவல் (SMS) வழியாக வழங்கப்பட்டு வருகிறது.
- மின்மாவட்ட திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சான்றிதழ்களை குடிமக்களின் வீட்டின் வாயிலுக்கே கொண்டு செல்லும் பொருட்டு சிறிய இணையதள முகவரி (tiny URL) பயன்பாடு உருவாக்கப்பட்டுள்ளது.
- இப்பயன்பாட்டினை செயல்படுத்துவதன் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்ட சான்றிதழின் விவரம் பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்ணிற்கு குறுஞ்செய்தியாக (SMS) சிறிய இணைய முகவரி (tiny URL) உடன் அனுப்பி வைக்கப்படும். இதன் மூலம் பொதுமக்கள் இணையத்தின் உதவியுடன் அவர்களது வீட்டிலிருந்தபடியே ஸ்மார்ட் போன்கள் மூலமாக சான்றிதழ்களை பெற்றுக் கொள்ள முடியும். இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23.05.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

**இ–மடல் :**

- இ–மடல் என்பது ஒரு மின்–செய்திமடல் ஆகும். மாண்புமிகு தமிழக முதல்வர் இ–மடலின் முதல் பிரதியை 11.10.2017 அன்று வெளியிட்டார். இதன் வாயிலாக தமிழக அரசால் வழங்கப்பட்டு வரும் பல்வேறு மின்–சேவைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்த தகவல்கள் மக்களிடம் அவர்களின் வட்டார மொழியில் பகிரப்படுகிறது. இ–மடல் மாதத்திற்கு இரண்டு முறை தமிழ் மற்றும் ஆங்கிலம் (இருமொழி) மொழிகளில் வெளியிடப்படும். மின்னாளுமை குறித்த முயற்சிகளையும் அதன் வெற்றிகள் குறித்த செய்திகளை மக்களிடையே கொண்டு செல்வதற்கான ஒரு முக்கிய சாளரமாக இம்மடல் திகழ்கிறது. இதன்மூலம் அம்முயற்சிகள் பிற துறைகளில் மேற்கொள்ளவும் வழிவகுக்கும். பொதுமக்கள் எளிதில் பெற்றிடும் வகையில் தற்போது இம்மடல் தமிழ்நாட்டில் உள்ள 11,000 இ–சேவை மைய பயனாளிகளுக்கு அனுப்பப்படுகிறது. இதுவரை இ–மடலின் 8 பிரதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

**மின்–ஆளுமை கொள்கை:**

- அண்மையில் 02.01.2018 அன்று மாநிலத்திற்கான மின்–ஆளுமை கொள்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார். இக்கொள்கை மாநில அரசின் பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் மின்னாளுமை முயற்சிகளுக்கான (e-Governance Initiatives) வழிகாட்டுதல்களை வழங்கும்.

**சிறந்த நடைமுறைக்கான விருது – 2015**

- அரசு இ–சேவை மையங்கள் வழியாக குடிமக்களுக்கு தரமான சேவைகள் வழங்கப்படுவதை அங்கீகரித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சுதந்திரதின விழா 2015இல் பொது சேவை மையங்களுக்கு நல்ஆளுமைக்கான சிறந்த நடைமுறை விருது வழங்கப்பட்டது.

**சிறந்த மின்னாளுமை விருது 2016–2017**

- இந்திய தொழிற் சங்க கூட்டமைப்பின் மூலம் நடைபெற்ற 2016–2017 'கனெக்ட்' நிகழ்ச்சியில் 2016–2017க்கான சிறந்த மின்னாளுமை விருது தமிழ்நாடு மின்னாளுமை முகமைக்கு வழங்கப்பட்டது.

**III. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்**

**கேபிள் டிவி சேவை.**

- பொது மக்களுக்கு நிறைந்த தரமான கேபிள் டிவி சேவையை குறைந்த செலவில் வழங்குவது தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

- அதன்படி 106 சேனல்களை ரூ.70/– என்ற குறைந்த கட்டணத்தில் பொது மக்களுக்கு வழங்கி வந்தது.

- உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் (LCO) வாயிலாக இதுவரை ரூ. 89,44,54,633/– வசூல் செய்யப்பட்டுள்ளது.

- தனியார் உள்ளூர் தொலைக்காட்சி (PLC) வாயிலாக 16.02.2017 முதல் 30.11.2017 வரை ரூ.58,28,68,822/– வசூல் செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசின் இடைவிடாத முயற்சிகளின் காரணமாக மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் 17.04.2017 அன்று தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமம் **DAS Licence** வழங்கியுள்ளது.

- தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மூலம் சிக்னல் பெறும் சந்தாதாரர்கள் ஆன்லைன் மூலம் மாத சந்தா தொகையை கேபிள் டிவி நிறுவனத்திற்கு நேரடியாக செலுத்தும் வகையில் செல்பேசி செயலி (**Mobile App**) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 19.04.2017அன்று துவக்கிவைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 01.09.2017 அன்று டிஜிட்டல் ஒளிபரப்பு சேவைக்கான MPEG 4 தொழில்நுட்பத்தில் தரம் உயர்த்தப்பட்ட கட்டுப்பாட்டு அறையை திறந்து வைத்து டிஜிட்டல் ஒளிபரப்பு சேவையைத்துவக்கி வைத்தார்கள். மேலும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சந்தாதாரர்களுக்கு விலையில்லா செட் டாப் பாக்ஸ்களை வழங்கினார்கள்.

- உலகளாவிய ஒப்பந்தப்புள்ளியின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் 12.5 இலட்சம் செட் டாப் பாக்ஸ் கொள்முதல் செய்யப்பட்டு 10 இலட்சம் செட் டாப் பாக்ஸ்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- தற்சமயம் சேனல் தொகுப்பு 1இல் ரூ.125/–+GSTஇல் மொத்தம் 200 சேனல்களும் தொகுப்பு 2இல் ரூ.175/–+GST 300 சேனல்களும் தரமான டிஜிட்டல் ஒளிபரப்பில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- தற்போது சந்தாதாரர்களின் எண்ணிக்கை 70.52 இலட்சங்களாக உயர்ந்துள்ளது. தற்சமயம் டிஜிட்டல் மயமாக்கப்பட்டதின் காரணமாக மேலும் சந்தாதாரர்களின் எண்ணிக்கை மேலும் உயரும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**அதிவேக அகண்ட அலைவரிசை இணையதளசேவைகள்**

- 1,100 இணைப்புகளுடன் துவக்கப்பட்ட "இல்லந்தோறும் இணையம்" திட்டத்தின்கீழ் தற்பொழுது 4,500 சந்தாதாரர்களுக்கு இணைய சேவை வழங்கப்பட்டு வருகிறது.

- வருவாய் பங்கீட்டு முறையில் 392 விருப்பம்கோரும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு 170 விண்ணப்பதாரர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டு சுமார் 24,750 இல்லங்களுக்கு இணைப்பு வழங்கப்படவுள்ளது.

- 50 இடங்களில் அம்மா WiFi மண்டலங்களை தொடங்குவதற்கு TANII திட்டத்தின் கீழ் மாநில திட்டக்குழுவினால் ரூ.8.50 கோடி ஒதுக்கப்பட்டு முதற்கட்டமாக 5 இடங்களில் (சேலம் பேருந்து

நிலையம், கோவை பேருந்து நிலையம், திருச்சி பேருந்து நிலையம், மதுரை பேருந்து நிலையம், மற்றும் மெரினா உழைப்பாளர் சிலை அருகில்) இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப பணிகள் துவங்கப்பட்டு விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது.

- அரசு பள்ளிகளில் அகண்ட அலைவரிசை சேவை வழங்குவதற்காக முதற்கட்டமாக 50 பள்ளிகளுக்கு வழங்கும்பொருட்டு ரூ.1.23 கோடி அரசால் ஒதுக்கப்பட்டு பணிகள் துவங்கப்படவுள்ளன.

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**ஒருங்குறி (Unicode) மற்றும்**
**அனைத்துரு எழுத்துரு (TACE)**

- ஒருங்குறி (Unicode) மற்றும் அனைத்துரு எழுத்துரு (TACE) முறைகள் தமிழ்நாடு அரசின் செந்தரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப, எழுத்துருக்களையும், விசைப்பலகை இடைமுகங்களையும் உருவாக்கி இலவசமாக பயனாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

**தமிழ் மின் நிகண்டு**

- தமிழ் இணையக் கல்விக்கழகம் “தமிழ் மின் நிகண்டு” ஒன்றை உருவாக்கியுள்ளது. தமிழ் மின் நிகண்டு என்பது பொருள் குறித்த பல சொற்களைக் கொண்டிருக்கும். இதுவரையில் சுமார் 15,000க்கும் மேற்பட்ட தலைச்சொற்கள் கண்டறியப்பட்டு இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அதற்கு இதுவரை 70,000 எடுத்துக்காட்டுகளும் ஒத்தப்பொருள்களும் தொகுக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பான ஒரு முன்மாதிரி வடிவ குறுஞ்செயலியும் உருவாக்கப்பட்டுள்ளது.

**மின்னுருவாக்கம்**

- மின்நூலகம் அமைக்கும் பணிக்காக ரூ. 1 கோடி அனுமதி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் படி, இதுவரை அரிய தமிழ் நூல்கள், இதழ்கள், ஓலைச்சுவடிகள், கையெழுத்து பிரதிகள் ஆகியவை மின்னுருவாக்கப்பட்டு http://tamildigitallibrary.in என்ற இணையத்தில் பதிவேற்றப்பட்டு 11.10.2017 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. இதுவரை 53,50,306 பக்கங்கள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 30–க்கும் மேற்பட்ட நிறுவனங்களிடமிருந்து மின்னுருவாக்கம் செய்து பத்திர படுத்தப்பட்டுள்ள மின்நூல்கள், ஓலைச்சுவடிகள், அரிய கையெழுத்து பிரதிகள் 9.12 TB அளவில் சேகரிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட ஆய்வாதாரங்களை அனைத்தையும் வகைப்படுத்தி MARC 21 முறை முறையில் மீத்தரவுகளுடன் மேற்குறிப்பிட்ட இணையத்தில் பதிவேற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**தகவலாற்றுப்படை**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விதி 110இன் கீழ் 11.08.2014 அன்று சட்டமன்றத்தில் அறிவித்தப்படி, தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, கலை மற்றும் பண்பாட்டு சின்னங்கள் உள்ளிட்டவைகளின் விரிவான மற்றும் ஒருங்கிணைந்த தகவல் களஞ்சியம் ஒன்றினை உருவாக்க ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தொல்லியல் மற்றும் வரலாறு சார்ந்த பிரிவுகளில் தமிழகத்தின் தொல்லியல் ஆய்விடங்களில் 29 தொல்பழங்காலம் (161 ஒளிப்படங்கள்), 35 அகழாய்வுகள் (921 ஒளிப்படங்கள்), 81 கல்வெட்டுகள் (838 ஒளிப்படங்கள்), 137 வழிபாட்டுத் தலங்கள் (3,343 ஒளிப்படங்கள்), 29 சிற்பங்கள் (1,428 ஒளிப்படங்கள்), 502 நாணயங்கள் (502 ஒளிப்படங்கள்), 184 செப்பேடுகள் (1,736 ஒளிப்படங்கள்), 10 தொல்லியல் சின்னங்கள் (355 ஒளிப்படங்கள்), 53 ஓவியங்கள் (1,803 ஒளிப்படங்கள்) ஆகிய (மொத்தம் 558) தொன்மை ஆய்விடங்களுக்கான 11,087 ஒளிப்படங்கள் விளக்கமான மீத்தரவுகளுடன் http://tagavalaatruppadai.in என்ற இணையத்தில் பதிவேற்றப்பட்டு 11.10.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டது.

- 68,200 ஒளிப்படங்கள் தொல்பழங்காலம், அகழாய்வுகள், கல்வெட்டுகள், வழிபாட்டுத் தலங்கள், சிற்பங்கள், நாணயங்கள், செப்பேடுகள், தொல்லியல் சின்னங்கள், ஓவியங்கள் ஆகிய பிரிவுகளில் நிழற்படங்கள் எடுக்கப்பட்டும், சேகரிக்கப்பட்டும் உள்ளன. இவற்றில் இணையத்தில் விளக்கமான மீத்தரவுகளுடன் பதிவேற்றப்பட்டவை தவிர்த்து மீதமுள்ள ஒளிப்படங்கள், கோயில்கள் சார்ந்தவை (கோயில்கள், சிற்பங்கள், கல்வெட்டுகள், ஓவியங்கள், செப்பேடுகள்) 44,000 ஒளிப்படங்கள், மற்றும் தொல்லியல் சார்ந்தவை (தொல்பழங்காலம், அகழாய்வுகள், தொல்லியல் சின்னங்கள், நாணயங்கள்) 13,200 ஒளிப்படங்கள் என்ற இருபிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டும் அதற்கான மீத்தரவுகளை தயாரிக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன.

- மேலும், மதுரை மாவட்ட பண்பாட்டுக் களஞ்சியம் ஒன்றை உருவாக்கும் பணி முன்னோடித் திட்டமாக ஆவணப்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து தொல்லியல் மற்றும் வரலாற்றுச் சின்னங்கள், பாரம்பரிய நிகழ்த்துக்கலைகள், இசை, நடனம், அரிய திருவிழாக்கள், விளையாட்டுகள் மற்றும் இதர பண்பாட்டுக் கூறுகளுக்கான தரவுகளை அங்குள்ள கல்வி மற்றும் பண்பாட்டு நிறுவனங்களின் உதவியுடன் சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது, 167 தொல்லியல் சார்ந்த இடங்களுக்கான அடிப்படைத் தகவல்கள் சேகரிக்கப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**கணித்தமிழ் பேரவை**

- தமிழ்நாட்டில் உள்ள 100 கல்லூரிகளில் கணித்தமிழ் பேரவைகள் தொடங்குவதற்காக இந்த அரசு, ரூ.25 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது. மதுரை காமராசர், அழகப்பா, அண்ணா, சென்னை, பெரியார், அன்னை தெரசா, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர், தமிழ்நாடு வேளாண், தமிழ்நாடு மீன்வளம், பாரதியார் ஆகிய தமிழகப் பல்கலைக்கழகங்களில் 100 கணித்தமிழ் பேரவைகள் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் 10,000 மாணவர்கள் உறுப்பினராகி உள்ளனர்.

**தமிழ்ப் பெருங்களஞ்சியத் திட்டம்**

- தமிழ்ப் பெருங்களஞ்சியத் திட்டத்தின் வாயிலாக 210க்கும் மேற்பட்ட அரசு துறைகளுக்கான தமிழ் மின் களஞ்சியங்களை உருவாக்குவதற்கான தரவுத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. வேளாண்மை, மீன்வளம், கலை மற்றும் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் எண்பத்தி நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கலைக்களஞ்சிய வடிவிலான கட்டுரைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**கணினி, அலைபேசியில் தமிழ் மென்பொருட்கள்**

- கணினி, அலைபேசி மற்றும் திறன்பேசியில் தமிழ்ப்பாடங்கள், இலக்கணம் மற்றும் அகராதி ஆகியவற்றை கற்பிப்பதற்கான குறுஞ்செயலிகள் உருவாக்குவதற்கு ரூ.1.5 கோடி ஒதுக்கீடு செய்யபட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- பல்கலைக்கழகங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் மூலம் தமிழ் மென்பொருள்களை உருவாக்குவதற்காக 49 மென்பொருட்கள் பெறப்பட்டு இதில் வல்லுநர் குழுவின் பரிந்துரையின்படி 15 மென்பொருட்கள் அடையாளம் காணப்பட்டு, தமிழ் ஒருங்குறி எழுத்துக்கள், தமிழிணையம் ஒருங்குறி மாற்றி, தமிழிணையம் சொல்பேசி, தமிழிணையம் விவசாயத்தகவி, தமிழிணையம் தொல்காப்பியத் தகவல்பெறுவி, தமிழிணையம் தமிழ்ப்பயிற்றுவி, தமிழிணையம் நிகழாய்வி ஆகிய 7 மென்பொருட்கள் பணி முடிவடைந்து 23.05.2017 மற்றும் 11.10.2017 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டன. மேலும் மற்ற மென்பொருட்களை உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறன. சுமார் 150 மில்லியன் தமிழ் சொற்களைக் கொண்ட தமிழ்த்தரவகம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தரவுகளை ஆய்வு செய்தவற்குத் தரவு ஆய்வுக்கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**கல்வி தொடர்பான காணொலிகளை (videos) தமிழில் மொழிமாற்றம்**

- கான் கல்விக்கழகம் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்வி, ஆராய்ச்சி சார்ந்த காணொலிகளை உருவாக்கி உள்ளது. இக்காணொலிகள் தமிழில் மொழிபெயர்க்கப்படுவதால் தமிழ் சார்ந்த பல்துறைக் கற்றல் மேம்படுத்தப்படும் என்பதால் தமிழ் இணையக்கல்விக் கழகம் தமிழில் மொழிமாற்றம் செய்து வருகின்றது. கான் கல்விக்கழகம் வெளியிட்டுள்ள காணொளிகளில் 2,139க்கும் மேற்பட்டவை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, 1,909க்கும் மேற்பட்ட காணொலிகளின் படத்தொகுப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. யூடிப் வலைதளத்தில் 1,635 காணொலிகள் தரகட்டுப்பாடு முடிக்கப்பட்டு, பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா**

- பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் வகையில், தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் இணையம் வழியாக கல்வி பயிலும் மாணவர்களுக்கிடையே கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகளைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் நடத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்குக் கவிதைக்கான முதல் பரிசு ரூ. 25,000/–, இரண்டாம் பரிசு ரூ 15,000/–, மூன்றாம் பரிசு ரூ 10,000/– எனவும், கட்டுரைக்கான முதல் பரிசு ரூ. 25,000/–, இரண்டாம் பரிசு ரூ 15,000/–, மூன்றாம் பரிசு ரூ. 10,000/– எனவும் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பதக்கங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

❖ ❖ ❖

# தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை





**சமரசப் பணிகள்**

- 2,400 தொழிற்தாவாக்கள் இத்துறையில் பெறப்பட்டு 2,622 தொழிற்தாவாக்கள் தீர்த்து வைக்கப்பட்டன. அவற்றுள் 1,434 தொழிற்தாவாக்கள் சுமூகமாக முடிக்கப்பட்டன. நிலுவை வெகுவாக குறைக்கப்பட்டு தற்போது, 782 தொழிற்தாவாக்கள் நிலுவையில் உள்ளது.

- தமிழ்நாட்டில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு குறித்து தொழிற் தகராறு சட்டம் 1947 பிரிவு 12(3)இன் கீழ் 21.03.2017 அன்று ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் 01.11.2016 முதல் 31.10.2019 வரை நடைபெறுமுறையில் இருக்கும் இந்த ஒப்பந்தத்தில் சுமார் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் பயன் அடைவார்கள்.

- 3 பொறியியல் நிறுவனங்கள், 7 நூற்பாலை நிறுவனங்கள், 1 போக்குவரத்து நிறுவனம், 1 தோட்ட நிறுவனம், 1 தோல் பதனிடும் நிறுவனம் மற்றும் 10 இதர நிறுவனங்கள் ஆக மொத்தம் 23 நிறுவனங்களில் ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள் சமரச அலுவலர்களின் சமரச பேச்சுவார்த்தையின் வாயிலாக விலக்கிக்கொள்ளப்பட்டு, இதன்பயனாக 1,81,073 தொழிலாளர்களின் பணி பாதுகாக்கப்பட்டது.

- 1 இரசாயன நிறுவனத்தில் ஏற்பட்ட கதவடைப்பு சமரச அலுவலர்களின் சமரச பேச்சுவார்த்தையின் வாயிலாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, 1,100 தொழிலாளர்களின் பணி பாதுகாக்கப்பட்டது.

**நிருவாகப் பணிகள்**

- கடலூர், சேலம், தருமபுரி, நாமக்கல், நாகப்பட்டினம், கரூர், ஈரோடு, திருச்சி, தேனி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் சட்டமுறை எடையளவு ஆய்வகங்களுடன் கூடிய தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம், தொழிலாளர் அலுவலர் அலுவலக வளாகம் ரூ.31.07 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

- தொழிலாளர் நலன் பாதுகாக்கவும், தொழிலாளர் சட்டங்கள் சீரியமுறையில் அமல்படுத்துவதை உறுதிப்படுத்தும் பொருட்டு, புதிய வாகனங்கள் வழங்கப்படும் என தமிழக சட்டப்பேரவையில் அறிவிப்பு செய்யப்பட்டதை செயல்படுத்தும் விதமாக, ரூ. 2.06 கோடி செலவீட்டில் 35 புதிய வாகனங்கள் தொழிலாளர் துறையில் உள்ள தொழிலாளர் சட்ட அமலாக்கம் மற்றும் சமரச அலுவலர்களுக்கு முதன் முறையாக வழங்கப்பட்டு அவ்வாகனங்களுக்கு 35 முறையான ஓட்டுநர் பணியிடங்களும் அனுமதிக்கப்பட்டன. மேற்படி அனுமதிக்கப்பட்ட 35



ஊர்தி ஒட்டுநர் பணியிடங்களுடன் தொழிலாளர் துறையில் காலியாக இருந்த ஒட்டுநர் பணியிடங்களையும் நிரப்பிடும் வகையில் 38 ஊர்தி ஓட்டுநர் பணியிடங்களுக்கு முறையாக அரசு விதிமுறைகளின் படி பணிநியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஓட்டுநர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு தொழிலாளர் துறை ஊர்தி ஓட்டுநர் பணியிடங்களுக்கு நியமனம் செய்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 01.09.2017 அன்று பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

**நுகர்வோர் பாதுகாப்பு**

- சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் 2,69,385 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 10,523 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு ரூ. 80.7 இலட்சம் இசைவுத் தீர்வு கட்டணமாக விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது.
- 1,05,705 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 2,286 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு ரூ.48.83 இலட்சம் இசைவுத் தீர்வு கட்டணமாக விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது.
- சட்டமுறை எடையளவு விதிகள் 2011இன் கீழ் ரூ. 25.78 கோடி முத்திரை கட்டணமாகவும் மற்றும் சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள் 2011இன் கீழ் ரூ.2.6 இலட்சம் பதிவு கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் சட்டமுறை எடையளவு புகார்களை கைபேசி மூலம் தெரிவிக்க தொழிலாளர் துறை மூலம் சட்டமுறை எடையளவு புகார் கண்காணிப்பு முறை (கைபேசி செயலி) உருவாக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 04.03.2017 அன்று பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் சட்டமுறை எடையளவு சட்டம் மற்றும் பொட்டலப் பொருள் விதிகளின் கீழ் புகார்கள் பெறப்பட்டவுடன் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- சட்டமுறை எடையளவு சட்டம் மற்றும் பொட்டலப் பொருள் விதிகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு குறும்படம் ஒன்று தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

**குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல்**

- சட்ட அமுலாக்க அலுவலர்கள் மற்றும் மாவட்ட குழந்தைத் தொழிலாளர் தடுப்பு படை மூலம் அனைத்து மாவட்டங்களிலும் 1,68,283 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 37 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு 47 குழந்தைகள் பணியிலிருந்து மீட்கப்பட்டனர். ஒரு வழக்கு தொடரப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட 47 குழந்தைகளில், 36 குழந்தைகள், குழந்தைகள் நலக்குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் மூலமாக பெற்றோர்களிடம் அவர்களது இருப்பிடங்களுக்கு அருகில் உள்ள பள்ளிகளில் சேர்க்கும் பொருட்டு உரிய அறிவுரைகளுடன் ஒப்படைக்கப்பட்டனர். மீதமுள்ள 11 குழந்தைகள் தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட சிறப்பு பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர்.

- தற்போது 314 தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்பு பயிற்சி மையங்களில் 7,253 மீட்கப்பட்ட மற்றும் பள்ளி செல்லா குழந்தைகள் கல்வி பயில்கின்றனர். இக்கால கட்டத்தில் 3,263 குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

- சென்னையில் நடைபெற்ற, 43ஆவது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில் குழந்தை மற்றும் வளர் இளம்பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) திருத்த சட்டம், 1986 குறித்த துண்டு பிரசுரங்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

- மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு விழிப்புணர்வுக் கூட்டம் 12.06.2017 அன்று அம்மா அரங்கம், சென்னையில் நடைபெற்றது. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மையங்களில் பயின்று முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, 10ஆம் மற்றும் 12ஆம் வகுப்பு பொது தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல் மூன்று மாணவ / மாணவியர்களுக்கு ரொக்கப்பரிசும் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் மற்றும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்படும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் சிறப்பாக பணியாற்றிய ஒரு கல்வி பயிற்றுநருக்கு கேடயங்கள் வழங்கப்பட்டன. மேலும், 2016–2017ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலில் சிறப்பாகப் பணியாற்றிய திருப்பூர், தொழிலாளர் ஆய்வர் மற்றும் மேட்டூர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர், தருமபுரி, தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட இயக்குநர் மற்றும் வேலூர், தருமபுரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டு களப் பணியாளர்களுக்கும் கேடயங்கள் வழங்கப்பட்டன. தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்ட முன்னாள் குழந்தைத் தொழிலாளர்களாக இருந்து தற்போது Hasan Technologies Pvt Ltd நிறுவனத்தில் கணினி மேம்பாட்டாளராக (System Developer) பணிபுரியும் திரு. க. சரவணன், Infosys Technologies Ltd நிறுவனத்தால் பயிற்சியாளராக தேர்வு செய்யப்பட்டுள்ள செல்வி. எம். சுஹைன்னா பாசில்லா மற்றும் S2 Infotech, Mumbai நிறுவனத்தில் குழு தலைவராக (Team Leader) பணிபுரியும் செல்வி மு. வீரவடிவு ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

**கொத்தடிமை தொழிலாளர் மறுவாழ்வு**

- 96 கொத்தடிமை தொழிலாளர்கள் கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்பட்டு இதுவரை ரூ.6,28,000/– உடனடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நல வாரியம்**

- தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் 13,595 பயனாளிகளுக்கு ரூ.55,57,951/– மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

**அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியம்**

- 17 அமைப்புசாரா நலவாரியங்களில் 1,63,670 தொழிலாளர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டதுடன், 2,83,383 பயனாளிகளுக்கு பல்வேறு நலத் திட்டங்களின் கீழ் மொத்தம் ரூ.118.6 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை மூலம் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 60 வயது பூர்த்தியடைந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியம் ரூ.500/–லிருந்து ரூ.1,000/ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று ஆணையிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகிறது. 17 அமைப்புசாரா நல வாரியங்களில் இதுவரை 16,080 தொழிலாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

- அமைப்புசாரா நலவாரியங்களில் அதிக அளவில் அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவு செய்து நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கு ஏதுவாக மாதத்தில் இரண்டு முறை சிறப்பு முகாம் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு 45,274 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

- உயர் கல்வி உதவித் தொகை கூடுதலாக ரூ.2,000/– உயர்த்தி வழங்கப்படுகிறது. இதுவரை 94,852 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

- பணியிடத்தில் பணியின்போது, விபத்து ஏற்பட்டு இறக்கும் தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கு விபத்து மரண உதவித்தொகை ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது. இதுவரை 34 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

- கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள கட்டுமான தொழிலாளர்களுக்கு அவர்களின் பணியிடம் தேடி சுகாதார சேவைகள் வழங்கும் வகையில், 50 நகரும்

மருத்துவமனைகள் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல நிதியிலிருந்து 16 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையுடன் இணைந்து இத்திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு இதுவரை 54,708 கட்டுமான தொழிலாளர்களுக்கு அவர்களது பணியிடம் தேடி சென்று சுகாதார சேவைகள் வழங்கப்பட்டுள்ளது.

- அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் செயல்படும் மையங்களில் கட்டுமான தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பெற ஏதுவாக தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய நிதியைப் பயன்படுத்தி ஒரு குழந்தைக்கு வாகன வசதி ஒரு மாதத்திற்கு ரூ.300/– வீதம் பத்து மாதங்களுக்கு வழங்குவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு அனைவருக்கும் கல்வி இயக்க மாநில திட்ட இயக்குநரின் முன்மொழிவின் அடிப்படையில் 2016–2017ஆம் ஆண்டிற்கு குழந்தைகளின் போக்குவரத்து செலவிற்கு ரூ.8.1 இலட்சம் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய நிதியிலிருந்து 22.11.2016 அன்று விடுவிக்கப்பட்டது. இதுவரை 270 குழந்தைகள் இதன் மூலம் பயனடைந்துள்ளனர். மேலும் ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 324 குழந்தைகள் பயன்பெறும்வகையில் 2017–2018 கல்வியாண்டிற்கு ரூ.7.94 இலட்சம் 16.10.2017 அன்று அனைவருக்கும் கல்வி இயக்குநரகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

- கட்டுமானத் தொழிலாளர்கள் தற்காலிகமாக தங்கும் வகையில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் (5 இடங்களில்) மற்றும் சேலம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 4 மாவட்டங்களில் (தலா ஒரு இடத்தில்) மொத்தம் 7,000 கட்டுமான தொழிலாளர்கள் தங்கும் வகையில் ரூ.106 கோடி செலவில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய நிதியைப் பயன்படுத்தி தூங்கும் அறைகள் கட்டிக் கொள்ளவும், அவ்வளாகங்களில் அம்மா உணவகம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், சலவைசெய்யும் வசதி, குழந்தைகள் மற்றும் முதியோர் பாதுகாப்பு மையம், வங்கி தொடர்பு சேவை, படிப்பகம், சுகாதார மையம், பொழுதுபோக்கு மையம் ஆகியவை ஏற்படுத்தவும் அரசாணை வெளியிடப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம் தையூர் – B கிராமத்தில் ரூ.16.75 கோடி செலவில் பொதுப்பணித்துறை மூலம் தூங்கும் அறைகள் (Dormitories) கட்டுவதற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது. மேற்படி கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு 10.04.2017 அன்று காஞ்சிபரம், பொதுப்பணி துறை செயற்பொறியாளர் அவர்களிடமிருந்து கட்டிட பணி நிறைவு சான்றிதழ் (Work completion Certificate) பெறப்பட்டது.

- காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீ பெரும்பத்தூர் வட்டம் எழுச்சூர் கிராமத்தில் ரூ.14.90 கோடி செலவில் பொதுப்பணித்துறை மூலம் தூங்கும் அறைகள் (Dormitories) கட்டுவதற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது. மேற்படி தூங்கும் அறைகள் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு, 04.03.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது.

- அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்யவும், நலதிட்ட உதவிகளை எளிதாக பெறுவதற்கும், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியத்திற்கு செலுத்தும் பங்களிப்புத் தொகையினை இணையம் வழியாக (Online) வாரிய வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்த ஒருங்கிணைந்த பயன்பாட்டு மென்பொருளை (Application Software) ரூ.1,04,72,000/– செலவினத்தில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் நிதிகளிலிருந்து முறையே 80:20 என்ற விகிதத்தில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) நிறுவனம் மூலம் உருவாக்க ஆணையிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக, TNeGA நிறுவனம் மென்பொருள் தயாரிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

- தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களின் திட்டங்கள் பற்றிய விவரங்களை பெறுவதற்கும், தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் வெளிமாநில தொழிலாளர்களின் குறைகளை களைவதற்கும் வசதியாக ரூ.9,95,119/– செலவில் கட்டணமில்லா தொலைபேசி எண்ணுடன் கூடிய பன்மொழி உதவிமையம் ஏற்படுத்த அரசால் ஆணையிடப்பட்டது. இது தொடர்பாக, வன்பொருள் (Hardware) மற்றும் மென்பொருள் (Software) கொள்முதல் செய்வதற்காக ரூ.2,23,956/– தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய நிதியிலிருந்து BSNL நிறுவனத்திற்கு 12.04.2017 அன்று விடுவிக்கப்பட்டது. அதற்கான உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய மூன்று

மொழிகளில் தலா ஒரு நபர் வீதம் மூன்று பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

- அனைத்து மாவட்ட தொழிலாளர் அலுவலர்களுக்கும் (சமூக பாதுகாப்புத் திட்டம்) 32 BOLERO (LX 2WD NAC 7STR PS BS4) ஈப்புகளை வாங்கி வழங்க அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது. 16.05.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மாவட்ட தொழிலாளர் அலுவலர்களுக்கு (ச.பா.தி) ஈப்புகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

- 17 அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியங்களில் பதிவு பெற்ற உடலுழைப்புத் தொழிலாளர்கள் இயற்கை மரணம் அடையும் நேர்வில் அவர்களது வாரிசுகளுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த இயற்கை மரண உதவித்தொகை ரூ. 15,000/–லிருந்து ரூ.20,000/–ம் ஈமச்சடங்கிற்கு ரூ. 2,000/–லிருந்து ரூ. 5,000/–ஆக உயர்த்தி வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் கட்டுமான தொழில்களில் ஈடுபடும் வெளிமாநில தொழிலாளர்களும் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரிய பயன்கள் பெறுவதை உறுதி செய்யும் பொருட்டு சிறு கணினியினை பயன்படுத்தி தொழிலாளர்கள் பணிபுரியும் இடங்களிலேயே முனைப்பு பதிவு இயக்கத்தின் வாயிலாக பதிவு மேற்கொள்ளப்படும் என்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் சட்டபேரவையில் 13.07.2017 அன்று அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக அரசளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- அமைப்புசாரா தொழிலாளர்கள் அதிகளவில் நல வாரியங்களில் பதிவு செய்து நலத்திட்ட உதவிகள் பெறும் வகையில் வாரியத் திட்டங்கள் குறித்து குறும்படம் தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.

**தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்**

**தொழிற்சாலைகள் பதிவு செய்தல்**

- மேற்படி காலத்தில் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 1,910 தொழிற்சாலைகள் புதிதாக பதிவு செய்யப்பட்டு 55,261 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகள்**

- புதிதாக 741 கட்டுமான நிறுவனங்கள், கட்டிடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (முறைபடுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. கட்டுமான தொழிலாளர்கள், வேலையளிப்பவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் ஆகியோருக்கு கட்டுமான இடங்களில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கட்டுமான பணியிடங்களில் 91 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 7,819 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**மாநில பாதுகாப்பு மற்றும் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்:**

- தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் சார்பாக 2013ஆம் ஆண்டிற்கான தொழிற்சாலைகள் பாதுகாப்பு விருதுகள் மற்றும் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் வழங்கும் விழா 06.05.2017 அன்று சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. அதில் 126 மாநில பாதுகாப்பு விருதுகள் 77 தொழிற்சாலை நிருவாகத்தினருக்கும், உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் 94 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகம் மற்றும் சென்னை மண்டல சார்நிலை அலுவலகங்களுக்கான ஒருங்கிணைந்த சொந்த அலுவலக கட்டடம்**

- வாடகை கட்டடத்தில் இயங்கி வந்த தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகம் மற்றும் 16 சென்னை மண்டல சார்நிலை அலுவலங்களுக்கான சொந்த அலுவலக கட்டடம் ரூ.8.95 கோடி செலவில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 16.05.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**பாதுகாப்பு பிரச்சார குழுக்கள் :**

- சென்னை, மதுரை மற்றும் கோவை மண்டல பாதுகாப்பு பிரசார குழுக்கள் காலமுறைதோறும் இரசாயனம், பட்டாசு, தோல்பதனிடும் தொழிற்சாலை, வெளுத்தல் மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்கு சென்று மேற்கண்ட உற்பத்தி பணிகளில் உள்ள அபாயங்கள் குறித்தும் பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றுவது குறித்தும் நிருவாகத்தினர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கியும், விபத்தினை தடுக்கும் வகையில் தொழிலாளர்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைக்கப்படுகிறது. மேற்படி காலத்தில் இக்குழுக்களால் 53 பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு 2,022 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**பாதுகாப்பு பயிற்சி :**

- பாதுகாப்பான முறையில் பணிபுரிவதன் முக்கியத்துவம் குறித்து தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சாலை நிருவாகத்தினருக்கு இவ்வியக்கக அலுவலர்களால் தொழிற்சாலை வளாகத்திலேயே 355 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 20,751 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**பட்டாசு தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம்**

- பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் பாதுகாப்பு பயிற்சி மையம் ஒன்று சிவகாசியில் ரூ.2.61 கோடி செலவில் 2013ஆம் ஆண்டு துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி காலத்தில் 4 குழுக்களுக்கு ஒரு மாத கால பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 66 போர்மேன்கள் பயனடைந்து உள்ளார்கள். மேலும் 18 ஒரு நாள் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 4,356 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளார்கள்.

**நடமாடும் கண்காணிப்புக் குழு**

- பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகள் ஏற்படா வண்ணம் பாதுகாப்பு வழிமுறைகளை கடைப்பிடிப்பது குறித்து சீரிய முறையில் கண்காணிக்கவும், தொழிலாளர்கள் மற்றும் நிருவாகத்தினருக்கு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், விருதுநகர் மாவட்டத்தில் நடமாடும் கண்காணிப்பு குழு (MobileTeam) ஒன்று தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதோடு, மேற்படி காலத்தில் 319 ஆய்வுகள் மேற்கொண்டுள்ளது.

**தொழில் முனைவோருக்கு உதவும் பொருட்டு தனிப்பட்ட இணைய தளத்தினை உருவாக்குதல்**

- இவ்வியக்கத்திற்கென தனியாக வலைதளம் ரூ.1.81 கோடி செலவில் உருவாக்கப்பட்டு, 04.03.2017 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் தொழிற்சாலை நிருவாகத்தினர், உரிமங்களை பெறுதல், புதுப்பித்தல், வரைபட ஒப்புதல் பெறுதல், ஒப்பந்த பணி பதிவு மற்றும் உரிமம் பெறுதல், வெளிமாநில தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் பதிவு மற்றும் உரிமம் பெறுதல், அழுத்தகலன் சோதனைச் சான்று பெறுதல், முதலான செயல்பாடுகளை இணையதளம் மூலமாக விண்ணப்பித்து, 30 நாட்களுக்குள் ஒப்புதல் பெற்று பயனடைய இயலும்.

**இணைய கண்காணிப்பு மையம்:**

- தொழிற்சாலைகளில் வெளியாகும் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களை கண்காணிக்க தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகத்தில் ஒரு இணைய கண்காணிப்பு மையம் உருவாக்க 21.04.2017 அன்று அரசாணை வெளியிடப்பட்டு ரூ.29.75 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இணைய கண்காணிப்பு மையத்தில் வன்பொருள் மற்றும் மென்பொருள் நிறுவப்பட்டு விரைவில் செயல்படவுள்ளது.

**கட்டுமான பிரிவு அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் :**

- கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்டப்பிரிவின் அமலாக்க அலுவலர்களுக்கு 30 மடிக்கணினிகள் வாங்குதல் தொடர்பாக 28.02.2017 அன்று அரசாணை வெளியிடப்பட்டு தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்திலிருந்து ரூ.19.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மடிக்கணினிகள் வாங்குதல் தொடர்பாக ஒப்பந்த புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு குறும்படங்கள், நிலையான பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் பாதுகாப்பு தகவல் பலகைகள்:**

- கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு குறும்படங்கள், நிலையான பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் பாதுகாப்பு தகவல் பலகைகள் தயார் செய்து பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்த ஏதுவாக 28.02.2017 அன்று அரசாணை வெளியிடப்பட்டு தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்திலிருந்து ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. பாதுகாப்பு குறும்படங்கள், நிலையான பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் பாதுகாப்பு தகவல் பலகைகள் தயாரிக்கப்பட்டு, கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்களின் பணிபாதுகாப்பிற்கு உதவும் பொருட்டு வெளியிடப்படவுள்ளது.

**பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகளை தடுக்க பாதுகாப்பு குறும்படங்கள் :**

- பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், உரிமையாளர்கள்,

விற்பனையாளர்கள் மற்றும் இயக்கக அலுவலர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறும்படங்கள் தயாரிக்க 25.10.2017 அன்று அரசாணை வெளியிடப்பட்டு பாதுகாப்பு குறும்படங்கள் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அலுவலர்கள் உடன் எடுத்து செல்லக்கூடிய பல்வகை வாயு பகுப்பாய்விகள் :**

- தொழிற்சாலைகளில் வெளியாகும் விஷ வாயுக்களை அளவிடும் பொருட்டு தொழிற்சாலைகள் ஆய்வின் போது அலுவலர்கள் உடன் எடுத்துச்செல்லக்கூடிய பல்வகை வாயு பகுப்பாய்விகள் வாங்க 25.10.2017 அன்று அரசாணை வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

### வேலைவாய்ப்பு பிரிவு

- வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாக மாற்றப்பட்டு, வேலைநாடுநர்களுக்கு உரிய வழிகாட்டல்கள் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- இணையவழி கற்பித்தல் முறையினை உருவாக்குவதற்கு ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- திருநெல்வேலி, திருச்சி, கோயம்புத்தூர், கடலூர், வேலூர் ஆகிய ஐந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மையங்கள் வாயிலாக தொழில் நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள் மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்திட ரூ.20.4 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற முதல் நாளிலேயே வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை இரு மடங்காக உயர்த்தி உத்தரவிடப்பட்டது. இதன் மூலம் பயனடைந்து வருபவர்களின் எண்ணிக்கை 57,762 மற்றும் அதற்கான செலவினம் 14.86 கோடி ஆகும்.

- பத்து அரசு கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களில் பயிலும் ஏழை மாணவர்கள் போட்டித்தேர்வுகளை எழுத பயிற்சி வகுப்புகள் நடத்திட ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம், பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆகியவற்றால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகள் மற்றும் வங்கிப் பணிக்கான போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள, 24 இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி வகுப்புகளில் 1,327 மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்று வருகின்றனர்.

- போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்ய விரும்பும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்காக 32 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் இயங்கும் தன்னார்வு பயிலும் வட்டங்களின் செயல்பாட்டிற்கு, ஆண்டொன்றிற்கு ரூ.1 கோடி அரசால் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் போட்டித் தேர்வுகளுக்காக நடத்தப்பட்ட, 143 பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்ட 13,963 மனுதாரர்களில் 356 நபர்கள் அரசு பணி நியமனம் பெற்றுள்ளனர்.

- வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் 5,802 வேலை நாடுநர்கள் அரசு துறையிலும் 20,778 வேலை நாடுநர்கள் தனியார் துறையிலும் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

- வேலைவாய்ப்பு அலுவலகங்களால் தனியார் துறை பணி நியமனங்களுக்காக சிறிய மற்றும் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. இதுவரையில் இந்த ஆண்டில் 257 தனியார் பணி நியமன வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, இதில் 3,753 வேலையளிப்போரும், 1,27,942 வேலை நாடுநர்களும் கலந்து கொண்டதில், 23,229 நபர்கள் தனியார் துறைகளில் பணி நியமனம் பெற்றுள்ளனர். மேலும் 661 மாற்றுத் திறனாளிகளும் தனியார் துறையில் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

- ஆண்டின் ஜூலை மாத முதல் வாரம் தொழில் நெறி விழிப்புணர்வு வாரமாக இவ்வரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் அனைத்து மாவட்டங்களிலும் இவ்வாரம் அனுசரிக்கப்பட்டு வாரம் முழுவதுமாக தொழில் நெறி வழிகாட்டும் உரைகள், கலந்துரையாடல், சிற்றேடுகள் விநியோகித்தல், விழிப்புணர்வு பேரணி நடத்துதல் போன்ற பல பணிகள் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டன.

- மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அயல்நாட்டு வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் மற்றும்



திறன் பதிவு பிரிவு இந்த ஆண்டில் நிறுவப்பட்டு செயல்படுகின்றது.

- பயிற்சி நிலைய (ஐ.டி.ஐ.) மாணவர்களுக்கான தொழில் நெறி வழிகாட்டி கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**பயிற்சிப் பிரிவு**

- பயோமெட்ரிக் வருகைப் பதிவு முறை 22 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ. 7.70 இலட்சத்தில் அறிமுகப்படுத்திட அரசாணை வெளியிடப்பட்டது.

- தொழிற்சாலைகளுக்குத் தேவையான தொழிற் பழகுநர்களை தேர்ந்தெடுப்பதற்கு தொழிற் பழகுநர்களுக்கான முகாம்கள் ஒவ்வொரு வருடமும் ரூ.10 இலட்சம் செலவில் நடத்திட அரசாணை வெளியிடப்பட்டு, திருநெல்வேலி, மதுரை, சேலம், திருச்சி ஆகிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் வேலூர் மாவட்டம் வாணியம்பாடியில் தொழிற் பழகுநர்களுக்கான முகாம்கள் நடத்தப்பட்டு இதில் 3,620 இளைஞர்கள் தொழிற்பழகுநர்களாக சேர்க்கப்பட்டு பயனடைந்துள்ளனர்.

- மாணவர்களின் எண்ணிக்கை 600க்கும் மேல் உள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் முதல்வர் பணியிடங்களை துணை இயக்குநர் / முதல்வர் பணியிடங்களாக ரூ.2.59 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டது.

- உளுந்தூர்பேட்டை அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் காதுகேளாதோர் மற்றும் வாய்பேச இயலாதோருக்கு பொருத்துநர் தொழிற் பிரிவிற்கான பணிமனை மற்றும் வகுப்பறை கட்டடங்கள் ரூ.32.68 இலட்சத்தில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது.

- சேலம் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் ஏ/சி மெக்கானிக் தொழிற் பிரிவிற்கான பணிமனை மற்றும் வகுப்பறை கட்டடங்கள் ரூ.38 இலட்சம் செலவில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது.

- தருமபுரி மற்றும் மேட்டூர் அணை அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் வயர்மேன் தொழிற் பிரிவிற்கான பணிமனை மற்றும் வகுப்பறை கட்டடங்கள் ரூ.76 இலட்சம் செலவில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது.

- நாகர்கோவில் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் காதுகேளாதோர் மற்றும் வாய்பேச இயலாதோருக்கு பொருத்துநர் தொழிற் பிரிவிற்கான பணிமனை மற்றும் வகுப்பறை கட்டடங்கள் ரூ.36 இலட்சத்தில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது.

- தமிழ்நாடு முன்னோடி திட்டத்தின் கீழ் 23 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ.258.98 இலட்சம் செலவில் பற்றவைப்பவர் தொழில் நுட்பத்தைக் கணினி மூலம் கற்பிக்கும் கருவி அறிமுகப்படுத்துவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் அரசு தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் விடுதி கட்டடங்கள் ரூ.287 இலட்சம் செலவில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது.

- தஞ்சாவூர் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் மின்சாரப்பணியாளர் தொழிற்பிரிவிற்கான பணிமனை மற்றும் வகுப்பறை கட்டடங்கள் ரூ.38 இலட்சம் செலவில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது.

- மொழி மற்றும் மென்திறன் ஆய்வகங்கள் ரூ.517.96 இலட்சம் செலவில் 17 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் அமைத்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- 8 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் 12 புதிய தொழிற் பிரிவுகள் ரூ.1,067 இலட்சம் செலவில் ஏற்படுத்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் 26 மாவட்டங்களில் உதவி இயக்குநர் அலுவலகம் ரூ.115.85 இலட்சம் செலவில் உருவாக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- அரசு தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் / தொழிற் பழகுநர்கள் / பாலிடெக்னிக்குகள் / கல்லூரிகள் / பல்கலைக்கழகங்களில் பயின்ற பட்டதாரிகள் என பிற மாணவர்களுக்கிடையே அனைவருக்குமான திறன் போட்டிகள் ரூ.40 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு வருகிறது.

- வேலூர் மாவட்டம் – வாணியம்பாடி, ஈரோடு மாவட்டம் – கோபிசெட்டிப்பாளையம் மற்றும் திருவாரூர் மாவட்டம் – கோட்டூர் ஆகிய மூன்று இடங்களில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன.

- பழங்குடியின பயிற்சியாளர்களுக்கென பிரத்யேகமாக செயல்பட்டு வரும் ஆனைக்கட்டி, கூடலூர், கருமந்துறை, கொல்லிமலை, ஜமுனாமரத்தூர் மற்றும் சங்கராபுரம் ஆகிய ஆறு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சிறப்பு பணியமர்த்தும் அலகு ரூ.10 இலட்சம் செலவில் அமைத்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- அரசு தொழில் துறைகளில் ஏற்பட்டு வரும் தற்போதைய நவீன தொழில்நுட்பம் மற்றும் வளர்ச்சி குறித்த அறிவு மற்றும் திறனைப் பெறும் வகையில், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் 100 பயிற்றுநர்களுக்கு ரூ.5 இலட்சம் செலவில் உயர்தர தொழில்நுட்ப புத்தாக்கப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில், பயின்று அகில இந்திய தொழிற் தேர்வில் எட்டு தொழிற்பிரிவுகளில் மாநில அளவில் மதிப்பெண் அடிப்படையில் ஒவ்வொரு முதல் 25 இடங்களில் தேர்ச்சி பெறும் பயிற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் உயர்நிலையிலான சிறப்பு பயிற்சி வழங்கிட ரூ.57.81 இலட்சம் செலவில் ஆணை வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

- நாகலாபுரம் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் பற்றவைப்பவர் மற்றும் கம்பியாள் தொழிற்பிரிவுகளுக்கான பணிமனை மற்றும் வகுப்பறை கட்டடங்கள் ரூ.58.56 இலட்சம் செலவில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.11.2017 அன்று காணொலி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது.

## அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

- வெளிநாட்டு வேலைவாய்ப்பு வேண்டி, 1,058 நபர்கள் பதிவு செய்துள்ளனர்.

- இந்நிறுவனம் 538 பதிவர்களை வெளிநாடுகளிலும், 382 நபர்களை உள்நாட்டிலும் பணியமர்த்தியுள்ளது.

- இந்நிறுவனம், 2016–2017 நிதியாண்டில் மொத்த வருவாய் ரூ.1.32 கோடியும், நிகர இலாபமாக ரூ.20.93 இலட்சம் ஈட்டி ரூ.4.50 இலட்சம் ஈவுத்தொகையினை அரசிற்கு அளித்துள்ளது.

- அரசு துறைகளின் தேவையைக் கருத்தில் கொண்டு விமானம் மற்றும் இரயில் பயணச்சீட்டு சேவை துவக்கப்பட்டது.

- ஆன்லைன் பதிவு சேவை துவக்கப்பட்டது.

## தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

- திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கான இணையதளம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.03.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

- கடந்த ஓராண்டில் 236 திறன் பயிற்சி நிறுவனங்களுக்கு வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக குழுமம் 48,620 இளைஞர்கள் பயன் பெறும் வகையில் ரூ.9,401.91 இலட்சம் செலவில் பல்வேறு துறைகளில் குறுகிய கால திறன் பயிற்சியளிக்க ஒப்புதல் அளித்துள்ளது.

- கடந்த ஓராண்டில் 47,135 நபர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

- மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களை நாடி வரும் வேலைநாடுநர்களின் தொழில் திறன்களை மதிப்பீடு செய்து அவர்களுக்கு உரிய பயிற்சி வழங்க ஏதுவாக 32 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ரூ.87.40 கோடி செலவில் திறன் மதிப்பீடு மற்றும் ஆய்வு மையங்கள் அமைக்கப்பட உள்ளன.

- அம்மா இரு சக்கர வாகன சேவை மற்றும் பராமரிப்பு மையம் வாயிலாக 700 பயனாளர்களுக்கு (ரூ.1.40 கோடி செலவில்) பயிற்சியளிக்க அரசாணை வழங்கப்பட்டு இதுவரை அனைத்து மாவட்டங்களிலும் 425 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

- திறன் உச்சி மாநாடு ரூ. 40 இலட்சம் செலவில் நடத்த அரசாணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்ட அளவிலான திறன் போட்டிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டன. அதில் 2,317 நபர்கள் கலந்து கொண்டதில் முதல் இடங்களை பெற்ற 192 நபர்கள் மாநில அளவிலான திறன் போட்டிகளில் பங்கேற்க தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர்.

- திறன் பயிற்சி மையங்கள் அமைத்து 3,600 நபர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி வழங்க ரூ.2.94 கோடியும் மற்றும் 20,000 இளைஞர்களுக்கு சேவைத் துறையில் திறன் மேம்பாட்டுக் கழகத்தால் பட்டியலிடப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் திறன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து சேவைத் துறையில் இதுவரை 2,075 நபர்களுக்கும், அனைத்து பஞ்சாயத்து ஒன்றியங்களிலும் நகர் பகுதிகளிலும் அமைந்துள்ள தொழிற்பயிற்சி மையங்கள் மூலம் தொழில்நுட்ப பயிற்சி 906 நபர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 1,00,000 தொழிலாளர்களுக்கு அவர்கள் தொழில் அனுபவத்தினால் பெற்ற திறனை சோதித்து சான்றிதழ் வழங்க ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வழங்கப்பட்டது இதுவரை 3,000 நபர்களுக்கு திறன் மதிப்பீட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன.

- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ருசா (ராஷ்டிரிய உச்சாதர் சிக்ஷா அபியான்) திட்டத்தின் கீழ் 19 அரசு தன்னாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 13,159 மாணவர்களுக்கு திறன் பயிற்சியளிக்கப்பட்டது.

## மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்

## (தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்)

- தமிழ்நாடு தொழிலாளர்கள், மருத்துவ சிகிச்சை வசதி பெற வேண்டி சிதம்பரம், பூதலூர், பவானி, அரவக்குறிச்சி, பாப்பிரெட்டிபட்டி, கள்ளக்குறிச்சி, நெல்லியாளம், ஒட்டன்சத்திரம், குன்னூர் மற்றும் கீழ்குண்டா (ஊட்டி ) ஆகிய பகுதிகளில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் அமைக்க அரசினால் அறிக்கை வெளியிடப்பட்டது. இதனை தொடர்ந்து சிதம்பரம், பூதலூர், பவானி, அரவக்குறிச்சி, பாப்பிரெட்டிபட்டி, கள்ளக்குறிச்சி, நெல்லியாளம், ஒட்டன் சத்திரம் ஆகிய பகுதிகளில் இரண்டு மருத்துவர்கள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களும் குன்னூர் மற்றும் கீழ்குண்டா (ஊட்டி) ஆகிய பகுதிகளில் 3 மருத்துவர்கள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களும் துவங்க அரசினால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடங்களில் மருந்தகங்கள் துவங்க இடம் மற்றும் கட்டிடம் அமைத்துத்தரக் கோரி மாநில மருத்துவ ஆணையரிடம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம்) ஆணை வேண்டப்பட்டுள்ளது. மாநில மருத்துவ ஆணையரிடமிருந்து (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம்) ஆணை பெற்றவுடன் இம்மருந்தகங்கள் செயல்படும்.

- மேலும் மேற்கண்ட பகுதிகளில் தொழிலாளர் (காப்பீட்டாளர்கள்) அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் துவங்குவதால் 31,699 தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பமும் பயன் பெறுவார்கள்.

❖ ❖ ❖




- 2017ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டியில் கலந்து கொள்வதற்காக சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வரும் 7 மாணவர்களுக்கு, தலா ரூ.75 ஆயிரம் வீதம் ரூ.5.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- மதுரை, திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரிகளில் நூலகப் பயன்பாட்டிற்குத் தேவையான அறைகலன்கள் மற்றும் மரத் தளவாடங்கள் வாங்குவதற்கு ரூ.10.92 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கென புதிதாக கட்டப்பட்டுள்ள நிரந்தரக் கட்டடத்திற்குத் தேவையான அறைகலன்கள் வாங்கிட ரூ.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- 2017ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டியில் கலந்து கொள்ள திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியில் பயின்று வரும் 4 மாணவர்களுக்கு, தலா ரூ.75 ஆயிரம் வீதம் ரூ.3 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று இடங்களில் 2017–2018ஆம் கல்வியாண்டு முதல் தலா ஒரு அரசு சட்டக் கல்லூரியினை துவக்கிட அனுமதி; அக்கல்லூரிகளுக்கு தொடரும் மற்றும் தொடரா செலவினங்களுக்காக ஒரு கல்லூரிக்கு ரூ.2.27 கோடி வீதம் மூன்று அரசு சட்டக் கல்லூரிகளுக்கும் மொத்தம் ரூ.6.81 கோடி நிதி ஒப்பளிப்பு.

- தமிழகத்திலுள்ள அரசு சட்டக் கல்லூரிகளில், புதிதாக 157 முழுநேர உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிப்பு.

- வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் 2017–2018ஆம் கல்வியாண்டு முதல் 5 ஆண்டு சட்டப்படிப்பில் புதிதாக ஒரு வகுப்பு துவக்கிடவும், அதற்கென ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்களை தோற்றுவித்தும், அப்பணியிடங்களுக்கான தொடரும் செலவினமாக ரூ.43.32 இலட்சம் மற்றும் புத்தகங்கள் வாங்கிட தொடரா செலவினமாக ரூ.2 இலட்சம் என மொத்தம் ரூ.45.32 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை.

- விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரிக்கென நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு விழுப்புரம் வட்டம், சாலாமேடு



கிராமத்தில் 1.93.0 ஹெக்டேர் நிலத்தினை, சட்டக்கல்வித்துறைக்கு நில உரிமை மாற்றம் பெறும் பொருட்டு, விழுப்புரம் நகராட்சிக்கு நில மதிப்பு தொகை ரூ.6.33 கோடி நிதி ஒப்பளிப்பு; மேலும், அவ்விடத்தில் நிரந்தரக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள நிருவாக அனுமதி மற்றும் ரூ.60.69 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு.

- மதுரை அரசு சட்டக் கல்லூரிக்கு புதிய கலையரங்கம் மற்றும் புதிய நூலகக் கட்டடம் கட்டும் பணிகளுக்கு ரூ.8.37 கோடிக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு 2017–2018ஆம் ஆண்டில் ரூ.4 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் அரசு சட்டக் கல்லூரிகளுக்கு இந்திய வழக்குரைஞர் மன்றத்தின் ஒப்புதலை பெறுவதற்கு ஆய்வுக் கட்டணம் மற்றும் விண்ணப்பக் கட்டணமாக ரூ.19.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள நிருவாக அனுமதி மற்றும் ரூ.1.89 கோடி நிதி ஒப்பளிப்பு.
- சட்டக் கல்வித்துறையின் கீழுள்ள 7 அரசு சட்டக் கல்லூரிகளின் நூலகங்களில் சட்டப் புத்தகங்கள், சட்ட இதழ்கள் மற்றும் சட்ட தரவு தளங்கள் வாங்குவதற்கு, 2017–2018ஆம் கல்வியாண்டில் ரூ.14 இலட்சம் ஒப்பளிப்பு.
- வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கென புதிய மாணவர் விடுதி கட்டடம் கட்டும் பணிகளை ரூ.3.75 கோடி செலவில் மேற்கொள்ள நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.
- செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரிக்கு புதிதாக நூலகக் கட்டடம் கட்டும் பணிகளை ரூ.4.45 கோடி செலவில் மேற்கொள்ள நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.
- விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரி செயல்பாட்டிற்கென தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டுள்ள கட்டடத்தில் புனரமைப்புப் பணிகளை ரூ.33.95 இலட்சம் செலவில் மேற்கொள்ள நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.

- மாநில சட்ட ஆணையம், தமிழ்நாடு, உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி, மாண்புமிகு நீதியரசர் திரு.சொக்கலிங்கம்நாகப்பன் அவர்கள்தலைமையில், நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு தற்போதைய நிலைக்கேற்ப திருத்தங்களை அல்லது ஆலோசனைகளைப் பரிந்துரைக்க 15.06.2017 அன்று அரசால் திருத்தி அமைக்கப்பட்டது. அவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையத்தின் பதவிக் காலம் அதன் தலைவர் பதவியேற்ற, அதாவது 19.06.2017ஆம் நாளிலிருந்து மூன்று வருடங்கள் ஆகும். திருத்தியமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையத்தில் ஆணையத் தலைவர் தவிர, முழுநேர உறுப்பினர்களும், பகுதிநேர உறுப்பினர்களும் மற்றும் முழுநேர உறுப்பினர்–செயலாளரும் அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- தருமபுரி அரசு சட்டக் கல்லூரி செயல்பாட்டிற்கென தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டுள்ள கட்டடத்தில் புனரமைப்புப் பணிகளை ரூ.11 இலட்சம் செலவில் மேற்கொள்ள நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.

- காஞ்சிபுரம் அரசு சட்டக் கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் கட்டும் பணிகளுக்கு, ஏற்கெனவே நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்ட தொகையான ரூ.57.17 கோடி உடன் கூடுதலாக ரூ.23.74 இலட்சம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.57.41 கோடிக்கு திருத்திய நிருவாக ஒப்பளிப்பு.

- திருவள்ளூர் அரசு சட்டக் கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் கட்டும் பணிகளுக்கு, ஏற்கெனவே நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்ட தொகையான ரூ.60.13 கோடி உடன் கூடுதலாக ரூ.23.97 இலட்சம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.60.37 கோடிக்கு திருத்திய நிருவாக ஒப்பளிப்பு.

- 2013–2014ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி, திருச்சிராப்பள்ளியில் இளநிலை சட்டப்படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கி அதற்காக ரூ.29 இலட்சம் நிதி மீள் ஒப்பளிப்பு.

❖ ❖ ❖

**“ஏறி வரும் விலைவாசி உயர்வை ஏழை எளியவர்களும் சமாளிக்க, பண்ணைப் பசுமை காய்கறி திட்டம், ஊரகப் பகுதிகளின் முன்னேற்றத்தை உறுதி செய்ய தாய்த் திட்டம், பொது விநியோகத் திட்டத்தின் மூலம் அளிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் கடத்தலை தடுக்கவும், முறையான விநியோகத்தை உறுதி செய்யவும் மின்னணு குடும்ப அட்டை வழங்குதல், அம்மா உணவகம், அம்மா மருந்தகம், அம்மா உப்பு, அம்மா குடிநீர், அம்மா சிமெண்ட் போன்ற காலத்தால் அழியாத பல்வேறு திட்டங்களை அளித்து, மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, அந்தத் திட்டங்களை எல்லாம் தொடர்ந்து செயல்படுத்தி வருவதோடு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் பல்வேறு புதிய அறிவிப்புகளையும், குடிமராமத்து போன்ற புதிய திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்**

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை



- “புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம்” எனும் திட்டத்தின் கீழ் ரூ.102.34 கோடி மானிய மதிப்பிலான 843 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு 605 திட்டங்களுக்கு ரூ.82.06 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், ரூ.6.86 கோடி 3% பின்முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- மாநில அரசின் சுய வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டமான UYEGP என்ற திட்டத்தின் கீழ், 3,773 பயனாளிகளுக்கு ரூ.2,479.59 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- இந்திய அரசின் பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும்திட்டத்தினை(PMEGP), செயல்படுத்தும் முகமையாக காதி கிராம தொழில் ஆணையம் தேசிய அளவிலும், காதி கிராம தொழில் வாரியம் மற்றும் மாவட்ட தொழில் மையம் மாநில அளவில் செயல்படுத்தும் முகமையாக உள்ளன. இதன் மூலம் விளிம்புத் தொகையாக ரூ.4,339.11 இலட்சம் 1,786 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- மாநிலத்திலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு பல்வேறு ஊக்கத் தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

- உற்பத்தி அலகு அல்லது விரிவாக்கம் / ஏற்கெனவே உள்ள அலகுகளை நவீனமயமாக்க அவ்வலகுகளின் இயந்திரம் மற்றும் தளவாட மதிப்பில் 25 சதவிகிதம் அதிகபட்சம் ரூ.25 இலட்சம் மூலதன மானியமாக தமிழக அரசால் வழங்கப்படுகிறது. 1,826 பயனாளிகளுக்கு ரூ.13,572.14 இலட்சம் மூலதன மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- 423 பயனாளிகளுக்கு ரூ.338.04 இலட்சம் குறைந்தழுத்த மின் மானியமாகவும், 256 பயனாளிகளுக்கு ரூ.360.07 இலட்சம் மின்னாக்கி மானியமாகவும், 327 பயனாளிகளுக்கு ரூ.517.24 இலட்சம் மதிப்புக் கூட்டு வரி மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

- அம்மாதிறன் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புத்திட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தேவையான மனிதவள திறன் வேலையுடன் கூடிய 6 மாத கால பயிற்சி ஆகும். 2016–2017ஆம் ஆண்டிற்கான இப்பயிற்சியினை 1,025 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் 20,150 பயனாளிகளுக்கு பயிற்சி அளித்தது. நடப்பு ஆண்டில் 6,360 பயனாளிகளுக்கு 209 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் உதவியுடன் வழங்கப்பட உள்ளது.

- 2,05,564 நிறுவனங்கள் ரூ.24,234 கோடி அளவிற்கு முதலீடு செய்து 13.31 இலட்சம் நபர்கள் உத்யோக் ஆதார் மூலம் பதிவு செய்துள்ளார்கள்.

- கோயமுத்தூர் மாவட்டம் காளப்பட்டியில் உள்ள மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டையின் சாலை மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ரூ.50 இலட்சம் செலவில் மேம்படுத்த ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

- 2017–2018ஆம் ஆண்டில், மொத்தமுள்ள 308 தொழிற் கூட்டுறவு சங்கங்களில் 245 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ரூ.693.62 கோடி இலாபத்தினை ஈட்டியது. அதில் ரூ.16.78 கோடியை நிகர இலாபம் ஆகும்.

- நீலகிரி மாவட்டம், நஞ்சநாடு பகுதியைச் சார்ந்த சிறு தேயிலை விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையினை நிறைவேற்றும் பொருட்டு, நஞ்சநாடு கிராமத்தில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு புதிய தேயிலைத் தொழிற்சாலையை அமைக்க அரசு அறிவித்தது. 04.01.2014ஆம் நாளன்று அடிக்கல் நாட்டப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 30.12.2017 அன்று திறந்து வைக்கப்பட்டு உற்பத்தியை துவக்க தயார் நிலையில் உள்ளது.

- 2017–2018ஆம் ஆண்டில், சேகோசர்வ் ரூ.312.08 கோடி அளவிற்கு விற்பனையினை எட்டி, ரூ.241.56 இலட்சத்தை நிகர இலாபமாக ஈட்டியது.

- 2017–2018ஆம் ஆண்டில், தாய்கோ வங்கி ரூ.998.45 கோடி அளவிற்கு வைப்புத் தொகை திரட்டியும் மற்றும் ரூ.485.54 கோடி அளவிற்கு பயனாளிகளுக்கு கடன் வழங்கியுள்ளது. இவ்வங்கி ரூ.4.82 கோடியை நிகர இலாபமாக ஈட்டியுள்ளது.

- சந்தை மேம்பாட்டு நிதியுதவி திட்டத்தின் கீழ் அரசானது 2017–2018ஆம் ஆண்டில், அனுமதித்த ரூ.116.45 இலட்சத்தில், ரூ.58.23 இலட்சத்தை விடுவித்து கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு மானியமாக வழங்கியுள்ளது.

- தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) 105 தொழிற்பேட்டைகளை நிருவகித்து வருகிறது. 4 இடங்களில் குறிப்பிட்ட பொருட்கள் உற்பத்தி செய்யும் சிறப்பு திட்டத்தின் கீழ் ஜவுளி குழும தொழிற்பேட்டை காஞ்சிபுரம் மற்றும் கரூரிலும், உணவு சம்மந்தப்பட்ட தொழிற்பேட்டை தருமபுரியிலும், கடல்வாழ் உணவு பதப்படுத்தும் தொழிற்பேட்டை இராமநாதபுரத்திலும் ஜப்பான் (JICA) நிதி உதவியுடன் தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டு திட்டத்தின் கிழ் அமைக்க ரூ.88 கோடி செலவில் ஆணையிடப்பட்டுள்ளது.

- சிட்கோ மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தொழிற்சங்கங்கள் இணைந்து அரசு தனியார் கூட்டு முயற்சி திட்டத்தின் கீழ் மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளியில் வர்த்தக மையம் அமைக்கப்படவுள்ளது. இதனை செயல்படுத்த ஒவ்வொரு வர்த்தக மையத்திற்கும் 50% மாநில அரசு மானியமாக அதிகபட்சம் ரூ.5 கோடி அரசு வழங்கியுள்ளது.

- சிட்கோ நிறுவனம் நில வங்கி புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்க 52 இடங்களில் 2,813.67 ஏக்கர் நிலங்களை கண்டறிந்து அவற்றில் 7 இடங்களில் 417.79 ஏக்கர் பரப்பளவில் தொழிற்பேட்டை அமைக்கும் பணி நடைபெற்று பல்வேறு நிலைகளில் உள்ளது.

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தொழில் துவங்கத் தேவையான அனுமதிகள், உரிமங்கள் மற்றும் இசைவுகளை பெற இணையதளம் மூலம் ஒற்றைச்சாளர முறையில் விண்ணப்பிக்கும் முறை உருவாக்கப்பட்டு வருகிறது. அதேபோல், தொழில் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை எளிதாக்கும் விதத்தின் ஒரு பகுதியாகவும் பல்வேறு உரிமங்கள் பெறுவதற்காக வழங்க வேண்டிய படிவங்களை ஒற்றை சாளர முறையில் பெறுவதை உறுதி செய்யும் விதமாக தமிழ்நாடு பணிகள் உத்வேக சட்டம் 2017இன் கீழ் மாவட்ட மற்றும் மாநில அளவில் ஒற்றைச் சாளர குழு அமைத்து ஆணையிடப்பட்டு துறைகளுக்கிடையேயான இடர்பாடுகளை களைகிறது.

❖ ❖ ❖

# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை



## பெருநகர சென்னை மாநகராட்சி

- சீர்மிகு நகர திட்டத்தை செயல்படுத்த "சென்னை ஸ்மார்ட் சிட்டி லிமிடெட்" என்ற சிறப்பு நிறுவனம் (Special Purpose Vehicle) தமிழக அரசு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து தலா 50 சதவீத பங்களிப்பில் 15.07.2016 அன்று நிறுவப்பட்டுள்ளது.

- சீர்மிகு நகர திட்டம் (Smart City Project) 5 ஆண்டு காலங்களில் (2015 – 2020) முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்கீடாக முறையே ரூ.500 கோடி வீதம் வழங்கப்பட உள்ளது.

- பொதுமக்களின் வாக்கெடுப்பின் அடிப்படையில் தியாகராயாநகர் "பகுதி சார்ந்த வளர்ச்சி" (Area Based Development திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. பகுதி சார்ந்த வளர்ச்சி திட்டத்தில் கீழ் 40 இனங்கள் ரூ.877.93 கோடியில் பணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி முழுவதும் மேம்படுத்தும் (Pan City Development) திட்டத்தில் கீழ் 8 இனங்கள் ரூ.488.31 கோடியில் மதிப்பீடுகள் பணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மொத்தம் ரூ.1,366.24 கோடி செலவு ஆகும் என தோராயமாக திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

- சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் தியாகராயா நகரில் பகுதி சார்ந்த வளர்ச்சி திட்டத்தில் ரூ.3.44 கோடி மதிப்பீட்டில் 1,772 தெரு விளக்குகள் எல்.இ.டி. விளக்குகளாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது, இதன் மூலம் தியாகராயா நகரில் அனைத்து தொரு விளக்குகள் எல்.இ.டி விளக்குகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

- 2016–2017ஆம் நிதி ஆண்டில் சமுதாய நலக்கூடங்கள், எரிவாயு எரியூட்டகங்கள், மருத்துவமனை கட்டிடங்கள், இரவு காப்பகங்கள், வார்டு அலுவலகங்கள், பள்ளி கட்டிடங்கள் மற்றும் மண்டல அலுவலக கட்டடம் என மொத்தம் 28 பணிகள் ரூ.38.24 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

- அடல் புனரமைப்பு மற்றும் நகர்புற மாற்றத்திற்கான திட்டத்தின் (AMRUT scheme) கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில், 2016–2017ஆம் நிதியாண்டில், மேற்கண்ட (AMRUT scheme) திட்டத்தின்கீழ் 24 எண்ணிக்கையிலான பூங்காக்கள் அமைப்பதற்காக ரூ.12.88 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதில் 23 பூங்கா பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 1 பூங்கா பணிக்கு மட்டும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பம் கோரப்படவுள்ளது.

- 2017–2018ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் சிறந்த மதிப்பெண் பெற்றுள்ள 120 மாணவ/மாணவியர்களுக்கு, அவர்கள் மாநில அளவில் தரம் பெறும் பொருட்டு சைதாப்பேட்டை மற்றும் செனாய் நகரில் உள்ள சென்னை மேல்நிலைப்பள்ளிகளில் அமைந்துள்ள உண்டு உறைவிட பள்ளிகளில் தங்க வைத்து சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. (Spark Program for Gifted and Talented Students of Greater Chennai Corporation).

- சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு 2 செட் சீருடை வழங்கப்பட்டது.

- சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்ற 22 பள்ளிகளுக்கு தலா ரூ.1 இலட்சம் ஊக்கப் பரிசு வழங்கப்பட்டது.

- சென்னை உயர்நிலைப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் 56 மாணவ/மாணவியர்கள் தேசிய சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.

- 'Wings to fly' என்ற நிகழ்வின் கீழ் 8 மாணவர்கள் ஜெர்மனி அழைத்துச் செல்ல உள்ளனர்.

- சென்னை பள்ளிகள் அரசு பொதுத் தேர்வில் 10ஆம் வகுப்பில் 93.1% தேர்ச்சியும் 12ஆம் வகுப்பில் 88.7% தேர்ச்சி விழுக்காட்டையும் பெற்றுள்ளன.

- பெட்டக வடிவ பாலம் அமைக்கும் பணி 4 இடங்களிலும் (வடக்கு, மத்தியம், தெற்கு) வட்டாரத்திலுள்ள பாலங்களின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்திப் பணி 5 இடங்களிலும் ரூ.4.87 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

- மேலும் முந்தைய ஆண்டு 4 நிலுவைப் பணிகள் ரூ.121.66 கோடியில் நடைபெற்று வருகின்றன. சட்டமன்ற விதி எண் 110இன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட ரூ.117.47 கோடி மதிப்பீட்டில் எல்சி–2ஏ எண்ணூர் நெடுஞ்சாலை மற்றும் எல்.சி–2பி மணலி சாலை இரயில்வே சந்திக்கடவுகளை ஒருங்கிணைத்து மேம்பாலம் அமைக்கும் பணி மற்றும் ரூ.4.19 கோடி மதிப்பீட்டில் 3 பெட்டக வடிவ பாலம் அமைக்கும் பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றன.

- 2017–2018ஆம் நிதியாண்டில் தெரு மின்விளக்கு அமைக்கும் பணிகள் மற்றும் புதை மின் கேபிள் நிறுவும் 165 பணிகள் ரூ.14.77 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 54 பணி ரூ.5.35 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. 101 பணிகள் ரூ.8.71 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. 10 பணிகள் ரூ.0.71 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ளன.

- பெருநகர சென்னை மாநகராட்சியில் மருத்துவ சேவைகள் துறையில் 15 மண்டலங்கள் மூலமாக 14 பெருநகர சமுதாய நல மருத்துவமனைகள், 3 இருபத்து நான்கு மணிநேர அவசரகால மகப்பேறு மருத்துவமனைகள், 2 மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் 139 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவை தரம் உயர்த்தப்பட்டு தேவையான உபகரணங்களுடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

- பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் 53,93,788 புறநோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

- பிரசவித்த தாய்மார்களின் எண்ணிக்கை 9,851. அறுவை அரங்குகளின் சிறப்பு அம்சமாக பிரசவம் மற்றும் கருத்தடை அறுவை சிகிச்சைகளுக்கு ஒரு முறை மட்டுமே உபயோகப்படுத்த கூடிய Disposable LSCS Delivery Kit, Video Laparoscopy மற்றும் Sonomamogram ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. சுக பிரசவம் மூலம் 5,050 தாய்மார்களுக்கும் மற்றும் சிசேரியன் அறுவை சிகிச்சை மூலம் 4,801 தாய்மார்களுக்கும் பிரசவம் நடைபெற்றுள்ளது.

- பெண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சை மூலம் 6,299 தாய்மார்களுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை நடைபெற்றுள்ளது.



- ஆண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சை மூலம் 32 தந்தையர்களுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை நடைபெற்றுள்ளது.
- 878 தாய்மார்களுக்கு பாதுகாப்பான கருகலைப்பு செய்யப்பட்டுள்ளது.
- பி.சி.ஜி. – 9,542 குழந்தைகளுக்கு போடப்பட்டுள்ளது.
- பென்டாவேலன்ட் வேக்சீன் தடுப்பூசி மற்றும் ஓரல் போலியோ டிராப்ஸ் 41,921 குழந்தைகளுக்கு போடப்பட்டுள்ளது.
- மேலும் தட்டம்மை தடுப்பூசி 9 மாதம் முடிவடைந்த 679 குழந்தைகளுக்கு போடப்பட்டுள்ளது.
- தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி 47,559 குழந்தைகளுக்கு போடப்பட்டுள்ளது.
- தற்போது ஊசி மூலமாக கொடுக்கப்படும் போலியோ தடுப்பூசி மருந்து 44,298 குழந்தைகளுக்கு போடப்பட்டுள்ளது.
- கடந்த செப்டம்பர் 17 முதல் தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி ரோட்டா வைரஸ் தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டு 21,451 குழந்தைகளுக்கு போடப்பட்டுள்ளது.
- பெண்களுக்கு எளிய முறையில் கருப்பபைவாய் புற்றுநோய் ஆரம்ப நிலையில் கண்டறியும் பரிசோதனை அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் 31,444 பெண்கள் பயனடைந்துள்ளனர்.
- ஏழைப் பெண்களுக்கான திருமண நிதியுதவி, பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு ரூ.25,000/– மற்றும் தங்க நாணயம் 4 கிராம், பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு ரூ.50,000/– மற்றும் 4 கிராம் தங்க நாணயம் வழங்கப்படுகின்றது. மேலும் 2016–2017 நிதியாண்டில் 23.05.2016ஆம் தேதியில் இருந்து இத்திட்டத்தின் கீழ் 10ஆம் வகுப்பு முடித்தப் பெண்களுக்கு ரூ.25,000/– மற்றும் தாலிக்கு தங்கம் 8 கிராம் வீதமும் பட்டம் மற்றும் பட்டய படிப்பு படித்தப் பெண்களுக்கு ரூ.50,000/– மற்றும் தாலிக்கு தங்கம் 8 கிராம் வீதமும் வழங்கப்பட்டு வருகிறது.
- 3,033 நபர்களுக்கு ரூ.12,90,25,000/– மற்றும் 12,132 கிராம் தங்கமும் மற்றும் 23.05.2016ம் தேதிக்கு பிறகு திருமணம் ஆன 1,679 நபர்களுக்கு ரூ.7,28,25,000/– மற்றும் 13,432 கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் மூலம் அரசு மருத்துவமனைகளில் பரிசோதனை மற்றும் பிரசவம் மேற்கொண்ட 28,611 கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.29,25,08,000/– வழங்கப்பட்டுள்ளது.
- பிரசவித்த தாய்மார்களுக்கு ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின்கீழ் ரூ.600/– வழங்கப்படுகிறது. 9,454 பயனாளிகளுக்கு ரூ.56,77,900/– வழங்கப்பட்டது.

- பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டுத்திடலில் வீரர்கள் இதுவரை மண் தரையில் விளையாடி கொண்டிருந்தார்கள், விளையாட்டு வீரர்களின் திறமையை மேம்படுத்த விளையாட்டுத் திடல்களை உலகதரத்திற்கு நவீனப்படுத்த திட்டமிடப்பட்டது. அதன்படி முதற்கட்டமாக மண்டலம்–4ல் உள்ள வியாசர்பாடி முல்லை நகரில் உள்ள கால்பந்து விளையாட்டு மைதானத்தில் செயற்கை புல் தரை (Outdoor Tara flex) மற்றும் மின்னொளி விளக்குகள் (Flood Lights) பொருத்தப்பட்டுள்ளது. அடுத்ததாக, சாமந்திபூ காலனியில் உள்ள கால்பந்து விளையாட்டுத்திடல் இயற்கை புல்தரையிலான கால்பந்து மைதானமாக உருவாக்கப்பட்டு அதிகமான மின்னொளி விளக்குகள் (Flood Lights) பொருத்தப்பட்டு சென்னை மாநகராட்சியில் முதன் முறையாக உலகத்தரம் வாய்ந்ததாக உயர்த்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்ட நிதியின்கீழ் 38 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகளை புதுப்பிக்கப்பட்டு ரூ.23.93 கோடி மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளது.

- 25 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள் கட்டுதல், பராமரித்தல் மற்றும் பின் ஒப்படைதல் என்ற அடிப்படையில் பேருந்து நிழற்குடைகள் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

- எழும்பூர் பகுதியில் உள்ள 8 சாலைகளில் நடைபாதை அமைக்கும் பணிக்கு ரூ.14.31 கோடி மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளது.

- 2016ஆம் ஆண்டு வர்தா புயலினால் பாதிக்கப்பட்ட சாலைகள், நடைபாதைகள் மற்றும் நிழற்குடைகள் சீரமைக்கும் பணிகள் ரூ.8.64 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

- சென்னை மாநகராட்சியில் 70 காப்பகங்கள் தொடங்கிட உத்தேசிக்கப்பட்டு தற்போது 47 (10 சிறப்பு காப்பகங்கள் உட்பட) வீடற்றோருக்கான காப்பகங்கள் நடைபெற்று வருகின்றன. மேலும் கூடுதலாக 23 காப்பகங்கள் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

- 7 அரசு மருத்துவமனைகளில் 13 சிறப்பு காப்பகங்கள் கட்ட தீர்மானிக்கப்பட்டு, RSRM (2 Nos.), STANLEY (2 Nos.), ICH – (1 No.), Rajiv Gandhi – (1 No), KMC – (2 Nos.), IOG- (2 Nos.) ஆகிய மருத்துவமனைகளில் 10 காப்பகங்கள் கட்டி முடிக்கப்பட்டு நடப்பு ஆண்டில் செயல்பட்டு வருகின்றன.

- மேலும் மண்டலம் 8 மெக்னிக்கல்ஸ் சாலையில் வீடற்ற திருநங்கைகளுக்கான காப்பகம் இவ்வாண்டு துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

- பொதுமக்களும் அனைவரும் பயன்பெறும் வகையில் சென்னை மாநகராட்சியில் நிகழ்ந்துள்ள அனைத்து பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் www.chennaicorporation.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதன் மூலம் பொதுமக்கள் பிறப்பு இறப்பு சான்றுகளை அவர்கள் வீட்டிலேயே, அல்லது வீட்டின் அருகாமையில் உள்ள கணினி மையத்திலோ எந்த நேரத்திலும் அலைச்சல் இன்றி பதிவிறக்கம் செய்து கொள்ள இயலும்.

- சென்னை மாநகராட்சி பகுதிகளில் இறந்தவர்களின் உடலை புதைப்பதற்கான அல்லது எரிப்பதற்கான சேவை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு முற்றிலும் இலவசமாக்கப்பட்டுள்ளது.

- தீவிர காசநோய் உடைய நோயாளிகளுக்கு ஊட்டச்சத்துள்ள உணவு பொட்டலங்கள் வழங்கும் திட்டம் இவ்வாண்டு 2017 ஏப்ரல் மாதம் முதல் சென்னை மாநகராட்சியில் புளியந்தோப்பு மற்றும் திருவான்மியூர் ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு 150 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

- தமிழகத்தில் செயலில் நோய் கண்டறிதல் திட்டத்திற்காக மத்திய காச நோய் மையத்தால் பெருநகர சென்னை மாநகராட்சி தேர்ந்தெடுக்கப்பட்டது. இத்திட்டம் முதல் கட்டமாக மே மாதம் 2017இல் சுனாமி குடியிருப்பு பகுதியில் செயல்படுத்தப்பட்டு 18,018 பேரில் 5 நோயாளிகள் கண்டறியப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. இதில் இரண்டாம் கட்டமாக ஜூலை முதல் ஆகஸ்ட் மாதம் செயல்படுத்தப்பட்டு 10,69,367 பேரில் 141 நோயாளிகள் கண்டறியப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

- காசநோயில்லா சென்னை என்னும் புதிய திட்டம் அக்டோபர் 2017 முதல் மாண்புமிகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவங்கப்பட்டது.

- காசநோய் உள்ளதை துரிதமாக கண்டறிய சென்னை மாநகராட்சியில் 15 மண்டலங்களிலும்

தலா ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தில் CBNAAT என்ற இயந்திரம் நிறுவப்பட்டு, இதன் மூலம் 370 சளி மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளது. இதில் 230 நபர்களுக்கு காசநோய் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

- காசநோய் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.
- காசநோய் பாதிப்பு உள்ளவர்களை முறையான சிகிச்சை பெறாமல் இருப்பவர்களை கண்டறிந்து தொடர் சிகிச்சை அளிப்பதற்கு இத்திட்ட மேற்பார்வையாளர்களுக்கு 44 இருசக்கர வாகனம் 22.11.2017 அன்று வழங்கப்பட்டுள்ளது.
- கொசுக்களால் பரவும் நோய்கள் அவற்றை தடுக்கும் முறைகள் குறித்து பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு விளக்கப்பட்டு, சுமார் 7 இலட்சம் சுகாதார தூதர் அட்டைகள் வழங்கப்பட்டு சுகாதார தூதுவர்களாக மாணவ, மாணவிகள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.
- பொதுமக்கள் அனைவருக்கும் கொசுக்கள் உருவாகும் விதம் அதனை தடுக்கும் முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வண்ணப்படத்துடன் கூடிய விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டு துண்டு பிரசுரங்கள் 2 இலட்சம் அச்சிடப்பட்டு, பொதுமக்கள் பெருவாரிய கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், குடிசைப் பகுதிகள் அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் பேருந்து பல இடங்களில் ஒட்டப்பட்டு தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.
- லயன்ஸ் கிளப் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி இணைந்து கடந்த 07.09.2017 அன்று முதல் மண்டலம்–9, சி.பி.ராமசாமி சாலையில் சர்க்கரை நோய் கண்டறிவதற்கான மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- சென்னை பெருநகரில் எதிர்மறை சவ்வூடு பரவுதல் (Reverse Osmosis) மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை தாங்களும் பருக வேண்டும் என்று ஏழை எளிய மக்களின் விருப்பத்திற்கிணங்க "அம்மா குடிநீர் திட்டம்" என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- முதற்கட்டமாக 20 இடங்களில் 2016ஆம் ஆண்டு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நிலையங்கள் ரூ.2.34 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக 30 இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் 04.03.2017 அன்று ரூ.2.96 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மணிக்கு 2,000 லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்டதாக இருக்கும். மக்களின் தேவைக்கேற்ப இதன் உற்பத்தி திறன் மேலும் அதிகரிக்கப்படும்.
- மேலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஆய்வகங்கள் மூலம் பரிசோதிக்கப்பட்டு அதன் தரம் உறுதி செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு விலை ஏதுமின்றி சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நாளொன்றுக்கு 20 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் ஏழை எளிய மக்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தானியங்கி நிலையத்தில் எளிதில் குடிநீர் பெறும் வகையில் ஸ்மார்ட் கார்டு (Smart Card) மூலம் குடிநீர் பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின் மூலம் 50 இடங்களில் 26.12.2017 வரை நாளொன்றுக்கு 20 லிட்டர் வீதம் மொத்தம் 7.87 கோடி லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.
- சென்னை மாநகராட்சி பகுதிகளில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்காத வண்ணம் சிறந்த வடிகால் வசதிகளை ஏற்படுத்தி வெள்ளப் பெருக்கினால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பினைத் தடுக்க ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்காக ரூ.4,034 கோடி மதிப்பீட்டில் ஒரு விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக, சென்னை மாநகராட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு 1,101 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அடையாறு மற்றும் கூவம் ஆறுகளின் வடிநிலத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- கோவளம் வடிநிலப்பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்கு ரூ.1,243.15 கோடிக்கான விரிவான திட்ட அறிக்கைக்கான பணிகள் கே.எப்.டபிள்யூ (KfW) என்ற ஜெர்மன் நாட்டு வங்கி உதவியுடன் செயலாக்கப்படும். தற்பொழுது KfW நிறுவனம் M1 மற்றும் M2 திட்ட கூறுகளுக்கு திருத்திய திட்ட மதிப்பீடு தயாரிக்க கலந்தாலோசகர் நியமிக்கப்பட்டு ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், M3 திட்ட கூறுக்கு திருத்திய திட்ட மதிப்பீடு முடிவடையும் நிலையில் உள்ளது. இதனால் மண்டலம் – 12 (ஆலந்தூர்), 14 (பெருங்குடி) மற்றும்

15, (சோழிங்கநல்லூர்) பகுதிகளில் வாழும் 15 இலட்சம் பொதுமக்கள் பயன்பெறுவார்கள்.

- கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் திட்டத்தினை செயலாக்க இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.1,881.66 கோடியாகும். இதற்கான நிதி உதவி பெற முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு திருத்திய திட்ட மதிப்பீடு தயாரிக்க கலந்தாலோசகர் TNUIFSL மூலம் நியமிக்கப்பட்டு ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு திருத்திய திட்ட மதிப்பீடு முடிவடையும் நிலையில் உள்ளது. மேலும் தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு இந்த பணி K1 முதல் K6 என ஆறு சிப்பமாக பிரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் முடியும்போது மண்டலம்– 1. திருவொற்றியூர், 2. மணலி 3. மாதவரம் 4. தண்டையார்பேட்டை 5. இராயபுரம் 6. கொளத்தூர் மற்றும் 7. அம்பத்தூர் ஆகிய பகுதிகளில் வாழும் சுமார் 30 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

- சென்னை மாநகரில் ''நீடித்த நிலையான குடிநீர் பாதுகாப்பு இயக்கம்'' ரூ.5 கோடி செலவினத்தில் நிறைவேற்றப்படும்.

- இந்த நீடித்த நிலையான குடிநீர் பாதுகாப்பு இயக்கத் திட்டத்தினை செயலாக்க சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியம் (Chennai Metropolitan Water Supply and Sewerage Board) பொறுப்பு வகிக்கின்றது.

- இந்த திட்டத்தின் கீழ் வளாக மழைநீர் சேகரிப்பு திட்டங்கள், பயன்படுத்திய நீரினை மறுசுழற்சி செய்தல், மழைநீர் சேகரிப்பு திட்டங்கள், கோவில் குளங்கள், ஏரிகள் மற்றும் குளங்களை புனரமைத்தல் ஆகிய பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

- ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டும் திட்டத்தின் கீழ் தரைமட்ட மழைநீர் சேகரிப்பு கிணறுகள் (sunken wells) பூங்காக்களிலும் மற்றும் திறந்த வெளி நிலங்களிலும் மற்றும் விளையாட்டு திடல்களிலும் அமைக்கப்பட்டு வருகின்றன.

- 15 எண்ணிக்கை கோவில் குளங்களை புனரமைக்க விரிவான திட்ட அறிக்கையினை தயாரிக்க 2016–2017ஆம் நிதியாண்டில் கலந்தறிவாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர். மேலும் ரூ.2.03 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நிதியுதவி வேண்டி தமிழ்நாடு நகர்புற நிதி சேவை நிறுவனத்திற்கு (Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited (TNUIFSL) அனுப்பப்பட்டுள்ளது. 32 ஏரிகள் / குளங்களை புனரமைக்க கலந்தறிவாளர்கள் விரிவான திட்ட அறிக்கையினை சமர்ப்பித்துள்ளனர். மேலும் இப்பணிக்காக ரூ.13.65கோடிக்குமதிப்பீடுகள்தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த 32 ஏரி/குளங்களில் 5 ஏரி/குளங்களை புனரமைக்கும் பணி சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தினால் செயலாக்கப்படும். எஞ்சிய 27 ஏரிகள்/குளங்களை புனரமைக்கும் பணி சென்னை மாநகராட்சியினால், ஸ்மார்ட் சிட்டி நிதியில், ஸ்மார்ட் சிட்டி வாரியத்தின் அனுமதி பெற்ற பிறகு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

- இது தவிர 24 ஏரிகள்/குளங்களை புனரமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கையினை தமிழ்நாடு நகர்புற நிதி சேவை நிறுவனம் தயாரித்து வருகிறது.

- சென்னை மாநகராட்சி பராமரித்து வரும் 30 சிறிய கால்வாய்களில் நவீன இயந்திரங்கள் மூலம் தூர்வாருதல் மற்றும் ஆகாயத்தாமரைகளை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- இதற்காக நீரிலும் மற்றும் நிலத்திலும் இயங்கக்கூடிய இயந்திரம் (Amphibian machine) பின்லாந்து நாட்டிலிருந்து ரூ.4.10 கோடி செலவினத்தில் கொள்முதல் செய்யப்பட்டு, கேப்டன் காட்டன் கால்வாய், வடக்கு பக்கிங்ஹாம் கால்வாய், வேளச்சேரி ஏரி, அடையாறு ஆறு மற்றும் ஓட்டேரி நல்லா ஆகிய இடங்களில் ஆகாய தாமரை அகற்றும் பணி மற்றும் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டு இதுவரை 4,233 மெட்ரிக் டன் ஆகாயத்தாமரை மற்றும் தூர்அகற்றப்பட்டுள்ளது.

- மூன்று ரோபாட்டிக் நவீன இயந்திரங்கள் ரூ.19.65 கோடி செலவினத்தில் ஜெர்மன் நாட்டிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு இந்த இயந்திரங்கள் மூலம் மாம்பலம் கால்வாய், நுங்கம்பாக்கம் கால்வாய், எம்.ஜி.ஆர். கால்வாய், டிரஸ்ட்புரம் கால்வாய், கொடுங்கையூர் கால்வாய், வியாசார்பாடி கால்வாய், ஏகாங்கிபுரம் கால்வாய், பாடிக்குப்பம் கால்வாய், கிண்டி தொழிற்பேட்டை கால்வாய் ஆகிய கால்வாய்களில் ஆகாயத் தாமரை மற்றும் தூர் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு இதுவரை 5,201 மெட்ரிக் டன் தூர் மற்றும் ஆகாயத் தாமரை அகற்றப்பட்டுள்ளன.

- 2 எண்ணிக்கையிலான 5 மெட்ரிக் டன் கொள்ளளவான மின்சாரம் தயாரிக்கும் கலன்கள் பாபா அட்டாமிக் ரிசர்ச் சென்டர் தொழில்நுட்பத்தில் ரூ.1.8 கோடி மதிப்பீட்டில் பெரம்பூர், புளியந்தோப்பு இறைச்சிக்கூட வளாகத்தில் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

- கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் ரூ.3.60 கோடி மதிப்பீட்டில் சுற்று சுவர் கட்டும்பணி நடைபெற்று வருகிறது.

- தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனி குடியிருப்பு கழிவறைகள் இல்லதாவர்கள் 7,073 எண்ணிக்கை என மறு நிர்ணயம் செய்து 5,655 தனி குடியிருப்பு கழிவறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சமுதாய கழிவறைகள் 1,575 எண்ணிக்கை என மறு நிர்ணயம் செய்யப்பட்டு 981 எண்ணிக்கை இருக்கைகள் கொண்ட சமுதாய கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளது.

- திறந்தவெளி மலம் கழித்தலற்ற கோட்டங்களாக 200 கோட்டங்களும் என பெருநகர சென்னை மாநகராட்சியால் அறிவிக்கப்பட்டுள்ளது.

- சுமார் 150 எண்ணிக்கையிலான உரம் தயாரிக்கும், எரிவாயு மற்றும் மின்சாரம் தயாரிக்கும் கலன்கள் அமைக்கப்பட்டுள்ளது.

- தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் குப்பைகளை தரம் பிரிக்கும் கூடங்கள், பரவலாக்கப்பட்ட உரம் தயாரிக்கும் வசதிகள், சீவர் சக்கர், பெண்கள் உபயோகித்த நாப்கின் கழிவுகள் எரிக்கும் இயந்திரம் (Sanitary Napkin Vending Machines) ரூ.10.33 கோடி செலவினத்தில் மாநில அளவிலான உயர் மட்ட குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பரவலாக்கப்பட்ட உரம் தயாரிக்கும் வசதிகள், குப்பை தரம் பிரிக்கும் மையங்கள், 370 எண்ணிக்கை மூன்று சக்கர மிதிவண்டிகள், 599 எண்ணிக்கை காம்பெக்ட்டர் குப்பை தொட்டிகள் மற்றும் 6,000 எண்ணிக்கை மூன்று சக்கர மிதிவண்டிகளில் வைக்கும் குப்பை தொட்டிகள் ரூ.10.61 கோடி மதிப்பீட்டில் மாநில அளவிலான உயர் மட்ட குழுவின் ஒப்புதலுக்கு முன்மொழிந்துள்ளது.

## நகராட்சி நிருவாக ஆணையரகம்

- தமிழ்நாடு நகர்ப்புர சாலை உட்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் 2016–2017ஆம் ஆண்டில் 477.404 கி.மீ சாலைகளை சீரமைப்பதற்காக முதல் கட்டமாக ரூ.228 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 139 சிப்பங்களில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 65 சிப்பங்களின் பணிகள் ரூ.110.52 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது. பல்வேறு மாவட்டங்களில் ரூ. 15,048.33 இலட்சத்தில் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு 477 கிலோ மீட்டரில் சாலை சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன

- மேலும், இரண்டாம் கட்டமாக கூடுதலாக 422.75 கி.மீ சாலைகள் சீரமைக்க ரூ.93.68 கோடியில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 119 சிப்பங்களாக பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, இதில் 9 சிப்பங்கள் ரூ.9.10 கோடி மதிப்பிட்டில் 12.61 கிலோ மீட்டர் சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பல்வேறு மாவட்டங்களில் ரூ.9,368 இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 423 கிலோ மீட்டரில் சாலை சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன

- 2016–2017ஆம் ஆண்டில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்குதல் (ம) பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.133.74 கோடி மதிப்பிட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளது.

- அம்ருத் (AMRUT) திட்டத்தின் கீழ் 2015–2016ஆம் ஆண்டிற்கான திட்டத்தின் கீழ் ரூ.2,112.74 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாநகராட்சியில் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் கோயம்புத்தூர் ஈரோடு மதுரை, திருப்பூர், வேலுார் மாநகராட்சிகள் மற்றும் நாகர்கோவில், ஒசூர், ஆம்பூர் நகராட்சிகளில் தமிழ்நாடு குடிநீர் வழங்கும் வாரியம் மூலம் குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்த நடவடிக்கையில் உள்ளது.

- இராஜபாளையம் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்காக ரூ.172.70 கோடிக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது.

- பல்வேறு மாவட்டங்களில் ரூ.63.67 கோடி மதிப்பீட்டில் 90 பூங்காக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு 12 பூங்கா பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இதர 78 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

- அம்ருத் (AMRUT) திட்டத்தின் கீழ் 2016–2017ஆம் ஆண்டிற்கான திட்டத்தில் 4 குடிநீர் திட்டங்களும், 6 பாதாள சாக்கடை திட்டங்களும் மற்றும் 24 நகரங்களில் பூங்காமேம்பாட்டிற்கான பணிகளுக்கு ரூ.2,613.70 கோடி அனுமதிக்கப்பட்டு உயர் மட்ட குழு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

- **சீர்மிகு நகரங்கள் :** உலகத்தரம் வாய்ந்த நகரங்களை மக்களுடைய எண்ணங்களுக்கு ஏற்றவாறு அனைத்து வசதிகளுடன் நிர்மாணிக்க மத்திய அரசு சீர்மிகு நகரங்கள் என்னும் திட்டத்தை 25.06.2015 அன்று துவக்கியது.

- முதலாவது ஆண்டு நகரங்களுக்கிடையே சவாலான போட்டி (City Challenge Competition) என்னும் முறையில் தமிழகத்திற்கு சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. சிறப்பு தேவைக்கான அமைப்பு (SPV) நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் கண்டறியும் பணிகள் நடைபெற்று வருகிறது.

- தொடர்ச்சியாக, இரண்டாவது ஆண்டில் மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு சிறப்பு தேவைக்கான அமைப்பு (SPV) நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் கண்டறியும் பணிகள் நடைபெற்று வருகிறது.

- சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதி மற்றும் தூய்மை இந்தியா திட்ட நிதி உதவியுடன் 2016–2017ஆம் ஆண்டில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் 1 மாநகராட்சி மற்றும் 36 நகராட்சிகளில் ரூ.116.16 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது.

- தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2015–2016ஆம் ஆண்டில் 2,00,617 தனி குடியிருப்பு கழிவறைகள் கட்டவும் மற்றும் 2016–2017ஆம் ஆண்டின் கீழ் 2,184 இருக்கைகளுடன் சமுதாயக் கழிவறைகள் கட்டவும் மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி நிதி பங்களிப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தனிகுடியிருப்பு கழிவறைகளை பொருத்தவரை மொத்தம் 2,00,617 எண்ணிக்கைகளில் 1,65,789 முடிக்கப்பட்டு, எண்ணிக்கைகளில் முன்னேற்றத்தில் உள்ளது மற்றும் 19,666 எண்ணிக்கைகளில் பணி துவக்கப்பட உள்ளது.

- **சமுதாயக் கழிவறைகள்;** சமுதாய கழிப்பறைகளை பொருத்தவரை மொத்தமுள்ள 2,184 இருக்கைகள் கொண்ட 215 சமுதாய கழிப்பறை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு இதுவரை 131 எண்ணிக்கைகளில் பணி முடிக்கப்பட்டு 18 கழிப்பறை பணிகள் நடைபெற்று வருகிறது.

- **நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம் கட்டுதல் திட்டம்:** 3 PSC கூட்டங்கள் மூலம் NULM 2014–2015 கீழ் 141 உறைவிடங்கள் அனுமதிக்கப்பட்டது. விதி 110இன் கீழ் 2016–2017ஆம் ஆண்டு வெளிவந்த 23 சிறப்பு உறைவிடங்கள் மற்றும் பிற மாவட்டத்தில் 12 சிறப்பு உறைவிடங்கள் சேர்ந்த குறுகிய கால தங்கும் விடுதிகள் மாவட்ட மருத்துவ மனை மற்றும் மருத்துவ கல்லூரிகளில் கட்டுவதற்கும் 5 புதிய உறைவிடங்கள் மற்றும் 6 புதுப்பிக்கப்பட்ட உறைவிடங்கள் அமைக்க ரூ.44.60 கோடியில் திட்ட ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- இதுவரை 107 உறைவிடங்களில் 4,842 நபர்களுக்கு உறைவிடம் வழங்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன. 71 உறைவிடங்களில் கட்டடப்பணி முடிவு பெற்று எஞ்சியுள்ள 34 உறைவிடங்களில் பணி பல்வேறு நிலைகளில் உள்ளன.

- ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (Integrated Housing and Slum Development Programme (IHSDP) இத்திட்டத்தின் கீழ் ரூ.566.11 கோடி நிதி மதிப்பீட்டில் 94 திட்டங்கள் அனுமதிக்கப்பட்டு 37,715 குடியிருப்பு அலகுகளில் 37,108 குடியிருப்பு அலகுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன, மீதமுள்ள 607 குடியிருப்பு அலகுகளில் பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் உள்ளன.

## பேரூராட்சிகள் இயக்ககம்

- 2017–2018ஆம் ஆண்டில், நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.130 கோடி மதிப்பீட்டில் 268.28 கி.மீ நீளத்திற்கு 167 சாலைகள் அமைக்கும் பணிகளுக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, 19.01.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

- 2017–2018ஆம் ஆண்டில், மூலதன மானிய நிதி ஒதுக்கீட்டின் கீழ் 77 எண்ணிக்கையிலான பல்வேறு அடிப்படை கட்டமைப்பு பணிகள் ரூ.130.96 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ள நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, 10.01.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

- 2017–2018ஆம் ஆண்டில், இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு நிதி தலைப்பின் கீழ் 101 எண்ணிக்கையிலான, பல்வேறு அடிப்படை கட்டமைப்பு பணிகள் ரூ.57.62 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ள நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, 10.01.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.
- 2017–2018ஆம் ஆண்டில், தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்பு மேம்பாடு திட்டத்தின் கீழ், 279.54 கி.மீ நீளமுள்ள 209 பணிகள் ரூ.77.25 கோடி ஒதுக்கீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 12.12.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, பணியாணை வழங்குவதற்கு பரிசீலனையில் உள்ளது.
- 2017–2018ஆம் ஆண்டில், பேரூராட்சிகளில் திறந்தவெளியில் மலம் கழித்தலை அறவே நீக்கம் செய்திடும் பொருட்டு, 50,753 எண்ணிக்கையிலான தனிநபர் கழிப்பிடங்கள் 30 கோடியே 45 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டிலும் மற்றும் 2,791 இருக்கைகள் உள்ளடக்கிய சமுதாயக் கழிப்பிடங்கள் 20 கோடியே 51 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டிலும், பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- 2017–2018ஆம் ஆண்டில் 14ஆவது நிதிக்குழு மானிய தலைப்பின் கீழ் முதற்கட்டமாக ரூ.183.27 கோடி பேரூராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 2017–2018ஆம் ஆண்டில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 128 பேரூராட்சி பகுதிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிந்த 18,781 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு மத்திய மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் ரூ.394.40 கோடி ஒதுக்கீட்டில் பயனாளிகளால் கான்கீரிட் வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- பூங்கா மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 3 பூங்காக்கள் மேம்படுத்தும் பணி ரூ.0.41 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

- நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தை நெம்மேலியில் ரூபாய் 1,259.38 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு மத்திய அரசின் அனுமதியோடு ஜெர்மானிய மேம்பாட்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
- இதன் தொடர்ச்சியாக நிலைய கட்டுமான பணிக்கு 15.09.2017ஐ இறுதிநாளாக கொண்டு 5 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளன. குழாய் பதிக்கும் பணிக்கு 25.05.2017 ஐ இறுதி நாளாக கொண்டு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளது.
- 28.11.2017 அன்று புதுடில்லியில் நடைபெற்ற வல்லுனர் குழு கூட்டத்தில் மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகமானது இந்த 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு கடல்சார் ஒழுங்கு முறை ஆணையத்தின் இசைவு பெறுவதற்கு பரிந்துரை செய்துள்ளது. இதற்கான கடிதம் மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திடம் இருந்து எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த வருட கோடைக்காலத்தில் ஏற்பட்ட பற்றாக்குறையினை சமாளிக்க, சென்னை அருகில் குன்றத்தூர் அருகாமையில் உள்ள சிக்கராயபுரத்தில் உள்ள 22 உபயோகப்படுத்தாத குவாரிகளில் தேங்கி உள்ள சுமார் 3,000 மில்லியன் லிட்டர் நீர் கண்டறியப்பட்டு ஆய்வு செய்து, ஆய்வின் முடிவில் குடிநீருக்கு உகந்ததென அறியப்பட்டு செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வருவதற்கு தேவையான குழாய்கள் பதித்தல் மற்றும் பம்புகள் அமைப்பதற்கான பணிகளுக்கு ரூ.13.63 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன. இக்குவாரிகளிலிருந்து நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் நீர் கடந்த அக்டோபர் 2017 வரை சுத்திகரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது.
- குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க, போரூர் ஏரியிலுள்ள நீரை சுத்திகரிப்பு செய்து நாளொன்றுக்கு 4 மில்லியன் லிட்டர் வீதம் சென்னையின் குடிநீர் தேவைக்கு கொண்டு வருவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்று 11.07.2017 முதல் 04.11.2017 வரை குடிநீர் சுத்திகரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது. தற்போது போரூர் ஏரியிலிருந்து நாளொன்றுக்கு 4 மில்லியன் லிட்டர் வீதம் குடிநீரை சுத்திகரிப்பு செய்து அருகிலுள்ள பகுதிகளுக்கு (காரம்பாக்கம்) விநியோகிக்க திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- பொது மக்களின் பயன்பாட்டிற்காக ரூ.22.30 கோடியில் ஈஞ்சம்பாக்கம் குடிநீர் வழங்கல் திட்டம்,

ரூ.6 கோடியில் நந்தம்பாக்கம் குடிநீர் வழங்கல் திட்டம் மற்றும் ரூ.90.42 கோடியில் பூவிருந்தவல்லி புறவழி சாலை சந்திப்பிலிருந்து தாம்பரம் வரை 1,200 மி.மி விட்டமுள்ள பிரதான குடிநீர் குழாய் பதிக்கப்பட்ட திட்டம் போன்ற குடிநீர் வழங்கல் திட்டங்கள் துவக்கிவைக்கப்பட்டு சுமார் 7.75 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள்.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

- புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 1,751 ஊரக குடியிருப்புகள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் பேரூராட்சிக்கான பெரிய கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.315.70 கோடி மதிப்பீட்டில் 6.35 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 1,766 ஊரக குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்திலுள்ள புதூர் மற்றும் சாக்கோட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 125 ஊரகக் குடியிருப்புகளுக்கான பெரிய கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.301.50 கோடி மதிப்பீட்டில் 5.54 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பேராவூரணி, அதிராமப்பட்டிணம், பெருமகளூர் ஆகிய 3 பேரூராட்சிகள் மற்றும் 1,153 ஊரகக் குடியிருப்புகளுக்கான பெரிய கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.495.70 கோடி மதிப்பீட்டில் 5.82 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- கடலூர் மாவட்டத்தில் உள்ள, கடலூர் நகராட்சி, புவனகிரி , பரங்கிப்பேட்டை ஆகிய 2 பேரூராட்சிகள் மற்றும் 812 ஊரக குடியிருப்புகளுக்கான பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் (பகுதி–1) ரூ.260.54 கோடி மதிப்பீட்டில் 7.75 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டு தற்போது சோதனை ஓட்டத்தில் உள்ளது.
- திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு அருகிலுள்ள இராதாபுரம் மற்றும் வள்ளியூர் ஒன்றியங்களைச் சார்ந்த கூடங்குளம் மற்றும் 12 ஊராட்சிகளில் உள்ள 100 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.68.10 கோடி மதிப்பீட்டில் 0.89 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது
- திருப்பூர் மாவட்டத்தில் உள்ள குடிமங்கலம் மற்றும் உடுமலைப்பேட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 158 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.54.14 கோடி மதிப்பீட்டில் 1.35 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது
- கடலூர் மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோவில் ஒன்றியத்தைச் சார்ந்த குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 60 குடியிருப்புகள், 59 வழியோரக் குடியிருப்புகள் மற்றும் லால்பேட்டை பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.18.16 கோடி மதிப்பீட்டில் 0.65 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது
- ஆரணி, கம்பம், பழநி நகராட்சிகள் மற்றும் திருக்கழுகுன்றம், பொத்தனூர் பேரூராட்சிகளுக்கு தனியான குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் மொத்தமாக ரூ.91.30 கோடி மதிப்பீட்டில் 2.50 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- அரியலூர், பெரம்பலூர் நகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டங்கள், கிருஷ்ணகிரி நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் கருங்குழி பேரூராட்சி கசடு மேலாண்மைத்திட்டம் ஆகியவை மொத்தமாக ரூ.55.18 கோடி மதிப்பீட்டில் 0.87 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- வறட்சிக்காலத்தில் ஏற்பட்ட மற்றும் எதிர்நோக்கும் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கி குடிநீர் வழங்கும் பொருட்டு மாநில / மத்திய அரசு நிதி உதவியுடன் ரூ.121.18 கோடி மதிப்பீட்டில் 2,282 நீர் ஆதார மேம்பாட்டு பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, கூடுதலாக நாளொன்றுக்கு 93 மில்லியன் லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.
- ஒகி புயலால் கன்னியாகுமரி மற்றும் திருநெல்வெலி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட 12 கூட்டு குடிநீர் திட்டங்கள் மற்றும் 25 கூட்டு குடிநீர் திட்டங்கள் போர்க்கால நடவடிக்கையின் காரணமாக மூன்றே நாட்களில் ரூ.81.40 இலட்சம் செலவில் தற்காலிகமாக சீரமைக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

❖ ❖ ❖

# பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை



- அண்ணா மேலாண்மை நிலையத்தால் நடத்தப்பட்ட 317 பயிற்சி வகுப்புகளில் 11,555 அரசு அலுவலர்கள் பயிற்சிப்பெற்று பயனடைந்துள்ளனர்.

- பொருளாதாரத்தின் மிகவும் பின்தங்கிய மாணவர்கள் பல்வேறு முகமைகள் அதாவது பணியாளர் தேர்வு வாரியம், இரயில்வே தேர்வு வாரியம், வங்கிகள் தேர்வு, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தொகுதி–II மற்றும் தொகுதி–IV ஆகிய போட்டி தேர்வுகளில் பங்கு பெறுவதற்கு சர் தியாகராய கல்லூரி வளாகம், சென்னை–21இல் ஒரு பயிற்சி நிலையம் தொடங்குவதற்கு ரூ.1,53,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையம் 04.01.2018 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

- அகில இந்திய குடிமைப்பணிகள் பயிற்சி மையம் மூலம் மீனவ சமுதாயத்தை சேர்ந்த 20 பட்டதாரி இளைஞர்களுக்கு மத்திய பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குடிமைப்பணி முதல்நிலை தேர்வினை எதிர்கொள்ளுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

- அகில இந்திய குடிமைப்பணிகள் பயிற்சி மையம் மூலம் முதனிலைப் பயிற்சிக்கான நுழைவுத் தேர்வின் விண்ணப்பங்கள், 2017இல் முதன்முறையாக இணையதளம் மூலம் பெறப்பட்டன. இது மாணவர்களிடையே பெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நடப்பு ஆண்டில் 16,268 விண்ணப்பங்கள் இணையதளத்தின் வாயிலாகப் பெறப்பட்டன.

- அகில இந்திய குடிமைப்பணிகள் பயிற்சி மையத்தில் பயிற்சி மேற்கொள்ளும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் சிறப்பு உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.5,66,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- அடிப்படைப் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களின் நலன் கருதி அரசு அலுவல பயிற்சி நிலையம் பவானிசாகரில் ஏற்கெனவே பயிற்சி அளிக்கப்பட்டு வந்த ஒரு அணிக்கு 400 நபர்களுக்கு பதிலாக தற்போது அதனை 685 ஆக உயர்த்தியும், அதற்காக ரூ.43,47,600/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்**

- தமிழ்நாடு அரசு 21.02.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தொகுதி–4 பணிகளுக்கான தேர்வில் 5,451 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 24.04.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட இளநிலை அறிவியல் அலுவலர் பணிகளுக்கான தேர்வில் 30 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 26.04.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட உதவி சிறை அலுவலர் பணிகளுக்கான தேர்வில் 104 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 27.04.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர் பணிகளுக்கான தேர்வில் 9 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 22.05.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட மீன்வளத்துறை உதவி இயக்குநர் பணிகளுக்கான தேர்வில் 11 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 02.06.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட பணிகளுக்கான தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைய ஆட்சித்துறையில் செயல் அலுவலர் III தேர்வில் ஒரு நபர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 14.06.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட வட்டார சுகாதார புள்ளியிலாளர் பணிகளுக்கான தேர்வில் 171 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 11.09.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தொகுதி 1 பணிகளுக்கான தேர்வில் 74 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 27.09.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட மீன்துறை சார் ஆய்வாளர் மற்றும் கடல் முதல்வர் பணிகளுக்கான தேர்வில் 16 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 26.10.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட சோதனையாளர் மற்றும் உதவி சோதனையாளர் பணிகளுக்கான தேர்வில் 11 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 09.11.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட கைத்தறி மற்றும் நெசவுத்துறை உதவி இயக்குநர் பணிகளுக்கான தேர்வில் 12 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 09.11.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட சிறை அலுவலர் பணிகளுக்கான தேர்வில் 6 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 28.11.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட உதவி பணி மேலாளர் தமிழ்நாடு எழுது பொருள் மற்றும் அச்சு பணிகளுக்கான தேர்வில் 3 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 22.11.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட சமூக ஆய்வு பணி நிபுணர், தமிழ்நாடு சிறைத்துறை சார்நிலைப்பணிகளுக்கான தேர்வில் 3 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 5,902 பேர் பல்வேறு பணிகளுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

❖ ❖ ❖

**“நம் நாடு, வளர்ச்சி மற்றும் பொருளாதார வெற்றியின் பலன்கள் அனைத்துப் பகுதிகளுக்கும், அனைத்து சமூக–பொருளாதார பிரிவினருக்கும் கிடைக்கும் வண்ணம், உயர் நடுத்தர பொருளாதார நிலையினை** (Upper Middle Income) **அடைந்திட வேண்டும்.”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை




**சென்னை மெட்ரோ இரயில் திட்டம்**

- சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–Iஇன் கீழ் அனைத்து உயர்த்தப்பட்ட வழித்தடங்களில் பயணிகள் சேவை நடைபெற்று வரும் நிலையில், கோயம்பேடு முதல் நேரு பூங்கா வரையிலான (7.4 கி.மீ.) முதல் சுரங்க வழித்தடப் பகுதியில் 14.05.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பயணிகள் சேவை துவக்கி வைக்கப்பட்டது.

- சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–I ஐ வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர்/ விம்கோ நகர் வரை (9 கி.மீ.) நீட்டிப்பதற்கான திட்டப் பணிகள் மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்களால் 23.07.2016 அன்று துவக்கி வைக்கப்பட்ட கட்டுமானப் பணிகள் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

- சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–II இன் கீழ் மொத்தம் 107.55 கி.மீ. நீளத்திலான 3 வழித்தடங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைக்கு 13.04.2017இல் ஒப்புதல் வழங்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல், நிதியுதவி மற்றும் ஜப்பான் கூட்டுறவு முகமையின் கடனுதவி பெறுவதற்காக மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

- சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–II இல் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஒரு வழித்தடமான, வழித்தடம் 4 ஐ வடபழனி, போரூர் வழியாக பூந்தமல்லி வரை நீட்டிப்பு செய்ய மாநில அரசு முடிவு செய்து, விரிவான துணை திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

- கோயம்புத்தூர் மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்துவதற்கு அரசு முடிவு செய்து, அதற்கான விரிவான சாத்தியக்கூறு / திட்ட அறிக்கையை தயாரிக்கும் பணியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

## மாநில திட்டக்குழு

**தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்**

- மாநில திட்டக் குழு 2017–2018ஆம் ஆண்டின் இரண்டாம் சுற்று மதிப்பீட்டில் 39 திட்டங்கள் ரூ.87.57 கோடி மதிப்பில் மூன்றாண்டுகளுக்கு மாநில புதுமை நிதியின் கீழ் பரிந்துரை செய்துள்ளது. 2017–2018ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு ரூ.80.64 கோடி. வேளாண்மை மற்றும் சார்ந்த துறைகள், கல்வி, காடுகள் மற்றும் சுற்றுச்சூழல், போக்குவரத்து, தொழில்கள், தகவல் தொழில் நுட்பம், பொதுசுகாதாரம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, சமூகநலம் மற்றும்

சத்துணவுத் திட்டம், மாற்றுத் திறனாளிகள் நலன் ஆகிய துறைகள் சார்ந்ததாகும்.

**மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி**

இக்காலத்தில், மொத்ததிட்டத் தொகையான ரூ.45.72 கோடிகளில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.44.93 கோடி மதிப்பீட்டில் 50 திட்டங்களுக்கு மாநில திட்டக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் வருமானத்திற்காக ரூ.0.60 கோடியும், வறுமை ஒழிப்பிற்காக ரூ.2.23 கோடியும், வேலைவாய்ப்பு மேம்பாட்டிற்கென ரூ.1.10 கோடியும், கல்வி மேம்பாட்டிற்கு ரூ.2.31 கோடியும் மற்றும் நலவாழ்விற்கு ரூ.38.59 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நிலப் பயன்பாடு ஆராய்ச்சி வாரியம்**

- தமிழ்நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்திற்காக ரூ.79.99 இலட்சம் ஆராய்ச்சி ஆய்வுகளுக்காகவும் மற்றும் அச்சகச் செலவிற்காக ரூ.2.46 இலட்சங்களும் 2017–2018ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2017–2018ஆம் ஆண்டில் ரூ.66.45 இலட்சத்தில் மூன்று புதிய ஆராய்ச்சி ஆய்வுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்த ஆராய்ச்சிகளின் தலைப்பு மற்றும் நோக்கங்கள் பின்வருமாறு: 1) சிறப்புப் பகுதிமேம்பாட்டுத் திட்டத்திற்கான நிலஅளவு மற்றும் நிலமேற்பரப்பு வரைபடம் தயாரித்தல் 2) தமிழ்நாட்டில் உள்ள சதுப்பு நில புவிசார் வரைபடம் தயாரித்து அதன் மூலம் முன்னுரிமை வரையறுத்தல், சதுப்புநிலங்களின் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு கட்டமைப்பை மேம்படுத்துதல் 3) சென்னை பெருநகருக்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற இடர்பாடு சூழ்நிலைகளை தக்கதூண்டுதல் மற்றும் உத்திகள் வழியாக கையாள ஒரு நிருவாக தளம் அமைத்தல்.

**சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்டம்**

- சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்டத்திற்காக மாநில அளவிலான தொழில்நுட்ப குழு தமிழ்நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சிவாரியத்தின் கீழ் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- இரண்டாவது மாநில அளவிலான அதிகாரக் குழுக்கூட்டத்தில் 404 திட்ட முன்மொழிவுகள் ரூ.75.615 கோடி தொகைக்கும் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் சம்பந்தப்பட்ட துறைகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை**

- மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் தீர்மானிக்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறும் வகையில் மாநில அரசு இத்திட்டங்கள் செயல்படுத்தி வருகிறது. மதிப்பீட்டு ஆய்வுகளை முறைபடுத்தி மதிப்பீட்டாய்வு செய்து ஆய்வு அறிக்கைகளின் ஆதார முடிவுகள், கொள்கை முடிவுகள் எடுப்பதற்கும், திட்டங்களை மேலும் பயனுள்ள வகையில் செம்மைப்படுத்துவதற்கும் ஆலோசனைகளை அரசுக்கு இத்துறை வழங்கி வருகிறது.
- மேலும் இத்துறையின் மூலம் தமிழ்நாடு பொருளாதார ஆய்வு அறிக்கை ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படுகிறது. இத்துறையின் ஆராய்ச்சி உதவியாளர்களுக்கு ஒரு மாத கால திறன் மேம்பாட்டுப் பயிற்சி அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனத்தால் அளிக்கப்பட்டது. மேலும் இத்துறையின் மூலம் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் நிதியினை பயன்படுத்தி காகிதம் இல்லா வகையில் மின்னணு முறையில் விவரங்கள் சேகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- இத்துறையின் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்தில் உள்ள புதிய பயனாளிகளின் உண்மை விவரத்தை உறுதி செய்வது குறித்து மதிப்பீட்டாய்வு மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆக்கிரமிக்கும் அந்நியக் களைகளை உள்நாட்டு தாவரங்கள் வளர்ப்பதன் மூலம் பரவாமல் தடுப்பதால் ஏற்படும் பயன்பாடு குறித்த மதிப்பீட்டாய்வு, மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தோட்டக்கலைத் துறையின் மூலம் வழங்கப்படும் திட்டங்கள் குறித்த மதிப்பீட்டாய்வு மற்றும் பல்வேறு நிறுவனங்களின் மூலம் நடத்தப்படும் குழந்தைகள் சேவை மையத்திலுள்ள குழந்தைகளின் நலன் மற்றும் முன்னேற்றம் குறித்து மதிப்பீட்டாய்வு செய்து, அறிக்கைகள் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- மேலும் தமிழ்நாட்டில் திருமாங்கல்யம் திட்டத்தின்கீழ் தாலிக்குத் தங்கம் (விலையில்லா தங்க நாணயம்) வழங்கப்படுவது குறித்த மதிப்பீட்டாய்வு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம் குறித்த ஆய்வு, நீர் பாதுகாப்பு மற்றும் விதான மேம்பாட்டுத் திட்டம் குறித்த ஆய்வு மற்றும் பள்ளிகளின் கல்வித் தர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு ஆய்வு போன்றவை ஆய்வுகள் அரசின் மூலம் தெரிவு செய்யப்பட்ட வெளி மதிப்பீட்டாய்வு நிறுவனங்கள் மூலம் இத்துறையின் மேற்பார்வையில் மதிப்பீட்டாய்வுகளை செய்து வருகிறது.



**சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

- சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டமானது 2015–2016ஆம் ஆண்டில் தமிழக அரசால் அறிமுகம் செய்யப்பட்டது. 2016–2017ஆம் நிதி ஆண்டு முதல் அலகு – 1 நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு நான்கு மாவட்டங்களிலும் அலகு – 2 மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 6 மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் அலகுவாரியாக கீழ்கண்டவாறு சாதனைகள் எய்தப்பட்டுள்ளது.

**அலகு – 1, உதகமண்டலம்**

- பழங்குடியினரின் பாரம்பரியம் மற்றும் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு ரூ.14.50 கோடியில் உதகை அரசு தாவரவியல் பூங்கா செல்லும் சாலையில் பழங்குடியினர் பண்பாட்டு மையம் நிறுவப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

- நீலகிரி மாவட்டத்தில் தொலைவில் உள்ள மலைப்பகுதிகளில் மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்காக ரூ.544.613 இலட்சத்தில் அப்பகுதிகளில் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், தற்பொழுது ரூ.300.100 இலட்சம் அப்பகுதிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2017 மலர்கண்காட்சியின் போது அறிவித்தவாறு உதகமண்டலம் மத்திய பேருந்து நிலைய பராமரிப்பிற்கென ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- உதகை படகு இல்லத்தில் விரவிய காற்றோட்ட அமைப்பு தொடர்பான பணிகளுக்கு ரூ.5.49 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காதி மற்றும் கிராம தொழில் வாரியத்தின் மூலம் கிராமபுர மக்கள் பயன்பெறும் வகையில் உதகை கதர் வாரியத்திற்கென ரூ.41.150 இலட்சமும், திருப்பூர் கதர் வாரியத்திற்கென ரூ.123.680 இலட்சமும், ஈரோடு கதர் வாரியத்திற்கென ரூ.121.330 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் (தோட்டக்கலைத் துறை) மருத்துவ தாவர நாற்றுகளின் ஆராய்ச்சி க்கென ரூ.19.250 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நிறைவடைந்துள்ளது. மேலும், ரூ.2 கோடி மதிப்பீட்டில் விவசாயிகளுக்கு கலப்பின மற்றும் உயர் விளைச்சல் தரும் காய்கறி விதைகளை 50 சதவிகித மானிய விலையில் வழங்கிட தோட்டக்கலை துறையின் மூலம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



- இத்திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டம் தாளவாடி பைனாபுரத்தில் விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு ரூ.2 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டி பாசன வசதி செய்யும் பணி நடைப்பெற்று வருகிறது.

- இத்திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைமலை பகுதியில் உள்ள பழங்குடியினர் கிராமத்திற்கு சூரிய சக்தியிலான மின்விளக்கு மற்றும் தெரு விளக்கு அமைக்க ரூ.53.900 இலட்சம் ஒதுக்கீது செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- உதகமண்டலத்தில் உள்ள மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட விளையாட்டு அரங்கத்தில் விளையாட்டு வீரர்களின் மேம்பாட்டிற்கென ரூ.2.05 கோடியில் செயற்கை தடகள பாதை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- இத்திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டம் தாளவாடி வட்டாரத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் விவசாயிகள் பயிற்சி மையம் மற்றும் கால்நடை ஆய்வகம் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.

**அலகு – 2, மாநில திட்டக்குழு, சென்னை.**

- இத்திட்டத்தின் கீழ் மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களுக்கு மண்வளம் மற்றும் நீர் பாதுகாப்பிற்காக தடுப்பணை கட்டுவதற்கு முறையே ரூ. 45.60 இலட்சம் மற்றும் ரூ.2.82 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த மலைவாழ் பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் வளர்ச்சிக்காக தேவைப்படும் இடங்களில் புது வீடு கட்டுதல், பள்ளிக்கூடம் அமைத்தல், சமுதாயக்கூட அமைத்தல், சாலை அமைத்தல், மின்வசதி மற்றும் குடிநீர் வசதி அமைத்தல் போன்ற பணிகளுக்காக ரூ.4.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- திருநெல்வேலி மாவட்டத்தில் மேல் அணை பாபநாசத்திலுள்ள அரசு பழங்குடியினருக்கான பள்ளிக் கட்டிடத்திற்கு கூடுதல் வகுப்பறை கட்டித் தருதல், கழிப்பறை கட்டித் தருதல், சூரிய ஒளி மின் வசதி மற்றும் குடிநீர் வசதி செய்தல் போன்ற பணிகளுக்காக ரூ.37.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- மண்பாண்டம் செய்யும் குயவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக அவர்களின் சங்கத்திற்கு விற்பனை மற்றும் பணிமனை கட்டித்தர ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- குடிநீர் வசதிக்காக களக்காடு ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட பல்வேறு பஞ்சாயத்துகளில் புது ஆழ்குழாய் கிணறு அமைத்தல் மற்றும் பம்பு வசதி செய்து தருதல் பணிகளுக்காக ரூ.67.7 இலட்சமும் மற்றும் கீழப்பாவூர், மணிமுத்தாறு, அச்சன்புதூர் மற்றும் திருவேங்கடம் பேரூராட்சிகளில் ரூ.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- வனம் மற்றும் சுற்றுச்சுழல் பாதுகாப்பிற்காக தடுப்பணை கட்டுதல், விஷ செடிகளை அகற்றுதல், வன உயிரின வளர்ச்சிக்காக மரம் நடுதல் போன்ற பணிகளுக்காக ரூ.1.605 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

❖ ❖ ❖



**விடுதலைப் போராட்ட வீரர்களின் நலன்**

- விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியம் ரூ. 12,000/– லிருந்து ரூ. 13,000/– ஆகவும், குடும்ப ஓய்வூதியம் ரூ. 6,000/– லிருந்து ரூ. 6,500 /– ஆகவும் உயர்வு.

- வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள், மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள், முன்னாள் இராமநாதபுர மன்னர் முத்துராமலிங்க விசய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் மற்றும் வ.உ.சிதம்பரனார் அவர்களின் நேரடி வாரிசுப் பேரனின் மனைவி ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஓய்வூதியம் ரூ. 6,000/– லிருந்து ரூ.6,500/– ஆக உயர்வு.

**பொது (முன்னாள் படை வீரர் நலத்துறை**

- போர் மற்றும் போர் பணியின் போது உயிர்நீத்த படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. சிறப்பு நேர்வு மூலம் இக்கால கட்டத்தில் 13 நபர்கள் கருணை அடிப்படையில் நியமனம் பெற்றுள்ளார்கள்.

- முன்னாள் படை வீரர்களின் பிள்ளைகளுக்கு இளங்கலை / முதுகலை படிப்புகளுக்கு ரூ.2,500/–லிருந்து ரூ.10,000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் தொழில்சார்ந்த கல்வி பட்ட படிப்புகள், பட்ட மேற்படிப்புகள், பல்தொழில்நுட்ப பயிலக படிப்புகள், தொழில்பயிற்சி படிப்புகளுக்கு முறையே ரூ.14,000/–லிருந்து ரூ.25,000/– ஆகவும், ரூ.11,500/–லிருந்து ரூ.20,000/– ஆகவும், ரூ.2,500/– லிருந்து ரூ.10,000/– ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரை சார்ந்தோர்க்கு மருத்துவ நிவாரண நிதியுதவியாக மாதந்தோறும் கண்பார்வையற்றோர், புற்றுநோயால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு வழங்கப்படும் தொகை ரூ.1,500/–லிருந்து ரூ.3,000/– ஆகவும் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டோர், காசநோயாளிகள் மற்றும் உடல் ஊனமுற்றோர் ஆகியோர்களுக்கு வழங்கப்படும் தொகை ரூ. 1,500/– லிருந்து ரூ. 2,500/– ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மனவளர்ச்சி குன்றிய சிறார்களுக்கு ரூ. 1,500 லிருந்து ரூ. 3000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மாதாந்திர

முதியோர் ஓய்வூதியம் ரூ. 1,500/– லிருந்து ரூ. 2,500/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- பள்ளி மாணவர்கள் ராஷ்ட்ரிய இந்திய இராணுவ கல்லூரி, சைனிக் பள்ளி மற்றும் தேசிய பாதுகாப்பு கல்வி மையத்தில் (NDA) சேர்க்கை பெற்று படை அலுவலராக தேர்வாகவும், கல்லூரி மாணவர்கள் தேசிய பாதுகாப்பு கல்வி மையம் (NDA) மற்றும் அலுவலர் பயிற்சிக் கல்வி மையம் (OTA) ஆகிய நிறுவனங்களில் தேர்வு பெற்று படை அலுவலராக உருவாக்க ரூ. 15 இலட்சம் செலவில் தீவிர பயிற்சிகள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

- 01.04.2003க்கு முன்பு, குடிமைப் பணியில் மறுவேலைவாய்ப்பு பெற்று, பணிபுரிந்த ஓய்வுபெற்ற பின்பு ஓய்வூதியம் பெற்றுள்ள முன்னாள் படைவீரர்களின் குடும்பங்களுக்கு இராணுவ குடும்ப ஓய்வூதியத்துடன் குடிமைப் பணியில் பணியாற்றியமைக்கான குடும்ப ஓய்வூதியமும் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

- இக்காலக் கட்டத்தில் 10,395 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு பல்வேறு நிதியுதவிகளாக ரூ.20,64,93,508/– தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

- 3,033 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு பல்வேறு நிதியுதவிகளாக ரூ.3,09,49,717/– தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

- 63 முன்னாள் படைவீரர்களை சார்ந்தோர்களுக்கு ரூ.10,23,250/– செலவில் தையல் பயிற்சியும் 35 முன்னாள் படைவீரர்களை சார்ந்தோர்களுக்கு ரூ.3,00,340/– செலவில் மத்திய தேர்வாணைய (UPSC) தேர்வு எழுத பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

- அறிக்கை காலத்தில் 693 முன்னாள் படைவீரர்கள் பல்வேறு அரசு / நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

- அனைத்து ஒப்பந்த பணியாளர்களுக்கு அதிகபட்சம் ரூ.3 இலட்சம் வரை இழப்பீட்டு தொகையாக பெறும் வகையில் விபத்து காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இக்காலக்கட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் 10 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணியாற்றிவரும் முன்னாள் படைவீரர்களின் செயல்திறன் மேம்பாட்டுக்கான வெவ்வேறு பயிற்சிகள் 134 முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- 8,900 முன்னாள் படைவீரர்கள், தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் வழியாக இக்கால கட்டத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

- 17 முன்னாள் படைவீரர்களின் குடும்பங்களுக்கு வருங்கால வைப்புநிதி அமைப்பின் ஈட்டுறுதி காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 5,000/– முதல் ரூ. 3,60,000/– வரை இழப்பீட்டுத் தொகை பெற்று வழங்கப்பட்டுள்ளது.

**பொது (மறுவாழ்வு)த் துறை**

- தமிழகத்தில் உள்ள 107 முகாம்களில் வசிக்கும் 62,031 இலங்கை தமிழ் அகதிகளுக்கும் மற்றும் வெளிப்பதிவில் உள்ள 35,897 வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கும் பின்வரும் நிவாரண திட்டங்கள் வழங்கப்பட்டுவருகிறது.

- தமிழக மக்களுக்கான பல்வேறு சமூக நலத்திட்டங்கள், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

- **இலவச அரிசி திட்டம்:** முகாம்வாழ் 19,229 இலங்கைத் தமிழ்க் குடும்பங்களுக்கு அரிசி, 8 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு மாதம் 6 கிலோ வீதமும், ஏனையோருக்கு மாதம் 12 கிலோ வீதமும் கணக்கிட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்க வேண்டிய மொத்த அரிசியில் முதல் 20 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது.

- **குடிமை பொருட்கள் வாங்குவதற்கான அனுமதி:** தமிழகத்தில் உள்ள இந்திய குடி மக்களுக்கு வழங்கப்படும் அனைத்து விதமான குடிமைப் பொருட்களும் மண்ணெண்ணெய்யும் வழங்குவதற்கான அனுமதி, முகாம்களில் உள்ள 19,229 இலங்கை தமிழ் அகதி குடும்பங்களுக்கும் நீட்டித்து வழங்கப்பட்டுள்ளது.

- **பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்:** இத்திட்டம் முகாம் வாழ் இலங்கைத் தமிழ் மக்களுக்கு விரிவு படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் உள்ள குடும்பத்திற்கு ரூ.50,000/– எனவும், இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் உள்ள குடும்பத்திற்கு தலா ரூ.25,000/– எனவும், அரசு ஒவ்வொரு குழந்தையின் மீதும் 20 வருடங்களுக்கு வைப்பீடு செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் 238 பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

- **சமூகப் பாதுகாப்புத் திட்டம்:** இத்திட்டம் முகாம் வாழ் மக்களுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆதரவற்ற விதவைகள், முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் மணமாகாத முதிர் கன்னிகள் ஆகியோர்களுக்கு மாத ஓய்வூதியமாக ரூ.1,000/– வழங்கப்பட்டு 7,931 அகதிகள் பயனடைந்துள்ளனர். சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முதியோர் ஓய்வூதிய திட்டத்தில், 4,739 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

- இத்திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 267 நபர்களும், கடலூர் மாவட்டத்தில் 312 நபர்களும், தருமபுரி மாவட்டத்தில் 380 நபர்களும், திண்டுக்கல் மாவட்டத்தில் 376, நபர்களும், ஈரோடு மாவட்டத்தில் 352 நபர்களும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 90 நபர்களும், கரூர் மாவட்டத்தில் 83 நபர்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 135 நபர்களும், மதுரை மாவட்டத்தில் 540 நபர்களும், நாமக்கல் மாவட்டத்தில் 423 நபர்களும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 362 நபர்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 54 நபர்களும், சேலம் மாவட்டத்தில் 168 நபர்களும், திருப்பூர் மாவட்டத்தில் 72 நபர்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 408 நபர்களும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 52 நபர்களும், வேலூர் மாவட்டத்தில் 576 நபர்களும், விழுப்புரம் மாவட்டத்தில் 87 நபர்களும், விருதுநகர் மாவட்டத்தில் 2 நபர்களும் பயனடைந்துள்ளனர்.

- சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஆதரவற்ற விதவைகள் திட்டத்தில் 2,235 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

- இத்திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 55 பெண்களும், கடலூர் மாவட்டத்தில் 80 பெண்களும், தருமபுரி மாவட்டத்தில் 187 பெண்களும், திண்டுக்கல் மாவட்டத்தில் 153 பெண்களும், ஈரோடு மாவட்டத்தில் 56 பெண்களும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 27 பெண்களும், கரூர் மாவட்டத்தில் 70 பெண்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 60 பெண்களும், மதுரை மாவட்டத்தில் 274 பெண்களும், நாமக்கல் மாவட்டத்தில் 168 பெண்களும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 117 பெண்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 32 பெண்களும் சேலம் மாவட்டத்தில் 94 பெண்களும், திருப்பூர் மாவட்டத்தில் 39 பெண்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 141 பெண்களும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 15 பெண்களும், வேலூர் மாவட்டத்தில் 552 பெண்களும், விழுப்புரம் மாவட்டத்தில் 114 பெண்களும், விருதுநகர் மாவட்டத்தில் ஒரு பெண்ணும் பயனடைந்துள்ளனர்.

- சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 528 மாற்றுத் திறனாளிகள் பயனடைந்துள்ளனர்.

- இத்திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 38 நபர்களும், கடலூர் மாவட்டத்தில் 66 நபர்களும், தருமபுரி மாவட்டத்தில் 36 நபர்களும், திண்டுக்கல் மாவட்டத்தில் 9 நபர்களும், ஈரோடு மாவட்டத்தில் 22 நபர்களும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 7 நபர்களும், கரூர் மாவட்டத்தில் 6 நபர்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 12 நபர்களும், மதுரை மாவட்டத்தில் 10 நபர்களும், நாமக்கல் மாவட்டத்தில் 24 நபர்களும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 22 நபர்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 4 நபர்களும், சேலம் மாவட்டத்தில் 16 நபர்களும், திருப்பூர் மாவட்டத்தில் 4 நபர்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 43 நபர்களும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 16 நபர்களும், வேலூர் மாவட்டத்தில் 164 நபர்களும், விழுப்புரம் மாவட்டத்தில் 29 நபர்களும் பயனடைந்துள்ளனர்.

- சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ், கணவனால் கைவிடப்பட்ட 425 பெண்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 4 பெண்களும், தருமபுரி மாவட்டத்தில் 30 பெண்களும், ஈரோடு மாவட்டத்தில் 72 பெண்களும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 6 பெண்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 4 பெண்களும், மதுரை மாவட்டத்தில் 71 பெண்களும், நாமக்கல் மாவட்டத்தில் 24 பெண்களும், புதுக்கோட்டை

மாவட்டத்தில் 54 பெண்களும், திருப்பூர் மாவட்டத்தில் 2 பெண்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 139 பெண்களும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 6 பெண்களும், வேலூர் மாவட்டத்தில் 13 பெண்களும் பயனடைந்துள்ளனர். திருமணமாகாத பெண்கள் உதவித் திட்டத்தின் கீழ் 4 பெண்கள் பயனடைந்துள்ளனர். இதில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 1 பெண்ணும், திருவண்ணாமலையில் 3 பெண்களும் பயனடைந்துள்ளனர்.

- **முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக் கட்டணச் சலுகை:** ஒற்றைச் சாளர முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறியியல் கல்வி பயின்று வரும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது.

- **தகுதியின் அடிப்படையில் கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பில் இளநிலை மற்றும் முதுநிலை கல்வியைத் தொடர அனுமதி:** இத்திட்டத்தின் கீழ் இலங்கைத் தமிழ் மாணவர்கள் பொதுப்பிரிவின் கீழ் தகுதியின் அடிப்படையில் கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பில் இளநிலை மற்றும் முதுநிலை கல்வியைத் தொடர அனுமதி அளிக்கப்படுகிறது.

- **விடுதிகள் வசதி:** தமிழகத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் 5 இடங்கள் கூடுதலாக உருவாக்கி அவற்றை அகதி மாணவர்கள் தங்கள் மேற்படிப்பைத் தொடர்வதற்காக ஒதுக்கீடு (12,660 இடங்கள் 2532 விடுதிகளில்) செய்யப்பட்டுள்ளது. 58 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

- **மாதாந்திர பணக்கொடை:** மாதாந்திர பணக்கொடை குடும்ப தலைவருக்கு ரூ.400லிருந்து ரூ.1,000ஆகவும், பெரியவர்களுக்கு ரூ.288லிருந்து ரூ.750ஆகவும், 12 வயதுக்குட்பட்ட சிறியவர்களுக்கு ரூ.180லிருந்து ரூ.400ஆகவும் உயர்த்தப்பட்டு முகாம்களில் வசிக்கும் அனைத்து அகதிகளுக்கும் வழங்கப்படுகின்றன.

- **ஈமக்கிரியைக்கான நிதி உதவி:** இறந்தவர்களுக்கான ஈமக்கிரியை நிதி உதவி ரூ.2,500/–லிருந்து ரூ.5,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு, 197 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

- **இலவச தையல் இயந்திரம் திட்டம்:** இத்திட்டத்தின் கீழ் முகாம்களில் உள்ள தையல் கலை தெரிந்த பெண்களுக்கு இலவசமாக தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது.

- **பள்ளி மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள்:** இத்திட்டத்தின் கீழ் அரசு பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு, இலவச மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது. 276 அகதி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கப்பட்டுள்ளது.

- சிறப்பு ஊக்கத் தொகை, காலணி, புத்தகப்பை, கணித உபகரணங்கள் பெட்டி (Geometric box) சைக்கிள் போன்றவை விதிகளுக்குட்பட்டு இலவசமாக வழங்கப்படுகின்றன

- **தகுதியின் அடிப்படையில் பொதுப்பிரிவின் கீழ் தொழில் முறை சார்ந்த படிப்புகளுக்கு நேரடியாக இரண்டாம் ஆண்டில் சேர்க்கை:** முகாம்வாழ் இலங்கைத் தமிழ் மாணவர்கள் நேரடியாக இரண்டாம் ஆண்டில் பி.இ/ பி.டெக்/ எம்.பி.ஏ/ எம்.சி.ஏ/ எம்.டெக்/ எம்.ஆர்க் பட்டப்படிப்புகளுக்கு தகுதியின் அடிப்படையில் பொதுப்பிரிவின்கீழ் அனுமதிக்கப்படுகின்றனர்.

- **மருத்துவர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்:** இத்திட்டத்தின் கீழ் தாய்மார்களுக்கு மகப்பேறுக்காக வழங்கப்பட்ட நிதி உதவி ரூ. 6,000/–லிருந்து ரூ.12,000/– ஆக உயர்த்தப்பட்டு, 562 பெண்கள் பயனடைந்துள்ளனர். தற்போது இந்த நிதியுதவி ரூ.18,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- இதில் கடலூர் மாவட்டத்தில் 13 பெண்களும், தருமபுரி மாவட்டத்தில் 24 பெண்களும், திண்டுக்கல் மாவட்டத்தில் 83 பெண்களும், ஈரோடு மாவட்டத்தில் 32 பெண்களும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 2 பெண்களும், நாமக்கல் மாவட்டத்தில் 12 பெண்களும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 10 பெண்களும், சேலம் மாவட்டத்தில் 50 பெண்களும், சிவகங்கை மாவட்டத்தில் 17 பெண்களும், திருப்பூர் மாவட்டத்தில் 8 பெண்களும், திருச்சி மாவட்டத்தில் 4 பெண்களும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 3 பெண்களும், வேலூர் மாவட்டத்தில் 17 பெண்களும் விழுப்புரம் மாவட்டத்தில் 6 பெண்களும் பயனடைந்துள்ளனர்.

- **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு பெண்கள் திருமண உதவி திட்டம்:** இத்திட்டத்தின் கீழ் பட்டம் / பட்டயம் கல்வி பயின்ற பெண்களுக்கு ரூ.50,000/– மற்றும் 4 கிராம் திருமாங்கல்யத்திற்கான தங்கம் வழங்கப்படுகிறது. இதரப்பெண்களுக்கு ரூ.25,000/– மற்றும் 4 கிராம் திருமாங்கல்யத்திற்கான தங்கம் வழங்கப்பட்டு, இதுவரை 51 பெண்கள் பயனடைந்துள்ளனர். தற்போது 8 கிராம் தங்கம் வழங்கப்படுகிறது.

- இதில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 34 பெண்களும், தருமபுரி மாவட்டத்தில் 2 பெண்களும், ஈரோடு மாவட்டத்தில் 4 பெண்களும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 4 பெண்களும், நாமக்கல் மாவட்டத்தில் ஒரு பெண்ணும், திருவள்ளூர் மாவட்டத்தில் 4 பெண்களும், வேலூர் மாவட்டத்தில் ஒரு பெண்ணும், விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு பெண்ணும், பயனடைந்துள்ளனர்.

- **முதலமைச்சரின் இலங்கை அகதிகள் நிவாரண நிதி:** முதலமைச்சரின் இலங்கை அகதிகள் நிவாரண நிதியிலிருந்து விபத்து காரணமாக இறப்பவருக்கு வழங்கப்படும் நிவாரண நிதி ரூ.15,000/–ஐ ரூ.25,000/–ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. இது வரை 6 பெண்கள் பயனடைந்துள்ளனர். இதில், திண்டுக்கல் மாவட்டத்தில் ஒரு நபரும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 2 நபர்களும், திருவண்ணாமலையில் 3 நபர்களும் பயனடைந்துள்ளனர்.

- **துணிமணிகள் வழங்குதல்:** ஒவ்வொரு வருடமும் அரசால் நிர்ணயம் செய்யப்பட்டவாறு முகாம்வாழ் தமிழர்கள் ஒவ்வொருவருக்கும் கோ–ஆப்டெக்ஸ் மூலம் துணிமணிகள் இலவசமாக வழங்கப்படுகிறது. இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை போர்வைகளும் வழங்கப்படுகிறது.

- **அகதி மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை:** இத்திட்டத்தின் கீழ் அகதி மாணவர்கள் உயர் கல்வி தொடரும் பொருட்டு வருடாந்திர கல்வி உதவித் தொகை ரூ.850/–லிருந்து ரூ.4,700/– வரை பாடப்பிரிவு தன்மைக்கு ஏற்ப வழங்கப்படுகிறது.

**வெளிநாடு வாழ் தமிழர் நலன்**

- வெளி நாடுகளுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பு போன்ற காரணங்களுக்காக செல்பவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக குறும்படம் ஒன்று எடுத்திடவும், மேலும் துண்டு பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிடவும் ஏதுவாக ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- மேற்கு ஆப்பிரிக்காவிற்கு வேலைக்குச் சென்று அங்கு சம்பளம் மற்றும் உணவின்றி இன்னலுற்ற வேலூர் மாவட்டத்தைச் சோர்ந்த 23 நபர்களை அங்குள்ள இந்திய தூதரகத்தின் உதவியுடன் இந்தியா அழைத்து வர நடவடிக்கைகள் இத்துறையால் எடுக்கப்பட்டது

- லிபியா நாட்டிற்கு வேலைக்குச் சென்று அங்கு ஏற்பட்ட ஏவுகணை விபத்தில் சிக்கிய தமிழகத்தைச் சேர்ந்த 3 குடும்பங்களைச் சேர்ந்த நபர்கள் திருமதி சுசேனா சாக்கோ ஜார்ஜ் மற்றும் குடும்பத்தினர் ரூ.3,28,692/– திருமதி டி.கே. புஷ்பாமேரி மற்றும் குடும்பத்தினர் ரூ.3,49,860/– திருமதி எ. ஜெயந்தி மற்றும் குடும்பத்தினர் ரூ.3,46,710/– ஆகியோர்கள் இந்தியா திரும்பியதற்கு அவர்கள் செலவிட்ட ரூ.10,25,262/–ஐ திருப்பி செலுத்திட ஏதுவாக ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து நேபாளத்திற்கு புனித யாத்திரை சென்று அங்கு ஏற்பட்டஇயற்கை சீற்றத்தின் காரணமாக சிக்கித் தவித்த 10 நபர்களை அங்குள்ள இந்திய தூதரகத்தின் உதவியுடன் இந்தியா அழைத்துவர செலவழிக்கப்பட்ட தொகையை இந்திய தூதரகத்திற்கு திருப்பி செலுத்திட ஏதுவாக ரூ.3,39,392/– வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- 2017ஆம் ஆண்டில் இதுவரை வெளிநாடுகளில் இறந்த 72 நபர்களின் உடல்களைஇந்தியா கொண்டு வந்து அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைத்திடவும், வெளிநாடுகளுக்கு வேலைக்கு சென்று இன்னலுக்குட்பட்ட 77 நபர்களை அங்கிருந்து காப்பாற்றி இந்தியா அழைத்து வரவும், மேலும் மருத்துவ காரணங்களால் இன்னலுற்றிருந்த 5 நபர்களை இந்தியா அழைத்து வந்து அவர்கள் உறவினர்களின் ஒப்புதலுடன் அவர்கள் விரும்பியமருத்துவ மனைகளில் அனுமதித்திடவும் வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகத்தின் உதவியுடன் இத்துறையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

❖ ❖ ❖

# பொதுப்பணித்துறை




## நீர்வள ஆதாரத்துறை

### வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீடு

- 2017–2018ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் பாசன கட்டுமானங்களை மேம்படுத்துதல் மற்றும் பயன்பாட்டிலுள்ள பாசன கட்டுமானங்களை புனரமைக்கும் பணிகளுக்கு ரூ.3,177 கோடியே 66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- டிசம்பர் 2017 வரை ரூ.719 கோடியே 21 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

### குடிமராமத்து பணிகள்

- 2016–2017ஆம் ஆண்டு, குடிமராமத்து திட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.03.2017 அன்று துவங்கப்பட்டு மாநிலத்தின் 30 மாவட்டங்களில் 1,519 குடிமராமத்து பணிகளுக்கு ரூ.100 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டது. 1,513 பணிகள் முடிவடைந்துள்ளன. 2017–2018ஆம் ஆண்டு 30 மாவட்டங்களில் 331.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,065 குடிமராமத்து பணிகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

### தமிழ்நாடு பாசன மேலாண்மை நவீனப்படுத்தும் திட்டம் (TNIAMP)

- தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம், மாநிலத்தின் 29 மாவட்டங்களில் 66 உப வடிநிலங்களிலுள்ள 5.43 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்பு பயன்பெறும் வகையில் ரூ.3,008 கோடி மதிப்பீட்டில் 2018ஆம் ஆண்டு முதல் 7 ஆண்டுகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தில், நீர்வள ஆதாரத்துறையினால், 4 கட்டமாக ரூ.2,195 கோடி மதிப்பீட்டில் 4,778 ஏரிகள் மற்றும் 477 அணைக்கட்டுகளை புனரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், ஏரியின் நீர்ப் பரப்பு பகுதியில் செயற்கைமுறை நீர் செறிவூட்டும் கிணறுகளை கட்டுதல், காவேரி கழிமுகப்பகுதி மற்றும் பிற உப வடிநிலங்களில் அமைந்துள்ள வடிகால்கள் மற்றும் பாசன வாய்க்கால்களை மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

- முதற்கட்டமாக 23 உப வடிநிலங்களில் உள்ள 1,382 ஏரிகள் மற்றும் 115 அணைக்கட்டுகள் புனரமைக்கவும் மற்றும் 45 செயற்கை முறை நீர்

செறிவூட்டும் கிணறுகள் அமைக்கவும் 787.19 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**கொள்ளளவினை அதிகரிக்கும் பொருட்டு ஏரிகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் பிற நீர்நிலைகளிலிருந்து களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் சரளை மண்ணை விவசாயிகள், மட்பாண்டம் செய்பவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விலையில்லாமல் வழங்குதல்**

- தமிழ்நாட்டில் (சென்னை, காஞ்சிபுரம், மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் நீங்கலாக) ஏரிகள், கால்வாய்கள் மற்றும் அணைகளில் படிந்துள்ள களிமண், வண்டல், சவுடு மற்றும் செம்மண்ணை பொதுமக்கள், மண்பாண்ட தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்க திருத்தம் வெளியிட்டுள்ளது. அதன்படி, ஏரிகள், கால்வாய்கள் மற்றும் அணைகள் அமைந்துள்ள கிராமத்திலோ, அதன் அருகிலுள்ள கிராமங்களில் உள்ள பயனாளிகள் மாவட்ட ஆட்சியரால் மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டபின் மாவட்ட நிருவாகத்தின் அனுமதியுடன் இலவசமாக எடுத்து செல்ல விதி திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

- ஏரிகள், கால்வாய்கள் மற்றும் அணைகளிலிருந்து எடுக்கப்படும் வண்டல் மற்றும் களிமண்ணின் அளவு விவசாயிகளுக்கு விவசாய பயன்பாட்டிற்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நன்செய் நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 75 கன மீட்டர் (ஒரு எக்டேருக்கு 185 கன மீட்டர்) மிகாமலும் புன்செய் நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 90 கன மீட்டர் (ஒரு எக்டேருக்கு 222 கன மீட்டர்) மிகாமலும் இலவசமாக எடுத்து செல்லலாம் எனவும் பொதுமக்களில் நபருக்கு 30 கன மீட்டர் மிகாமலும், மண்பாண்ட தொழிலாளர்கள் கூடுதலாக 60 கன மீட்டர் மிகாமலும் வண்டல் மண் இலவசமாக எடுத்து செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மேட்டூர் அணையில் வண்டல் மற்றும் சவுடு ஆகியவற்றை பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கும் பணிகள், 28.05.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டன.

- 31.12.2017 வரை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்ட நீர்வள ஆதாரத்துறையின் 11,131 நீர்நிலைகளில், 4,337 நீர்நிலைகள் வண்டல் படிவுகளை அகற்ற எடுத்து கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை 1,41,15,428 கன மீட்டர் வண்டல் படிவுகள், 95,420 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவியுடன் மேற்கொள்ளப்படும் காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திட்டம்.**

- காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாறுதல்களை தழுவல் திட்டம் ரூ.1,560 கோடி மதிப்பீட்டில், ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவி பங்கு ரூ.1,092 கோடி மற்றும் மாநிலத்தின் பங்கு ரூ.468 கோடியாகும்.

- இத்திட்டத்தின் முதற்கட்டமாக, காவேரி கழிமுகப் பகுதியிலுள்ள வெண்ணாறு அமைப்பிலுள்ள 6 ஆறுகள் / வடிகால்களான அரிச்சந்திரா நதி, அடப்பாறு, வெள்ளையாறு, பாண்டவையாறு, வளவனாறு வடிகால், வேதாரண்யம் கால்வாய் மற்றும் 13 நீரேற்றும் பணிகள் ரூ.960.66 கோடி மதிப்பீட்டில் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

**நபார்டு வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தும் திட்டம்**

- நபார்டு வங்கி நிதியுதவி RIDF XXII–இன் கீழ் ரூ.223 கோடியே 68 இலட்சம் மதிப்பீட்டிலான 66 திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

- 40 பணிகள் ரூ.24 கோடியே 7 இலட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளன. 16 பணிகள் ரூ.95 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் செயலாக்கத்திலுள்ளன. மேலும், 10 பணிகள் ரூ.103 கோடியே 73 இலட்சம் மதிப்பீட்டில் விரைவில் துவங்கப்படவுள்ளன.

**அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (DRIP)**

- இத்திட்டமானது, தமிழ்நாட்டில் நீர்வள ஆதாரத் துறையின் 69 அணைகளிலும், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் (TANGEDCO) 20 அணைகளிலும் செயலாக்கத்திலுள்ளது.

- இத்திட்டத்தின் மொத்த திட்ட மதிப்பீடு ரூ.745.49 கோடியாகும். இதில், நீர்வள



ஆதாரத்துறையின் பணிகளுக்கான திட்ட மதிப்பீடு ரூ.469.94 கோடி ஆகும். நீர்வள ஆதாரத்துறையின் 69 அணைகளின் புனரமைப்பு பணிகளுக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- இதுவரை 53 அணைகளில், பணிகள் முடிவுற்றுள்ளன. மேலும், 14 அணைகளில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 2 அணைகளில் பணிகள் துவங்கப்பட உள்ளன.

**தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (NADP)**

- நீர்வள ஆதாரத்தினை மேம்படுத்துவதற்கான கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு ரூ.21 கோடிக்கு அரசு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- நாகப்பட்டினம் மாவட்டத்தில் நீரொழுங்கியினை மறுகட்டுமானம் செய்தல், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் அணைக்கட்டுகள் அமைத்தல், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் தடுப்பணைகள் அமைத்தல் மற்றும் வேலூர் மாவட்டத்தில் நிலத்தடி தடுப்புச்சுவர் அமைத்தல் ஆகிய பணிகள் செயல்பாட்டிலுள்ளன.

**புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்குதல்**

- பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை கிராமம் அருகில் மருதையாற்றின் குறுக்கே ஒரு புதிய நீர்த்தேக்கம் மற்றும் வேலூர் மாவட்டத்தில் மலட்டாற்றின் குறுக்கே ஒரு புதிய நீர்த்தேக்கமும் ரூ.153 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டில் 8,437 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் பொருட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- மேலும், சென்னை மாநகரின் குடிநீர் தேவைகளை சந்திக்கும் பொருட்டு திருவள்ளூர் மாவட்டத்தில் கண்ணன்கோட்டை இசா இராஜநேரி மற்றும் தேர்வாய்கண்டிகை ஆகிய இரு ஏரிகளை இணைத்து ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**புதிய அணைக்கட்டுகள்**

- சிவகங்கை மாவட்டம், தேவக்கோட்டை வட்டம், உதயாச்சி கிராமத்தின் அருகில் கைக்குடி மற்றும் அதன் தொகுப்பு ஏரிகளுக்கு நீர் வழங்க மணிமுத்தாற்றின் குறுக்கே ரூ.10 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் அணைக்கட்டு அமைக்கும் பணி நபார்டு







வங்கி நிதியுதவியுடன் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 1,501 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும்.

**பிரதான் மந்திரி கிரிஷி சின்சாயி யோஜனா (PMKSY) திட்டத்தின் கீழ் வேளாண்மைக்கு நேரடி தொடர்புடைய நீர்நிலைகள் செப்பனிடுதல், புனரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் ஏரிகளைப் புனரமைத்தல்**

- இராமநாதபுரம், வேலூர், சிவகங்கை, ஆகிய மாவட்டங்களிலுள்ள 104 ஏரிகளை (கட்டம் I & II) ரூ.54 கோடியே 32 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைத்து, புனரமைக்கும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 103 பணிகள் முடிக்கப்பட்டு, 1 பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களிலுள்ள 49 ஏரிகளை (கட்டம் III) ரூ.23 கோடியே 42 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைத்து, புனரமைக்கும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன.

**வெள்ளத் தடுப்புப் பணிகள்**

- காஞ்சிபுரம் மாவட்டத்தில், ரூ.23 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் வெள்ளத்தில் சேதம் அடைந்த அடையாறு மற்றும் அதன் கிளைக் கால்வாய்களை அகலப்படுத்துதல், தூர்வாருதல் மற்றும் ஆற்றினை தரப்படுத்தும் பணிகளும், வேகவதி ஆற்றினை புனரமைத்து, மறு சீரமைக்கும் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

- கடலூர் மாவட்டத்தில், வெள்ளப்பாக்கம் வாய்க்கால், கடிலம் ஆறு, விசூர் ஓடை மற்றும் பெரியகாட்டுப் பாளையம் ஓடை ஆகியவற்றை புனரமைத்தல், பாசிமுத்தான் ஓடை, தில்லையம்மன் ஓடை, ஓமக்குலம் வடிகால், கான்சாகிப் கால்வாய் மற்றும் முத்தையாபிள்ளை உபரி பலப்படுத்துதல், மணவாய்க்கால் மற்றும் பழைய கொள்ளிடத்தினை புனரமைத்தல் போன்ற வெள்ளத் தடுப்புப் பணிகள் நபார்டு நிதியுதவியுடன் ரூ.140 கோடியே 01 இலட்சம் மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

**கடலோரப் பாதுகாப்புப் பணிகள்**

- திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், எர்ணாவூர் குப்பம் முதல் எண்ணூர் வரை தொலைகல் 15/200 கி.மீ முதல் 19/000 கி.மீ வரை 10 தூண்டில் வளைவு தொகுப்பு கட்டுமானப் பணிகள் ரூ.31 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

- தூத்துக்குடி மாவட்டத்தில் வேம்பார், வீரபாண்டிய பட்டினம், கீழவைப்பார், பெரியதாழை மற்றும் கல்லாமொழி ஆகிய 5 இடங்களில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி ரூ.69 கோடியே 49 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 2 பணிகள் முடிக்கப்பட்டு இதர பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்டைக்காடு புதூரில் ரூ.7 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி மற்றும் இரவிபுத்தன்துறை கிராமத்தில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கடலரிப்பு தடுப்புச்சுவர் புனரமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**நீர்நிலைகளை தூர்வாருதல்**

- பாசன மற்றும் குடிநீர் பயன்பாட்டிற்கு உரிய நேரத்தில் நீர் அளிக்க நீர்த்தேக்கங்களின் கொள்ளளவினை

தூர்வாருதல் மூலம் மீட்டெடுக்க நீர்வள ஆதாரத்துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**வீராணம் ஏரியைத் தூர்வாருதல்**

- கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், லால்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ள வீராணம் ஏரியினை ரூ.40 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி, அதன் 1,465 மி.க. அடி முழுக்கொள்ளளவினை மீளப்பெறுவதற்கான பணிகள் செயலாக்கத்திலுள்ளன.
- மேலும் இத்திட்டத்தில், இவ்வேரிக்கு நீர்வழங்கும் வடவாறு வாய்க்காலினை புனரமைத்து அதன் நீர்க் கடத்தும் திறனை அதிகரிப்பதற்கான பணிகளும் செயலாக்கப்படுகின்றன.
- இந்த ஏரி 44,856 ஏக்கர் பாசன நிலங்களுக்கு விவசாயத்திற்கும் மற்றும் சென்னை பெருநகரத்தின் குடிநீர் தேவையையும் பூர்த்தி செய்கின்றது.

**பரப்பலாறு நீர்த்தேக்கத்தைத் தூர்வாருதல்**

- பரப்பலாறு நீர்த்தேக்கத்தை ரூ.19 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி, அதன் கொள்ளளவினை மீளப்பெறும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
- சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் வழிகாட்டுதல்படி திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வனத்துறையின் பரிசீலனையில் உள்ளது.

**தேசிய திட்டத்தின் கீழ் காவேரி வடிநில அமைப்புகளை நவீனப்படுத்தும் திட்டம்**

- காவேரி வடிநிலத்தில் பாசன அமைப்புகளை ரூ.11,420 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தி, புனரமைத்து, திறன்மிகு பாசன நீர் மேலாண்மையினை உறுதி செய்வதற்கான கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. மத்திய நீர்க் குழுமம், இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்க கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.
- முதற்கட்டமாக, ரூ.2,298.75 கோடி மதிப்பீட்டில் கல்லணைக் கால்வாய் உப வடிநிலத்தினை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கைக்கு 30.09.2016 அன்று மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. தொகுப்பு வாரியாக விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 05.05.2017 அன்று முதலீட்டு ஒப்புதல் குழுக் கூட்டத்தில், முதலீட்டு ஒப்புதல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நீண்டகால பாசன நிதி உதவியின் கீழ் மத்திய அரசின் நிதி உதவி கோரப்படவுள்ளது.
- எஞ்சிய தொகுப்புகளான காவிரி உப வடிநிலம், வெண்ணாறு உப வடிநிலம், கீழ் கொள்ளிடம் உப வடிநிலம், கீழ் பவானி திட்டம், கட்டளை உயர்மட்டக் கால்வாய் திட்டம், நொய்யல் உப வடிநிலம், இராஜா வாய்க்கால் திட்டம் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, துறையின் பரிசீலனையில் உள்ளது.

**மணல் விற்பனை**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28.06.2017 அன்று, தமிழகத்தில் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணல் உபயோகிப்பாளர்களுக்கு எளிதில் கிடைத்திட ஏதுவாக “தமிழ்நாடு மணல் இணைய சேவை” (www.tnsand.in) இணையதளத்தையும், (tnsand) செல்லிடப்பேசி செயலியையும் துவக்கி வைத்தார்கள்.
- 01.07.2017 முதல் மணலை இணையதளத்தில் முன்பதிவு செய்து கொள்ளவும், 18.07.2017 முதல் இணையதளம் வழியாக மணல் விற்பனைத் தொகையை செலுத்தும் வசதியும் செயல்பாட்டில் உள்ளது.
- 9,01,108 லாரி லோடுகள் மணல் விற்பனை செய்யப்பட்டு அரசுக்கு ரூ.75 கோடியே 69 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**கட்டட அமைப்பு**

- விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூரில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகைக் கட்டடம் (2 அறைகளுடன்) கட்டும் பணி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 08.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.





- நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் "ஏ மற்றும் பி" வகை அரசு அலுவலர்களுக்கு 25 பணியாளர் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூரில் ரூ.72.20 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகைக் கட்டடம் (2 அறைகளுடன்) கட்டும் பணி முடிக்கப்பட்டு, 29.04.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- சென்னை, அடையாறு பசுமைவழிச் சாலையில் அமைந்துள்ள பொதிகை வளாகத்தில் ரூ.4.84 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு அமைச்சர்களுக்காக நான்கு அரசு மாளிகைகள் கட்டும் பணி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 08.05.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- சென்னை, ராஜ்பவனில் ரூ.444.50 இலட்சம் மதிப்பீட்டில் தரையில் நிறுவப்பட்டு கிரிட்டுடன் இணைக்கப்பட்ட 400 kWp சோலார் போட்டோ வோல்டிக் பவர் பிளான்ட் அமைக்கும் பணி முடிக்கப்பட்டது.

- வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை வளாகத்தில் ரூ.15.60 இலட்சம் மதிப்பீட்டில் பாதுகாப்புச் சுவர் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி முடிக்கப்பட்டது.

- சென்னை சேப்பாக்கம் பொதுப்பணித்துறை கட்டடத்திலுள்ள பணியாளர் கழிவறை, தரைகள் மற்றும் அலுவலக அறைகள் ஆகியவற்றினை ரூ.76.95 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி சுற்றுலா மாளிகை வளாகத்தில் ரூ.3.02 கோடி மதிப்பீட்டில் பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையக் கட்டடம் கட்டும் பணி கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

- சென்னை, சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் ரூ.75.69 கோடி மதிப்பீட்டில் அரசு அலுவலர்களுக்கு "ஏ" மற்றும் "பி" வகை குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

- கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை பொதுப்பணித்துறை வளாகத்தில் உள்ள அரசு ஆய்வு மாளிகையில் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

❖ ❖ ❖






**அம்மா திட்டம்**

- மாண்புமிகு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்பேரில் 'அம்மா திட்டம்' வாரந்தோறும் அனைத்து வருவாய் வட்டங்களிலும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

- ஒவ்வொரு வட்டத்திலும், ஒரு கிராமத்தினை தேர்வு செய்து, ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை தோறும் "அம்மா திட்ட முகாம்கள்" நடத்தப்படுகின்றன.

- அம்மா திட்ட முகாமில் இதுவரை 3,15,740 மனுக்கள் பெறப்பட்டு 3,08,569 மனுக்கள் தீர்வு காணப்பட்டுள்ளது.

- மேற்கண்ட முகாம்களில் கிராமப் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மருத்துவ முகாம்கள் (கண்பரிசோதனை, பல் மருத்துவம், பொது மருத்துவம் மற்றும் கால்நடை மருத்துவ முகாம்கள்) மற்றும் பிரதம மந்திரியின் பசல் பீமா யோஜனா காப்பீடு திட்டம், ஆதார் பதிவுகள் மற்றும் தனிநபர் பயன்பெறும் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்தும் அனைத்துத் துறைகளின் ஒருங்கிணைப்புடன் முகாம்கள் நடைபெற்று வருகிறது.

- மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஒருங்கிணைப்பு அலுவலராகவும், மாநில அளவில் இயக்குநர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுகிறார்.

- இத்திட்டத்தின் வாயிலாக ஏழை எளிய மற்றும் அடித்தள மக்களுக்கு அரசு தொடர்பான அனைத்து நலத்திட்டங்களும் சென்று அடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**விலையில்லா வேட்டி சேலை திட்டம்**

- 2018ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 1.56 கோடி விலையில்லா சேலைகளும், 1.56 கோடி விலையில்லா வேட்டிகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

**வருவாய் துறை அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கான புதிய கட்டடங்கள்**

- 31 அலுவலகங்கள் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்புகள் கட்ட ரூ.81.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- 5 கோட்டாட்சியர் அலுவலகங்கள் எழும்பூர் தண்டையார்பேட்டை, கோயம்புத்தூர் (வடக்கு), மேலூர் மற்றும் சாத்தூர் ஆகிய கோட்டங்களுக்கு ரூ.10.38 கோடி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

- கடலூர் மாவட்டத்தில் ரூ.22.77 இலட்சம் மதிப்பீட்டில் குறிஞ்சிபாடி வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் பாபநாசம் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்ட ரூ.4.69 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- தூத்துக்குடி மாவட்டத்தில் ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி வட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- தூத்துக்குடி மாவட்டத்தில் ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் வேடசந்தூர் வட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- திருப்பூர் மாவட்டத்திலுள்ள பெருந்திட்ட வளாகத்தில் ஜம்மனைப் பள்ள ஓடையில் ஏற்படும் வெள்ளப் பெருக்கு தடுப்பதற்கு தடுப்புச்சுவர் கட்டுவதற்கு ரூ.7.86 கோடி நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.2.35 கோடி மதிப்பீட்டில் சீர்காழி வட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.31 இலட்சம் மதிப்பீட்டில் புதுக்கோட்டை கோட்டாட்சியர் குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- கோயம்புத்தூர் (தெற்கு) வட்ட பெருந்திட்ட வளாகத்தில் ரூ.2.35 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் (தெற்கு) வட்டாட்சியர் அலுவலக கட்டடம், நில அளவை, பொது விநியோகம், துணை கருவூலம் மற்றும் நிலவரித்திட்ட அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- நாமக்கல் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் ரூ.14.60 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு நிருவாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- ஈரோடு மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் ரூ.41.06 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு நிருவாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- மதுரை மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் ரூ.20.98 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு நிருவாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்**

- மாண்புமிகு முதலமைச்சரின் வழிகாட்டுதலின் பேரில் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் சமுதாயத்தில் நலிவுற்ற ஆதரவற்ற 1,22,057 பயனாளிகளுக்கு புதிதாக மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1,000/– வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. 29,20,536 பயனாளிகளுக்கு வங்கிகள் மூலமாக ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

**வருவாய்த் துறைக்கான புதிய வாகனங்கள்**

- 2017–2018ஆம் ஆண்டில் திருப்பூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திண்டுக்கல் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களுக்கு முக்கிய பிரமுகர் வருகைக்கான சீருந்துகள் வழங்கப்பட்டன. திண்டுக்கல், கரூர், நாகப்பட்டினம், வேலூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர்களுக்கும், காஞ்சிபுரம், திருநெல்வேலி, கரூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும், வரவேற்பு வட்டாட்சியர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), லால்குடி வட்டாட்சியர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), மதுராந்தகம் வட்டாட்சியர் (காஞ்சிபுரம் மாவட்டம்), ஆம்பூர் வட்டாட்சியர் (வேலூர் மாவட்டம்), ஆரணி வட்டாட்சியர் (திருவண்ணாமலை மாவட்டம்), மணமேல்குடி வட்டாட்சியர் (புதுக்கோட்டை மாவட்டம்) ஆகியோர்களுக்கும் ஈப்புகள் ரூ.2,17,80,708 செலவில் வழங்கப்பட்டன.

**சான்றிதழ்கள்**

- வருவாய் துறையின் மூலம் பள்ளிகளில் சேர்க்கை மற்றும் உதவித்தொகை பெறுவதற்கு வருமானச்சான்றிதழ், சாதிச்சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ்கள் ஆகிய மூன்று சான்றுகளும் பள்ளிகள் மூலமாக மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

- ஒவ்வொரு ஆண்டும் ஜனவரித் திங்கள் முதல் சான்றுகள் வழங்கப்படும் இத்திட்டத்தின் வாயிலாக, கடந்த ஆண்டில் பள்ளிகள் மூலமாக, 6ஆம் வகுப்பு, 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்குத் தேவையான வகுப்பு, வருமானம் மற்றும் இருப்பிடச்சான்றுகள் ஆகியன 1,51,760 மாணவர்களுக்கு வழங்கப்பட்டு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

**பொது சேவை மையத்தின் சேவைகள்**

- வருவாய்த்துறையினை நாடிவரும் பொதுமக்களுக்கு விரைவான சேவையினை அளித்திடும் வகையில், தகவல் தொழில்நுட்பத்துறை மற்றும் தேசிய தகவல் மையத்தின் தொழில்நுட்ப உதவியோடு அனைத்து மாவட்டங்களிலும் e-District திட்டம் செயல்பட்டு வருகிறது.

- மாநிலம் முழுவதும் 10,809 பொது சேவை மையங்கள் (Common Service Centres) வகையிலாக பெறப்படும் வருமானச் சான்று, இருப்பிடச் சான்று, அனைத்து வகையான சாதிச்சான்றுகள், ஆதரவற்ற விதவைச்சான்று மற்றும் முதல் தலைமுறை பட்டதாரி சான்று உள்ளிட்ட 5 வகையான சான்றிதழ்கள் மின்னணு முறையில் வழங்கப்பட்டு வந்தது. தற்போது கூடுதலாக 15 சேவைகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வருவாய்த்துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

- இதுவரை 67,22,912 சான்றிதழ்கள் மின்னாளுமை திட்டத்தின் வாயிலாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

**தனித்துவ அடையாள அட்டை (ஆதார்)**

- இந்திய நாட்டில் வசிப்பவர்களுக்கு எங்கும், எப்பொழுதும் அங்கீகரிக்கப்பட்ட தனித்துவ அடையாள அட்டை அளிக்கும் வகையில் தேசிய மக்கள் தொகை பதிவேடு – உயிர்புள்ளியியல் பதிவு செய்யும் பணி மேற்கொள்ளப்படுகிறது, இதில், புகைப்படம், கைரேகைப் பதிவுகள் மற்றும் விழித்திரை படல அமைப்பு (உயிர் புள்ளியியல்) ஆகியவை (5 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு பல்வேறு கட்டங்களாக பதிவு செய்யப்பட்டு வருவாய்த்துறையின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இப்பணி, 30.09.2016 வரை பாரத மின்னணுக் கழகம், பெங்களூரு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டது. தற்போது தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநில ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் இப்பணி முன்னேற்றமானது மாநிலம் முழுவதும் கண்காணிக்கப்படுகிறது.

- தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையான 7.21 கோடியுடன் தற்போது அதிகரித்துள்ள மக்கள் தொகையையும் கணக்கில் கொண்டு 22.11.2017ஆம் தேதி வரை 7,55,66,217 நபர்களுக்கு உயிர்புள்ளியல் கணக்கெடுப்பு பதிவு பணி முடிக்கப்பட்டு, 7,18,90,550 நபர்களுக்கு தனித்துவ அடையாள எண் (ஆதார் எண்) வழங்கப்பட்டுள்ளது. மேலும் உயிர் புள்ளியியல் கணக்கெடுப்பு பணி முடிக்கப்பட்டு 99.64% நபர்களுக்கு ஆதார் அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேலும், 0–5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு உயிர்புள்ளியியல் கணக்கெடுப்பு பணி 10.03.2017 முதல் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலமாக செயல்படுத்தப்பட்டுவருகிறது.

**பேரிடர் மேலாண்மை**

- பிரத்யேக தமிழ்நாடு பேரிடர் மீட்பு படை ஒன்றினை உருவாக்கப்பட்டு, தேடுதல், மீட்பு தொலைதொடர்பு உபகரணங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- பிற துறைகளின் பேரிடர் தொடர்பான திறன்களை மேம்படுத்துவதற்காக தேடுதல் மற்றும் மீட்பு உபகரணங்கள் வழங்குவதற்கு ரூ.23 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- ஆளில்லா வானூர்தி மூலம் நீர்வழி தடங்களிலுள்ள ஆக்கிரமிப்புகள் மற்றும் நீர்வழி தடங்களின்



எல்லைகள் ஆகியவற்றை கண்டறிந்து வெள்ளத் தடுப்பு நடவடிக்கைக்காக ரூ.7.01 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதல் தவணையாக ரூ.1 கோடி அண்ணா பல்கலைக்கழகத்தின் சென்னை தொழில்நுட்ப நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

- தொலைத்தொடர்பு சாதனமான VHF கருவிகள் கூடுதலாக அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கிட ரூ.81 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- பாரம்பரிய தகவல்களை மேலாண்மை செய்வதற்காக, புவிசார் தகவல் அமைப்பு பயன்பாடுகளை உருவாக்குவதற்கும், புவியியல் புள்ளி விவரங்கள் மற்றும் முன்அறிவிப்பு புள்ளி விவரங்கள் விளக்கவும் மற்றும் கணிப்பு பகுப்பாய்வு ஆகியவை மூலமாக பேரிடர் கால பணிகளான தடுப்பு, தணிப்பு, ஆயத்தநிலை, மீட்பு, நிவாரணம் மற்றும் மீளுதல் போன்றவற்றிற்கு உருவகப்படுத்துதல் மாதிரியினை உருவாக்கிட அண்ணா பல்கலைக்கழக தொழில்நுட்ப உதவியுடன் புவிசார் தகவல் பிரிவானது உருவாக்குவதற்கு ஏதுவாக ரூ.7.50 கோடி ஒதுக்கீடு.

- பருவ நிலை மாற்றங்களுக்கு ஏற்ப பேரிடர்களை எதிர்கொள்ளவும், அரசு இயந்திரத்தை நவீனப்படுத்திடவும், பல்துறை நிபுணர்களை நியமித்து தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை பலப்படுத்துவதன் தொடர்பாக மாநில வறட்சி கண்காணிப்பு மையம் மற்றும் மாவட்ட வறட்சி கண்காணிப்பு மையங்கள் உருவாக்கிட ரூ.12.50 கோடி நிருவாக ஒப்புதலும் மற்றும் 2017–2018ஆம் ஆண்டிற்கான ரூ.2.50 கோடி நிதி ஒப்புதல்.

**வறட்சி நிவாரணம்**

- 2016ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் பருவமழை பொய்த்ததினால், தமிழகத்தில் நிலவிய வறட்சி நிலைமையினை சமாளிக்க 2017ஆம் ஆண்டு கீழ்க்காணும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

- 33 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதி வரையறைகளின்படி அனைத்து மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இடுபொருள் மானிய நிவாரணத் தொகை வழங்க ரூ.2,247/– கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.

- கால்நடை தீவனப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், பசுந்தீவனம், அடர்தீவனம் மற்றும் உலர் தீவனம் வழங்க மாநில பேரிடர் நிவாரண

நிதியிலிருந்து கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.26.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கால்நடை தீவனம் விநியோகிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

- குடிநீர் பற்றாக்குறையை போக்குவதற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு ரூ.65 கோடி, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்திற்கு ரூ.45 கோடி, நகராட்சி நிருவாகத் துறைக்கு ரூ.65 கோடி, ஊரக வளர்ச்சித் துறைக்கு ரூ.15 கோடி, பேரூராட்சிகள் துறைக்கு ரூ.15 கோடி என மொத்தம் ரூ.205 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- வறட்சியை தவிர்க்கும் வகையில் நீண்டகாலப் பணியாக நீர்நிலைகளில் படிந்துள்ள வண்டல்களை தூர்வாரிடவும் அவற்றை விவசாய நிலங்களுக்கு இலவசமாக வழங்கிடவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

- தருமபுரி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு ரூ.1.86 கோடி கூடுதலாக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பயிற்சி**

- பருவமழை மற்றும் கோடைகாலம் தொடங்குவதற்கு முன்னர் பேரிடர்களை எதிர்கொள்ளும் பொருட்டு மாநிலத்தில் மண்டல வாரியாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை களப்பணியாளர்களை ஒருங்கிணைத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தயார் செய்யும் பொருட்டு, ரூ.73,55,250/– மாநில பேரிடர் மேலாண்மை நிதியின்கீழ் ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

- மிகுந்த சவால்களை எதிர்கொள்ள வேண்டிய மீட்பு, நிவாரணம் மற்றும் மறு சீரமைப்பு பணிகளில் ஈடுபடும் பல்வேறு துறைகள் மற்றும் சமுதாய அமைப்புகளின் திறன்களை மேம்படுத்திட, பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்திடும் பொருட்டு, மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ் ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

- தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதன் அடிப்படையில், 200 தன்னார்வலர்களுக்கு பயிற்சி (ஆப்தா மித்ரா) வழங்கும் பொருட்டு, முதற்கட்டமான ரூ.22,70,000/– ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

- கடலோர மாவட்டங்கள் மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள வருவாய் கோட்ட அலுவலகங்களில், நவீன தொழில்நுட்பம் மற்றும் திறன் மேம்பாட்டுடன் கட்டுப்பாட்டு அறைகள் உருவாக்கும் பொருட்டு, ரூ.28 இலட்சம் மாநில பேரிடர் மேலாண்மை நிதியின்கீழ் ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

- பேரிடர் காலங்களில், மீட்பு மற்றும் நிவாரண பணிகளை துரிதமாக மேற்கொள்வதற்கும், உயிரிழப்புகள் மற்றும் பொருட்சேதங்களை தவிர்க்கும் பொருட்டும், தகவல் தொடர்பினை துரிதப்படுத்தும் வகையிலும் வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்திலும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் காணொலி கருத்தரங்கு மையங்கள் அமைத்திட ஏதுவாக ரூ.1.93 கோடி, மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

## நில நிருவாகம்

**இணையதள வழியிலான பட்டா மாறுதல்**

- பட்டா மாறுதல் குறித்த சேவைகள் பொதுமக்களை நேரடியாகச் சென்றடைவதற்கு ஏதுவாக, இணையதள வழியிலான பட்டா மாறுதல் முறையைச் செயல்படுத்தும் வகையில், பொதுமக்கள் தங்களுக்கு அருகிலுள்ள பொதுசேவை மையத்தில், இணையதளத்தில், பட்டா மாறுதல் சேவைக்காக மனுச் செய்து கொள்ளலாம். அவர்களுக்கு உடனடியாக அச்சிடப்பட்ட மற்றும் குறுஞ்செய்தி மூலமாக ஒப்புகைச் சீட்டு வழங்கப்படுகின்றது.

- தொடர்ச்சியாக, வட்ட அலுவலர்களால், பட்டா மாறுதல் கோரும் மனுமீது work-flow based system-இன்கீழ் இணையதள வழியாக தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

- பட்டா மாறுதல் கோரும் மனுவின் மீதான நடவடிக்கையானது, குறுஞ்செய்தி (sms) மூலமாக மனுதாரருக்கு அனுப்பப்படுகின்றது. இந்தக் கூடுதல் தொழில்நுட்ப வசதியைப் பயன்படுத்தி,

மனுதாரர் சிட்டா நகலையும், “அ” பதிவேடு நகலையும், “எந்நேரத்திலும் எங்கிருந்து வேண்டுமாயினும்’’ (“anytime anywhere”) https://eservices.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாகப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி எடுக்கப்படும் நகல்களில், இணையவழி கையொப்பம் மற்றும் சிறப்பு குறியீடு (“Quick Response” – QR Code) இணைக்கப்பட்டு, இந்த ஆவணங்கள் சட்டப்பூர்வமாக ஆக்கப்பட்டுள்ளன.

- இத்திட்டமானது, மாநிலத்தில் 287 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டமானது பொது மக்களுக்கு பட்டா மாறுதல் வழங்கும் சேவையில் மிகுந்த வெளிப்படைத் தன்மையையும், நம்பகத் தன்மையையும் உறுதி செய்கிறது.

- இத்திட்டத்தின்கீழ், 8,03,530 பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

**இலவச வீட்டுமனை ஒப்படை**

- வீடற்ற ஏழை மக்களுக்கு அரசு இலவச வீட்டு மனைகளை வழங்கி வருகிறது. வருவாய் நிலை ஆணை எண் 21இன்கீழ் விதிகளுக்குட்பட்டு, கிராம நத்தமாக ஒதுக்கப்பட்ட நிலங்களிலிருந்து, தகுதியுடைய வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன. அம்மக்களின் தேவைக்கு கிராம நத்தம் நிலங்கள் போதுமானதாக இல்லாதபோது, ஆட்சேபகரமற்ற அரசுப் புறம்போக்கு நிலங்களை கிராம நத்தமாக வகைபாடு மாற்றம் செய்ய, வருவாய் நிலை ஆணை எண் 21(6)இன்கீழ் வருவாய்க் கோட்ட அலுவலர் / மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, தகுதியுள்ள வீடில்லா ஏழை மக்களுக்கு வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன.

- நீர்நிலைப் புறம்போக்குகள் போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு இனங்களைத் தவிர்த்து, பிற ஒப்படை செய்யக் கூடிய நிலங்கள் தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைக்காக ஒப்படை செய்யப்படுகின்றன.

- வீட்டுமனை ஒப்படையைப் பொறுத்தவரையில், கிராமப் புறங்களில், ஆண்டு வருமானம் ரூ.30,000/–க்குக் குறைவாகவும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில், ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்குக் குறைவாகவும் உள்ள வீடில்லா ஏழைக் குடும்பத்தினர் இலவசமாக வீட்டுமனை பெறத் தகுதியுடையவராவர்.

- வீட்டுமனைகள் குடும்பத்தின் பெண் உறுப்பினர் பெயரில் மட்டுமே ஒப்படை செய்யப்படுகின்றன.

- தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படி, கிராமங்களில் மூன்று சென்ட் நிலம், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட் நிலம் மற்றும் மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் நிலம் என்ற அளவில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு வீட்டுமனை ஒப்படை செய்யப்படுகிறது.

- சென்னை நீங்கலாக, எஞ்சிய 31 மாவட்டங்களில், 3,77,006 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**நிலச்சீர்திருத்தம்**

**முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், 2011**

- 10.09.2011 முதல் சென்னை தவிர தமிழகம் முழுவதும் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விவசாயத் தொழிலாளர்கள், பயிரிடு குத்தகைதாரர்கள் அல்லது 5 ஏக்கர் வரை புஞ்சை நிலம் அல்லது 2.50 ஏக்கர் வரை நன்செய் நிலம் வைத்திருந்து அதில் நேரடியாக விவசாயம் செய்யும் விவசாயிகள் பயன் பெறுவர். மேலும், இத்திட்டத்தின் கீழ் அவர்களது குடும்பத்தினரும் பயன்பெறுவர்.

- இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகையின் வகைகள் அதிகமாக்கப்பட்டு தற்போது இத்திட்டத்தில் பின்வரும் உதவிகளுக்கு – கல்வி, திருமணம், காசநோய், புற்றுநோய், எச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் இதர கொடிய நோய்கள், இடைச் சவ்வூடு மூலம் பிரித்தல் (Dialysis), கை, கால் சம்பந்தப்பட்ட எலும்பு முறிவு மற்றும் நிலைகுலைவு, நரம்பு சம்பந்தப்பட்ட நோய், முதுகு தண்டுவடம் பாதிப்பு, இதய நோய், பார்வை இழத்தல், கல்லீரல் நோய், சிறுநீரக நோய், மனநிலை பாதிப்பு, அரிவாள் செல் இரத்த சோகை, இரத்த அளிவு சோகை, இரத்த உறையா நோய் போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்ட விவசாய உறுப்பினர்களின் தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கு மாத உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம், விபத்து நிவாரணம், இயற்கை மரண உதவித்தொகை, ஈமச்சடங்கு செலவு மற்றும் எச்.ஐ.வி–யினால் உயிரிழந்த உறுப்பினரின் அநாதை

குழந்தைகளுக்கு உதவித்தொகை ஆகியவைகள் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

- அரசு, இத்திட்டத்தின் விவசாய உறுப்பினர்கள் இறந்துவிட்டாலும், அவர்களது குழந்தைகள் இத்திட்டத்தின் பயன்களை தொடர்ந்து பெறும்பொருட்டு ஆணையிட்டுள்ளது.

- இத்திட்டத்தின்கீழ், 1,51,10,270 நபர்கள் உறுப்பினர்களாகவும், 1,30,74,865 நபர்கள் சார்ந்து வாழும் உறுப்பினர்களாகவும் மொத்தம் 2,81,85,135 நபர்கள் கணக்கெடுக்கப்பட்டுள்ளனர்.

- இப்புதிய திட்டத்தின் கீழ், ரூ.250.50 கோடி 3,70,954 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**வருவாய் நீதிமன்றம்**

- பயிரிடு குத்தகைதாரர்கள் மற்றும் நில உடமைதாரர்கள் (கோயில் நிலங்கள் உள்பட) ஆகியோர்களுக்கிடையே ஏற்படும் தகராறுகள் மாநிலத்தில் உள்ள 10 வருவாய் நீதிமன்றங்களால் தீர்த்து வைக்கப்படுகின்றன. வரப்பெற்றவை–4,548, முடிக்கப்பெற்றவை–6,347, (இதில் நிலுவையில் இருந்த இனங்களும் உள்ளடங்கும்)

**நகர்ப்புற நில உச்சவரம்பு (ம) நகர்ப்புற நிலவரி**

- தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ், ரூ.671.52 இலட்சம் நகர்ப்புற நிலவரியாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் அறியாமல் கிரயம் பெற்ற 140 இனங்களில் 49,574,0 ச.மீட்டர் நிலம் வரன்முறை செய்யப்பட்டு ரூ.2,75,24,155/– வசூல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

## நில அளவை (ம) நிலவரித்திட்டத்துறை

**பொதுமக்களின் நலன் கருதி இணையவழி பட்டா மாறுதல்**

- நில ஆவணங்களை இணையம் வழியாக பராமரிக்க ஏதுவாக இணையம் சார்ந்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 290 வட்டங்களில் 286 வட்டங்களைச் சேர்ந்த கிராமப்புற/நகர்ப்புற நிலஆவணங்கள் இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. 6 வட்டங்களின் நில ஆவணங்கள் இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு அதன் மூலம் தற்போது 286 வட்டங்கள் இணைய வழியில் செயல்பட்டு வருகின்றன. எஞ்சிய வட்டங்களின் நில ஆவணங்களும் விரைவில் இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

- இத்திட்டத்தின் வாயிலாக பட்டா மாறுதல் விண்ணப்பம் பெறப்பட்டவுடனும், கிராம நிருவாக அலுவலர் / குறுவட்ட அளவர் புல தணிக்கைக்கு தேதி நிர்ணயம் செய்தவுடனும், பட்டா மாற்ற விண்ணப்பத்தின் மீது வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர் அங்கீகரித்து / நிராகரித்து ஆணை வழங்கும் போதும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரரின் கைப்பேசிக்கு குறுந்தகவல் அனுப்பப்படும்.

**நில ஆவணங்களை கணினிமயமாக்குதல்**

- அனைத்து வகை நிலஆவணங்களையும் இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டுவர ஏதுவாக கணினிப்படுத்தும் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளது. 100% நத்தம் நிலஆவணங்களும், 100% நகர்புற நிலஆவணங்களும்,98%புலப்படங்களும்ஏற்கெனவே கணினிப்படுத்தப்பட்டுள்ளன. கணினிப்படுத்தப்பட்ட நில அளவை புலவரைபடங்களை இணையவழி சேவை மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ள ஏதுவாக 43 வட்டங்களுக்கான புலவரைபடங்கள் துவக்கப்பட்டுள்ளன. 05.01.2018 முதல் 24.01.2018 வரை கூடுதலாக 26 வட்டங்களுக்கான புலவரைபடங்கள் இணைய வழியில் கொண்டு வரப்பட்டுள்ளன. மேற்கண்ட காலங்களில் 4.2 இலட்சம் கணினிப்படுத்தப்பட்ட புலப்படங்கள் இணைய வழியில் கொண்டு வரப்பட்டுள்ளன. நகர்ப்புறத்தை பொறுத்தவரையில் கோயம்புத்தூர் தெற்கு வட்டம் மற்றும் ஆவடி நகரம், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆகியவை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இணையவழியில் கொண்டு வரப்பட்டுள்ளன. மீதமுள்ளவை விரைவில் கொண்டு வரப்படும்.

**காலிப்பணியிடங்கள் நிரப்புதல்**

- தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மற்றும் கருணை அடிப்படை நியமனம் ஆகியவற்றின் மூலம் வெவ்வேறு பணிகளுக்கான காலியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

**மரபு சார்ந்த நிலஅளவை பயிற்சியுடன் நவீன நிலஅளவைப் பயிற்சி**

- ஒரத்தநாடு நில அளவை பயிற்சி நிலையத்தில் இந்திய ஆட்சி பணி அலுவலர்கள் உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த 1,601 அலுவலர்களுக்கு மரபு சார்ந்த நிலஅளவைப் பயிற்சியும், பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நிலஅளவைக் கருவி ஆகியவற்றின் மூலம் நவீன நிலஅளவைப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

**கூட்டுப் பட்டாவிலிருந்து தனி பட்டா வழங்குதல்**

- காஞ்சிபுரம் மாவட்டத்தில் 13,082 மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் 9,918 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**நவீன நிலஅளவைக் கருவிகள் மூலம் நிலஅளவைப் பணி நடைபெறும் நகராட்சிகளின் விவரம்**

- நவீன நில அளவைக் கருவிகளான ஜி.பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் ஆகியவற்றைக் கொண்டு இதுவரையில் 0.41 ச.கி.மீ. நகரநில அளவை பணி செய்யப்பட்டுள்ளது.

- காஞ்சிபுரம்–பம்மல் மற்றும் அனகாபுத்தூர், சேலம்–நரசிங்கபுரம், தேனி–கூடலூர், திருநெல்வேலி–அம்பாசமுத்திரம், தூத்துக்குடி–காயல்பட்டினம், விருதுநகர்–திருத்தங்கல், இராமநாதபுரம்–கீழக்கரை, பெரம்பலூர்–பெரம்பலூர், திண்டுக்கல்–ஒட்டன்சத்திரம், விழுப்புரம்–கள்ளக்குறிச்சி, நாகப்பட்டினம்–வேதாரண்யம் மற்றும் திருச்சி–துவாக்குடியில் நில அளவை பணி நடைபெற்று வருகிறது.

**மாநகராட்சி விரிவாக்கப் பகுதிகளில் நவீன நிலஅளவை கருவிகளின் மூலம் நிலஅளவைப் பணி**

வேலூர்–சத்துவாச்சாரி, கோயம்புத்தூர்–கவுண்டம் பாளையம், ஈரோடு–பெரியசேமூர், மற்றும் திருவள்ளூர்–வளசரவாக்கம் (சென்னை) ஆகிய மாநகராட்சி விரிவாக்கப் பகுதிகளில் நவீன நிலஅளவை கருவிகள் மூலம் இதுவரையில் 4.68 ச.கி.மீ. அளவைப்பணி செய்யப்பட்டுள்ளது.

**நிலஆவண மேலாண்மை மையங்கள்**

- பொதுமக்களுக்கு தேவையான அனைத்து சேவைகளையும் ஒற்றைச் சாளரம் மூலம் வட்ட அலுவலகங்களில் வழங்கும் பொருட்டு நில ஆவண மேலாண்மை மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

- குறிப்பாக இந்த காலகட்டத்தில் மேலும், 6 நில ஆவண மேலாண்மை மையங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பெற்றன. முதலாம் கட்டத்தில் அனுமதிக்கப்பட்ட 78 வட்டங்களுள் 76 நில ஆவண மேலாண்மை மையங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பெற்றன.

- இரண்டாம் கட்டத்தில் மீதமுள்ள 2 வட்டங்களுக்கும், மூன்றாம் கட்டத்தில் (அனுமதிக்கப்பட்ட வட்டங்கள் 76) கட்டுமானப்பணி நிறைவுற்ற 11 வட்டங்களுக்கும், கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

**நிலஅளவர்களுக்கு நவீன நிலஅளவைப் பயிற்சி**

- நவீன நில அளவைக் கருவிகளான ஜி.பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் ஆகியவற்றை கையாள்வதற்கு சென்னை அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள சி–ஸ்டார் பயிற்சி நிலையத்தில் 259 நபர்களுக்கு அடிப்படை பயிற்சியும், புத்தாக்க பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

**சென்னை மாவட்டத்தில் நகர்ப்புற நில ஆவணங்களை கணினிமயமாக்குதல்**

- சென்னை மாவட்டத்தில் நகர்ப்புற நில ஆவணங்களை கணினிமயமாக்கும் பணியினை செயல்படுத்தி 3.76 இலட்சம் நில ஆவணங்களும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, அனைத்து வட்டங்களின் நகரஆவணங்கள் இணையவழியில் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும் பொது மக்களிடமிருந்து பட்டா மாறுதல் கோரி பெறப்பட்ட 13,155 விண்ணப்பங்களில் 7,986 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**Skoch Order – Of Merit**

- நில அளவை மற்றும் நிலவரித்திட்ட துறைக்கு நில ஆவணங்களை இணையவழிப்படுத்தும் பணியினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியமைக்காக **Skoch Order–Of Merit** விருது வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை



**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்**

- முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ் 40,000 வீடுகள் ரூ 840 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் (ஊரகம்) 1,76,338 வீடுகள் ரூ.2,997.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்படுகின்றன.

- பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி –IIன் (2017–2018) கீழ், 2,658.58 கி.மீ. நீளமுள்ள 769 சாலைகள் மற்றும் 25 பாலங்கள் ரூ.1,244.35 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 4,650 கி.மீ. நீளமுள்ள 2,568 சாலைகள் ரூ. 800 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டிற்காக எடுக்கப்பட்டுள்ளன.

- TANII-II (தமிழ்நாடு புதிய முயற்சிகள்) திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பல்வேறு திட்டங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளின் தரத்தினை உறுதி செய்யும் வகையில் 5 நடமாடும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் நாகப்பட்டினம், மதுரை, திருநெல்வேலி, ஈரோடு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ரூ.2.35 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளது.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 21.51 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு அதற்காக ரூ. 3,213.85 கோடி ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 20,000 தடுப்பணைகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 545 தடுப்பணைகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

- தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், இதுவரை 8,676 கிராம ஊராட்சிகள் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகளாக தங்களை அறிவித்துள்ளன.



- திடக் கழிவு மேலாண்மை செயல்பாடுகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்துடன் ஒருங்கிணைத்து மாநிலத்தில் மொத்தமுள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகின்றன.

## தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

**சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன அமைப்பு :**

- 8,259 சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக ரூ.4,313.50 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

- விடுபட்ட ஏழை மகளிரைக் கொண்டு 16.02.2017 முதல் 30.11.2017 வரை 8,575 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**திறன் வளர்ப்பு**

- மூன்றாம் கட்ட மாவட்டங்களிலுள்ள 2,480 கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களுக்கு இயக்க வழிகாட்டி கையேடு குறித்த பயிற்சி ரூ.490 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டுள்ளது.

- 5,068 வங்கியாளர்கள், சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகிகளுக்கு நிதி உள்ளாக்கம் குறித்த பயிற்சி ரூ.33 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டுள்ளது.

- ஊரக வாழ்வாதார திட்டம், முதல் கட்டத்திற்கு 458 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகிகளுக்கும், 845 கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களுக்கும் கூட்டமைப்பு மற்றும் புத்தகப் பராமரிப்புக் குறித்த பயிற்சி ரூ.102 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டுள்ளது.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொடர் வேலை வாய்ப்பிற்கான திட்டத்தின் கீழ் (MGNREGS – Project LIFE) 13,639 பயனாளிகளுக்கு ஊதியம் சார்ந்த வேலை வாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

- அனைத்து சமுதாய அடிப்படையிலான அமைப்புகளுக்கும் ரூபாய் 1,263 இலட்சம் செலவில் புத்தாக்கப் பயிற்சி 2017–18 ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

**நிதி உள்ளாக்கம் :**

- வங்கிகள் மூலம் 1,86,756 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், 41 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் கடன் இணைப்பு மற்றும் பெருங்கடனாக ரூ.5,759.86 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- 8,416 சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானிய தொகையாக 142.23 இலட்சம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

**தொழில் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு :**

- “தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா” (ஆஜிவிக்கா திறன் பயிற்சி திட்டம்) திட்டத்தின் மூலம் 18 முதல் 35 வயது வரை உள்ள 1,864 கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கு ரூ.4.50 கோடி செலவில் தொழிற்பயிற்சி

அளிக்கப்பட்டு, ஊதியம் ஈட்டும் பணிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**வேலை வாய்ப்பு முகாம் 2016–2017 :**

- இதுவரை 161 வேலைவாய்ப்பு முகாம்கள் ரூ.50 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு, 11,145 இளைஞர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**தீன்தயாள் அந்தியோதய யோஜனா (DAY NULM):**

- நகர்ப்புறங்களில் 3,739 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- 630 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 0.63 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.
- 139 பகுதி மற்றும் நகர் அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.
- சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2,572 தனி நபர்கள் ரூபாய் 1.82 கோடி உதவி பெற்றுள்ளனர்.
- சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1,168 குழுக்கள் ரூபாய் 0.26 கோடி உதவி பெற்றுள்ளனர்.
- நகர்ப்புறங்களில் செயல்படும் 2,244 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 10.26 கோடி வங்கி கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.
- EST&P (திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி மூலம் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்)–ன் கீழ் 1,398 இளைஞர்கள் பயிற்சிப் பெற்றுள்ளனர்.

**வாழ்வாதாரம்:**

**ஏழை மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டம்**

- இத்திட்டத்தின் கீழ் நாளது தேதிவரை 16,841 மகளிர் பயன் பெற்றுள்ளனர். தமிழ்நாடு திறன் வளர்ச்சி இயக்கம் மூலம் 2,280 நபர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு, ரூ. 1.53 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- பண்ணை சாரா தொழில் மேம்பாடு திட்டத்தின் மூலம் 7,870 மகளிர் பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ.7.87 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**சந்தைப்படுத்துதல்:**

- மாநில அளவில் 2 விற்பனைக் கண்காட்சிகள், மாவட்ட அளவில் 4 கண்காட்சிகள், 59 கல்லூரி சந்தைகள், சென்னை மற்றும் வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற மண்டல அளவிலான சாராஸ் கண்காட்சிகள், சென்னை மற்றும் பிற மாநிலங்களில் நடைபெற்ற 7 சாராஸ் கண்காட்சிகள் மற்றும் புதுடெல்லியில் நடைபெற்ற ஆஜீவிகா மேளா ஆகியவற்றின் மூலம் ரூ.397.18 இலட்சம் மதிப்பிலான மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்**

- 22,612 நபர்கள் பல்வேறு காப்பீடு திட்டங்களில் இணைந்துள்ளனர்.
- 2,725 பயனாளிகளுக்கு துயர் குறைப்பு நிதியாக ரூ.180 இலட்சம் மென்கடன் வழங்கப்பட்டுள்ளது.
- 1,020 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள 11,819 பயனாளிகளுக்கு ரூ.2,788 இலட்சம் வங்கி கடன் இணைப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது.
- நுண்தொழில்களை மேம்படுத்தும் பொருட்டு 734 கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் கருத்துரு அனுமதிக்கப்பட்டு ரூ.1,708 இலட்சம் கடனுதவி 3,670 பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.
- 2 மீன் விற்பனை சங்க அலுவலகக் கட்டிடங்கள் ரூ.14 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- ரூ.28 இலட்சம் செலவில் 3 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 16 வலை பின்னும் கூடம் ரூ.131 இலட்சம் செலவிலும் மற்றும் 3 மீன் உலர் தளம் ரூ.17 இலட்சம் செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- மீன்வளத்தை மேம்படுத்தும் பொருட்டு, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தலா இரண்டு இடங்களில் எட்டு செயற்கை பவளப்பாறைகள் ரூ.148 இலட்சம் செலவில் கடலில் நிறுவப்பட்டுள்ளன.
- 1,380 தலைச்சுமை மீன் வியாபாரம் செய்யும் மகளிரை இணைத்து 277 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு பிணையில்லா கடனாக ரூ.110 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- 1,130 தலைச்சுமை மீன் வியாபாரம் செய்யும் மகளிருக்கு ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் மீன் விற்பனை உபகரணங்கள் வழங்கப்பட்டட்டுள்ளன.

❖ ❖ ❖

# பள்ளிக் கல்வித் துறை




- தமிழகத்தில் அரசு / உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் இந்திய அளவில் நடைமுறைப்படுத்தக்கூடிய அனைத்து வகையான போட்டித் தேர்வுகளில் பங்கு கொள்ளும் பொருட்டு 412 மையங்களில் சிறப்பு பயிற்சிகள் அளித்தல்.

- 3,090 அரசு உயர்நிலை, 2,939 மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்கள் (Hi-tech Labs) 437 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்தல்.

- 3,000 அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் திறன் வகுப்புகள் (Smart Class) ரூ.60 கோடி செலவில் அமைத்தல்.

- குழந்தைகள் சேர்க்கை மற்றும் பள்ளி மேலாண்மையில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களுக்கு கனவு ஆசிரியர் விருது வழங்குதல்.

- அறிவியல், தொழில்நுட்பம், கலை மற்றும் இலக்கியம் ஆகிய தனித்திறன் பெற்று சிறந்து விளங்கும் மாணவர்களை மேலை நாடுகளுக்கு கல்வி பயணம் அனுப்புதல்.

- பள்ளி மற்றும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு சிறப்பாக செயல்படும் பள்ளிகளுக்கு புதுமைப் பள்ளி விருது வழங்குதல்.

- பொதுத்தேர்வு முடிவுகளை தேர்வர்களுக்கு அலைபேசி வாயிலாக குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டன.

- 2017–2018ஆம் கல்வியாண்டில் பதினொன்றாம் வகுப்பு மாணவர்களுக்கும் மாநில அளவில் பொதுத் தேர்வு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

- சேர்க்கை நடைமுறையில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் பயனடையும் வகையில், 2017–2018ஆம் கல்வியாண்டு முதல் 25% இட ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை இணைய வழியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது மற்றும் இப்பிரிவின் கீழ் இந்த கல்வியாண்டில் 95,858 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

- மத்திய இடைநிலை கல்வி வாரியம் உள்ளிட்ட பல வாரியங்களிடமிருந்து உள்ளீடுகள் கொண்ட கலைத்திட்ட வடிவமைப்பு மற்றும் பாடத்திட்டம் மாற்றம்.

- 16,540 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு கருத்து வரைவாக்கம், பிரச்சினைத் தீர்வு உருவாக்கம் மற்றும் உயர் சிந்தனைத் திறன்கள் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டன.



- பொது நூலகத் துறையின் கீழ் எஞ்சியுள்ள 24 மாவட்ட மைய நூலகங்களில் போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள் ரூ.72 இலட்சம் செலவில் ஏற்படுத்துதல்.
- 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்கள் அவர்களது மேற்படிப்பை தொடரும் வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் வாயிலாக ஒன்றியம் தோறும் கல்வி கடன் முகாம்கள் ஏற்பாடு செய்தல்.
- 2,357 முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் / 196 பட்டதாரி ஆசிரியர்கள் / 59 பட்டதாரி ஆசிரியர்கள் (IEDSS) ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- 4,362 ஆய்வக உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- பள்ளிக் கல்வி இயக்ககம், தொடக்கக் கல்வி இயக்ககம் (ம) மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககங்களுக்கு 34 புதிய வாகனங்கள் வாங்க ரூ.2.89 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- எஞ்சியுள்ள 123 முழுநேர கிளை நூலகங்களில் ரூ.1.84 கோடி செலவில் கணினி வசதி ஏற்படுத்துதல்.
- அரசு பள்ளிகளின் பயன்பாட்டிற்கென கற்பித்தல் மேலாண்மைத் தளம் ரூ.2 கோடி செலவில் ஏற்படுத்துதல்.
- தமிழக அரசிடமிருந்து மெட்ரிகுலேசன் பள்ளிகள் துவக்க அனுமதி / அங்கீகாரம் / தொடர் அங்கீகாரம் பெறும் முறைகள் எளிமைப்படுத்துதல் மற்றும் இணையவழி மூலம் பெறும் நடைமுறை அறிமுகப்படுத்துதல். இதற்கான செலவினம் ரூ.10 இலட்சம்.
- அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு புதிய கலைநுட்பம் சார்ந்த நூல்கள் வாங்க ரூ.5 கோடி அனுமதித்தல்.
- பள்ளி, ஒன்றியம், கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவில் போட்டிகள் நடத்தி மிகப் பெரிய அளவில் மாணவர் கலைத் திருவிழா அறிமுகப்படுத்துதல். இதற்கென ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- அரிய வகை நூல்கள், ஆவணங்கள், ஓலைச் சுவடிகள் ஆகியவற்றை பொது மக்கள் மற்றும் தனியார் அமைப்புகளிடமிருந்து பெற்று பாதுகாத்து பயன்படுத்த ஏதுவாக ஒரு புதிய இயக்கம் (Movement) தோற்றுவித்தல்.
- மாணவியர்கள் பயிலும் 3,334 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் நலனுக்காக ரூ.11.88 கோடி செலவில் நேப்கின் அலமாரி மற்றும் எரியூட்டி இயந்திரம் வழங்குதல்.

❖ ❖ ❖

# சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை




- முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், ரூ.94.37 கோடி செலவில் 38,366 பெண் குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர்.

- தொட்டில் குழந்தைத் திட்டத்தின் கீழ், 112 குழந்தைகள் (ஆண்–55, பெண்–57) மீட்கப்பட்டுள்ளனர்.

- 1,636 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

- அனைத்து திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ், 2017–2018ஆம் நிதியாண்டுக்கு பயனாளிகளுக்கு வழங்குவதற்கு ஏதுவாக, 89,267 எட்டு கிராம் (22 காரட்) தங்க நாணயங்களும், 4,895 நான்கு கிராம் (22 காரட்) தங்க நாணயங்களும் கொள்முதல் செய்யப்பட்டு, மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு வழங்கிட ஏதுவாக, 3,312 தையல் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாட்டில் முதன்முறையாக முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம் கடைபிடிப்பதற்கு 2017–2018ஆம் நிதியாண்டிற்கு ரூ.4,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- பொதுமக்களிடையே சமூக நலத் துறையின் நலத் திட்டங்களின் செயல்பாட்டின் மீது விழிப்புணர்வையும் அதனைக் கண்காணிக்கவும் "சமூக உதவி மையத்தை உருவாக்குதல் மற்றும் பன்முக தொடர்பு சாதனங்களை மேம்படுத்துதல்" என்னும் திட்டத்தை ரூ.99.25 இலட்சம் செலவில் செயல்படுத்துவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

- 19,230 சத்துணவு மையங்களுக்கு அலுமினிய பிரஷர் குக்கர்கள் ரூ.4.81 கோடி செலவிலும், சத்துணவு மையம் ஒன்றுக்கு தலா ரூ.5,000/– வீதம் 12,000 பள்ளி சத்துணவு மையங்களுக்கு புதிய சமையல் உபகரணங்கள் ரூ.6 கோடி செலவிலும் வாங்கி வழங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

- அங்கன்வாடி மையங்களுக்கு வருகை புரியும் குழந்தைகளைக் கொசுக்கடியிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, முன்னோடி திட்டமாக சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் செயல்படும் அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.300/– மதிப்பில் ஒரு மாவட்டத்திற்கு ரூ.5 இலட்சம் மதிப்புள்ள கொசு வலைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் மீதமுள்ள 30 மாவட்டங்களில் உள்ள 50,144 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.1.50 கோடி செலவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.



- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்துடன் இணைந்து, 1,000 அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு தேவைப்படும் நிதியான ரூ.70 கோடியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத் துறையின் பங்கு தொகையாக ரூ.20 கோடி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட பயனாளிகளான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வரும் இணை உணவு / சத்துமாவின் அளவை 01.10.2017 முதல் அதிகரித்து வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. பயனாளிகளின் எண்ணிக்கை 23,39,590. அதற்கு ரூ.63.26 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- அங்கன்வாடி மையங்களுக்கு கைத்துண்டு, சீப்பு, நகவெட்டி, சோப்பு அடங்கிய சுகாதார பேழை (Hygiene Kits) வழங்கிட ரூ.132.83 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- வயது முதிர்வினால் ஓய்வுபெறும் அங்கன்வாடிப் பணியாளர்கள் / குறு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் சத்துணவு அமைப்பாளர்களுக்கு ரூ.1,00,000/–மும், அங்கன்வாடி உதவியாளர்கள் மற்றும் சத்துணவு சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு ரூ.50,000/–மும் 01.10.2017 முதல் வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வுபெறும் போது சிறப்பு ஓய்வூதியமாக ரூ.2,000/– 01.10.2017 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

- ஒவ்வொரு மாவட்டத்திலும் 4 அங்கன்வாடி மையங்கள் வீதம் 128 அங்கன்வாடி மையங்கள் தேர்வு செய்யப்பட்டு கட்டுமானம், தளவாடம் மற்றும் சேவைகளில் சிறந்து விளங்குவதற்கான "தரக்கட்டுபாடு சான்றிதழ்" [ISO 9001:2015] முன்மாதிரியாக பெற அரசாணை வெளியிடப்பட்டு தற்போது 128 அங்கன்வாடி மையங்களுக்கு தர கட்டுபாடு சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

- சமூகப் பாதுகாப்பு ஆணையரகத்தின் கீழ் செயல்படும் பல்வகையான குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ளுறையும் குழந்தைகளை ஆக்கப்பூர்வமான குடிமக்களாக "உளவியல் வாழ்வரங்கம்" மூலம் உருவாக்க ரூ.29,97,500/– நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

- சேலம் அன்னை சத்தியா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு பழைய கட்டடத்தை இடித்துவிட்டு ரூ.9.46 கோடி செலவில் 3,825.29 ச.மீ. பரப்பளவில் புதிய கட்டடம் கட்டுவதற்கு நிருவாக அனுமதி வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

- பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்கு சிறப்பாக பங்காற்றும் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24இல் விருது வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டின் (2017–2018), 24.01.2018 அன்று திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி ந. நந்தினி என்பவருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை



மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்

- சிறப்பு திட்ட செயலாக்கத் துறையினால் செயல்படுத்தப்படும் மாணாக்கர்களுக்கான விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் 2016–2017ஆம் கல்வி ஆண்டில், பன்னிரெண்டாம் வகுப்பு படித்தவர்களுக்கும், பல்தொழில்நுட்ப கல்லூரிகளில் முதலாம் ஆண்டு முடித்த மாணாக்கர்களுக்கும் நடப்பு ஆண்டில் 5,11,074 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

**“இந்தியாவிலேயே இன்றைக்கு கல்வி கற்பவர்கள் எண்ணிக்கை தமிழகத்தில்தான் அதிகமாக இருக்கிறது. இன்றைக்கு 44 சதவீதம் பேர் உயர்கல்வி படிப்பதற்கான சூழ்நிலையை அம்மா அவர்கள் உருவாக்கித் தந்துள்ளார்கள். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி கொடுத்தார்கள். எண்ணற்ற கல்லூரிகளை கொடுத்ததன் விளைவு நம்முடைய மாணவர்கள் உயர்கல்வியை படிக்கின்ற எண்ணிக்கை உயர்ந்துள்ளது.”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்**

# தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை



## தமிழ் வளர்ச்சித் துறை

- பிப்ரவரித் திங்கள் 21ஆம் நாள் உலகத் தாய்மொழிநாள் ரூ.5 இலட்சம் செலவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

- மாவட்ட அளவில் கவிதை/ கட்டுரை / பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு 2016–2017ஆம் ஆண்டிற்கு 21.2.2017 முதல் 26.02.2017 வரையிலும் 2017–2018ஆம் ஆண்டிற்கு 23.10.2017 முதல் 29.10.2017 வரையிலும் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை வாயிலாக இலக்கணம், இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் ரூ. 40 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டது.

- பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 125ஆவது பிறந்தநாளைப் போற்றும் வண்ணம் 2016–2017ஆம் ஆண்டிற்கு 28.03.2017 மற்றும் 29.03.2017 ஆகிய நாள்களில் 125 கவிஞர்களைக் கொண்டு ரூ.5 இலட்சம் செலவில் தமிழ்க் கவிஞர் நாள் கொண்டாடப்பட்டது. மேலும் 2017–2018ஆம் நிதியாண்டில் 29.04.2017 அன்று ரூ. 3 இலட்சம் செலவில் தமிழ்க் கவிஞர் நாள் கொண்டாடப்பட்டது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 25.04.2017ஆம் நாளன்று தமிழறிஞர்களுக்கு 2015ஆம் ஆண்டுக்கான தமிழ்ச் செம்மல் விருது, முதலமைச்சர் கணினித் தமிழ் விருது மற்றும் 2016ஆம் ஆண்டுக்கான சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகள், அம்மா இலக்கிய விருது, மொழிபெயர்ப்பாளர் விருது என மொத்தம் 52 விருதுகள் வழங்கிச் சிறப்பு செய்யப்பட்டது.

- கணினியில் ஆங்கில மொழிக்கெனப் ‘பிழை திருத்தி’ இருப்பதைப்போல் தமிழிலும் பிழை திருத்துவதற்கேற்ப “அம்மா மென்தமிழ்ச் சொல்லாளர்” எனும் மென்பொருள் அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் வழங்கும் பொருட்டு ரூ.30 இலட்சம் செலவில் 10,000 குறுந்தகடுகள் வாங்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 16.05.2017ஆம் நாளன்று வெளியிடப்பட்டு தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரசுத் துறை அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டது.

- தமிழ் மொழிக்குத் தொண்டாற்றிவரும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்குத் திங்கள்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை ரூ.2,000/–த்திலிருந்து ரூ.2,500/–ஆக வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது மேலும், இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெற ஆண்டு வருவாய் வரம்பு ரூ. 36,000/–த்திலிருந்து ரூ. 72,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- உதவித் தொகை பெற்றுவரும் தமிழறிஞர்கள் / எல்லைக் காவலர்கள் இயற்கை எய்திய நாளுக்கு

மறுநாள் முதல் அவர்களின் மரபுரிமையர்களுக்கு உதவித் தொகை வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

- சென்னையில், கம்பர் மற்றும் இளங்கோவடிகள் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கும், சங்கப் புலவர்களை நினைவு கூரும் வகையில் அவர்களின் நினைவுத் தூண்களுக்கும் மாலை அணிவித்துச் சிறப்புச் செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது.
- அறிவியல் தமிழறிஞர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களின் பெயரில் புதியதாக விருது தோற்றுவிக்கப்பட்டுள்ளது.
- தமிழ் வளர்ச்சி இயக்ககம் மற்றும் சார்நிலை அலுவலகங்களுக்குக் கணினி வாங்கிட ரூ.5 இலட்சத்து 85 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- ஆட்சிமொழிப் பயிலரங்கம் நடத்துவதற்கென ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவந்த செலவினத் தொகை ரூ. 30,000/–த்திலிருந்து ரூ. 50,000/–ஆக உயர்த்தப்பட்டது.
- மாவட்டங்களில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்துவதற்கான சில்லறைச் செலவினத் தொகை ரூ.10,000/–த்திலிருந்து ரூ.20,000/–ஆக உயர்த்தப்பட்டது.
- சிறந்த நூல் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், தற்பொழுது வழங்கப்படும் நூல் மதிப்பீட்டுத் தொகையில் 60 விழுக்காடு என்பதை 100 விழுக்காடாக உயர்த்தி, உச்ச வரம்புத் தொகையாக ரூ. 50,000/– வரை வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு அரசின் சார்பில் குவகாத்திப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் தமிழ் நூலகம் அமைக்கவும் கணினி வழி தமிழ்மொழி கற்க கணினிகள் வாங்கிடவும் ரூ. 2 இலட்சத்து 89ஆயிரம் வழங்கப்பட்டது.

**செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்**

- 1 முதல் 5ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களுக்கு வண்ணப்படங்களுடன், கூடிய ‘தூயதமிழகராதி’ நற்றமிழ் அறிவோம் எனும் பெயரில் 50,000 படிகள் அச்சிடப்பட்டு, தொடக்கக் கல்வித்துறை வாயிலாக அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் பள்ளிக்கு ஒன்று வீதம் வழங்கப்பட்டுள்ளன.
- புதிய கலைச் சொற்களை உருவாக்க விழைவோருக்கும்,தேர்வாணையம்நடத்தும்போட்டித் தேர்வுகளின் தமிழ்ப் பாடத் தேர்வர்களுக்கும், பள்ளி மாணாக்கர்களுக்கும் பயன்படும் வகையிலும் தமிழ்ச் சொற்களின் வேர்ச் சொற்களைத் தொகுத்து ‘வேர்ச்சொல் சுவடி’ எனும் நூல் 5,000 படிகள் அச்சிடப்பட்டு, பள்ளிக் கல்வித்துறை வாயிலாக அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் பள்ளிக்கு ஒன்று வீதம் வழங்கப்பட்டுள்ளது.
- நாள்தோறும் நாளேடுகளிலும், ஊடகங்களிலும் வெளியாகும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை வடிவமைக்க தமிழ்க் கலைக்கழகம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 16.01.2018 அன்று நடைபெற்ற இவ்விழாவில் 2018ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது முனைவர் கோ.பெரியண்ணன் அவர்களுக்கும், 2017ஆம் ஆண்டுக்கான பேரறிஞர் அண்ணா விருது முனைவர் திரு.அ.சுப்ரமணியன் அவர்களுக்கும், பெருந்தலைவர் காமராசர் விருது முனைவர் தா.ரா.தினகரன் அவர்களுக்கும், மகாகவி பாரதியார் விருது முனைவர் சு.பாலசுப்பிரமணியன் (எ) பாரதி பாலன் அவர்களுக்கும்,பாவேந்தர்பாரதிதாசன்விருது திரு.க.ஜீவபாரதி அவர்களுக்கும், திரு.வி.க. விருது எழுத்தாளர் திரு.வை.பாலகுமாரன் அவர்களுக்கும், கி.ஆ.பெ.விசுவநாதம் விருது பேராசிரியர் முனைவர் ப.மருதநாயகம் அவர்களுக்கும் வழங்கப்பட்டன. மேலும், இந்நிகழ்வில் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 47 பேருக்குத் திங்கள்தோறும் நிதியுதவி ரூ.2,500/– மற்றும் மருத்துவப்படி ரூ.100/– வாழ்நாள் முழுவதும் பெறுவதற்கான ஒப்பளிப்பு அரசாணை வழங்கப்பட்டது.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

- திருக்குறள் – கொரிய மொழிபெயர்ப்பு நூலாக்கம் செய்து வெளியிடப்பட்டது.
- 8 ஆய்வு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- “தமிழ்நாட்டு வரலாறு – முனைவர் பி. இறையரசன்” ஆங்கில நூல் வெளியிடப்பட்டது.




- ஒரு பயிலரங்கம், ஒரு தேசியப்பயிலரங்கம், 15 அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், 3 சிறப்புச் சொற்பொழிவுகள், ஒரு கருத்தரங்கம், ஒரு பன்னாட்டு கருத்தரங்கம் ஆகியவை நடத்தப்பட்டன.

- 24.02.2017–25.02.2017 தமிழ்த்தாய் 69 – தமிழாய்வுப் பெருவிழாவில் திருக்குறள் ஓவியப் போட்டி, 69 மாணவர்களின் திருக்குறள் முற்றோதல், 69 அரிய நூல்கள் வெளியீடு, 69 கவிஞர்களின் கவியரங்கம் ஆகியவை நடத்தப்பட்டன.

- உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மையம் மற்றும் மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் இணைந்து இரண்டுநாட்கள் "மலேசியத் தமிழாசிரியர்களுக்கான இலக்கியப் பயிற்சிப் பட்டறை" நிறுவனத்தில் 22.04.2017–23.04.2017இல் நடத்தப்பட்டது.

- மணிமொழியனார் அறக்கட்டளை, புதுமைப்பித்தன் அறக்கட்டளை, பேரறிஞர் ஔவை துரைசாமி அறக்கட்டளை பெயரில் புதியதாக அறக்கட்டளைகள் தொடங்கப்பட்டன.

- 16.04.2017 உலக மரபு நாள் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

- ஸ்ரீஇராமானுசர் 1,000ஆவது பிறந்தநாளை முன்னிட்டு – 17.04.2017இல் புரட்சித்துறவி இராமானுசர் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

- நிறுவன ஆய்வு நூலகத்திற்கு ரூ.1.50 இலட்சம் செலவில் புதிய நூல்கள் வாங்கப்பெற்றன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவன திருமூலர் ஆய்விருக்கை மற்றும் ரெங்கா அக்குபஞ்சர் மற்றும் யோக சமூக நலக்கல்வி அறக்கட்டளை இணைந்து திருமந்திரமும் சித்த மருத்துவமும் எனும் தலைப்பில் தேசியப் பயிலரங்கம் நடத்தப்பட்டது.

- உலக சித்தர்கள் மாநாடு நடத்தப்பட்டது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவன தொல்காப்பியர் ஆய்விருக்கை மற்றும் கோவை கௌமார மடாலயம் இணைந்து வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய அறுவகை இலக்கண நூல் வெளியீட்டு விழா மற்றும் சிறப்புக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ்மொழி இலக்கியம் மற்றும் கற்றல் கற்பித்தல் எனும் தலைப்பில் இரண்டு நாள் பன்னாட்டு மாநாடு நடத்தப்பட்டது.

- பேரறிஞர் அண்ணா அவர்களின் 109ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, பேரறிஞர் அண்ணா தமிழ் மேம்பாட்டு அறக்கட்டளை சார்பாக சிறப்புச் சொற்பொழிவு நடத்தப்பட்டது. இந்நிகழ்வில், மருத்துவர் அண்ணா பரிமளம் அவர்கள் எழுதிய அண்ணாவும் திருக்குறளும் எனும் நூலும் கண்ணியம் ஆ.கோ. குலோத்துங்கன் மற்றும் கவிஞர் தேவனூர் இளமாறன் தொகுத்த பேரறிஞர் அண்ணாவின் சீர்திருத்தச் சிந்தனைகள் எனும் நூலும் வெளியிடப்பட்டன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உலக மொழி பெயர்ப்பு நாள் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டதை நினைவு கூறும் வகையில் நிறுவன நாள் ஆகியவை கொண்டாடப்பட்டன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்துடன் இணைந்து எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா சிறப்புப் பட்டிமன்றம் நடத்தப்பட்டது.
- தமிழ் தாய் மொழி அல்லாதோருக்கான தமிழ்மொழி பயிற்சி வகுப்பில் 8 மாணவர்கள் பயின்றனர்.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உயராய்வுத் திட்டங்களுக்கான களப் பணிகளுக்கு ரூ. 6 இலட்சம் நல்கையாக வழங்கப்பட்டது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மாணவ / மாணவியர் விடுதிகள் உள்கட்டமைப்பு மற்றும் உணவு சமைக்கும் பாத்திரங்கள் வாங்கிட ரூ. 9,94,479/– வழங்கப்பட்டது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழாய்வு மாணவர்கள் பரிமாற்றத் திட்டத்திற்கு ரூ. 9 இலட்சம் நல்கையாக வழங்கப்பட்டது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் குளிர் வசதி ஏற்படுத்திடும் வகையில் சீர்வளிக் கருவிகள் வாங்கிட ரூ. 6 இலட்சம் நல்கையாக வழங்கப்பட்டது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பயிற்சிப் பட்டறைகள் நடத்திட ரூ.3,20,000/– வழங்கப்பட்டுள்ளது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு செய்யும் முனைவர் பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகையாக ரூபாய் 4 இலட்சத்து 80 ஆயிரம் நல்கையாக வழங்கப்பட்டது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்திற்குக் கண்காணிப்புப் படக்கருவி அமைக்க ரூ.3,96,980/– வழங்கப்பட்டுள்ளது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சுவடிப் பட்டய மாணவர்களுக்கு நிதியுதவியாக ஆண்டுதோறும் ரூ.3.60 இலட்சம் நல்கையாக வழங்கப்பட்டது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கல்வி, நிருவாக அலுவலர்கள் மற்றும் ஆய்வு மாணவர்கள் பயன்பாட்டிற்குக் கணினிகள் வாங்கிட ரூ.3,39,624/– நல்கையாக வழங்கப்பட்டது.

**உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை**

- ஆந்திர மாநிலம், குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையுடன் இணைந்து 'திராவிட மொழிகளில் அற இலக்கியம்: ஓர் ஒப்பீட்டாய்வு' எனும் தேசியக் கருத்தரங்கம் 24.02.2017 மற்றும் 25.02.2017 ஆகிய நாள்களில் நடத்தப் பெற்றது.
- மதுரை, தமிழ்க் காப்புக் கழகத்துடன் இணைந்து 27.02.2017ஆம் நாளன்று உலகத் தாய்மொழி நாள் விழா கொண்டாடப்பட்டது.
- "தமிழ் எங்கள் உயிருக்கு நேர்", "தேமதுரத் தமிழோசை", "பாரதி . . . தீ" ஆகிய தலைப்புகளில் தமிழ்நிலாக் கவியரங்கம் நடத்தப்பெற்றுள்ளன.
- 'அயலகத் தமிழ்ப் படைப்புகளில் தமிழ்ச் சமூகம்', ஆசுதிரேலியப் பழங்குடியினர் வாழ்வியலும் புலம்பெயர் தமிழர் வாழ்வியலும், மலேசியாவில் தமிழ் இலக்கியம், புலம்பெயர் தமிழர்களின் இலக்கியப் பணிகள், பிரெஞ்சு அகராதியியலின் வரலாறு & பரிணாமம், இணையத் தமிழ் மற்றும் மலையகத் தமிழ் இலக்கியம் ஆகிய தலைப்புகளில் 7 ஆய்வரங்குகள் நிகழ்த்தப் பெற்றுள்ளன.
- 'கீழடி ஆய்வும் முன்னெடுப்புத் தேவைகளும்', 'தமிழ் வைணவ உரை மரபுகள்', 'பன்முக நோக்கில் குறுந்தொகை' ஆகிய தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்தப்பெற்றுள்ளன.
- அயல்நாட்டுத் தமிழ்ப் பாடநூல்கள் – ஒரு மதிப்பீடு எனும் தலைப்பில் 31.03.2017ஆம் நாளன்று பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பெற்றது.
- மலேசியத் தமிழ் இடைநிலைப் பள்ளி மாணவர்கள் பங்குபெற்ற பயிலரங்கம் 29.08.2017ஆம் நாளன்று நடத்தப்பெற்றது.
- புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா சிறப்புக் கவியரங்கம் 17.09.2017ஆம் நாளன்று நடத்தப்பெற்றது.
- மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழர்களின் உயரிய பண்பாட்டுப் பாரம்பரியத்தினைப் பறைசாற்றும் வகையில், தமிழர் பண்பாட்டுப் பாரம்பரிய அருங்காட்சியகம் ரூ.50 கோடி மதிப்பில் நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

- மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழக சட்டப்பேரவையில்

அறிவிக்கப்பட்ட கட்டட நல்கையிலிருந்து ரூ.15 கோடியில் 'த' மற்றும் 'நா' வடிவ கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் 07.03.2017ஆம் நாளன்று திறந்து வைக்கப்பட்டு தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

- தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பண்பாட்டு மையம் ஒன்றை உருவாக்கி அதன்வழி புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாடுகளில் கல்வி மற்றும் கலை பயிற்று நிறுவனங்களுடன் இணைந்து இசை மற்றும் நடனப் பயிற்சி அளித்திட ரூ. 20 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## செய்தி மக்கள் தொடர்புத் துறை

### நினைவகங்கள்

- திருவாரூர் மாவட்டம், திருவாரூர் நகரத்தில், மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 07.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம், கொண்டையம் பாளையம் கிராமம், மஜரா வையம்பாளையம் கிராமத்தில் உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு ரூ.1.50 கோடி செலவினத்தில் மணிமண்டபம் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ரூ.50.80 கோடி செலவில் அன்னாருக்கு நினைவு மண்டபம் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களின் நினைவாக, சென்னை, அடையாறில் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபம் 01.10.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வாழ்ந்த சென்னை போயஸ் தோட்டத்தில் அமைந்துள்ள "வேதா நிலையம்" இல்லம் அரசு நினைவிடமாக மாற்றப்படும் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து, "வேதா நிலையம்" இல்லம் அமைந்துள்ள நிலத்தினை கையகப்படுத்தி அரசுக்கு ஒப்படைக்க சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு நிருவாக அனுமதி அளித்து 05.10.2017 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தூத்துக்குடி மாவட்டத்தில் 22.11.2017 அன்று நடைபெற்ற எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனாருக்கு மணிமண்டபம் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு, இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.
- தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் சாலையில் அமைந்துள்ள ஆவுடையான்குளம் என்ற இடத்தில், பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்களுக்கு ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் நினைவகம் அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 29.11.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- திண்டுக்கல் மாவட்டத்தில் ஹைதர் அலி, திப்பு சுல்தான் ஆகியோர் நினைவு மணிமண்டபம் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு 31.12.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

### பொருட்காட்சி

- தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 10 அரசுப் பொருட்காட்சிகள் மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய 6 மாவட்ட தலைநகரங்களில் ஆண்டுதோறும் நடத்தவும், மீதமுள்ள 4 அரசுப் பொருட்காட்சிகள் மட்டும், சுழற்சி முறையில் வெவ்வேறு மாவட்டங்களில் நடத்தவும் முடிவு செய்யப்பட்டு, தற்போது அதன்படி நடத்தப்பட்டு வருகின்றன.
- பொதுமக்கள் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை அறிந்து பயன்பெறும் வகையில் மேற்படி பொருட்காட்சிகளில் பங்குபெறும் அரசுத் துறைகளின் எண்ணிக்கை 27ஆக உயர்த்தப்பட்டு, அத்துறைகள் பங்கேற்கும் வகையில் அரசுத் துறை அரங்கு ஒன்றிற்கு ரூ.70 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை, இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் ஆண்டுதோறும் புதுடெல்லியில் நடைபெறும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் பங்கேற்று, தமிழ்நாடு அரசின் திட்டங்கள், நலத்திட்ட உதவிகள், சாதனைகள் குறித்தும், தமிழ்நாட்டில் புதிய தொழில்களைத் தொடங்குவதற்கு உகந்த சூழ்நிலைகள், வழங்கப்படும் பல்வேறு வசதிகள் குறித்தும் விளம்பரப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

**விழா**

- தமிழ்ச்சான்றோர்கள், விடுதலைப்போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள 30 மணிமண்டபங்களில் அன்னார்களது பிறந்த நாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி விழா கொண்டாட ஆணை வெளியிடப்பட்டு முதல் முறையாக அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

- கொடிகாத்த குமரன் அவர்களின் பிறந்தநாள் விழா அவரது பிறந்த ஊரான ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் அரசு விழாவாக ரூ.25 ஆயிரம் செலவில் ஆண்டுதோறும் கொண்டாட ஆணை வெளியிடப்பட்டு 04.10.2017 அன்று கொண்டாடப்பட்டது.

- விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் அவர்களின் பிறந்த நாள் விழா திருநெல்வேலி மாவட்டம், நெற்கட்டும்செவலில் அரசு விழாவாக ரூ.25 ஆயிரம் செலவில் ஆண்டுதோறும் கொண்டாட ஆணை வெளியிடப்பட்டு 01.09.2017 அன்று கொண்டாடப்பட்டது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்ஜிஆர். அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழா 30.6.2017 அன்று மதுரையில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 31.12.2017 வரை இவ்விழா அனைத்து மாவட்டங்களிலும் (கன்னியாகுமரி, சென்னை மாவட்டங்கள் நீங்கலாக) சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் அம்மாவட்டங்களுக்கான புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தும், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

**திரைப்பட தொழில் நுட்ப பிரிவு**

- எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்கள் பயிற்சி மற்றும் குறும்படம் தயாரிக்க ஆண்டுதோறும் வெளிமுகமை மூலம் நவீன தொழிற்நுட்பக் கருவிகள் பெற்றிட ரூ.75 இலட்சத்திலிருந்து ரூ.1.50 கோடியாக நிதி உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்கள் ஆண்டுதோறும் குறும்படம் தயாரிப்பதற்கு ஊக்குதவித் தொகை ரூ.15 ஆயிரத்திலிருந்து ரூ.50 ஆயிரமாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- எம்.ஜிஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் இயங்கி வந்த தமிழ்நாடு திரைப்படப் பிரிவு கட்டடம் ரூ.55 இலட்சத்தில் புதுப்பிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- 15ஆவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழக அரசின் சார்பில் ரூ. 50 இலட்சத்திற்கான காசோலையினை இந்திய திரைப்பட திறனாய்வு கழக இயக்குநர் அவர்களிடம் வழங்கப்பட்டது.

- தமிழரசு இதழ்களுக்கான ஆண்டு மற்றும் ஆயுள் சந்தா விவரங்களை பதிவு செய்ய நவீன மென்பொருள் (Subscriber Maintenance Software) ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

- 31.10.2013 அன்று நிகழ்ந்த தீ விபத்தினால் சேதமடைந்த சிகப்பு கட்டடத்திற்கு மாற்றாக புதிய நிரந்தர கட்டடம் ரூ.22 கோடி மதிப்பீட்டில் கட்டடப் பணி முடிவுற்று 23.05.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

- புதுக்கோட்டையிலுள்ள அரசு கிளை அச்சகத்தில் மருத்துவத் துறை, காவல் துறையைச் சேர்ந்த படிவங்கள், மாவட்டங்களுக்கான அரசிதழ்கள்,

பதிவுத்துறை, மீன்வளத்துறை, ஆதி திராவிடர் நலத்துறை, நிதிவிதித் தொகுப்பு, அனைத்துத் துறைகளின் நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் ஆகியவை அச்சடிக்கத் தேவையான அச்சுத் தகடுகளைத் தயாரிக்க பிளேட் எக்ஸ்போசர் இயந்திரம் (Plate Exposure) ரூ. 3,25,000/– மதிப்பீட்டில் நிறுவப்பட உள்ளது.

- திருச்சி அரசு கிளை அச்சகத்தில் அரியலூர், பெரம்பலூர், திருச்சி மற்றும் கரூர் மாவட்டங்களுக்கான அரசிதழ்கள் அச்சிட, சிறிய கல்லச்சு இயந்திரமும் (Mini Offset Machine), அச்சடிக்கப்பட்ட காகிதங்களை தள்ளுவண்டியில் தேவையான இடத்துக்கு எடுத்துச்செல்ல, நீரழுத்த விசைத் தள்ளுவண்டியும் (Hydraulic Trolley) ரூ. 8,27,000/– மதிப்பீட்டில் நிறுவப்பட உள்ளது.

- புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்தில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்ட அரசிதழ்களை அச்சிட, சிறிய கல்லச்சு இயந்திரம் (Mini Offset Machine) ரூ. 8,00,000/– மதிப்பீட்டில் நிறுவப்பட உள்ளது.

- மதுரையில் உள்ள அரசு கிளை அச்சகத்தின் பட்டியல் பிரிவில், வலை ஊதியப் பட்டியல் (Web Pay Roll) முறையில், இணையதளம் வாயிலாக சம்பளப்பட்டியல் தயாரிக்க, புதிய நவீன தொழில்நுட்பத்தினாலான கணினி மற்றும் புள்ளிக்குறி வார்ப்பு அச்சுப் பொறி (Dot Matrix Printer) ஒன்று ரூ. 1,00,000/– மதிப்பீட்டில் கொள்முதல் செய்து நிறுவப்பட உள்ளது.

- அரசு கிளை அச்சகம், மதுரை மற்றும் சேலத்தில் கையினால் எண்கள் இடப்படுவதால் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க, இயந்திரத்திலேயே எண்ணிடும் பணியினை மேற்கொள்ள, தலா ஒரு எண்மிய முறையில் எண்ணிடும் இயந்திரம் மொத்தம் ரூ.33,00,000/– மதிப்பீட்டில் கொள்முதல் செய்து நிறுவப்பட்டுள்ளது.

- அனைத்து அரசு அச்சகங்களில் பணிபுரியும் 1,256 தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சிற்றுண்டிப் படி ரூ.200/– லிருந்து ரூ.400/–ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

- அனைத்து அரசு அச்சகங்களிலும் பணிபுரிகிற 449 பெண் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இரு மேலங்கிகளுக்கான தையற்கூலித் தொகை (வருடத்திற்கு ஒருமுறை) ரூ.350/–லிருந்து ரூ.700/–ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

- அனைத்து அரசு அச்சகங்களிலும் பணிபுரிகிற 814 ஆண் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தையற்கூலித் தொகை (இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை) ரூ.800/–லிருந்து (நான்கு ஜோடிகளுக்கு) ரூ. 1,200/–ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

- அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை–104இல் சுமார் 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய புதிய “வெப் ஆப்செட்” இயந்திரம் நிறுவப்பட்டு மாண்புமிகு தலைமை நீதியரசர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 20.12.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

❖ ❖ ❖

**“நாட்டின் வளர்ச்சி என்பது தனி மனிதன் முன்னேற்றத்தை அளவுகோலாகக் கொண்டது. சமுதாயத்தின் அடித்தளத்திலிருக்கும் ஒரு தனி மனிதன் அடிப்படை தேவைகளான பொருளாதாரம், உணவு, கல்வி, குடியிருப்பு, சுகாதாரம், தொழில், வேலைவாய்ப்பு, பாதுகாப்பு போன்ற அனைத்தும் தங்கு தடையின்றி கிடைக்கிறதா என்பதை உறுதிபடுத்துவதில்தான் சுதந்திரத்தின் வெற்றி இருக்கிறது.”**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்**

# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை



**சுற்றுலாத்துறை**

- மைய அரசு திட்டங்களின் இரண்டாம் மற்றும் இறுதி தவணை நிலுவைகள் ரூ.9.29 கோடி தொகை மாநில அரசு நிதியிலிருந்து 2017–2018ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- திருவண்ணாமலை மாவட்டம் தவளகிரீஸ்வரர் கோயில், வேலூர் மாவட்டம் விரிஞ்சிபுரம் மார்கபந்தீஸ்வரர் கோயில் மற்றும் திருப்பாற்கடல் அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோயில், விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூர், திருநெல்வேலி மாவட்டம் உவரி சுயம்புலிங்கசுவாமி கோயில், தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அதிசயமணல்மாதா சர்ச், இராமநாதபுரம் மாவட்டம் உத்திரகோசமங்கை மங்களநாதர் கோயில், நயினார்கோயில் நாகநாதசுவாமி கோயில் மற்றும் விருதுநகர் மாவட்டம் திருத்தங்கல் நின்றநாராயண பெருமாள் கோயில் ஆகிய இடங்களில் முடிவடைந்த சுற்றுலாத் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
- ஒரு சுற்றுலா அலுவலருக்கு உதவி இயக்குநராக பதவி உயர்வு வழங்கப்பட்டது.
- எம்.வி. ஐலண்ட் ஸ்கை, எம்.வி. யுரோபா 2 மற்றும் எம்.வி. மெகல்லன் ஆகிய அயல்நாட்டு கப்பல்களில் சென்னை துறைமுகத்திற்கு மார்ச் 2017 மற்றும் ஏப்ரல் 2017 மாதங்களில் வருகை தந்த 980 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தமிழக கலாச்சார முறையிலான வரவேற்பு அளிக்கப்பட்டது.
- ஜெய்ப்பூரில் நடைபெற்ற கிரேட் இந்தியா டிராவல் பஜாரில் கலந்து கொள்ளப்பட்டது.
- 20 ஆண்டுகளுக்கும் மேலாக விபத்தின்றி சிறந்த முறையில் பணிபுரிந்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 10 ஓட்டுநர்களுக்கு தலா 4 கிராம் தங்க நாணயமும், சான்றிதழும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வழங்கினார்.
- உதகமண்டலத்தில் மாவட்ட நிருவாகமும் சுற்றுலாத்துறையும் இணைந்து நடத்தும் கோடை விழாவிற்கு ரூ.15 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

- கொடைக்கானலில் மாவட்ட நிருவாகமும் சுற்றுலாத்துறையும் இணைந்து நடத்தும் கோடை விழாவிற்கு ரூ.10 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

- கன்னியாகுமரியில் மாவட்ட நிருவாகமும் சுற்றுலாத்துறையும் இணைந்து நடத்தும் கோடை விழாவிற்கு ரூ.5 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

- புதுதில்லி நொய்டாவில் நடைபெற்ற குளோபல் பொருட்காட்சியில் தமிழக சுற்றுலாத்துறை கலந்து கொள்ள ரூ.1.80 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

- கொல்கத்தாவில் நடைபெற்ற 20ஆவது சுற்றுலா பொருட்காட்சியில் தமிழக சுற்றுலாத்துறை கலந்து கொள்ள ரூ.1.76 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

- கோயம்புத்தூர் அரசு பொருட்காட்சியில் சுற்றுலா அரங்கம் அமைக்க ரூ.70,000/– ஒப்பளிக்கப்பட்டது.

- தேனி மாவட்டம் உத்தமபாளையம் மேலக்கூடலூர் கிராமத்தில் நடைபெற்ற கண்ணகி கோயில் திருவிழாவிற்கு ரூ.5 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

- மதுரையில் மாவட்ட நிருவாகமும் சுற்றுலாத்துறையும் இணைந்து நடத்தும் சித்திரை கலை விழா நடத்த ரூ.5 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

- மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் ராஜ் பவனில் ஒரு சில பகுதிகளை பொது மக்கள் பார்வையிட அனுமதி அளித்ததைத் தொடர்ந்து, அதற்கு வசதியாக இரண்டு ஊர்திகள் ரூ.19 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் வாங்கப்பட்டு பொதுமக்கள் பார்வையிட வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

- ‘ஒரே பாரதம் சிறந்த பாரதம்’ என்ற திட்டத்தின்கீழ் புது தில்லியிலுள்ள ஜம்மு காஷ்மீர் இல்லத்தில் 20.08.2017 அன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் புது தில்லி தமிழ்நாடு இல்லத்துடன் இணைந்து உணவுத் திருவிழா நடத்தப்பட்டது.

- தமிழ்நாடு சுற்றுலாச் சந்தை சங்கத்துடன் இணைந்து தமிழ்நாடு சுற்றுலாச் சந்தை செப்டம்பர் 2017ஆம் ஆண்டு முதன்முறையாக சென்னையில் நடத்தப்பட்டது. இதற்காக ரூ.1 கோடி நன்கொடையாக சங்கத்திற்கு சுற்றுலாத்துறை ஒப்பளிப்பு செய்தது.

- சீனாவில் மக்காவூ நகரில் நடைபெற்ற பசிபிக் ஏசியா சுற்றுலா சந்தையில் (PATA) செப்டம்பர் 2017ஆம் ஆண்டு கலந்து கொள்ளப்பட்டது.

- ஜப்பான் டோக்கியோவில் நடைபெற்ற ஜட்டா (JATA) சுற்றுலா சந்தையில் செப்டம்பர் 2017ஆம் ஆண்டு கலந்து கொள்ளப்பட்டது.

- உலக சுற்றுலா தினத்தை மாநில அளவில் திருச்சியில் 27.09.2017 அன்று நடத்தப்பட்டது. இதற்காக ரூ.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

- புது தில்லியில் மைய அரசு சுற்றுலாத்துறை நடத்திய ‘பர்யடன் பர்வ்’ எனும் சுற்றுலா விழாவில் அக்டோபர் 2017இல் கலந்து கொள்ளப்பட்டது.

- சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய உலக சுற்றுலாச் சந்தையில் அக்டோபர் 2017ஆம் ஆண்டு கலந்து கொள்ளப்பட்டது.

- இலண்டனில் நடைபெற்ற உலக சுற்றுலாச் சந்தையில் நவம்பர் 2017ஆம் ஆண்டு கலந்து கொள்ளப்பட்டது.

- துணை இயக்குநர் ஒருவருக்கு நவம்பர் 2017இல் இணை இயக்குநராக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருப்பைஞ்ஞீலியில் உள்ள அருள்மிகு ஞீலிவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு எல்இடி மின் விளக்குகள் மற்றும் மின் கம்பி அமைப்பு அமைக்க ரூ.60 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

- மெக்சிகோ நாட்டில் லியோன் நகரில் நவம்பர் 2017இல் நடைபெற்ற பன்னாட்டு வெப்பக்காற்று பலூன் திருவிழாவில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கலந்து கொண்டு தனியார் நிறுவனம் மூலம் ஒரு பலூன் தயாரித்து விளம்பரப்படுத்தப்பட்டது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்**

- கன்னியாகுமரியில் அமையப் பெற்றுள்ள திருவள்ளுவர் சிலைக்கு ரூ.87.73 இலட்சம் செலவில் பாதுகாப்பு இரசாயன கலவை பூசும் பணி நிறைவு பெற்றது.

- ரூ.9.70 இலட்சம் செலவில் கன்னியாகுமரியில் அமையப் பெற்றுள்ள பார்வையாளர்கள் கோபுரம் சிறப்பு பராமரிப்பு பணி நிறைவுபெற்றது.

- கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலை அருகில் செயல்படாத விளக்குகள் மற்றும் அதன் உதிரிபாகங்களை ரூ.4.60 இலட்சம் செலவில் புதுப்பித்தல் பணி நிறைவுபெற்றது.

- ஓட்டல் தமிழ்நாடு, கன்னியாகுமரியில் செயல்படாத 13 குளிர்சாதனப் பெட்டிகளை மாற்றி ரூ.4.60 இலட்சம்

செலவில் புதிய 13 குளிர்சாதனப் பெட்டிகளை ஓட்டல் அறைகளிலும், குடில்களிலும் பொருத்தப்பட்டது.

- ஓட்டல் தமிழ்நாடு, மதுரை 1இல் உள்ள உணவகத்தை குத்தகை காலம் முடியப்பெற்று, 15.12.2017 முதல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமே எடுத்து நடத்தி வருகிறது.
- ஓட்டல் தமிழ்நாடு இராமேஸ்வரத்தில் ரூ.20.48 இலட்சம் செலவில் 8 நபர்கள் பயணிக்கக்கூடிய மின் தூக்கி பொருத்தப்பட்டுள்ளது.
- ஓட்டல் தமிழ்நாடு இராமேஸ்வரத்தில் ரூ.4.72 இலட்சம் செலவில் மின்கலம் மகிழுந்து வாங்கப்பட்டது.
- ஓட்டல் தமிழ்நாடு கொடைக்கானலில் ரூ.4.57 இலட்சம் செலவில் குடில்கள் பகுதியில் சிமெண்ட் கல் பதித்தல் (Paver block) பணி நிறைவுபெற்றது.
- ஓட்டல் தமிழ்நாடு ஊட்டியில் ரூ.5 இலட்சம் செலவில் மாநாட்டுக்கூடம் புதுப்பித்தல் பணி நடைபெற்றது.
- ஊட்டியில் உள்ள பைக்காரா படகு இல்லத்தில் சமையலறையை புதுப்பிப்பதற்காக ரூ.13.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.
- இளைஞர்விடுதி ஊட்டியில் ரூ.4.20 இலட்சம் செலவில் வரவேற்பாளர்கள் அறை நவீனமயமாக்கப்பட்டது.
- இளைஞர் விடுதி ஊட்டியில் இரண்டு குழுக்களாக தங்கும் அறையினை நான்கு குடும்பங்கள் தங்கும் அறைகளாக மாற்றி அமைப்பதற்காக ரூ.14 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.
- ஊட்டியில் உள்ள படகு குழாமில், அலுவலக கட்டிடத்துக்கு ரூ.4.50 இலட்சம் செலவில் மரவேலைப்பாடுகளும், வண்ணம் பூசும் பணியும் நடைபெற்றது.
- 110 விதியின் கீழ் ரூ.5 கோடி செலவில், திருச்சி மாவட்டம், துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவன பழைய கட்டடம் புதுப்பிக்கப்பட்டு மற்றும் புதிதாக நிருவாக அலுவலக கட்டடம்கட்டப்பட்டுள்ளது.
- ஆசிய வளர்ச்சி வங்கி நிதி திட்டத்தின் கீழ் ரூ.3.83 கோடி செலவில், முட்டுக்காடு படகு குழாமில், புதிதாக கான்கீரிட் படகு குழாம், வாகனங்கள் நிறுத்துமிடம், புல்வெளிகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பழைய உணவகம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.
- ஆசிய வளர்ச்சி வங்கி நிதி திட்டத்தின் கீழ் ரூ.2.44 கோடி செலவில், மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரை ஓய்வு வளாகத்தில் புதிதாக உணவகம், மாநாட்டு கூடம் மற்றும் புல்வெளிகள் அமைக்கப்பட்டுள்ளன.
- ஆசிய வளர்ச்சி வங்கி நிதி திட்டத்தின் கீழ் ரூ.1.68 கோடி செலவில், முதலியார்குப்பம் படகுக்குழாமில், புதிதாக கான்கீரிட் படகுக்குழாம் உணவகம் மற்றும் கான்கீரிட் உயர்நிலை நீர்த்தொட்டி ஆகியவை கட்டப்பட்டுள்ளன.
- 'புனித யாத்திரை புத்தாக்கம் மற்றும் ஆன்மீக பெருக்குதல்' (பிரசாத்) திட்டம் மூலம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் காமாட்சி அம்மன் திருக்கோயில், கச்சபேஸ்வரர் திருக்கோயில், வரதராஜ பெருமாள் திருக்கோயில், உலகளந்த பெருமாள் திருக்கோயில், ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், ஜ்வரஹரேஸ்வரர் திருக்கோயில், கைலாசநாதர் திருக்கோயில், குமரக் கோட்டம் முருகன் திருக்கோயில், வைகுண்ட பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒளியூட்டும் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.7 கோடி ஒப்பளிக்கப்பட்டது.
- 'புனித யாத்திரை புத்தாக்கம் மற்றும் ஆன்மீக பெருக்குதல்' (பிரசாத்) திட்டத்தின் மூலம் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள கோயில்களை சுற்றிலும் மற்றும் பேருந்து நிலையத்தில் நடைபாதைகள், கழிப்பிடங்கள், குடிநீர்த் தொட்டிகள் மற்றும் மின்விளக்குகள் அமைக்க ரூ.7 கோடி ஒப்பளிக்கப்பட்டது.
- 'புனித யாத்திரை புத்தாக்கம் மற்றும் ஆன்மீக பெருக்குதல்' (பிரசாத்) திட்டத்தின் மூலம் நாகை மாவட்டத்தில் வேளாங்கண்ணி திருத்தல தேவாலயப் பகுதியில் நடைபாதை சாலை, கழிப்பிட கட்டிடங்கள், ஊரணி மாரியம்மன் குளத்தை மேம்படுத்தல் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல், மின் விளக்குகள் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.4 கோடி ஒப்பளிக்கப்பட்டது.
- இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் மின்தூக்கி ரூ.19 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- ஒரு புதிய வால்வோ பேருந்து ரூ.108 இலட்சம் மதிப்பில் வாங்கப்பட்டு 02.04.2017 முதல் திருப்பதி சுற்றுலா பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.
- இரண்டு 18 இருக்கைகள் கொண்ட பேருந்து ரூ.62 இலட்சம் மதிப்பில் புதிதாக வாங்கப்பட்டு

சுற்றுலா பயன்பாட்டிற்கு 29.11.2017 முதல் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

- இராஜஸ்தான் மாநிலமான ஜெய்ப்பூரில் நடைபெற்ற “9ஆவது Great Indian Travel Bazaar 2017” என்ற நிகழ்வில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பங்கு கொண்டு ரூ.6.35 இலட்சம் மதிப்பில் சுற்றுலா அங்காடியை நிறுவியுள்ளது.
- மாமல்லபுரத்தில் நடைபெற்ற “தமிழ்நாடு பயண சந்தை 2017” நிகழ்வில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பங்கு கொண்டு சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டது.
- சென்னை விமான நிலையத்தில் அமைந்துள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முனையங்களில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பாக சுற்றுலா மற்றும் தமிழ்நாடு ஓட்டல்கள் விபரங்கள் தொடர்பாக போதிய விளம்பரப் பலகைகள் அமைக்கப்பட்டு உள்ளன.
- சென்னையில் உள்ள நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் வெற்றிகரமாக நடைபெற்ற “தி இந்து டிஸ்கவர் இந்திய டிராவல் எக்ஸ்போ” நிகழ்வில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பங்கு கொண்டது.
- 16.02.2017 முதல் 30.11.2017 வரை இணைய வழி பதிவு வாயிலாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ.9.80 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.
- ஃபேஸ்புக், டிவிட்டர், இன்ஸ்டாகிராம் மற்றும் யூ–டியூப் போன்ற சமூக வலைதளங்கள் வாயிலாக நவீன முறை ஊடக சந்தைப்படுத்துதல் (Digital Media Marketing) முறையானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- சரக்கு மற்றும் சேவை வரி (GST) மென்பொருளானது, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் அனைத்து தங்கும் விடுதிகள், இணையவழி முன்பதிவு, சுற்றுலா நிருவாக பிரிவு மற்றும் படகுக் குழாம்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 16.02.2017 முதல் 30.11.2017 வரை இணையவழி முன்பதிவு இனங்களில் பதிவு செய்யப்பட்ட முன்பதிவு கட்டணம் மீளப்பெறுவதற்கு சுற்றுலா பயணிகளுக்கு இணையவழி மூலம் வழங்கும் தானியங்கி முறையானது செயல்படுத்தப்பட்டுள்ளது.

**இந்து சமய அறநிலையத்துறை**

- 30 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.
- 655 திருக்கோயில்களுக்கு ரூ.39.26 கோடி செலவில் திருப்பணி செய்து குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்றுள்ளது.
- நிதி வசதியற்ற 241 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.
- 16.02.2017 முதல் 30.11.2017 வரை 91 திருக்கோயில்களுக்கு சொந்தமான 1,269.68 ஏக்கர் நிலங்கள் தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதை கண்டறிந்து திருக்கோயில் பெயரில் மீண்டும் பட்டா மாற்றம் செய்யப்பட்டது.
- 2016–2017ஆம் ஆண்டிற்கு யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 30 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. இதில் 31 தமிழக திருக்கோயில் யானைகளும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 2 திருக்கோயில் யானைகளும் பங்கேற்றன.
- இந்து சமய அறநிறுவனங்களுக்கு சொந்தமான ஆக்கிரமிப்பில் இருந்த 215.24 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களும், 24 கிரவுண்டு 2,284 சதுர அடி பரப்பளவுள்ள மனைகளும், 16 கிரவுண்டு 1,396 சதுர அடி பரப்பளவுள்ள கட்டடங்களும் சுவாதீனம் பெறப்பட்டன. இவைகளின் மதிப்பு சுமார் ரூ.167.23 கோடி ஆகும்.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 54 திருக்கோயில்களில் ரூ.39.83 கோடி மதிப்பீட்டிலான புதிய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.
- பெரிய திருக்கோயில் நிதியிலிருந்து 10,000 சிறிய திருக்கோயில்களுக்கு சிறப்பான முறையில் பூஜைகள் செய்திட பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கும் விளக்கு ஆகிய பூஜை உபகரணங்கள் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.05.2017 அன்று வழங்கப்பட்டது.
- ஸ்ரீராமானுஜர் 1,000ஆவது அவதாரத் திருவிழா 22.04.2017 முதல் 02.05.2017 முடிய ஸ்ரீபெரும்புதூர் அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் மற்றும் பாஷ்யகாரலு சுவாமி திருக்கோயில் மற்றும் தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள இதர வைணவ திருத்தலங்களிலும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.




**தொல்லியல் துறை**

- தொல்லியல் துறையால் 2017ஆம் ஆண்டில் விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், சோழவாண்டிபுரம் கிராமம், ஆண்டிமலையில் உள்ள சமணர் சிற்பங்கள், படுக்கைகள் மற்றும் கல்வெட்டுகள் ஆகியவை உள்ள மலைப் பகுதியை பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி சார் அலுவலகத்தில் தொல்லியல் தொடர்பான கல்லூரி ஆசிரியர்கள், கல்வெட்டு மற்றும் தொல்லியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மாணவர்கள், ஆர்வலர்கள் போன்ற 48 நபர்களுக்கு **'கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்'** பயிற்சி ரூ.5 இலட்சத்தில் வழங்கப்பட்டது.

- 2016–2017ஆம் ஆண்டில் இந்து சமய அறநிலையத் துறையில் பணியாற்றும் 75 செயல் அலுவலர்களுக்கு ஒரு அணிக்கு 25 செயல் அலுவலர்கள் வீதம் 3 அணிகளாக 2 வார காலத்திற்கு "புராதன நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு" பயிற்சி வழங்கிட ரூ.20 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இதன்படி 28.08.2017 முதல் 08.09.2017 முடிய முதல் அணியில் 25 செயல் அலுவலர்களும், 11.09.2017 முதல் 22.09.2017 முடிய இரண்டாம் அணியில் 25 செயல் அலுவலர்களும் மற்றும் 25.09.2017 முதல் 09.10.2017 முடிய மூன்றாம் அணியில் 25 செயல் அலுவலர்களும் கலந்து கொண்ட மேற்படி பயிற்சி 09.10.2017 அன்று நிறைவு பெற்றுள்ளது. இப்பயிற்சியில் 75 செயல் அலுவலர்களுக்கு தொல்லியல் விதிகளின்படி, கோயில்களை பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு தொடர்பான விவரங்கள் பயிற்றுவிக்கப்பட்டு பயனுள்ளதாக அமைந்தது. குறிப்பாக கோயில் கட்டடங்கள் மற்றும் ஓவியங்கள் பாதுகாத்தல், கோயில்களின் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு செயல்களில் தினசரி நடவடிக்கையில் செயல் அலுவலர்கள் நேரடி தொடர்பு கொண்டவர்கள் ஆவார்கள். அவ்வகையில் மேற்படி குறுகிய காலப் பயிற்சி அவர்களுக்கு மிகப் பயனுள்ளதாக அமைந்தது.

- இராமநாதபுரம் மாவட்டம், அழகன்குளம் என்னும் வரலாற்று சிறப்புமிக்க இடத்தில் தமிழகத்தின் பண்டைய சமுதாய நிலை, அரசியல், பண்பாடு, வணிக தொடர்புகளை வெளிப்படுத்தும் நோக்கத்தில் பெரிய அளவில் அகழாய்வு மேற்கொள்ள ரூ.55 இலட்சம் ஒதுக்கப்பட்டதில், அகழாய்வு 09.05.2017 முதல் 28.09.2017 வரை 53 குழிகளில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வகழாய்வில் ரோமானிய நாட்டை சார்ந்த ரௌலட்டட் பானை ஓடுகள், மது குடுவை ஓடுகள், சூதுபவழ மணிகள் கிடைத்தன. மேலும் உருவம் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும், சங்க காலத்தைச் சார்ந்த தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்வகழாய்வு, தென்னிந்தியாவுடன் மத்திய தரைக்கடலை சுற்றியுள்ள மேல்நாட்டுடன்

கொண்டிருந்த அரசியல் மற்றும் வணிக தொடர்பான உறவுகளை எடுத்துக் காட்டுகிறது.

- உலக மரபு வார விழா 2017 நவம்பர் 19 முதல் 25 வரை நடத்தப்பட்டது. உலக மரபு விழாவினை முன்னிட்டு மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, இராமநாதபுரம் இராமலிங்க விலாசம், தஞ்சாவூர் அரண்மனை, தஞ்சாவூர் மாவட்டம் சரபேந்திரராசப்பட்டிணத்திலுள்ள மனோரா நினைவுச் சின்னம், நாகை மாவட்டம் தரங்கம்பாடி கோட்டை ஆகிய வரலாற்றுச் சின்னங்களில் பார்வையாளர்கள் இந்நாட்களில் இலவசமாக அனுமதிக்கப்பட்டனர். 22,915 பார்வையாளர்கள் வந்து பார்வையிட்டு பயனுற்றனர்.

- தஞ்சாவூரில் மத்திய தொல்லியல் ஆய்வுத்துறையுடன் இணைந்து 19.11.2017 முதல் 25.11.2017 வரை தஞ்சை பெரிய கோயில் வளாகத்திற்குள் மேடை அமைக்கப்பட்டு பரத நாட்டியம், கிராமிய நடனங்கள், வீரக்கலை நிழ்ச்சிகள் போன்றவை நடத்தப்பட்டன. இராமநாதபுரம், தரங்கம்பாடி, கங்கைகொண்ட சோழபுரம், திருக்கோவிலூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி, கரூர் ஆகிய இடங்களில் பள்ளி மாணவர்களுக்கு புராதன சின்னங்களின் முக்கியத்துவம் மற்றும் பாதுகாப்பு பற்றி விளக்கங்கள் அளிக்கப்பட்டன. ஆற்காடு தொல்லியல் அகழ்வைப்பகம் சார்பில் அரசு பள்ளி மாணவர்களைக் கொண்டு தொல்லியல் சின்னங்களை பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. மேலும் அரசு மற்றும் தனியார் பள்ளியில் நிழற்பட கண்காட்சி மற்றும் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

- சென்னை தொல்லியல் துறை கூட்ட அரங்கில் 'நடுகற்கள்', 'தொல்லியல் கள ஆய்வின் முக்கியத்துவம்', 'மரபுக் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைகளின் சிறப்பம்சங்கள் – ஒரு பார்வை', 'நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபும் பண்பாடும்', 'வேளிர் வரலாறும் தொல்லியலும்', 'தென்னிந்தியாவில் விஜயநகர மற்றும் நாயக்கர் கால கலை மற்றும் கட்டடக்கலை – ஒரு பார்வை', 'மரபுச் சிற்பங்கள்', 'திருக்கோயில் வரலாற்றில் சிற்பிகளின் பங்கு', 'மரபுக் கலைகள் – களரி மற்றும் வர்மம் – ஓர் அறிமுகம்' ஆகிய தலைப்புகளில் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன. இச்சொற்பொழிவுகளில் அதிக அளவில் வரலாற்று ஆய்வாளர்களும், பேராசிரியர்களும், வல்லுநர்களும், வரலாற்றுத்துறை கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர்.

- சிவகங்கை, திருவள்ளூர், தூத்துக்குடி, தஞ்சாவூர், வேலூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள கோயில்கள், மலைகள் போன்ற இடங்களில் காணப்படும் 267 கல்வெட்டுகள் படியெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

- வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம் எசையனூர் கிராமத்தின் அருகில் உள்ள பாலாற்று மணற்படுக்கையில் கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக கருதப்படும் சுடுமண்ணால் ஆன உறை கிணறு கண்டெடுக்கப்பட்டது. இதன் வெளிப்புறத்தில் மீன் உருவங்கள் வெவ்வேறு வகையில் பொறிக்கப்பட்டுள்ளன. இது அகழ்வைப்பகத்தில் தற்போது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

- விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம் ஆதிச்சனூர் கிராமத்தில் கள ஆய்வின் போது கி.பி. 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஈமப்பேழையின் உடைந்த கால் பகுதிகள் இரண்டு மற்றும் கருப்பு–சிவப்பு நிறக் கலயம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு அகழ்வைப்பகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

- துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னமான வந்தவாசி கோட்டையின் (திருவண்ணாமலை மாவட்டம்) உள்பகுதியில் மேற்புற கள ஆய்வு மேற்கொள்ளும் போது கி.பி. 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்த 10–க்கும் மேற்பட்ட கல் பீரங்கி குண்டுகள் கண்டெடுக்கப்பட்டு அகழ்வைப்பகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

- சிவகங்கை மாவட்டம் கீழடியில் 2017–2018 ஆம் ஆண்டில் தமிழக அரசு தொல்லியல் துறையின் மூலம் விரிவான அகழாய்வு மேற்கொள்ள மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன.

**அருங்காட்சியகங்கள் துறை**

- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உதகமண்டலம் அருங்காட்சியகத்தினை புத்தாக்கம் செய்யப்பட்ட 'கல் இல்லத்தில்' 18.03.2017 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற விழாவில் தொடங்கி வைத்தார்கள்.

- 2016–2017இல் விதி எண் 110இன் கீழ் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் செய்த அறிவிப்பினை செயல்படுத்த 20 மாவட்ட அருங்காட்சியகங்களில் கேமிராக்கள் மற்றும் தீத்தடுப்பு எச்சரிக்கைக் கருவிகள் ரூ.120 இலட்சத்தில் பொருத்த எல்காட் நிறுவனத்தின் மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- அமராவதி காட்சிக்கூடம், படிமக்கூடம், விலங்கியல் காட்சிக்கூடங்களை மேம்படுத்தும் பணிக்காக, 2016–2017ஆம் ஆண்டு விருப்புரிமை நிதியில் ரூ.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்பணிகள் மார்ச் 2017இல் நிறைவடைந்தது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அறிவிப்பின்படி, ஆதிச்சநல்லூர் அரும்பொருளுக்கான தனியான காட்சிக்கூடம், வேலூர் அருங்காட்சியகத்தின் காட்சிக்கூட விரிவாக்கப் பணிகள், வளர்கலைக் கூடத்தை மேம்படுத்துதல், தற்போது அருங்காட்சியகத்தில் உள்ள அச்சகத்தினை மேம்படுத்துதல் மற்றும் கணிப்பொறிகள் வாங்கி பொருத்தும் பணிகளுக்காக ரூ.80 இலட்சம் 2017–2018ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- பன்னாட்டு பெருநிறுவனங்களின் சமுதாயப் பொறுப்பு திட்டத்தின் (சி.எஸ்.ஆர்) கீழ் 'டோக்கியோ வங்கி' வழங்கிய ரூ.50 இலட்சம் நிதி உதவி மூலம் அருங்காட்சியகத்தில் ஒருங்கிணைந்த தண்ணீர் மேலாண்மை திட்டத்தின் கீழ் 50,000 லிட்டர் மேல் நிலைத்தொட்டி மற்றும் கீழ் நிலைத்தொட்டி கட்டும் பணியும் குழாய் இணைப்பு வழங்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

- காட்சியமைப்பு சேமிப்பறையில் ரூ.37 இலட்சம் செலவில் காட்சிப்பெட்டிகள் அமைக்கப்பட்டு, நாணயவியல் மற்றும் அஞ்சல் தலைகள் காட்சியமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ளன.

- சென்னை அருங்காட்சியகம் மற்றும் சொந்த கட்டடங்களில் உள்ள மாவட்ட அருங்காட்சியகங்களான திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி அருங்காட்சியகங்களில் முன்னுரிமை நிதியின் கீழ் ரூ.60.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப்பணித்துறை மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சென்னை நகரின் சிறப்பு வாய்ந்த அடையாளச் சின்னமாகத் திகழும் அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள இந்தோ சராசனிக் பாணி கட்டடமான "தேசிய கலைக்கூட கட்டடத்தை" பொதுப்பணித் துறை மூலமாக சீரமைக்கும் பணிகள் ரூ.11 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- சென்னை அரசு அருங்காட்சியகத்தில் ஒளி ஒலி முகப்புக் கட்டிடம், 3 காட்சிக்கூடக் கட்டிடங்களுக்கு மின் தூக்கி மற்றும் சாய்தள வசதிகள் மேற்கொள்வதற்காக இந்திய அரசு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.387.50 இலட்சம் நிதியில் மேற்படி பணிகள் நடைபெற்று வருகின்றன.

- நடப்பாண்டில் 674 கிராம் எடையுள்ள தங்க ஆபரணங்கள், 389 தென்னிந்தியப்பண நாணயங்கள், 792 இதர நாணயங்கள், 58 சிலைகள் மற்றும் பூசைப்பொருட்கள் புதையலாக பெறப்பட்டு சேர்க்கப்பட்டன.

- சேகரிப்பில்இருந்து72சிறப்பானவைணவப்படிமங்கள் படிமக்கூடத்தின் வைணவக்கூடத்தில் காட்சியமைக்கப்பட்டன. வளர்கலைக் கூடத்தில் 27 ஓவியங்கள் மற்றும் உலோகக் கலைப்பொருட்கள் காட்சியமைப்பு செய்யப்பட்டன.

- புதிதாக விளக்கொளி வசதிகள் மேம்படுத்தப்பட்ட படிமக்கூடம் மற்றும் வளர்கலைக் கூடத்தில் காட்சியமைப்பு செய்யப்பட்டன.

- ஏற்கெனவே பதிவேற்றம் செய்யப்பட்ட 180 மின்னணு பதிப்புகளுடன் (24,000 பக்கங்கள்) மேலும் 65 மின்னணு பதிப்புகள் திருவாளர்கள் எல்காட் நிறுவத்தின் மூலமாக ரூ.5 இலட்சம் செலவில், தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் கீழ் (TANII) மூலம் செய்யப்பட்டுள்ளது.

- அருங்காட்சியகங்கள் சார் கல்விப்பணிகளாக அறக்கட்டளைச் சொற் பொழிவுகள், சிறப்புக் கண்காட்சிகள், திங்கள் சொற்பொழிவுகள், வாரக்கண்காட்சிகள், சிறப்புக் கண்காட்சிகள், கல்லூரி மாணவர்களுக்கான உள்விளக்க பயிற்சி போன்றவை சென்னை மற்றும் 20 மாவட்ட அருங்காட்சியகங்களில் மேற்கொள்ளப்பட்டன.

**கலை பண்பாட்டுத் துறை**

- தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்தின் வாயிலாக அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான கலைப் போட்டிகள் (குரலிசை, பரதநாட்டியம், கிராமிய நடனம், ஓவியம்) நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெற்றவர்களுக்கிடையே மாநில அளவிலான கலைப் போட்டிகள் மே 2017இல் நடத்தப்பட்டது.

- கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் சென்னையில் மார்கழி இசை விழா ரூ.8 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது.




- மாமல்லபுரம், அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் பாதுகாப்பு நலன் கருதி மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியின் கிழக்குப் பகுதியில் 7 அடி உயரத்தில் கருங்கல்லிலான சுற்றுச்சுவர் கட்டிட தொடராச் செலவினமாக ரூ.139 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- மாமல்லபுரம், அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் பயிலும் கல்லூரி மாணவர்கள் வசதிக்காக தங்கும் விடுதி மற்றும் இரண்டு தொழிற்பயிற்சி கூடங்கள் ஏற்படுத்திட தொடராச் செலவினமாக ரூ.115.93 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிகக் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2017–2018ஆம் நிதியாண்டில் கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் நிதியுதவி வழங்கிட ரூ.60 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- இயல், இசை, நாடக, நாட்டிய, கிராமிய கலை விழாக்களை நடத்திட தொடராச் செலவினமாக ரூ.30 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- இளங்கலைஞர்கள் ஊக்குவிக்கும் திட்டத்திற்கென தற்பொழுது உள்ள ஒதுக்கீட்டுத் தொகை ரூ.1 இலட்சத்தினை ரூ.10 இலட்சமாக உயர்திட தொடரும் செலவினமாக கூடுதலாக ரூ.9 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- கலை பண்பாட்டுத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் பணிபுரியும் மாவட்ட அரசு இசைப் பள்ளி ஆசிரியர்களுக்கு, கலை வல்லுநர்களைக் கொண்டு பணியிடைப் பயிற்சி வழங்கிட ரூ.8 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு முதல்கட்டப் பணியிடைப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- பதினேழு மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் ஒலி, ஒளி நூலகத்தினை ஏற்படுத்திட, ரூ.17 இலட்சத்திற்கு தொடராச் செலவினமாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு ஒளி, ஒலி, நூலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- கலை பண்பாட்டு இயக்ககத்திற்கு புதிதாக மின்தூக்கி வசதியினை ஏற்படுத்திட, தொடராச் செலவினமாக ரூ.23.12 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- கலை பண்பாட்டுத்துறை மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் இணைய தளத்தினை மேம்படுத்திட தொடராச் செலவினமாக ரூ.20 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு எல்காட் நிறுவனம் மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- கலை பண்பாட்டு இயக்ககத்தின் அலுவலகத்திற்கு, புதிதாக இன்வெர்டர் இயந்திரங்கள் மற்றும் மின்கலங்கள் வாங்கி பொருத்திட, தொடராச் செலவினமாக ரூ.16.08 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு அரசு இசைக்கல்லூரிகளின் மூலம் நடத்தப்படும் தமிழிசை விழாவிற்கு தற்பொழுதுள்ள நிதி ஒதுக்கீட்டுத் தொகையினை இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கிட கூடுதலாக ரூ.3 இலட்சம் தொடரும் செலவினமாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- பதினேழு மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் மூலம் தமிழிசை விழாவினை நடத்திட ரூ.12.75 இலட்சம் தொடரும் செலவினமாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய நான்கு அரசு இசைக் கல்லூரிகளுக்கு புதிதாக மேசை, நாற்காலிகள், தரை விரிப்புகள் வாங்குவதற்கு ரூ.10 இலட்சம் தொடராச் செலவினமாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை கல்லூரி மாணாக்கர்களின் பயன்பாட்டிற்கு புதிதாக வரைபட தாங்கிகள், உளிகள், டிரில்லர், இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு ரூ.4 இலட்சம் தொடராச் செலவினமாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரி, மற்றும் மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் மாணாக்கர்களை அகில இந்திய அளவில் கல்வி சுற்றுலா அழைத்து செல்வதற்கென தற்பொழுதுள்ள ஒதுக்கீட்டுத் தொகையினை இரண்டு மடங்காக உயர்த்திடவும், இதற்கென, தொடரும் செலவினமாக கூடுதலாக ரூ.11 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- ஏழு மண்டலக் கலைப் பண்பாட்டு மையங்கள், சென்னை கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகிய 10 இடங்களில் ஓவிய–சிற்பக் கலைக்காட்சியினை நடத்திட தொடரும்செலவினமாகரூ.10இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, கலைக்கண்காட்சி நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளின் மாணாக்கர்களுக்கு வரைபட பயிற்சிப்பொருட்கள் வாங்கிட வழங்கப்படும் தொகையினைரூ.1,000/–த்திலிருந்து ரூ.2,000/–ஆக உயர்த்தியும் இதற்கென தொடரும் செலவினமாக கூடுதலாக ரூ.6.65 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியின் மாணாக்கர்களுக்கு பயிற்சிப் பொருட்கள் வாங்கிட தொடரும் செலவினமாக ரூ.3இலட்சத்திற்குநிதிஒப்பளிப்புசெய்யப்பட்டுள்ளது.

- திருச்சிராப்பள்ளி கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியில் பயிலும் 143 மாணாக்கர்களுக்கு படிப்பு உதவித் தொகை வழங்கிட தொடரும் செலவினமாக ரூ.7.15 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- மதுரை மண்டலக் கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநரின் அலுவலகப் பயன்பாட்டிற்கு ஒரு புதிய பொலிரோ வாகனம் வாங்கிட தொடராச் செலவினமாக ரூ.7.24 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு வாகனம் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கு வழங்கப்படும் திருமணத்திற்கான நிதியுதவியினை ரூ.2,000/–லிருந்துரூ.5,000/–ஆக உயர்த்தி வழங்கிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- 2017–2018ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் வாயிலாக, திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.2 இலட்சம் செலவில் மாநில அளவிலான குளிர்கால கலைப்பயிற்சி முகாம் 24.12.2017 முதல் 31.12.2017 முடிய நடத்தப்பட்டது.

- 2015–2016, 2016–2017ஆம் ஆண்டுகளுக்கான காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 10 கலைஞர்களுக்கும், 2014–2015, 2015–2016ஆம் ஆண்டுகளுக்கு திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த 10 கலைஞர்களுக்கும் மாவட்டக் கலை மன்ற விருதுகள் வழங்கப்பட்டன.

❖ ❖ ❖

# போக்குவரத்துத்துறை



- தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஒய்வு பெற்ற மற்றும் பணியிலிருக்கும் தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை வழங்கிட வரலாற்றிலேயே முதன் முறையாக தமிழக அரசு ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு ரூ.2,147.39 கோடியை பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்பு தொகைகளாகவும் பணியில் உள்ள தொழிலாளர்களுக்கு ரூ.291.99 கோடியை பஞ்சப்படி நிலுவைத் தொகை மற்றும் சம்பளப்பிடித்த நிலுவைத் தொகைகளாகவும் மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் நலன் மற்றும் வளர்ச்சியை கருத்தில் கொண்டு மோட்டார் வாகன இழப்பீட்டுத் தொகையாக ரூ.485.23 கோடியும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.2,924.61 கோடி போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியுள்ளது.

- தமிழக மக்களின் வசதி மற்றும் சுகமான பேருந்து பயணத்தைக் கருத்தில் கொண்டு, போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறனை மேம்படுத்திடும் பொருட்டு நடப்பாண்டில் 416 புதிய பேருந்துகள் தடத்தில் இயக்கப்பட்டுள்ளன.

- மேலும் போக்குவரத்துக் கழகங்களை சிறப்பாக மேம்படுத்தும் பொருட்டு மாநகர் போக்குவரத்துக் கழகம் சார்பில் 04.03.2017 அன்று கண்ணகி நகரில் ஒரு பணிமனையும், 04.07.2017 அன்று பெரும்பாக்கத்தில் ஒரு பணிமனையும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) சார்பில் 04.03.2017 அன்று செங்கத்தில் ஒரு பணிமனையும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) சார்பில் 08.03.2017 அன்று சாத்தான்குளத்தில் ஒரு பணிமனையும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) சார்பில் 18.03.2017 அன்று பவானியில் ஒரு பணிமனையும் 04.07.2017 அன்று ஆத்தூரில் ஒரு பணிமனையும் சேர்த்து ஆக மொத்தம் ஆறு பணிமனைகள் புதிதாக துவங்கப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

# மாற்றுத்திறனாளிகள் துறை



- மாற்றுதிறனாளிகளுக்கு வேலைவாய்ப்பில் 4 சதவிகித இட ஒதுக்கீட்டினை அரசு பொதுத்துறை நிறுவனங்கள், வாரியங்கள், குழுமங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் அமல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

- மனவளர்ச்சி குன்றியவர்கள், கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் திட்டத்தில் கூடுதலாக 14,242 பயனாளிகளுக்கு ரூ.22.93 கோடி மதிப்பீட்டில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகத்திற்கான புதிய கட்டடம் ரூ.3.74 கோடி செலவில், சென்னை காமராஜர் சாலையில் கட்டப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

- பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் அருகில் உள்ள பொருட்களை அதிர்வுகள் மூலம் எளிதில் உணர்ந்து கொள்ளும் வகையிலான நவீன மடக்குக் குச்சிகளை பயன்படுத்தும் வகையில், 2016–2017ஆம் ஆண்டில் சுமார் 5,000 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.1,64,80,000/– நிதி ஒதுக்கீட்டிலும், 2017–2018ஆம் ஆண்டில் ரூ.3,62,60,000/– நிதி ஒதுக்கீட்டில் சுமார் 10,000 பயனாளிகள் பயன்பெறும் வகையிலும் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு பேட்டரியினால் இயங்கும் சிறப்பு நாற்காலிகள். 1,000 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.6.50 கோடி செலவில் கொள்முதல் செய்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- போக்குவரத்து நெரிசல்மிக்க இடங்களில் பார்வை குறைபாடு உடையவர்கள் பாதுகாப்பாக சாலையினை கடப்பதற்கு ஏதுவாக குரல் ஒலிப்பான் சமிக்ஞைகள் (Auditory signal) சென்னை மாநகரில் உள்ள 150 சாலை சந்திப்புகளில் ரூ.43.82 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை மாநகர பேருந்துகளில் வழித்தடத்தினை பார்வையற்றவர்கள் அடையாளம் கண்டு எளிதில் பயணித்திட ஏதுவாக 10 வழித்தடங்களில் இயங்கும் 75 பேருந்துகளில் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் "ஒலி எழுப்பும் சமிக்ஞைகள்" கருவி பொருத்தப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை



- பல்வேறு சர்வதேச / தேசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.552.91 இலட்சம் வழங்க ஒப்பளிப்பு.
- இளம் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வண்ணம் உலக / ஆசிய / தேசிய பள்ளி விளையாட்டு சாம்பியன்ஷிப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு புதியதாக ஊக்கத் தொகை பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
- தேசிய பள்ளி விளையாட்டு சாப்பியன்ஷிப் போட்டிகள்– தனி நபர் போட்டிகள், குழுப் போட்டிகள் (ஒவ்வொரு வீரருக்கும்) தங்கப் பதக்கம் வெல்பவருக்கு ரூ. 2 இலட்சமும், வெள்ளிப் பதக்கம் வெல்பவருக்கு ரூ.1.50 இலட்சமும், வெண்கலப்பதக்கம் வெல்பவருக்கு ரூ. 1 இலட்சமும் உயரிய ஊக்கத் தொகையாக வழங்கப்படும்.
- ஆசிய பள்ளி விளையாட்டு சாப்பியன்ஷிப் போட்டிகள்– தனி நபர் போட்டிகள், குழுப் போட்டிகள் (ஒவ்வொரு வீரருக்கும்) தங்கப் பதக்கம் வெல்பவருக்கு ரூ. 4 இலட்சமும், வெள்ளிப் பதக்கம் வெல்பவருக்கு ரூ.2.50 இலட்சமும், வெண்கலப்பதக்கம் வெல்பவருக்கு ரூ.1.50 இலட்சமும் உயரிய ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.
- உலக பள்ளி விளையாட்டு சாப்பியன்ஷிப் போட்டிகள்– தனி நபர் போட்டிகள், குழுப் போட்டிகள் (ஒவ்வொரு வீரருக்கும்) தங்கப் பதக்கம் வெல்பவருக்கு ரூ. 5 இலட்சமும், வெள்ளி பதக்கம் வெல்பவருக்கு ரூ.3 இலட்சமும், வெண்கலப்பதக்கம் வெல்பவருக்கு ரூ. 2 இலட்சமும் உயரிய ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.
- தருமபுரி, விழுப்புரம் மற்றும் உதகமண்டலத்தில் விளையாட்டு விடுதி கட்டுவதற்கு திருத்திய நிருவாக ஒதுக்கீடாக ரூ.288.20 இலட்சம் மற்றும் கூடுதல் நிதி ஒப்பளிப்பாக ரூ.121.55 இலட்சத்திற்கு அனுமதி.
- சென்னை எழும்பூர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் கையுந்து பந்து ஆடுகளம் மற்றும் பார்வையாளர் அமரும் இடத்திற்கு கல்வாலியம் மேற்கூரை அமைக்க ரூ.142.35 இலட்சத்திற்கு நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு அனுமதி.



- ரூ.13.62 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மதுரை இடையப்பட்டியிலுள்ள தேசிய மாணவர் படை பயிற்சி அகாடமியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 01.09.2017 அன்று திறந்து வைத்தார்.
- ரூ.45 இலட்சம் செலவில் தேசிய மாணவர் படை மாணவர்களின் பயிற்சிக்காக கோயம்புத்தூர் 2 (TN) Air Sqn NCC–இல் வானூர்தி பாவிப்பு அமைக்க ஒப்பளிப்பு.
- ரூ.1,312.20 இலட்சம் செலவில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக் கழகத்தில் விளையாட்டு உயிர் இயந்திரவியல் முதன்மை நிலை மையம் அமைக்க ஒப்பளிப்பு.
- ரூ.474.47 இலட்சம் செலவில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக் கழகத்தில் விளையாட்டு விடுதி அமைக்க ஒப்பளிப்பு.
- மாநில அரசால் அனுப்பப்பட்ட கருத்துருவின்படி, தலா ரூ.7 கோடி செலவில் தஞ்சாவூர், ஈரோடு மற்றும் சென்னை தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் செயற்கை இழை தடகள ஓடுபாதை "கேலோ இந்தியா" திட்டத்தின் கீழ் அமைக்க மத்திய அரசால் ஒப்பளிப்பு.
- ரூ.14.66 கோடி செலவில் தற்போதுள்ள கட்டடத்தை இடித்துவிட்டு காஞ்சிபுரத்தில் புதிய மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்க ஒப்பளிப்பு.
- ரூ.5 கோடி செலவில் திருநெல்வேலியில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் உலகத்தரம் வாய்ந்த நீச்சல்குள வளாகம் அமைக்க ஒப்பளிப்பு.

❖ ❖ ❖

**“இளைஞர்கள் நாட்டின் செல்வம், விளையாட்டு. இதனை ஒருங்கிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவம், நேர்மையாக செயல்படும் பக்குவம் ஆகியவற்றை கற்றுத் தருவதுடன், வெற்றி, தோல்வியை சமமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய மனத் திண்மையையும் அளித்து சிறந்த பண்புகளுடன் கூடிய மனிதனாக உருவாக்க உதவுகின்றன.”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்**

மாண்புமிகு **அம்மா** அவர்களின் ஆட்சியின் தொடர்ச்சிதான் இந்த ஆட்சி. எனவே, **அம்மா**வின் எண்ணங்களையும், விருப்பங்களையும் ஈடேற்றும் அரசாகவே இந்த அரசு செயல்படும்.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்